முத்தண்ணா

எம்.வி. சீதாராமையா



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

முத்தண்ணா

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
படஉதவி : நேஷனல் மியூசியம். புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

முத்தண்ணா

(நாந்தலிகே லக்ஷ்மிநாராயணய்யா)

மூலம் : எம். வி. சீதாராமையா

தமிழில் : கண்ணையன் தட்சிணாமூர்த்தி

சாகித்திய அக்காதெமி

Muddana - Tamil translation by Kannaiyan Daksnamurthy of M. V. Seetharamiah's monograph in English, Sahitya Akademi, New Delhi, 1999. Rs.25

முதல் வெளியீடு : 1999
ISBN-81-260-0654-4

சாகித்திய அக்காதெமி
தலைமை அலுவலகம்
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி - 110 001.

விற்பனை :
'ஸ்வாதி' மந்திர் சாலை, புதுதில்லி - 110 001.
109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் - 560 002.

'குணா பில்டிங்', 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா - 700 053.

172, மும்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலயா சாலை,
தாதர், மும்பய் - 400 014.

விலை: ரூ. 25/-

Laser Typesetting at Ekalaivan Pathipagam, Chennai - 41.
அச்சிட்டோர் : Mani Offsets, Chennai - 5.

உள்ளடக்கம்

1. கால மாற்றத்தின் அடையாளம்

அறிமுகம்

நாந்தலிகே லக்ஷ்மிநாராயணப்பாவின் புனைபெயர்தான் முத்தண்ணா. இருப்தாம் நூற்றாண்டு மறுமலர்ச்சிக் கன்னட இலக்கியத்தில், உரைநடை இலக்கியத்தின் புதிய சகாப்தத்திற்கு வித்திட்ட முன்னோடி என்று அவரை, பஞ்சேமங்கேஷராவ், கோவிந்தபாய் போன்ற தேர்ந்த புலமை வாய்ந்த விமர்சகர்கள் பாராட்டியுள்ளனர் தென்கன்னட மாவட்டத்தின் (அந்நாளைய தென் கனரா) கார்கல வட்டத்தில் உள்ள நாந்தலிகே என்னும் சிற்றூரில் 1870ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் தேதி பிறந்த முத்தண்ணா, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1901ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி மறைந்தார். மிகக் குறைந்த காலமே அவர் வாழ்ந்திருந்தாலும், நவீன கன்னட இலக்கிய விடிவானத்தில் பொற்கிரணங்களைப் பரப்பிய எழுஞாயிறு போல அவர் திகழ்ந்தார். முத்தண்ணா உண்மையிலேயே சிறந்ததோர் இலக்கியவாதி; ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் அவரைப் பற்றி யாருக்கும் தெரிந்திருக்கவில்லை; யாரும் அவரைப் பற்றிக் கேட்டதுமில்லை; பேசியதுமில்லை.

"ஒளிமிகு மாணிக்கங்கள் ஆழ்கடல் வாழ்
கரடிக் குகையில் கும்மிருட்டுப் போக்கும்;
உள்ளம் களிகூர முகிழ்க்கும் மலர்வாசம்
ஆளில்லாப் பாலைவனக் காற்றில் கரைந்துபோகும்."

என்று கவிஞன் தாமஸ்கிரே பாடிய வரிகள் அப்படியே முத்தண்ணாவுக்குப் பொருந்தும். 'ரத்னாவதி கல்யாணம்', குமார விஜயம் என்ற இரண்டு யக்ஷகானங்கள் அவர் பெயரில் வெளியாயின; அவை, சிறந்த யக்ஷகான படைப்பாளர் என்ற பெருமையை அவருக்குச் சேர்த்தன. ஆனால், 'ராம பட்டாபிஷேகம்', 'அத்புத ராமாயணம்', 'ராமாஸ்வமேதம்' ஆகிய அவருடைய முப்பெரும் படைப்புகள் வெவ்வேறு புனை பெயர்களில் வெளியாயின. அவற்றைப் படித்த மக்களுக்கு, அவை லக்ஷ்மி நாராயணப்பாவின் படைப்புகள் என்று தெரிந்திருக்க வில்லை. அதற்குக் கால் நூற்றாண்டுக்குப் பின்னர் பெங்களூரில்

உள்ள மத்தியக் கல்லூரியின் கர்நாடக சங்கம் அவர் நினைவாக 'முத்தண்ணா' என்ற சிறப்பு மலரை 1926ஆம் ஆண்டில் வெளியிட்டபோதுதான் அவர் புகழ் பலரும் அறியுமாறு பரவியது. அந்நாளைய இலக்கியத் தாரகைகளில், கர்நாடகக் கவிஞர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் புகழ்பெற்ற 'கர்நாடக கவிசரிதை' நூலாசிரியரான பிரகடன விமர்ச விச்சகரான ராவ் பகதூர் ஆர். நரசிம்மாச்சார்யா, நவீன கன்னட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான பஞ்சேமங்கேஷ்ராவ், அந்நாளைய சென்னை மாகாணத்தின் பிரபல இலக்கிய கர்த்தாவும், சென்னை அரசாங்கத்தின் முதன்மை மொழி பெயர்ப்பாளருமான பெங்கால் ராமராவ், முத்தண்ணாவின் அத்புதராமாயணம், ராமபட்டாபிஷேகம், ராமாஸ்வமேதம் ஆகியவை முதன்முதலாக 1895, 1896, 1899-1901[1] ஆகிய ஆண்டுகளில் வெளியான கர்நாடக காவ்ய மஞ்சரி, கர்நாடக காவ்ய கலாநிதி ஆகிய சஞ்சிகைகளின் (புராதன ஏட்டுச் சுவடிகளை மட்டுமே வெளியிட்ட இதழ்கள்) ஆசிரியரான எம்.ஏ. ராமானுஜ ஐயங்கார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். ராமாஸ்வமேதத்தின் சுமார் 112 பக்கங்கள் காவ்ய கலாநிதி இதழில் வெளியாகும் வரை, கர்நாடகத்தில் இருந்த அனைவருமே அந்த நூலின் பண்டைக்கால மற்றும் இடைக்கால கன்னடமொழி நடையைக் கண்டு (ஹால கன்னடா மற்றும் நடு கன்னடா) முத்தண்ணா என்னும் பண்டையக் கவிஞர் ஒருவர்தாம் இந்த மூன்று நூல்களையும் எழுதியுள்ளார் என்று நம்பினார்கள். நாந்தலிகே லக்ஷ்மிநாராயணய்யாவின்[2] அகால மரணத்திற்குப் பின்னர்தான் அவருடைய ரசிகர்களும் தென் கன்னட மாவட்டத்தின் பொதுமக்களும், நாந்தலிகேதான் முத்தண்ணா என்று மெல்ல மெல்ல உணரத் தலைப்பட்டனர். லக்ஷ்மி நாராயணப்பாவின் வழிகாட்டிகளாக இருந்தவர்களும் அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்களுமான பஞ்சே மங்கேஷராவ், பெங்கால் ராமராவ், ஹுரலி பீமராவ், மலாலி சுப்பராவ்

1. அத்புத ராமாயணமும், ராமபட்டாபிஷேகமும் காவ்ய மஞ்சரியிலும், ராமாஸ்வமேதம் காவ்ய கலாநிதியிலும் வெளியாயின. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அவர் மிகவும் நேசித்த நூல் முழுவதுமாக அந்த இதழில் அச்சாகு முன்னரே அவர் மறைந்து போனார்.

2. அவருடைய மூத்த நண்பர்களும், அவருடன் பழகிய சிலரும் அவரை லக்ஷ்மிநாராயணப்பா என்றும் அழைத்தனர்.

போன்றவர்கள் 'முத்தண்ணா' நினைவுச் சிறப்பு மலரில் கட்டுரைகள் எழுதியவர்கள். அவர்கள் தமக்குத் தெரிந்தவற்றைக் கொண்டும், லக்ஷ்மி நாராயணப்பாவுடன் கொண்டிருந்த கடிதத் தொடர்புகளைக் கொண்டும், அவர்தான் அந்த மூன்று நூல்களையும் வெவ்வேறு புனைபெயர்களில் எழுதினார் என்று முடிவு கட்டினர்.

சூழ்நிலை : இலக்கியத் தாக்குறவுகள் :

கர்நாடக மாநிலத்தின் இப்போதைய 19 நிருவாக மாவட்டங்களில் ஒன்றான தக்ஷிண கன்னட மாவட்டம் முன்னர் தெற்குக் கனரா[3] என்று அழைக்கப்பட்டது. அந்த மாவட்ட நிருவாகம் சென்னை மாகாணத்திற்கு உட்பட்டிருந்தது. மேற்படிப்புப் படிக்க விரும்பியவர்கள், கலையியல், சட்டம் போன்ற துறைகளில் பட்டம் பெற வேண்டுமானால் சென்னைக்குச் செல்ல வேண்டியிருந்தது. இப்போது உள்ளது போலவே அந்தக் காலத்திலும், மங்களூர் பண்பாட்டு மையமாகவும் கல்வி மையமாகவும் இருந்தது. கிறிஸ்துவ சமயப் பரப்புக் குழுவினர் நடத்திய கல்லூரிகள் மங்களூரில் இருந்தன; அவை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றிருந்தன. உடுப்பி சமய மையமாகவும் பண்பாட்டு மையமாகவும் இருந்தது. (இன்றும் அப்படியே இருக்கிறது) உடுப்பி மற்றும் குந்தாபூர் வட்டங்களில்தான் மாவட்ட போர்டு உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன.

இந்தியா முழுவதிலும் கல்வி வளர்ச்சிக்காகவும் இலக்கிய மேம்பாட்டுக்காகவும் கிறிஸ்துவ சமயப் பரப்பாளர்கள் பெரும் தொண்டாற்றியுள்ளனர். அவர்தம் சமயப் பிரச்சார நோக்கங்களுக்காக, 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பல அச்சுக்கூடங்களை இங்கே ஏற்படுத்தியிருந்தனர் கிறிஸ்துவ மிஷன்களில், பாசெல்மிஷன் மொழி, இலக்கியம், கல்வி ஆகிய துறைகளில் அக்காலகட்டத்தில் தேவையாயிருந்த பல தொண்டுகளை ஆற்றியது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். இங்கே ஏ சி. பர்னல் அவர்களின் கருத்தை

3. தென் கன்னட மாவட்டத்தில் குடியேறிய கிறிஸ்துவ மிஷனைச் சேர்ந்தவர்கள், கனரா மாவட்டத்தின் பெயராலேயே கன்னட மொழியை கனரிஸ் என்று வழங்கினர்.

எடுத்துரைப்பது பொருத்தமாய் இருக்கும்: "இந்தியாவின் மேலைக் கடற்கரை, கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டுகளாகக் குறிப்பிடத் தக்க அளவில் இலக்கியப் பணியாற்றி வந்திருக்கிறது. பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் கோவாவின் ஏசுநாதர் சங்கத்தினரும், கார்மலைட்டுகளும், கொச்சிப் பகுதியில் தொடர்ந்து ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் அந்த ஆய்வுப் பணிகள் யாவும் மறைந்து போயின. ஆனால் 1835ஆம் ஆண்டிலிருந்தே பாசெல் மிஷனைச் சேர்ந்தவர்கள், விடுபட்டுப்போன பல பணிகளைச் செய்து வந்ததுடன், அவர்கள் செய்து முடித்த பல பணிகளால், ஏற்கனவே பலரும் செய்ததைக் காட்டிலும் விஞ்சி நின்றனர்"[4]

தென் கன்னடத்தில், கன்னட மறுமலர்ச்சி இலக்கியக் காலமான 1830களின் தொடக்கத்தில் இருந்து அறிஞர்களும் எழுத்தாளர்களும் பலர் உயர்கல்வியும் இலக்கிய மேன்மையும் பெற்றார்கள் எனில், அதற்கு பாசெல் மிஷன் மேற்கொண்ட கல்வி மற்றும் வெளியீட்டுப் பணிகள் ஆற்றிய பங்கினைக் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது. அவ்விரு பணிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. 1836ஆம் ஆண்டில் அந்த மிஷன் தனது முதலாவது பள்ளியைத் தொடங்கியது. 1953ஆம் ஆண்டுவாக்கில் அந்த மிஷன் கிட்டத்தட்ட 50 தொடக்கப் பள்ளிகளையும் 8 உயர்நிலைப் பள்ளிகளையும் நடத்திக் கொண்டிருந்தது. அவற்றில் பெரும்பாலானவை தென்கன்னடம் மற்றும் தார்வாட் மாவட்டங்களில் இருந்தன. செயிண்ட் அலோஷியஸ் கல்லூரிதான் (1843) நீண்ட காலமாக இருந்த ஒரே கல்லூரி; அது சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றிருந்தது.

கர்நாடகத்தில், நூல் அச்சிடுதலிலும், வெளியீட்டிலும் பாசெல் மிஷன் முன்னோடியாகத் திகழ்ந்தது. 1841ஆம் ஆண்டில் அந்த மிஷன் தனது சொந்த அச்சகத்தைத் தொடங்கியது. ஜான் வெய்கில் என்பவர் அந்தச் சிறிய லித்தோ அச்சு எந்திரத்தைப் பம்பாயிலிருந்து கொண்டு வந்திருந்தார். அவர் வெளியிட்ட முதல் நூல் 'துளு கீர்த்தனேகளு'. அதற்கான அச்சுக்கோப்புப் பணிகள்

4. இண்டியன் ஆண்டிக்குரி தொகுதி 1, (1872) ப. 351 (டாக்டர் ஸ்ரீனிவாச ஹாவனூரின் ஹோஸகன்னடா அருணோதயா என்ற நூலில் (1974) மேற் கோள் காட்டப்பட்டது. ப, 117)

1851ஆம் ஆண்டில் தொடங்கின. மிஷனைச் சேர்ந்தவர்கள், அந்த வட்டாரத்தின் பலதரப்பு மக்களும் பேசுகின்ற பொது மொழியான கன்னடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் ஜான் வெய்கில் கன்னட மொழியில் நூல் வெளியிடுவதில் பெரும் ஆர்வம் காட்டினார் பெரும்பான்மையான மக்களின் தாய்மொழி துளு அல்லது கன்னடமாக இருந்தாலும் ஓரளவிற்கு மக்கள் கொங்கணி மொழியைப் பேசினர். ஹொய்சாள வம்சத்தினரின் காலத்திலிருந்தே அங்கே ஆட்சி புரிந்தவர்கள் நிருவாகத்தில் கன்னட மொழியைப் பயன்படுத்தியதால், பல்வேறு பிரிவு மக்களுக்கு இடையே கன்னடமே தகவல் தொடர்பு மொழியாக இருந்தது எனவே பாசெல் மிஷன், கன்னட மொழி நூல்களையும், சிற்றேடுகளையும் வெளியிடுவதிலேயே கவனம் செலுத்தியது அவை யாவும் கிறிஸ்துவ சமயக் கருத்துக்களைக் கொண்ட சமய நூல்களாகவே இருந்தன. விரைவிலேயே, அந்த மிஷனைச் சேர்ந்தவர்கள், ஜெர்மனியில் இருந்து வந்திருக்கின்ற தாம் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு எளிதில் விளங்குகின்ற மொழியில் மத போதனை செய்ய வேண்டும் என்று உணர்ந்தனர் எனவே, கன்னட மொழியைக் கற்றுக் கொள்வதற்காக, அங்கிருந்த அம்மொழிப் பண்டிதர்களின் உதவியுடன் எளிய இலக்கணம், அகராதி போன்றவற்றை மிஷனைச் சேர்ந்தவர்களே எழுதினர். அவற்றைக் கருவியாகக் கொண்டு பின்னர் அவர்களால் தொன்மையான கன்னட இலக்கியங்களையும் வெளியிட இயன்றது. இந்தத் திசையில் மிஷன் பணிகளைக் கால்கொள்ளச் செய்த பெருமை 'பிபிலியோதிகா கர்நாடிகா' என்ற தொடர் வெளியீட்டைத் தொடங்கிய ஹெச் மோக்லிங் (H. Moegling) அவர்களையே சேரும் அந்தத் தொடர் வெளியீட்டைத் தொடங்கியதின் உண்மையான நோக்கம் என்னவென்று ஜே முல்லன்ஸ் தம்முடைய மிஷன்ஸ் ஆஃப் சவுத் இந்தியா (லண்டன் 1854) என்ற நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார் :

"இந்தக் கிறிஸ்துவ வெளியீடுகளைத் தவிர. இங்கிருந்த மிஷனைச் சேர்ந்தவர்கள், தொன்மையான கனரிஸ் இலக்கியத்தில் இருந்து பலவற்றைத் தெரிந்தெடுத்து அவற்றையும் பலகாலம் அச்சிட்டு வந்தனர் பிபிலியோதிகா கர்நாடிகா என்ற அச்சிறிய நூலகத்தின் நோக்கம், மிஷனைச் சேர்ந்தவர்களுக்கும் கேடேசிஸ்ட்டுகளுக்கும் (Catechists)[5]. அறிஞர்களுக்கும்

அம்மொழியில் தேர்ந்த புலமை பெறுவதற்காகவும் பரஸ்பரம் அம்மக்களைப் புரிந்து கொள்வதற்காகவும் உதவிட வேண்டும் என்பதே."

உண்மையான நோக்கம் எதுவாக இருந்தபோதிலும், மிஷனைச் சேர்ந்தவர்களிடம் மட்டுமின்றி, கன்னட மொழியையும் இலக்கியத்தையும் பெரிதும் நேசித்த அப்பகுதி அறிஞர்களிடையேயும், கன்னட மொழிப் புலமை பெருகுவதற்கு பிபிலியோதிகா கர்நாடிகா உதவியாய் இருந்தது. பிபிலியோதிகா கர்நாடிகாவில் தோன்றிய புகழ்பெற்ற பழம்பெரும் கன்னட இலக்கியங்கள் : ஜைமினி பரதம் (1848) தொராவே ராமாயணம் (1849) தசரா பாம்கள் (1850) கனகதாசரின் ஹரிபக்த சாரம் என்ற பழமொழித் தொகுப்பு, குமார வியாச பரதம், பசவபுராணம், சென்ன பசவ புராணம் ஆகியவை. இந்த நூல்கள் யாவும் மங்களூரில் மோக்லிங் தங்கியிருந்த காலக்கட்டத்தில் (1839-1951) மிஷனால் வெளியிடப்பட்டன. அவர் மங்களூரை விட்டுப் போனதும் பிபிலியோதிகா கர்நாடிகாவின் வெளியீடும் நின்று போனது.

மேலே குறிப்பிட்ட பண்டைய கன்னட இலக்கியங்கள் அனைத்தையும் முத்தண்ணா படித்தார் என்பதில் ஐயமில்லை. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், எம்.ஏ. ராமானுஜ ஐயங்கார், எஸ்.ஜி. நரசிம்மாச்சார் என்ற துடிப்புமிக்க பதிப்புத்துறை வித்தகர்கள் இருவர், தாம் தொகுத்திருந்த தொன்மையான கன்னட இலக்கியச் சுவடிகளைப் பதிப்பிக்கும் நோக்கத்துடன் கர்நாடக காவ்ய மஞ்சரி (1892-1899) என்ற மாத இதழ் ஒன்றைக் கூட்டாகத் தொடங்கியிருந்தனர். அந்த இதழுக்கு மைசூர் சமஸ்தானத்திலும், சென்னை மாகாணத்திலும் சந்தாதாரர்கள் இருந்தனர். அந்த இதழாசிரியர்களில் ஒருவரான எம்.ஏ. ராமானுஜ ஐயங்கார் அவர்களே இவ்வாறு குறிப்பிடுகிறார் : "உடுப்பியைச் சேர்ந்த திரு.எம். சுப்பாராவ் தொடக்கத்தில் இருந்தே எமது சந்தாதாரர். மலாலி சுப்பாராவ், லக்ஷ்மி நாராயணப்பாவின் முதல்குரு என்பது இப்போதுதான் எனக்குத் தெரிய வந்திருக்கிறது. அந்த மாதாந்திரிகையின் ஒவ்வொரு இதழையும் அவர் சுப்பாராவிடம்

5. கேடேசிஸ்ட் (Catechists) என்பவர்கள் வினா-விடை மூலம் சமய நெறியைப் போதிப்பவர்கள்.

இரவல் வாங்கி மிக ஆர்வமாகப் படித்திருக்கிறார் என்பது இப்போதுதான் எனக்குத் தெரிகிறது" அந்த இதழ்களில் செய்யுள்கள் மட்டுமின்றி, தொன்மையான கன்னட அணியிலக்கணம் பற்றிய கட்டுரைகளும் தொகுப்புகளும், சமஸ்கிருத படைப்புகளைப் போன்ற கவிதைகளும் வெளியிடப் பட்டன என்பதை இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும்.

பழமையான கன்னட இலக்கியங்கள் முத்தண்ணாவின்பால் ஆழ்ந்த தாக்குறவை ஏற்படுத்தி, அவரது படைப்பாற்றலை வளர்த்ததுடன் தொன்மை இலக்கியங்களின்பால் மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தின. ஆனால் தொன்மை இலக்கிய மரபில் வெற்றிகாண வேண்டுமென்றால் போதிய சொற்றிறனும் சொல்லாட்சியும் பெற்றாக வேண்டும். காவ்ய மஞ்சரி அவருக்கு இலக்கிய சாதனைகளை நிகழ்த்துவதற்கான உன்னத வழியைக் காட்டியது.

மைசூரில் இருந்து பி எல் ரைஸ் (B.L. Rice) பதிப்பித்து வெளியிட்ட பிபிலியோதிகா கர்நாடிகாவை அவர் படித்திருந்தாரா என்று திட்டவட்டமாகச் சொல்வதற்கு எவ்வித சான்றும் நம்மிடம் இல்லை ஸ்ரீவிஜயாவின் கவிராஜமார்கம் (பொதுவாக அமோக வர்ஷ ந்ருப்தங்களுடன் தொடர்புடையதாகச் சொல்லப்படுவது) பட்டகாலங்காவின் சப்தானுஷாஷனம், ஆடிக்கவி பம்பாவின் விக்ரமார்ஜுன விஜயம் மற்றும் ஆதிபுராணம், நாகசந்திராவின் ராமச்சந்திர சரிதம் போன்ற தொன்மை இலக்கியப் படைப்புகள் 19ஆம் நூற்றாண்டின் கடைசி இருபதாண்டுகளில் அந்த இதழ் வரிசையில் தொடர்ந்து வெளிவந்தன ஆனால், எஃப் கிட்டில் (F.Kittle) என்பார் தொகுத்து பாசெல் மிஷன் வெளியிட்ட கன்னட அகராதியை முத்தண்ணா மிகவும் கருத்தூன்றிப் பயின்றார் என்பதற்கு நம்மிடம் சான்றுகள் உள்ளன. மோக்லிங்கின் பிபிலியோதிகா கர்நாடிகாவில் காணப் பெறாத பழைய கன்னடத்தின் (ஹலே கன்னடா) அரிய பல சொற்கள் முத்தண்ணாவின் அத்புத ராமாயணத்திலும், ராமாஸ்வமேதத்திலும் காணக் கிடைக்கின்றன அவரிடம் அந்த எழுத்து மூலச் சான்று இல்லாதிருந்தால் இந்த இரு படைப்புகளின் இலக்கியத் தாம் முற்றிலும் மாறுபட்டதாக இருந்திருக்கும் அதுதான் அவருடைய வேதம்

புலியமைப்பு மற்றும் சமூகத் தாக்குறவுகள்

லக்ஷ்மி நாராயணப்பாவின் சொந்தவூர் நாந்தலிகே. கார்க்கல வட்டத்தில் உள்ள சிற்றூர் அது. கரிய கற்பாளங்கள் நிறைந்து இருந்ததால் அது கார்க்கல என்றழைக்கப்பட்டது (கார் - கருப்பு). கார்க்கல வட்டத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒரே கல்லால் ஆன பாகுபலியின் பெருஞ்சிலையும், சமணப் பாழிகளும் இருப்பதைக் காணலாம். ஆனால், சொல்லியல் ஆய்வுப்படி இன்னும் நுணுகிப் பார்த்தால், கார்க்காலம் என்று அந்த இடத்திற்குப் பொருள் படும். அதாவது வளமான மழைபெறும் பகுதி என்ற பொருள்படும். கார்க்கலாவின் ஷாயத்ரி மலைத் தொடரில் (மேற்குத் தொடர்ச்சி மலை) அடர்ந்த வனங்களை நாம் பார்த்திராவிட்டாலும், நாந்தலிகே மரம் செறிந்த இயற்கை எழில் மறைந்துபோன இடமன்று. பல்வேறு வகையான காட்டுமரத் தோட்டங்களும், தென்னந் தோப்புகளும் நிறைந்து அது விளங்கியது. அரபிக் கடலுக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் இடையே கார்க்கல இருந்தாலும், மேலைக் கடற்கரையில் உள்ள ஏனைய இடங்களைப் போலவே ஜுன் - செப்டம்பர் மாதங்களில் தென்மேற்குப் பருவ மழை பொழியும் காலங்களில் நிறைந்த மழை வளத்தைப் பெற்றது. இந்த இயற்கை வளத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால், 'கார்க்கல' என்பதற்குப் பெருமழை பொழியும் இடம் என்றே பொருள் கொள்ள வேண்டும். பருவ மழை பொழியும் காலங்களில் நாந்தலிகேயும் நல்ல மழையைப் பெற்றது என்று சொல்லத் தேவையில்லை. அமைதியான, அழகான, சில வேளைகளில் அச்சந் தருகின்ற, இயற்கைச் சூழலில் பிறந்து வளர்ந்ததால், இயற்கையின்பால் மெய்யான ஈடுபாட்டை முத்தண்ணா உருவாக்கிக் கொண்டார். அதுவே அவருடைய ராமாஸ்வமேதத்தில், கார்க்காலத் தொடக்கம், பருவ காலங்களின் சிறப்புகள், வீறார்ந்த மலையின் தொடர்புடைய செய்திகள் என்று பல்வேறு யதார்த்தமான வருணனைகளாகப் பிரதிபலித்தது.

ராமாஸ்வமேதக் கதையை அறிமுகப்படுத்தி விளக்குவதற்காக தமது கார்க்கால அனுபவங்களை எப்படிக் கவினுறு கருவியாகக் முத்தண்ணா பயன்படுத்துகிறார் என்று இங்குக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமாய் இருக்கும். மாரிக்காலத் தொடக்கத்தைப் பற்றிய விரிவான வருணனையுடன் ராமாஸ்வமேதக் கதை

தொடங்குகிறது. மழை பெய்யவில்லை. மாறாக கர்நாடகத்தின் மலைப்பகுதிகளிலும் (மலைநாடு) கடலோரப் பகுதிகளிலும் வானம் பொத்துக் கொண்டதுபோல் கொட்டுகிறது மழைக் காலத்தின் சீற்றத்தையும், பேரோசையையும், தழைத்துச் செழிக்கும் பசுமை எழிலையும், வனவிலங்குகளின் களியாட்டத்தையும், கார்க்காலத்தின் ஏனைய உயிரோட்டமுடைய அம்சங்கள் அனைத்தின் அழகையும் விரிவாக வருணித்துவிட்டு, முத்தண்ணா தம்மை ஓர் அரசவைக் கவிஞராகவும், தம் மனைவியின் பெயர் மனோரமா என்றும் அறிமுகப்படுத்திக் கொள்கிறார். அடாது பொழியும் மழையின் காரணமாக அப்பகுதியில் வசிக்கின்ற மக்கள் அனைவரும் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதால், ஏதேனும் ஒரு வேலையிலோ பொழுதுபோக்கிலோ தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, நெடிது நீளும் இரவையும் பகலையும் போக்கியாக வேண்டியிருந்தது. தன் கணவனின் வசம் பல கதைகள் இருப்பதை அறியும் மனோரமா, தனக்கு ஒரு கதை சொல்லுமாறு அவரைக் கேட்கவே, ஸ்ரீராமன் நடத்திய அசுவமேத யாகத்தைக் கதையாகச் சொல்கிறார் முத்தண்ணா.

யக்ஷகானத்தின் தாக்குறவு :

கடற்கரை கர்நாடகமும் (தெற்கு மற்றும் வடக்குக் கன்னட மாவட்டங்கள்) மைசூர் சமஸ்தானத்தின் மலைமாவட்டங்களும் யக்ஷகானம் எனும் நாட்டுப்புற நாடகம் தோன்றி வளர்ந்த தொட்டில் எனப்படுகின்றன. யக்ஷகானங்கள் 17ஆம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றியவை என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். எந்தக் காலகட்டத்தில், அந்த நாட்டுப்புற நாடகம் தோன்றியிருந்தாலும் முத்தண்ணா வாழ்ந்திருந்த காலத்தில் அது மிகவும் பிரபலமாக இருந்திருக்க வேண்டும்; இன்றும்கூட அந்தக் கலை வடிவம் சிறந்து விளங்குகிறது. இந்த நிகழ்கலை, யக்ஷகான எழுத்தாளர்கள் என்ற தனிச்சிறப்புடையவர்களால் எழுதப்பட்டு வந்தது.[6] பொதுவாக அந்த எழுத்தாளர்கள் அனைவருமே முறையான கல்வி ஏதும் இல்லாத சாதாரண மனிதர்கள்தாம். ஆனால் அவர்கள் இராமாயணம், மகாபாரதம், பாகவதம் மற்றும் பிற புராணங்களிலும் தேர்ந்த புலமை பெற்றிருப்பர். இந்தப் புராணங்கள், இதிகாசங்கள் பற்றிய அவர்களுடைய புலமை,

அவற்றின் கன்னட வடிவங்களான குமார வியாசரின் கன்னட பாரதம், லக்ஷ்மிஷாவின் ஜைமினி பாரதம், நரஹரியின் தொராவே ராமாயணம், சாது விதலாவின் பாகவதம் போன்ற படைப்புகளைச் சார்ந்ததாகவே இருக்கும். அவர்களுக்கு முன்னர் யக்ஷகானங்களை எழுதியவர்களிடமிருந்து அவர்களுக்கு ஊக்கம் பிறந்திருக்கும். 16ஆம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரை 400க்கும் மேற்பட்ட யக்ஷகானங்கள் எழுதப்பட்டதாக மதிப்பிடப் பட்டிருக்கிறது. இப்படிப் பரவலாகப் புகழ் பெற்றிருந்த யக்ஷகானப் பிரசங்கம் இளம் முத்தண்ணாவின் படைப்பார்வத்தைத் தூண்டியதில் ஆச்சரியம் ஏதுமில்லை. மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களை எடுத்துரைக்கும் தசாவதார ஆட்டத்தைக் காண அவர் ஒருபோதும் தவறியதில்லை. முத்தண்ணாவைப் பற்றி நன்கு அறிந்த ஹூரலி பீமராவ், சில வேளைகளில் அவர் பாகவதராக (இயக்குநர் - விளக்குநர்) சில யக்ஷகானங்களில் பங்கேற்றதாகக் கூறுகிறார். பழைய எழுத்தாளர்களும், புதியவர்களும் எழுதிய யக்ஷகானங்களையும் அவர் படித்திருக்கிறார். யக்ஷகானம் ஒன்றை எழுத வேண்டும் என்ற ஆவலை அடக்கிக் கொள்ள முடியாதபடிக்கு, யக்ஷகானங்கள் அவர்பால் தாக்குறவை ஏற்படுத்தியிருந்தன. அந்த நேரத்தில் அவருக்கு எழுத்தாற்றல் கைவரப் பெற்றிருந்தது. இவ்வாறாக, ரத்னாவதி கல்யாணம், குமார விஜயம் என்ற இரண்டு

6. யக்ஷகானங்களை எழுதிய சிலரின் பெயரையும் அவர்களின் படைப்புகளையும் இங்கே குறிப்பிடலாம் : யக்ஷகான மரபின் முதலாவது பெயர் வாரம்பள்ளியின் விஷ்ணு (பதினாறாம் நூற்றாண்டு). 17ஆம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள் நாகிரே சுப்பாவும் தேவிதாசரும் ஆவர். த்வஜபுராவின் நாகப்பையா இயற்றிய சந்திராவளி பிரசங்கம் மிக உயர்வானது என்று விமர்சகர்களால் பாராட்டப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் இராமாயணத்தையும், பாகவதத்தையும் ஆதாரமாகக் கொண்ட பல பிரசங்கங்கள் தோன்றின. அவற்றில் ருக்மணி கல்யாணமும், பாரிஜாத பிரசங்கமும் குறிப்பிடத்தக்கவை. அந்தக் காலகட்டத்தின் பிரபல யக்ஷகான எழுத்தாளர் பர்தி சுப்பா; அவரைப்பற்றி மூலிய திம்மப்பையா ஆய்வு நடத்தியுள்ளார். யக்ஷகானத்தைப் பிரபலமாக்கிய பெருமை எஸ்.கே.யையும், அதற்கு இலக்கிய அந்தஸ்து கொடுத்த பெருமை பர்தி சுப்பாவையும் சேரும். இராமாயணத்தை ஆதாரமாகக் கொண்டு பர்தி சுப்பா எழுதிய யக்ஷகானங்கள்: புத்ரகாமேஷ்டி, பஞ்சவடி, வாலி-சுக்ரீவ கலகம், உங்குர சாந்தி, சேது பந்தனம், அங்கட சந்தானம் ஆகியவை. சபா லக்ஷணம் என்பது பூர்வ ரங்கம் (யக்ஷகானத்தின் அறிமுகப்பகுதி) பற்றிய சிறிய தொகுப்பாகும்.

யக்ஷகானங்களை எழுதி, அவருடைய இலக்கியப் பணி தொடங்கியது.

இலக்கியப் பின்னணி :

தென் கன்னட மாவட்டம் யக்ஷகான இலக்கியத்திற்குப் பெயர்போனது. ஆனால், யக்ஷகானத்தைத் தூய இலக்கிய வடிவமாகக் கருதி திறனாய்வாளர் எவரும் அதற்குப் போதிய கவனம் செலுத்தவில்லை. வசனம், பாட்டு, நாட்டியம் ஆகிய மூன்றும் அடங்கிய நிகழ்கலை அது. இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை பொதுமக்களிடையே, அதிலும் குறிப்பாகக் கிராமப்புறத்து மக்களிடையே யக்ஷகானம் பிரபலமாக இருந்தது எனில் அது மிகையன்று. அந்தக் காலகட்டத்தில் யக்ஷகான இலக்கியம் சீராக வளர்ந்து, அதில் பல படைப்புக்கள் தோன்றியதைப்போல, காவ்ய இலக்கியத்தில் (செய்யுள் படைப்புகள்) ரத்னாகர வார்ணியின் (கி.பி. 1565) பரதேச வைபவம், முத்தண்ணாவின் ராமாஸ்வமேதம் (1900) ஆகிய இரண்டையும் தவிர உயர்ந்த இலக்கியத்தரம் வாய்ந்த படைப்புகள் ஏதும் தோன்றவில்லை. இந்த இரண்டு படைப்புகளுமே பம்பா, ரண்ணா, ஹரிஹரர், குமாரவியாசர், லக்ஷ்மிஷா சமரசர், குமார வால்மீகி போன்றோரின் படைப்புக்களுடன் ஒப்பிட்டுப் பேசுமளவுக்குப் பெருமையுடையதாக அங்கீகரிக்கப்பட்டன. அந்த இரண்டு படைப்புக்களின் காரணமாகவே, நவீன இலக்கிய காலத்திற்கு முற்பட்ட கன்னட இலக்கிய வரைபடத்தில் தென்கன்னடத்திற்கு நிரந்தரமானதோர் இடம் கிடைத்தது. பரதேச வைபவம் தோன்றியதற்குப் பின்னரும் முத்தண்ணாவின் வரவுக்கு முன்னரும் இடைப்பட்ட முந்நூற்றைம்பது ஆண்டுக் காலத்தில் பெயர் சொல்லும்படியாக எந்த ஒரு கன்னட இலக்கியமும் படைக்கப் படவில்லை.

நாடு முழுவதும் இலக்கியப் படைப்பின் போக்கில் சமய நெறியும் தாக்குறவை ஏற்படுத்தியது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தென்கன்னட மாவட்டமும் அதற்கு விதிவிலக்கு அன்று. கலை இலக்கிய வளர்ச்சியில் சமண சமயம் முக்கிய பங்காற்றியது. தென் கன்னடத்தில் சமண சமயம்

தோன்றியதிலிருந்தே கார்க்கலவும், முதாபிதிரேவும் சமண சமய மையங்களாகத் திகழ்ந்தன. விஜய நகரப் பேரரசுக்கும், கேளடி நாயக்கர்களுக்கும் (கி.பி. 1336 முதல் 1763 வரை) உட்பட்ட சிற்றரசர்களான செளதர்கள், ஆளப்பர்கள், பைரராசர்கள், உடையார்கள், சாந்தரர்கள் போன்ற இன்னும் பலரின் குறுநில அரசுகளில் சமய நல்லிணக்கம் செழித்தோங்கி இருந்தது. 1565ல் விஜய நகரப் பேரரசு மறைந்த பின்னர், கேளடி வம்ச ஆட்சியாளர்கள், குறுநில மன்னர்கள் அனைவரையும் தம் அதிகாரத்திற்குள் கொணர்ந்தனர். விஜயநகரப் பேரரசில் சுதந்திரமாகச் செயல்பட்ட குறுநில மன்னர்களின் அதிகாரங்கள் பறிபோயின. கேளடி சாம்ராஜ்யத்தை ஹைதர் கைப்பற்றிய போது தென் கன்னட மாவட்டம் மைசூர் ஆட்சியாளர்களின் ஆளுகைக்குள் வந்தது. மைசூரை ஆண்ட உடையார் வம்ச ஆட்சிக்காலத்தில் படைப்பாளர்களுக்கு மன்னனின் ஆதரவு இருந்தபோதும் குறிப்பிட்டுச் சொல்லும்படியான படைப்புக்கள் மிகச் சொற்பமாகவே தோன்றின. சமஸ்கிருத மொழியின் இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்றவற்றின் மொழி பெயர்ப்புகளும், சோதிடம், ஆயுர்வேதம், புண்ணியத் தலங்கள் போன்றவை பற்றிய நூல்களும் தான் அக்காலத்தில் தோன்றிய முக்கிய நூல்களாகும். 17, 18ஆம் நூற்றாண்டுகளில் மைசூர் சமஸ்தானத்து நிலைமை அவ்வாறிருந்தது என்றால், தென் கன்னடத்திலோ, குறுநில மன்னர்களுக்கும், தளபதிகளுக்கும் இடையே உட்பகை காரணமாகப் பூசல்கள் ஏற்பட்டு, மையமானதோர் அரசாங்க ஆதரவு இன்மையால் இலக்கிய வளர்ச்சிக்கு, அதிலும் குறிப்பாக, படைப்பிலக்கிய வளர்ச்சிக்கு உகந்ததோர் சூழல் இல்லாமல் போனது.

அனுகூலமில்லாத அந்தச் சூழ்நிலையிலும், வெப்ப மண்டலப் பகுதியிலே இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில பசுமைப் பரப்புகள் காணப்படுமாறுபோல் இலக்கிய முயற்சிகள் அந்த மாவட்டத்தில் தோன்றின. அந்த வட்டாரத்தில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத் தன்மை நிலவியபோது, சமணர்களான குறுநில மன்னர்கள் படைப்பாளர்களுக்கு ஆதரவு நல்கினர். கல்யாண கீர்த்தி என்ற சமணத் துறவி, சமண சமயக் கோட்பாடுகள் சம்பந்தமான ஜ்னான சந்த்ரப்யுதயா, சித்தாரஸி,

அனுப்ரேக்ஷெ, தத்வபேதாஷ்தகா ஆகிய நூல்களை இயற்றினார். பனிக்குமார சரிதை என்ற செய்யுள் நூலையும் அவர் இயற்றினார்.

பாகுபலியின் குமாரனான வர்த்தமானன், தன் தந்தை எழுதத் தொடங்கிய நாககுமார கதையை நிறைவு செய்தான். கார்க்கல கோமதேஸ்வர சரிதையை சதுர சந்திரமா எழுதினார். கார்க்கலாவில், ஒரே கல்லாலான மிகப் பிரும்மாண்டமான கோமதேஸ்வரர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டதைப் பற்றிச் சொல்வதால் இந்நூல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப் படுகிறது. பத்மநாபா இயற்றிய பத்மாவதி சரிதை அக்காலத்தில் தோன்றிய மற்றுமொரு சமண இலக்கியமாகும்.

18, 19ஆம் நூற்றாண்டுகளில், நூற்றுக்கணக்கான ஹரிதாஸர்கள் தோன்றினர். ஹரிபக்தியை வெகுவாக மெச்சுகின்ற மத்வ த்வைதத் தத்துவத்தின் முக்கிய இடமாக உடுப்பி திகழ்ந்த போதும், கர்நாடகத்தின் அப்பகுதியில் ஹரிதாஸ இலக்கியங்கள் எதுவும் தோன்றாதிருந்தது விந்தையாக இருக்கிறது. அங்கே ஹரிதாஸர்களே இல்லாமல் போனார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், வராக திம்மப்பதாஸர் போன்ற சில தாஸர்கள் பாடல்களை இயற்றினாலும், பிரபல ஹரிதாஸர்கள் மத்தியில் அவர்களுடையவை எடுபடவில்லை

நாந்தலிகே லக்ஷ்மிநாராயணப்பா, கோதாவரி என்ற புதினம் ஒன்றை எழுதத் தொடங்கி அதை முடிக்காமலேயே விட்டுவிட்டாலும், புதினங்கள் எழுத மேற்கொள்ளப்பட்ட முன்னோடி முயற்சிகள் பற்றிச் சிலவற்றை இங்குக் குறிப்பிடுவதும் பொருத்தமாக இருக்கும்.

மைசூரில் பி. வெங்கடாச்சார்யாவும், தார்வாரில் வெங்கடேச திரகோ கலகநாதாவும் கன்னட மொழியில் புதினங்களை எழுதிக் கொண்டிருந்தனர். பெரும்பாலும் அவை, வங்காள, மராத்திய புதினங்களின் மொழிபெயர்ப்புக்கள் போலவே இருந்தன. குலவடி வெங்கட்டராவ், குலவடி அண்ணாஜிராவ், போலார் பாலுராவ் ஆகியோரே கன்னட மொழியில் மூலப் படைப்புகளாகப் புதினங்களை எழுதும் முயற்சியை முதன் முதலாக மேற்கொண்டனர் என்று இப்போது தெரிய வந்துள்ளது.

வெங்கடராவ் எழுதிய இந்திராபாய் அல்லது சதர்ம விஜயா என்ற புதினமே கன்னட மொழியில் தோன்றிய முதல் மூலப் படைப்பான புதினமாகும். அதை வழங்கிய பெருமை தென்கன்னட மாவட்டத்தையே சேரும். அந்தக் கதையில் பெண்கல்வி, கடற் பயணம் மேற்கொண்டு வெளிநாடு போதல், கைம்பெண் மறுமணம் போன்ற சமூகப் பிரச்சினைகள் நன்கு பின்னப்பட்டிருந்தன. பாகீரதி, சீமந்தினி என்ற மேலும் இரண்டு புதினங்களையும் வெங்கட்ராவ் எழுதினார். வழக்குரைஞரான குலவடி அண்ணாஜிராவ், ரோகிணி அல்லது சரஸ்வதி மண்டல் என்ற புதினத்தை இயற்றினார். (1906 : இந்தப் புதினம் முத்தண்ணாவின் மறைவுக்குப் பின்னர் வெளியானது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்). வேகவதி என்ற புதினத்தை போலார் பாலுராவ் எழுதினார். இந்தப் புதினங்கள் யாவுமே, அந்நாளில் பிராமணர்களிடையே இருந்த சமூகக் கொடுமைகளைக் களைய வேண்டும் என்ற பொதுவான மையக் கருத்தையே கொண்டிருந்தன. இந்த எழுத்தாளர்களால் முத்தண்ணாவின் மீது எந்த அளவுக்குத் தாக்குறவு ஏற்பட்டது என்று நம்மால் சொல்ல இயலாது. அதற்கு நம்மிடம் ஆதாரங்கள் இல்லை. ஆனால் அவர் காலத்தில் வாழ்ந்திருந்த முதியவர்கள் சிலர், முத்தண்ணா, மைசூர் பி. வெங்கடாச்சார்யாவின் புதினங்களைப் படித்ததாகக் கூறுகின்றனர். அது உண்மையாய் இருக்கலாம். அவற்றைப் படித்த பின்னர் முத்தண்ணாவுக்குப் புதினம் எழுத வேண்டும் என்ற உந்துதல் தோன்றி அவர் கோதாவரியை எழுதத் தொடங்கியிருக்கலாம். ஆனால் நிச்சயமாக, யக்ஷகானங்கள் இரண்டையும் எழுதிய பின்னர்தான் அவர் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். யக்ஷகானங்கள் இரண்டும் அவர் எதிர்பார்த்ததுபோல் பிரபலமாகாததால், அவர் புதினம் எழுதத் தீர்மானத்திருக்கலாம் என்று தோன்றுகிறது. தொன்மைக் கன்னடம் மற்றும் இடைக்காலக் கன்னடத்தில் தேர்ந்த புலமையும் சிறந்த சொல்லாட்சித் திறனும் பெற்றிருந்த முத்தண்ணா நவீன உரைநடையில் புதினம் எழுதுவது தம்முடைய பணி அன்று என உணர்ந்திருக்கலாம். அதனால்தான் கோதாவரியின் முதல் அத்தியாயத்திற்குப் பின்னர் அந்த நூலை எழுதும் முயற்சியை

அவர் கைவிட்டிருக்கலாம். எனினும் அந்தப் புதினம் அவருடைய இலக்கிய வேட்கையைத் தணிப்பதாக மட்டுமின்றி, வாசகர்கள் அவருடைய எழுத்துக்களை ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், புதிய மூல முயற்சியாகவும் இருந்தது. இவ்வாறு தான் அவர் ராமபட்டாபிஷேகம், அத்புத ராமாயணம், ராமாஸ்வமேதம் ஆகியவற்றை இயற்றி, ஆசிரியர் பெயரில்லாமலேயே வெளியிட்டார். அவருடைய நோக்கம் நிறைவேறினாலும், அந்த இலக்கியப் படைப்புகள் அவருக்கு 25 ஆண்டுகளுக்குப் பின்னர் கொணர்ந்த புகழையும் பெருமையையும் ஏற்று மகிழ்ச்சியில் திளைக்க அவர் உயிரோடு இல்லை.

2. வாழ்க்கை வரலாற்றுப் பின்னணி

படைப்பாளன் ஒருவனின் வரலாற்றுப் பின்னணியை ஆராயும்போது, அவனுடைய படைப்புப் பணிக்கு அனுகூலமாகவும், பிரதிகூலமாகவும் இருந்த அவனுடைய பெற்றோர் பற்றிய விவரங்கள், வழிவழியாக வந்த திறமைகள், அவனுடைய தொழில், குடும்பச் சூழல், அவன் தொடர்பு கொண்டிருந்தவர்கள் போன்ற பல செய்திகள் தெரியவரும். மிகக் குறுகிய காலத்தில் முத்தண்ணா ஆற்றிய மிகவும் பயனுள்ள இலக்கியப் பணியில், அவரை உருப்பெறச் செய்த புறநிலைக் காரணிகளின் தாக்குறவைப் பற்றி நாம் ஏற்கனவே ஆராய்ந்தோம். இப்போது அவரது வாழ்க்கை வரலாற்றுப் பின்னணியைச் சற்று உற்று நோக்கலாம்.

நாந்தலிகே கிராமத்தில், மகாலிங்கேஸ்வரர் ஆலயத்திற்குப் பின்னால் இருந்த கீற்று வேயப்பட்ட, குடிசை போன்ற சிறியதொரு வீட்டில் திம்மப்பையா என்ற ஏழை பிராமணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். கிராமத்து மக்கள் அவரை, திம்மையா என்று அழைத்தனர். அவர், மகாலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பதலி அல்லது மாலேகரா என்ற வேலையைச் செய்துவந்தார். அதாவது கோயிலுக்கு வேண்டிய பூமாலைகளைத் தொடுப்பதும், பூஜையின்போது அர்ச்சகருக்கு உதவியாக இருப்பதும் அவரது வேலை. அவருடைய மனைவியின் பெயர் மகாலக்ஷ்மி. அந்தத் தம்பதியருக்கு ஒரு ஜனவரி மாதத்தின் 24ஆம் தேதி திங்கட் கிழமையில் (சுக்ல பக்ஷ ஸ்வாதி நட்சத்திரம்) லக்ஷ்மிநாராயணா என்ற முதல் குழந்தை பிறந்தது. வசீகரமான முகத் தோற்றம் கொண்டிருந்த அந்தக் குழந்தையின் இனிய மழலை மொழியும், குறும்புத்தனமான விளையாட்டுக்களும் அதன் பெற்றோரை மிகவும் அகமகிழச் செய்தன; அவர்களும் அக்குழந்தையை "முத்தண்ணா"[1] என்று செல்லமாக அழைத்தனர்.

---

1. முத்தண்ணா, முத்து என்பதுபோன்ற செல்லப் பெயர்கள் தென்னிந்தியாவில் பரவலாகக் காணப்படுபவை. கன்னடத்தில் அதற்கு, அன்புமிக்குடையவன் என்று பொருள்.

திம்மப்பையாவுக்கு, ராமப்பா, லிங்கண்ணையா என்ற இரண்டு தம்பிகளும், இந்திரம்மா என்ற ஒரு சகோதரியும் இருந்தனர்.

லக்ஷ்மி நாராயணாவுக்கு, சிவராமையா, ராமகிருஷ்ணய்யா என்ற இரண்டு தம்பிகள் இருந்தனர். லக்ஷ்மி நாராயணாவின் தம்பியரில் ஒருவரான சிவராமய்யா, தசாவதார நாடகக் குழுவில் சேர்ந்து, பின்னர் அதை விடுத்து, பள்ளி ஆசிரியராகி விட்டார் என்று முத்தண்ணாவின் நண்பரான இரோடி சிவராமய்யா என்பவர், ஒரு குறிப்பு எழுதியுள்ளார்.

நாந்தலிகே கிராமத்தில் முர்ரோரு சந்திரப்பையா என்பவர் நிறுவிய பள்ளியில் லக்ஷ்மி நாராயணா தமது தொடக்கக் கல்வியைப் பயின்றார். பள்ளியில் படிக்கும்போதே, தம்முடைய பாடநூல்களில் உள்ள செய்யுள்களை இசையோடு பாடுவார். தம்முடைய சொந்த ஊரில் தொடக்கக் கல்வியை முடித்த பின்னர், உடுப்பிக்குச் சென்று அங்குள்ள போர்டு உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். சுமார் இரண்டாண்டுக் காலம் அங்குப் பயின்ற பின்னர் ஓரளவுக்கு ஆங்கில மொழியில் பயிற்சி ஏற்பட்டது. ஆனால் வறுமையின் காரணமாக 'ஆங்கிலக் கல்வியைப்' பாதியிலேயே விட்டுவிட்டு, பிழைப்புக்காக ஏதேனும் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கன்னடப் பயிற்சிப் பள்ளியில் அவர் சேர்ந்தார். உயர்நிலைப் படிப்பில் ஆங்கிலக் கல்வியைப் பாதியிலேயே அவர் நிறுத்திவிட்டாலும், அவர் சுயமாகவே இசையையும், ஆங்கில மொழியையும் கற்று வந்தார். யக்ஷகான பிரசங்கங்களை இசையோடு பாட முயன்று, அதன் மூலமாகப் பல்வேறு ராகங்களிலும், தாளத்தோடு பாடும் திறனைக் கற்றுக் கொண்டார். பக்கத்து ஊர்களில் 'யக்ஷகான' நிகழ்ச்சிகள் நடைபெறும்போது தவறாமல் போய் அவற்றைப் பார்த்து மகிழ்வார். அவற்றின் காரணமாக, இசையிலும், இலக்கியப் படைப்புகளிலும் அவருடைய ஆர்வம் முன்றயான வடிவத்தைப் பெற்றது. அப்படியாகக் கன்னடத்திலும், துளுவிலும் அவர் செய்யுள்களை இயற்றத் தொடங்கினார்.

அவருடைய 18ஆவது வயதில், பயிற்சித் தேர்வில் வெற்றிகரமாகத் தேறினார். நல்ல உடற்கட்டுடன் மிகுந்த ஆரோக்கியத்துடன் அவர் இருந்தார். முத்தண்ணா 5 அடி நான்கு

அங்குலம் உயரம் கொண்டவராகவும், இடப் புறங்கையில் N.L.N.[2] என்ற எழுத்துக்களைப் பச்சை குத்தியிருந்ததாகவும், இரு கைகளாலும் ஒரே நேரத்தில் இரண்டு அரிசி 'முடி'[3]களைத் தூக்கும் வல்லமையுடைய உடல்திறன் பெற்றிருந்ததாகவும், இரோடி சிவராமையா எழுதியுள்ள முத்தண்ணாவின் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். லக்ஷ்மி நாராயணாவின் உடற்கட்டையும், வலிவையும் பார்த்த பயிற்சிப் பள்ளியின் தலைமை ஆசிரியர், அவரை உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காகச் சென்னைக்கு அனுப்பினார். அங்கே பயிற்சி பெற்றபோது, அரசாங்கத்திடமிருந்து அவருக்கு உதவித் தொகை கிட்டியது.

உடற்கல்வி ஆசிரியராக லக்ஷ்மி நாராயணா பயிற்சி பெறும்போது, கன்னட மொழி பேசுவோர் தவிர, தமிழ், தெலுங்கு, மலையாளம் பேசுவோரிடமும் கலந்து பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அதன் காரணமாக, திராவிட மொழிகளுக்கு இடையே இருந்த தொடர்புகள் பற்றி அறியும் வாய்ப்புக் கிடைத்தது. எனவேதான் அவரால் 'ஜோ-ஜோ' என்ற கன்னட சொற்றொடர் பற்றிய மொழியியலாய்வுக் கட்டுரை ஒன்றை எழுதி, மங்களூரில் இருந்து வெளியான சுவாஷிணி இதழில் (டிசம்பர் 1900) வெளியிட முடிந்தது.

சென்னையில் அவர் உடற்கல்வி ஆசிரியர் பயிற்சியை முடித்த பின்னர், 1889ஆம் ஆண்டு மே மாதம், உடுப்பியில் உள்ள போர்டு உயர்நிலைப் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக நியமனம் பெற்றார். அப்போது அவருக்கு மாத ஊதியம் பத்து ரூபாய். உடுப்பியில் அவர் தங்கியிருந்த மூன்றாண்டுகளில் அவருக்கு நிறைய ஓய்வு நேரம் கிடைத்தது. அப்போதெல்லாம் அவர் கன்னட மொழியையும் இலக்கியங்களையும் நன்கு தோய்ந்து படித்தார். உடுப்பியிலும் பின்னர் குந்தபூரிலும் அவர் பணியாற்றிய போது சக ஆசிரியராக இருந்த மலாலி சுப்பாராவுடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டதை அவருடைய அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். அவரைத் தம்முடைய 'குரு'வாகப் போற்றிய லக்ஷ்மி நாராயணா, அவருடைய உதவியுடன் சமஸ்கிருதத்தைக் கற்றுக்

2. அந்த வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை, மங்களூரில் இருந்து வெளியான சுவாஷிணி, நவம்பர் 1925 இதழில் (iii-3) வெளியானது.

3. ஒரு 'முடி' என்பது 42 சேர்கள் கொண்ட ஒரு மூட்டையாகும்.

கொண்டார். சுப்பாராவ், அவருக்குத் தம்முடைய புத்தகங்களை இரவல் தந்ததுடன் மட்டுமின்றி யக்ஷகான பிரசங்கங்களை இயற்றவும் அவருக்கு உதவி புரிந்தார். உடுப்பியில் சுப்பாராவைச் சந்திப்பதற்கு முன்னர், ஏற்கனவே கிராமத்து மக்களிடையே புழக்கத்தில் இருந்த யக்ஷகானங்களை இசையோடு பாடவும், ஆர்வமுள்ளவர்களுக்கு அவற்றை விளக்கியுரைக்கவும்தான் முத்தண்ணாவால் முடிந்தது. சுப்பாராவ் சில யக்ஷகானங்களையும், மராத்தி மொழியில் சில நாடகங்களையும் எழுதியுள்ளாரென்பது லக்ஷ்மி நாராயணாவுக்கு அப்போது தெரிய வந்தது. புதியதாக வெளியான யக்ஷகானங்களைப் படிக்க விரும்பிய லக்ஷ்மி நாராயணா, வீரமணிகலகம், கசோபகன்யம், தேவயானி சுயம்வரம், சகுந்தலை சுயம்வரம் போன்றவற்றை சுப்பாராவிடமிருந்து இரவலாகப் பெற்றுப் படித்தார். பின்னர், தமது குருவான சுப்பாராவிடம், தாம் யக்ஷகானங்களை இயற்ற விரும்புவதாகவும், அதுவரை வேறு எவரேனும் தொடாத ஏற்புடைய தலைப்புகள் உள்ளனவா என்றும் லக்ஷ்மி நாராயணா வினவினார். சுப்பாராவும், ஸ்ரீஹர்ஷரின் ரத்னாவளி நாடகக் கதையை அவருக்கு எடுத்துரைத்தார். அதைப் பின்பற்றி லக்ஷ்மிநாராயணா ரத்னாவதி கல்யாணத்தை இயற்றினார். அந்தப் பிரசங்கத்திற்கான கடவுள் வாழ்த்துச் செய்யுளைத் தாமே இயற்றித் தந்ததாக சுப்பாராவ் குறிப்பிடுகிறார். அதற்குப் பின்னர், ஸ்காந்த புராணத்தில் சொல்லப்பட்டுள்ள ஷண்முகனின் கதையை அடிப்படையாகக் கொண்டு குமார விஜயத்தை எழுதத் தொடங்கினார். அந்தப் பிரசங்கத்தை எழுதிக் கொண்டிருக்கும்போதே உயர்நிலை வகுப்புகளுக்குப் பாடமாக இருந்த கன்னட நூல்களையும் புதினங்களையும் அவர் பயின்றார். சுப்பாராவ் அவருக்கு வழங்கிய கன்னட நாடகப் பாடல்கள், செய்யுள்கள் போன்றவற்றைப் போலவே பாடல்களை எழுதும் ஆற்றலையும் அவர் பெற்றார். அவற்றின் விளைவாக அவருடைய சொல்லாற்றல் மிகுந்து, ரத்னாவதி கல்யாணத்தைக் காட்டிலும் குமார விஜயம் மிகச் சிறப்பாக அமைந்தது. இந்த இரண்டு நூல்களையும் உடுப்பியில் உள்ள இந்து அச்சகம், அச்சிட்டு வெளியிட்டது. ரத்னாவதி கல்யாணம் சில இடங்களில் நிகழ்த்தப் பெற்றது. ஆனால், குமார விஜயத்தின், வழக்கத்திற்கு மாறான ததிகளைக் கொண்ட பாடல்களும், வசனங்களின் மொழிநடையும் கடுமையாக இருந்ததால் நடிகர்கள் அவற்றைப் பாடவும் பேசவும்

மிகவும் சிரமப்பட்டனர். எனவே அது ஒருமுறைகூட நிகழ்த்தப் பெறவில்லை.

அந்தச் சமயத்தில், மலாலி சுப்பாராவ் குந்தபூருக்கு மாற்றப் பட்டார். தம்முடைய இலக்கியச் சகாவின் பிரிவினை லக்ஷ்மி நாராயணாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக, குந்தப்பூர் உயர்நிலைப் பள்ளியில், உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் காலியான்து. அவருக்கும் அங்கே இடமாற்றம் கிடைத்தது. 1892ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவர் அங்கே பணியில் சேர்ந்தார். இடைப்பட்ட காலத்தில், யக்ஷகானத்தில் அவருக்கு இருந்த நாட்டம் ஆழமாக வேரூன்றியது. செய்யுளும் உரைநடையும் எழுதுவதில் அவருக்கு இருந்த ஆர்வத்தை வெளிப்படுத்தினார். இது குறித்து மலாலி சுப்பாராவ் கூறியுள்ளவை, லக்ஷ்மிநாராயணாவின் வருங்காலப் படைப்புக்களிலும் நிச்சயமாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின எனலாம். சுப்பராவ் கூறுகிறார் :

"நான் சந்தாதாராக இருக்கின்ற, மைசூரிலிருந்து சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்ற காவ்ய மஞ்சரி இதழின் தொகுப்புக்கள், கன்னட புதினங்கள், கன்னட நாடகங்கள், அரிய சமஸ்கிருத இலக்கியங்கள், 'ஸப்த மணி தர்ப்பணம்' போன்ற கன்னட இலக்கணங்கள், ஹலதார நிகண்டு போன்ற சமஸ்கிருத அகராதிகள், இன்னும் என்னிடமிருந்த பலவிதமான நூல்களையும் படிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். என்னிடமிருந்த இந்த நூல்கள் அனைத்தையும் கண்டு பெரிதும் மகிழ்ந்த அவர், ஒவ்வொன்றாக இரவலாகப் பெற்றுப் படிக்கத் தொடங்கினார். பள்ளியில் அவருக்கு ஓய்வு கிடைத்தபோதெல்லாம், கிட்டெல் அகராதியின் துணை கொண்டு இவற்றை ஆழ்ந்து கற்றார். பழமையான கன்னட மொழியில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்ததால், சப்தமணி தர்ப்பணம், கப்பிகார கைப்பிடி, பழைய கன்னட முதுமொழிகள் போன்றவற்றைப் படித்தபோது பழமையான கன்னடச் சொற்களையும், சமஸ்கிருதத்தில் இருந்து பெறப்பட்ட கன்னடச் சொற்களையும் (அபப்ராம்ஸ அல்லது தத்பவ சொற்கள்) தனியாகக் குறித்து வைத்துக் கொண்டார். அதுவே அன்றாட வழக்கமாகியது. இப்படி அவர் கல்விக் கடவுள் கலைமகளின் திருப்பாதங்களில் தவம் செய்தார் என்றே சொல்லலாம்; அதனால் படைப்புத் திறனுக்கு வேண்டிய ஆற்றல் அனைத்தும் கைவரப் பெற்றார்." (முத்தண்ணா ப. 67).

பழமையான கன்னட மொழியில் தேவையான பாண்டித்யம் பெற்ற பிறகு, சொந்தப் படைப்பு ஒன்றை பழைய கன்னட உரைநடையில் படைக்க விரும்பினார். அதற்கு அத்புத ராமாயணத்தைக் கருவாகத் தேர்ந்தெடுத்தார். அதுவரை அந்தக் கருவில் எவ்வித நூலும் இயற்றப்பட்டிருக்கவில்லை. அதன் சமஸ்கிருத மூலநூல் தேவநாகரி எழுத்தில் இருந்ததால் அதனை அவரால் படிக்க முடியவில்லை. அத்துடன் அவருடைய சமஸ்கிருத மொழியறிவும் அதற்குப் போதுமானதாயில்லை. எனவே அதனைப் படித்து, கன்னட மொழியில் பொருள் சொல்லுமாறு அவர் சுப்பாராவைக் கேட்டுக் கொண்டார். உடனடியாக அதற்கு ஒப்புக் கொண்ட சுப்பாராவ், நாள்தோறும், ஒன்றிரண்டு அத்தியாயங்களைப் படித்து அவற்றைக் கன்னடத்தில் மொழிபெயர்த்துச் சொல்லுவார். லக்ஷ்மிநாராயணாவும் அவர் மொழிபெயர்த்துச் சொன்ன பகுதிகளை எழுதிக் கொண்டு, பின்னர் அவற்றைப் பழமையான கன்னட நடையில் எழுதுவார். இவ்வாறாக ஒருசில மாதங்களிலேயே அந்த நூலை அவர் எழுதி முடித்தார். அது அச்சிடத் தயாரான உடனேயே, அதனை வெளியிடுவதற்காகக் காவ்ய மஞ்சரி இதழின் ஆசிரியர் எம்.ஏ.ராமானுஜ ஐயங்காருக்கு அனுப்பினார். அந்தக் கையெழுத்துப் பிரதியுடன் கடிதம் ஒன்றையும் வைத்து அனுப்பினார் லக்ஷ்மிநாராயணா. (அக்கடிதத்தில் 1.1.1895 என்று தேதியிடப்பட்டிருந்தது) அக்கடிதத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் : "இது, ஓலைச் சுவடியில் இருந்து எடுத்த மிகப் பழமையான படைப்பாகும். நான் அதனை மிகவும் கர்ம சிரத்தையாகப் படியெடுத்து, வெளியிடுவதற்காக உங்களுக்கு அனுப்பியுள்ளேன்." அந்த நூலின் இறுதியில் அவர் இவ்வாறு எழுதியிருந்தார் : "..... உண்மையான கன்னடியர்களின் பாத கமலங்களின் அமுதத்தைப் பருகும் கன்னடப் புலவர்களின் வீட்டு வேலைக்காரன் விவரித்தது." அவர் தம்முடைய உண்மையான பெயரை வெளியிடவில்லை.[4] அந்நூல் 1895ஆம் ஆண்டு

4. திருள் கன்னடிகானடி தவரேய பண்டுணிகாலப்பா கன்னட கப்பிகாறா மனேயுலிகடவனோர்வம் கன்னடிகம் பெல்டா அத்புத றாமாயணம் சம்பூர்ணம் (எம்.ஏ. றாமானுஜ ஐயங்கார், மூல ஓலைச் சுவடியை அனுப்புமாறும், அதன் ஆசிரியரின் பெயர் காலம் போன்ற விவரங்களைத் தருமாறும் கேட்டு லக்ஷ்மி நாறாயணாவுக்குக் கடிதம் எழுதினார். அவரும் ஆசிரியரைப் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்றும் ஓலைச் சுவடியின் உரிமையாளர் வேறிடம் சென்றுவிட்டதாகவும், வெளியீட்டுக்காக அனுப்பப்பட்ட கையெழுத்துப்படி, மூலத்தைப் பார்த்து கர்மசிரத்தையாகப் படியெடுத்தது என்றும் பதில் எழுதினார்.)

அக்டோபர் மாதத்தில் வெளியானது. அந்த இதழாசிரியர் அந்நூலின் பத்துப்படிகளை இலவசப் படியாக அனுப்பி வைத்தார்; அத்துடன் காவ்ய மஞ்சரியையும் தொடர்ந்து இலவசமாக அனுப்பத் தொடங்கினார்.

அதற்குப் பின்னர் லக்ஷ்மிஷாவின் கன்னட ஜெய்மினி பாரதம் போல மகாகாவியம் ஒன்றை எழுத வேண்டுமென லக்ஷ்மி நாராயணா விரும்பினார். மீண்டும், இதற்காகத் தம் குரு மலாலி சுப்பர்ராவின் உதவியை நாடிய அவர், பத்ம புராணத்திலிருந்து ஸ்ரீராமனின் அசுவமேத யாக வரலாற்றைப் படித்து உதவுமாறு கேட்டுக் கொண்டார். சுமார் நான்கு அத்தியாயங்கள் வரை அவர் மொழிபெயர்த்துச் சொல்லக்கேட்ட லக்ஷ்மிநாராயணா, அவை, ஸ்ரீராமன் இலங்கையிலிருந்து திரும்பியது முதல் அயோத்தியில் முடிசூட்டுவிழா நடந்தது வரையான செய்திகளாக இருக்கக் கண்டு அந்தப் பகுதியை மட்டும் தனியொரு செய்யுள் இலக்கியமாக எழுத எண்ணினார். அவ்வாறு, ராம பட்டாபிஷேகத்தை வர்த்தக சத்பாடி யாப்பில் எழுதினார்.

லக்ஷ்மி நாராயணாவின்பால் தாக்குறவை ஏற்படுத்தி, அவருடைய இலக்கிய முயற்சிகளில் ஒத்துழைப்பு நல்கிய இன்னொருவர் பவுலாடி வெங்கடரமண ஹெப்பார். குந்தபூரில் லக்ஷ்மிநாராயணா தங்கியிருந்த அதே விடுதியில் ஹெப்பாரும் தங்கியிருந்தார். ஹெப்பார், 17 அல்லது 18 வயதே நிரம்பிய இளைஞராக இருந்தபோதிலும், பழமையான கன்னட செவ்விலக்கியங்களைப் பயின்று மிகவும் தேர்ந்த புலமை பெற்றிருந்தார். கன்னட சத்பாடி காவியங்களில் மிகவுயர்வானதாகப் போற்றப்பட்ட லக்ஷ்மிஷாவின் ஜைமினி பாரதத்துடன் ஒப்பிடக் கூடிய அளவுக்கு மிகவுயர்ந்த கவித்திறனுடன் வர்த்தக சத்பாடியில் செய்யுள் இயற்றும் ஆற்றல் பெற்றவர் அவர். ஓரினப் பறவைகள் போன்ற இவ்விருவரும் பரஸ்பரம் நன்கு பழக்கமான வேளையில் மலாலி சுப்பாராவிடம் சமஸ்கிருத மூல பாடத்தைக் கற்றுக் கொண்ட பின்னர் எழுதத் தொடங்கிய ராமாஸ்வமேதத்தில் பல செய்யுள்களை எழுதி முடித்திருந்தார். தாம் எழுதியிருந்தவற்றில் சில செய்யுட்களை ஹெப்பாருக்கு அவர் வாசித்துக் காட்டினார். தமக்குப் படித்துக் காட்டப்பட்டவற்றைக் கேட்ட ஹெப்பாரும் சட்டென்று தம்முடைய விமர்சனத்தைச் சொல்லிவிட்டார். "யாப்பமைதியுடைய செய்யுள்களை எழுதுகின்ற வீண் முயற்சியை

விடுத்துச் சீரிய உரைநடையை எழுதினால் நீங்கள் சிறந்து விளங்கலாம்." சற்றுக் கடுமையாக இருந்தாலும், நட்பு முறையில் ஹெப்பார் கூறிய இந்த அறிவுரைக்கு நல்ல பலன் இருந்தது. அதற்குப் பின்னர் மூன்றாண்டுகள் கழித்து, லக்ஷ்மி நாராயணா தாமெழுதிய அத்புத ராமாயணத்தின் கையெழுத்துப் படியை ஹெப்பாரிடம் அளித்து அவருடைய கருத்தைக் கேட்டார். அதைப் படித்த ஹெப்பாரும் அந்தப் படைப்பை மிக உயர்வாகப் பாராட்டினார்.

அதன் பிறகு மூன்றாண்டுகள் கழித்து, ராமாஸ்வமேதக் கதையில் ஸ்ரீராமனுக்கு முடி சூட்டுவது வரைக்கும் தாம் எழுதியிருப்பதாகவும், எஞ்சியுள்ள கதையையும் உரைநடையில் எழுத விரும்புவதாகவும் லெக்ஷ்மி நாராயணா, ஹெப்பாருக்குத் தெரியப் படுத்தினார். அத்துடன், அக்கதையில் முடிசூட்டும் நிகழ்ச்சிக்கு முகவுரையாக அமையுமாறு ஸ்ரீராமன் மீதான போற்றிப் பாடல்கள் சிலவற்றை இயற்றித் தருமாறும் ஹெப்பாரை அவர் கேட்டுக் கொண்டார். தம் நண்பரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஹெப்பாரும் முப்பத்து மூன்று செய்யுள்களை எழுதித் தந்தார். லக்ஷ்மி நாராயணா தமது படைப்பைத் திருத்தி எழுதுவதற்கு ஹெப்பார் பல நல்ல ஆலோசனைகளை வழங்கினார் என்றும் நமக்குத் தெரிய வருகிறது. அவ்வாறாக, 1895ஆம் ஆண்டுவாக்கில் திருத்தி எழுதப்பட்ட ராமபட்டாபிஷேகம் தயாரானது.

அத்புத ராமாயணத்தின் அச்சுப்பணி முடியும் முன்னரே, காவ்ய மஞ்சரியின் இதழாசிரியருக்குக் குந்தப்பூரிலிருந்து லக்ஷ்மிநாராயணா கீழ்க்கண்ட ஒரு கடிதத்தை 25-9-1895இல் எழுதினார். ".... சத்பாதி யாப்பில் மகாலக்ஷ்மி எழுதிய ராமபட்டாபிஷேகம் என்ற இன்னொரு படைப்புக் கிடைத்திருக்கிறது. அதில் சுமார் 250 செய்யுள்கள் உள்ளன. அந்தப் படைப்பு நன்றாக இருப்பதுடன் வெளியிட ஏற்றதாகவும் தோன்றுகிறது.. அதை நீங்கள் வெளியிட விரும்புகிறீர்களா என்று எனக்குத் தயைகூர்ந்து தெரியப்படுத்தவும்." (லக்ஷ்மி நாராயணாவின் தாயின் பெயரும் மகாலக்ஷ்மி என்பது இங்கே குறிப்பிடத்தக்கது) அதைத் தம்முடைய இதழில் வெளியிடுவதற்கு முன்னர், அதனை- எழுதியவர் பற்றிய விவரங்களை அறிய வேண்டி, அந்தப் படைப்பின் மூலப் படியை அனுப்புமாறு லக்ஷ்மி நாராயணாவைக் காவ்ய மஞ்சரியின் இதழாசிரியர் கேட்டுக்

கொண்டார். அப்போதும்கூட, லக்ஷ்மி நாராயணா முன்போலவே சாக்குப் போக்கான பதிலையே சொன்னார் : "மூலப்படியை அதன் சொந்தக்காரரிடம் நான் திருப்பித் தந்துவிட்டேன். மூலத்தைப் பார்த்து நான் கர்ம சிரத்தையுடன் படியெடுத்திருக்கிறேன்." காவ்ய மஞ்சரி இதழாசிரியரின் வேண்டுகோளுக்கு இணங்க, மல்லி கார்ஜுனாவின் காமசாஸ்திரம், ஹரிச்சந்திர காவியம், உத்தர ராமாயணம் போன்று வேறு சில படைப்புகளின் கையெழுத்துப் படிகளையும் அனுப்பிவைத்தார். மற்ற படைப்புகளின் படிகளைப் பெற்றபோதுகூட, லக்ஷ்மி நாராயணாவின் கூற்றுக்களை ராமானுஜ ஐயங்கார் நம்பாமல் இருக்க முகாந்திரம் எதுவும் இருக்கவில்லை. எனவே அந்த இரண்டு நூல்களில் தாமெழுதிய முகவுரையில் ராமானுஜ ஐயங்கார் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

(1) *அத்புத ராமாயணத்தின் ஆசிரியர் தென் கன்னடத்தைச் சேர்ந்த பிராமணராக இருக்க வேண்டும்; அவர் 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்திருக்கலாம்.*

(2) *ராம பட்டாபிஷேகத்தின் ஆசிரியர் மகாலஷ்மி, சாவடி ரங்கபட்டரின் மகளாவார். அவர் கி.பி. 1627ஆம் ஆண்டு வாக்கில் வாழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில் அக்காலத்தவரான சதக்ஷ்ஹரிதேவா பற்றி அவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்."*

ராமானுஜ ஐயங்காரின் இந்தக் கருத்துக்களைக் கர்நாடகத்தில் இருந்த வாசகர்கள் அனைவரும் அப்படியே ஏற்றுக் கொண்டனர். ஏனெனில் எவருமே அந்தக் கருத்துக்களை மறுத்துரைக்கவில்லை. இவ்வாறு உருவாக்கப்பட்ட நம்பிக்கை, ராமாஸ்வமேதம் வெளியானபோதும் நீடித்தது. லக்ஷ்மி நாராயணாவின் மறைவுக்குப் பின்னரே, அந்த மூன்று நூல்களின் ஆசிரியர் முத்தண்ணாதான் என்று தென் கன்னட மாவட்டத்து மக்கள் பேசிக் கொள்ளத் தொடங்கினர்.

1897ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், ராமானுஜ ஐயங்காருக்கு லக்ஷ்மி நாராயணா எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் :

"முத்தண்ணா எழுதிய ராமாஸ்வமேதம் என்ற நூல் கிடைத்துள்ளது. உங்கள் இதழில் வெளியிடுவதற்கு அது ஏற்றது

என நான் எண்ணுகிறேன். நீங்கள் விரும்பினால் நான் அதை அனுப்புகிறேன்." ராமானுஜ ஐயங்காரும் அதன் கையெழுத்துப் படியை அனுப்புமாறு கேட்டார். லக்ஷ்மி நாராயணாவும் தம்முடைய சொந்தக் கையெழுத்தில் இருந்த அந்தப் படியை அனுப்பினார். ராமானுஜ ஐயங்காரும் தாம் புதிதாகத் தொடங்கியிருந்த காவ்ய கலாநிதி இதழின் முதல் இதழில் இருந்தே ராமாஸ்வமேதத்தை அச்சிடத் தொடங்கி, அதன் 17-18ஆவது இதழில் அதனை முழுமையாக அச்சிட்டு முடித்துவிட்டார். அந்தக் கடைசி இதழ் 15.8.1901இல் வெளியானது. அந்தப் படைப்புக்கு முகவுரை ஒன்றெழுத விரும்பிய ராமானுஜ ஐயங்கார், அதன் உண்மையான ஆசிரியர் யாரென்று அறிய விரும்பினார். லக்ஷ்மி நாராயணாவுக்கு 25.6.1900 அன்று எழுதிய கடிதத்தில் அவர் இவ்வாறு கூறியிருந்தார் : "இக்கால ஆசிரியர் ஒருவரே அந்நூலை எழுதியிருக்க வேண்டும் என்று நம்பும்படியான காரணங்கள் இருக்கின்றன. அவர் உங்கள் நண்பர்களில் ஒருவராக இருக்க வேண்டும்; அல்லது நீங்களாகவே இருக்கலாம்." லக்ஷ்மி நாராயணாவும், அந்நூலை இயற்றியவர் தாமல்லரென்றும், தமக்குக் கிடைத்த மூல நூலின் படியையே தாம் அனுப்பியதாகவும் பதில் எழுதினார்.

ராமாஸ்வமேதம் நூலை எழுதியவர்பற்றிய விஷயத்தில்கூட, காவ்ய கலாநிதி இதழாசிரியரான (காவ்ய மஞ்சரி இதழ் நின்று போயிருந்தது) ராமானுஜ ஐயங்காருக்கு, முத்தண்ணா என்ற புனைபெயரில் (அவருடைய செல்லப் பெயரும் அதுதான்) அதன் படியை அனுப்பியிருந்த லக்ஷ்மி நாராயணாவிடமிருந்து உண்மையை வெளிக் கொணர முடியவில்லை. லக்ஷ்மி நாராயணாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்களான மலாலி சுப்பராவ், ஹுரலி பீமராவ், பெங்கால் ராமராவ் ஆகியோர் அவர் பற்றி எழுதிய கட்டுரைகளைப் படித்த பின்னரும்-அக்கட்டுரைகள் முதலில் பெங்களூர் மத்தியக் கல்லூரியின் கன்னட சங்கத்தின் சார்பாக வெளிவந்த பிரபுத்த கர்நாடகா என்ற காலாண்டு இதழின் "முத்தண்ணா சிறப்பிதழிலும்" பின்னர் டி.வி குந்தப்பாவின் முன்னுரையுடன் முத்தண்ணா என்ற தலைப்பில் நூலாகவும் (1926) வெளிவந்தன - லக்ஷ்மி நாராயணா அந்த மூன்று நூல்களையும் எழுதியிருக்க மாட்டார் என்றே தொடர்ந்து நம்பி வந்தார். எனினும்,

ஹெச்.சென்னகேசவ ஐயங்காரிடமிருந்த அத்புத ராமாயணத்தின் இன்னொரு கையெழுத்துப் படியின் தலைப்புப் பக்கத்தில், ஆசிரியர் பெயராக லக்ஷ்மி நாராயணாவின் பெயர் பொறிக்கப் பட்டிருந்ததைக் கண்ட பின்னரே நாந்தலிகே லக்ஷ்மி நாராயணாவின் படைப்புத்தான் அத்புத ராமாயணம் என்று ராமானுஜ ஐயங்கார் ஒப்புக் கொண்டார். ஆனால், லக்ஷ்மி நாராயணா தான் அந்த மூன்று நூல்களின் ஆசிரியர் என்று கூறிய அவருடைய நெருங்கிய தோழர்களின் ஒருமித்த கருத்தை அவர் ஏற்கவில்லை. எப்படியோ, அந்த மூன்று நூல்களின் உண்மையான ஆசிரியர் யார் என்ற சிக்கல், 1926ஆம் ஆண்டில் முத்தண்ணாவைப் பற்றிய நினைவுச் சிறப்பிதழ் வெளியானவுடன் முடிவுக்கு வந்தது.

லக்ஷ்மி நாராயணாவின் மனைவி கமலம்மா, கர்நாடகத்தின் ஷிமோகா மாவட்டத்தைச் சேர்ந்தவர். காகே கொடுமாகி கிராமத்தைச் சேர்ந்த நாராயணப்பையாவின் மகள் அவர். லக்ஷ்மி நாராயணாவின் 25ஆவது வயதில் அவருக்குத் திருமணம் நடை பெற்றது. கமலம்மா சற்றே கறுப்பு. ராமாஸ்வமேதத்தில் முத்தண்ணாவுக்கும் மனோரமாவுக்கும் இடையேயான உரையாடல், முத்தண்ணாவும் அவர் மனைவியும் ஏழ்மையான நிலையிலும் மகிழ்ச்சிகரமாக இல்லறத்தை நடத்தினர் என்பதைப் பிரதிபலிப்பதாகக் கூறுவர். அந்தத் தம்பதியருக்கு 1898ஆம் ஆண்டு மிகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் மனநிறைவளிப்பதாகவும் இருந்த காலம் எனலாம். அந்த ஆண்டில்தான், அத்புத ராமாயணமும் ராம பட்டாபிஷேகமும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் எஃப்.ஏ. தேர்வுக்குப் பாடநூல்களாக அறிவிக்கப்பட்டன; அதே ஆண்டில் அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ராதாகிருஷ்ணா என்று பெயரிட்டனர். தொடர்ந்து படிக்கவும் எழுதவும் அவர் மேற்கொண்ட கடுமையான உழைப்பு, ஏழ்மையின் காரணமாக ஊட்ட உணவு இன்மை ஆகியவற்றின் காரணமாக முத்தண்ணா காசநோய்க்கு ஆளானார். அக்கொடிய நோய் 32 வயதிலேயே அவருடைய உயிரைப் பறித்து விட்டது.

இரண்டு யக்ஷகானங்கள், பழமையான கன்னட மொழியில் இரண்டு உரைநடைப் படைப்புகள், ஒரு செய்யுள் படைப்பு, ஜோ-ஜோ என்ற சொல்லைப் பற்றிய சொல்லாய்வுக் கட்டுரை ஒன்று ஆகியவற்றை முத்தண்ணா படைத்துள்ளார். முத்தண்ணாவின் இலக்கியத் திறனை உருப்பெறச் செய்ததில்,

அவர் வாழ்ந்த சூழல் எந்த அளவுக்குப் பங்காற்றியுள்ளது என்று இதுவரை கண்டோம். முத்தண்ணாவின் குறுகிய வாழ்நாளின் பெரும்பகுதி சாதாரணமாகவே கழிந்தது. அவர் சாதாரண ஏழை மனிதராக இருந்தாலும்கூட, சாதாரண மக்களிடம் பழகியோ, ஏழையரோடு ஏழையாகவோ அவர் வாழ்க்கையை நடத்தவில்லை. ஆர். வெங்கடாசார்யாவின் புதினங்கள் அவரிடத்துத் தாக்குறவு ஏற்படுத்தினாலும் அவர் கதைபொதி படைப்புகளை எழுதும் திறன் கொண்டிருக்கவில்லை. வாக்தேவி என்ற புதினத்தை அவர் அரைகுறையாக விட்டதிலிருந்தே இது தெரியவரும். ஆலய வழிபாடு, புராணக் கருத்துக்கள் கொண்ட யக்ஷகானங்கள் போன்ற சூழ்நிலையில் வளர்ந்ததால், அவர் தமது படைப்பாற்றலை முதலில் யக்ஷகானங்களை எழுதவும், பின்னர் நவீன பாணியில் ராமாயணக் கருத்துக்களில் உரைநடைகளை எழுதவும் இயல்பாகவே நெறிப்படுத்திக் கொண்டார்.

3. யக்ஷகானங்கள்

முத்தண்ணா இயற்றிய இரண்டு யக்ஷகானங்களின் சுருக்கமான செய்திகளைப் பார்ப்பதற்கு முன்னர், அந்த நிகழ் கலையின் முறையான வடிவத்தையும் அது நிலவிவந்தமையும் ஓரளவுக்குத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

கன்னட மொழியில் இதுவரை கண்டறியப்பட்டுள்ளவற்றில் முதல் நூலான கவிராஜமார்க்கத்தில் (கி.பி. 850), சட்டனா, பேடண்டே, பகரனா (முறையே சமஸ்கிருதச் சொற்களான சித்ராயாடனா, வைதாண்டிகா, ப்ரகரணா ஆகியவற்றின் திருந்தா வடிவங்கள்) என்ற செய்யுள் வகைகளின் பெயர்கள் காணப் படுகின்றன. இவற்றில் முதலிரண்டும் செய்யுள் வடிவங்களாகும். பகரனா என்பது, நகைச்சுவையே பிரதானமாகக் கொண்ட, தெருக்களிலும் திறந்தவெளி அரங்குகளிலும் நிகழ்த்தப்பட்ட ஒரு வகையான கூத்தாகும். ப்ரகரணா என்பது பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தஸரூபகாவில் ஒன்று என்பதை நாமறிவோம். உலகம் முழுவதிலும் உள்ள நாட்டுப்புற நாடகங்கள் அனைத்திலும் இசையும் நாட்டியமும் பொதுக்கூறுகளாக இருப்பதால், நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு முத்திரைகளும் பாங்கிகளும் சேர்ந்த அபிநயம் என்ற கூறினையும் சேர்த்துக் கொண்டு, கர்நாடகத்தின் யக்ஷகானம் 15ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே ஒரு நாட்டுப்புற நாடக நிகழ்கலையாகத் தோன்றியிருக்கலாம் என்று வாதிடவும் இடமுண்டு. இந்தக் கலையின் சில முறையான அம்சங்கள் குறித்தத் திட்டவட்டமான குறிப்புகள் ரத்னாகர் வர்ணியின் (கி.பி. 1550) பாரதேச வைபவம் என்ற நூலில் காணப்படுகின்றன. எனவே, தெற்கு, வடக்குக் கன்னட மாவட்டங்களில் உருவான இந்த நிகழ்கலை கர்நாடகத்திற்கே உரிய, அதிலும் குறிப்பாகக் கர்நாடகத்தின் கடற்கரைப் பகுதிக்கே உரிய ஒரு தனிக்கலை எனில் அது மிகையாகாது.

(யக்ஷகானம் என்பது (1) உரைநடையிலான வசனங்கள், செய்யுள் (சாதாரணமாக பாமினி சத்பாதி யாப்பில் அமைந்தவை) ராக தாளங்களுடன் கூடிய பாடல்கள் (2) பாடுதல் (கானம் அல்லது கயானம்) (3) உடையலங்காரம் (வேஷ பூஷணம்)

(4) ஒப்பனை (வண்ணம் பூசல்) (5) தோல் மற்றும் துளைக் கருவிகள் ஆகியவை ஒருங்கிணைந்த நிகழ்கலையாகும். நிகழ்ச்சி முழுவதும் பாகவதர் என்ற ஒரு நபரின் மேற்பார்வையில் ஒத்திகை பார்த்து, இயக்கப்பட்டு நிகழ்த்தப்பெறும். பாகவதரின் திறமையைப் பொறுத்தே நிகழ்ச்சியின் முழு வெற்றியும் அமையும். பாகவதரே எல்லாப் பாடல்களையும் செய்யுள்களையும் பாடவேண்டியிருப்பதால் யக்ஷகான இசையின் தாளம், லயம், ராகம், சுருதி ஆகிய அனைத்திலும் வல்லவராக அவர் இருக்க வேண்டும். அத்துடன் அவர் நாட்டிய அசைவுகளை இயைபுபட நெறிப்படுத்தி இயக்கவும் வேண்டும்.

யக்ஷகானங்களுக்கான மொத்த எழுத்துவடிவத்தையும் கவிஞர்கள் எழுதுவார்கள். அவை கவிஞர்களால் எழுதப் பட்டாலும், மக்கள் பார்த்து மகிழ நிகழ்த்துவதற்கு எழுதப்படுவதால், போதிய அளவு இலக்கியத் தரம் உடையவையாய் இருக்க வேண்டும் என்பதில் யக்ஷகான எழுத்தாளர்கள் கவனம் செலுத்துவதில்லை. உணர்ச்சியைத் தூண்டுவது (ரசப்பிரதிதி) அதில் பங்கேற்கும் கலைஞர்களின் பொறுப்பாகும். பார்தி சுப்பாவும் (1750) முத்தண்ணாவும் குறிப்பிடத்தக்க இலக்கியத்தரம் வாய்ந்த யக்ஷகான எழுத்தாளர்களாவர்.

இனி, முத்தண்ணா எழுதிய நிரல்படி அவருடைய படைப்புக்களை ஆராய்ந்து மதிப்பீடு செய்யலாம். ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், அவருடைய முதலாவது படைப்பு ரத்னாவதி கல்யாணம்.

ரத்னாவதி கல்யாணம் :

பாகீரதி நதிக்கரையில் செழிப்புற்று விளங்கிய அங்க நாட்டை, உயர் பண்புகள் வாய்ந்த துருதவர்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு நீண்ட காலமாகக் குழந்தைப் பேறு இல்லாததால் அவன் மிகவும் வேதனையில் வாடினான். ஒருநாள் நாரத முனிவர் அவனுடைய அரசவைக்கு வந்தார். அரசனுடைய ஆழ்ந்த வேதனைக்கான காரணத்தை அறிந்த நாரதர், அவனிடம் மாங்கனி ஒன்றைத் தந்து, அக்கனியை அவன் மனைவி உண்டால், பெண் குழந்தை ஒன்றைப் பெறுவாள் என்று உறுதி அளித்தார்.

துருத வர்மனும் நாரதரின் அறிவுரைப்படியே செயல் பட்டான். அவன் மனைவி சௌரம்பே சிவபெருமானை வழிபட்டு அக்கனியை உண்டாள். சிவனருளால் அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். மதகுருமார்கள் கூறியபடி அரசனும் அக்குழந்தைக்கு ரத்னாவதி என்று பெயரிட்டான்.

ரத்னாவதியும் அழகுமிகுந்த மங்கையாகப் பதினாறு வயதெய்தி மணப்பருவம் அடைந்தாள். துருதவர்மனும் அவளை, கௌசாம்பியின் அரசனான வத்ஸராஜனுக்கு மணமுடிக்கத் தீர்மானித்தான்.

அந்த வேளையில் அங்க நாட்டின் வழியாகச் சென்ற பிராமணர்கள் சிலர் இளவரசி ரத்னாவதியின் மணச் செய்தியைக் கேள்வியுற்று, அப்படியே கலிங்க நாட்டு மன்னன் பத்ரசேனனின் அரசவைக்குச் சென்று அம்மன்னனுக்கு அச்செய்தியை அறிவித்தனர். அதைக் கேட்ட பத்ரசேனன், ரத்னாவதியை மணக்கத் தான் விரும்புவதாக துருதவர்மனுக்குத் தூது அனுப்புமாறு தனது அமைச்சரைப் பணித்தான். அமைச்சரும் பத்ரசேனன் கூறியவாறு மடல் எழுதி, வரிசைப் பொருள்களுடன் தூது அனுப்பினான். துருதவர்மனும், தூது வந்தவர்களிடமே தன்னுடைய தீர்மானத்தை மடலெழுதித் திருப்பி அனுப்பி விட்டான்.

துருதவர்மனின் மடலைப்படித்த பத்ரசேனன் வெகுண்டெழுந்தான். அங்க நாட்டின் மீது போர் தொடுத்து, துருதவர்மனை வென்று அவன் மகளைத் தனது அரண்மனைக்குச் சிறையெடுத்து வந்து மணமுடிப்பது என்று பத்ரசேனன் தீர்மானிக்கிறான். அமைச்சரிடம் படைதிரட்டச் சொல்லிவிட்டு, அங்க நாட்டின்மீது போர்தொடுக்கத் தானே படைக்குத் தலைமை ஏற்றுச் செல்லத் தீர்மானிக்கிறான். ஆனால் அமைச்சனின் மகனான சித்ரத்வஜன் படையை நடத்திச் செல்லும் பொறுப்பைத் தன்னிடம் விடுமாறு மன்னனைக் கேட்டுக் கொள்கிறான். பத்ரசேனனும், சித்ரத்வஜன் படை நடத்திச் செல்ல அனுமதிக்கிறான்.

சித்ரத்வஜன் தன் தாயிடம் ஆசி பெற்றுக் கொண்டு படையோடு சென்று அங்க நாட்டின் தலைநகரைத் தாக்குகிறான். துருதவர்மனும் படைதிரட்டிக் கொண்டு வந்து களம் புகுகிறான்

கடுமையான போரில் சித்ரத்வஜன் துருத வர்மனைத் தோற்கடித்து, அவனைச் சிறைப்பிடித்துச் செல்கிறான். பெரும் ஆபத்தில் சிக்கிக் மாட்டிக் கொண்ட துருதவர்மன் செய்வதறியாது திகைக்கிறான். திடீரென்று அவனுக்கு வேடர்குலத் தலைவனான தனது பழைய நண்பன் விந்தியகேதுவின் நினைவு வருகிறது.

துருதவர்மனின் துன்பநிலை குறித்து விந்திய கேதுவுக்குத் தெரியவருகிறது. அவன் தன் மனைவியை விளித்து, முன்பொரு முறை குருரதமஸ்த்ரகா என்ற அசுரன் தன்னுடைய மலை வாழிடத்தைத் தாக்கியபோது துருதவர்மன் தன்னை எவ்வாறு காப்பாற்றினான் என்று விளக்கினான். வேடர்குலத் தலைவனுக்கு நேர்ந்த இன்னலைக் கேள்வியுற்றதுமே துருத வர்மன் அவனுடைய உதவிக்குச் சென்று அந்த அசுரனைக் கொன்றான். இந்தப் பழைய சம்பவத்தை நினைவு கூர்ந்த விந்தியகேது, தன்னுடைய நண்பனுக்கு உதவி செய்யத் தான் செல்லவேண்டும் என்று தன் மனைவியிடம் கூறுகிறான். தன்னுடைய கணவனை ஒரு கண நேரமேனும் பிரிந்திருக்கச் சகியாத விந்தியகேதுவின் மனைவி, அவன் நண்பன் அங்கராஜனுக்கு உதவுவதற்காகத் தன் கணவனை அனுப்பச் சம்மதித்து, அவனுக்குப் படைக்கலங்களை அணிவித்து, வீரத் திலகமிட்டு, ஆலத்தி எடுத்து வழியனுப்பி வைக்கிறாள்.

உடனடியாக அங்க நாட்டின் தலைநகருக்குச் சென்ற விந்திய கேது, சித்ரத்வஜனுடன் கடுமையாகப் போரிட்டு, அவனைப் பிடித்துக் கொல்வதற்காக வாளை ஓங்கியபோது, துருதவர்மன் குறுக்கிட்டு, நிராயுதபாணியாக இருந்த சித்ரத்வஜனைக் கொல்லாமல் தடுத்தான். விந்தியகேதுவும் வாளை உறையிலிட்டு விட்டுச் சித்ரத்வஜனைச் சிறைப்பிடித்துச் சென்றான்.

தன்னுடைய அமைச்சனின் மகனுக்கு நேர்ந்த கதியைத் தூதர்கள் மூலம் கேட்டறிந்த பத்ரசேனன், துருதவர்மனிடம் போரிட தன்னுடைய படையுடன் விரைகிறான். தீரமுடன் போரிட்ட துருதவர்மனும் களத்தில் மூர்ச்சையாகிவிடுகிறான். பிறகு விந்தியகேது தன் நண்பனுக்காகப் பத்ரசேனனை எதிர்த்துப் போரிடும்போது அவனால் கொல்லப் படுகிறான். மூர்ச்சை தெளிந்து எழுகின்ற துருதவர்மன் எதிரியுடன் போரிட்டு மீண்டும் மூர்ச்சையாகிறான். சிறைப்பிடிக்கப்பட்டிருந்த தனது அமைச்சனின் மகனான சித்ரத்வஜனை விடுவிக்கும் பத்ரசேனன், அவனைப் படையின் துணையுடன் கலிங்கத்தின் தலைநகருக்குத் திருப்பி அனுப்புகிறான்.

அது இரவு நேரம்; அந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, துருதவர்மனின் அரண்மனைக்குச் சென்று அவன் மகள் ரத்னாவதியைச் சிறையெடுத்துவர எண்ணுகிறான் பத்ரசேனன். அவன் அரண்மனையின் அந்தப்புரத்திற்குச் சென்றபோது, ரத்னாவதி தங்கக் கட்டிலில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் அழகில் சொக்கிப் போன அவன், அப்படியே அவளைக் கட்டிலுடன் தூக்கிவந்து (திண்டிரவனம்) என்ற அடர்ந்த காட்டின் நடுவே வைக்கிறான். காலையில் ரத்னாவதி கண்விழித்தபோது, பயந்துபோய் ஓலமிட்டாள். பத்ரசேனன் அவளிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, தனக்கு மனைவியாகுமாறு அவளை வேண்டுகிறான். அதை ஏற்காத அவள், அவன் நடத்தை கண்டனத்திற்கு உரியது என்கிறாள். அதைக் கேட்டு வெகுண்டெழுந்த பத்ரசேனன், அவளைக் கொன்றுவிட எண்ணித் தன் வாளை உருவுகிறான். அப்போது, நிர்க்கதியான பெண்ணை அவன் கொல்லலாகாது என்று ஓர் அசரீரி கேட்கிறது.

அந்த வேளையில் வித்யுலோச்சனன் என்ற ஓர் அசுரன் அங்கே தோன்றுகிறான். அவ்வசுரனும் பத்ரசேனனைக் கொன்றுவிட்டு ரத்னாவதியைத் தன் துணையாக்கிக் கொள்ள விரும்பி அவனுடன் போரிடுகிறான். பத்ரசேனனும் அசுரனை எதிர்த்துத் தன் வில் அம்புகளால் கடுமையாகப் போரிடுகிறான். சீறி வந்த அம்புகளை லாவகமாக எதிர்கொண்ட அசுரன், அருகில் இருந்த ஒரு மரத்தை வேரோடு பிடுங்கி பத்ரசேனன் தலையில் ஓங்கிப்போட, பத்ரசேனனும் செத்து வீழ்ந்தான். பின்னர் அந்த அசுரன், தன்னைக் கணவனாக ஏற்குமாறு ரத்னாவதியை வேண்டினான். அவளும் அதை நிராகரித்தாள். வித்யுலோச்சனன் இரண்டுவாரகால அவகாசம் தந்து, அதற்குள் அவள் மனதை மாற்றிக்கொண்டு தன்னை மணக்குமாறு சொல்லிவிட்டு, அவளை அங்கேயே காவலில் வைத்துவிட்டுச் சென்று விட்டான்.

இதற்கிடையில் கௌசாம்பி மன்னன் வத்ஸராஜன், குதிரை மீதேறி, தன்னுடைய பரிவாரங்கள் புடைசூழ அருகிலிருந்த காட்டுக்கு வேட்டையாடச் செல்கிறான். அவன், அக் காட்டிலுள்ள விலங்குகளை வேட்டையாடிக் கொண்டிருக்கும் போது, அவன் குறியிலிருந்து தப்பிய மான் ஒன்று உயிர் பிழைக்க ஓடியது. விரைந்து அதனைப் பின் தொடர்ந்த அரசன், அது

மறைந்துபோனதால் தன் குதிரையில் இருந்து இறங்கி, அங்கே ஒரு மரத்தில் அதைக் கட்டிவிட்டு அதன் நிழலில் ஓய்வெடுக்கத் தொடங்கினான். அந்தச் சமயத்தில் வித்யுலோச்சனன் உணவு சேகரிப்பதற்காக காட்டுக்குள் சென்றிருந்தான். அங்கே வத்ஸராஜன், ரத்னாவதியைச் சந்தித்து அவளுடன் உரையாடுகிறான். ரத்னாவதி அவளுக்கு அந்நிலை ஏற்படக் காரணமான பழைய சம்பவங்களை எல்லாம் விவரித்துக் கூறுகிறாள். அவளுடைய துன்பக் கதையைக் கேட்ட பின்னர், அவன், தான் வத்ஸராஜன் என்ற உண்மையை உரைத்துத் தன் ஆயுதங்களை எறிந்துவிட்டு அவள்பால் காதல் கொண்டு ஆரத் தழுவிக் கொள்கிறான். அசுரனைக் கொன்றுவிட்டு, அவளை அவள்நாட்டில் பத்திரமாகக் கொண்டு சேர்ப்பதாக உறுதி அளிக்கிறான். காதலர் இருவரும் உள்ளங்கலந்து உரையாடிக் கொண்டிருக்கும்போது, வித்யுலோச்சனன் காட்டிலிருந்து திரும்பி வருகிறான். ரத்னாவதியுடன் வத்ஸராஜன் அமர்ந்திருப்பதைக் கண்டவுடன் அவன் கோபம் எல்லை மீறுகிறது: வித்யுலோச்சனன் அருகிலிருந்த ஒரு மரத்தை வேரோடு பிடுங்கி வத்ஸராஜனைத் தீர்த்துக்கட்ட முனைகிறான். அவன் அப்படிச் செய்யுமுன்னே, வத்ஸராஜன் அம்புமாரி பெய்து அந்த அசுரனைக் கொன்று விடுகிறான்.

அசுரனின் பிடியிலிருந்து ரத்னாவதியை மீட்ட பின்னர், வத்ஸராஜன் தனது படைகளைத் திருப்பி அனுப்பிவிட்டு அங்க நாட்டின் தலைநகருக்கு வருகிறான். ரத்னாவதியுடன் வத்ஸராஜன் வருவதைக் கண்டு துருதவர்மனும், அவன் மனைவியும், அந்நாட்டுக் குடிமக்கள் அனைவருமே பெருமகிழ்ச்சி அடைகின்றனர். துருதவர்மனும் வேத முறைப்படி ரத்னாவதிக்கும் வத்ஸராஜனுக்கும் மணம் முடித்து வைக்கிறான். ரத்னாவதியுடன் கௌசாம்பிக்குத் திரும்பிய வத்ஸராஜன் தன் நாட்டை ஆண்டுகொண்டு நெடுங்காலம் மகிழ்ச்சியுடன் வாழ்கிறான்.

ரத்னாவதி யக்ஷகானத்திற்கான ஆதாரம் :

இந்தக் கதை மூலக்கதை அன்று. மாண்டவ்ய முனிவர் ப்ருகத் கதா புராணத்தைக் காஷ்மீர் மன்னனான ஸ்ரீஹர்ஷருக்குக் கூறியதாகவும் ஹர்ஷரும், வத்ஸராஜன் எவ்வாறு ரத்னாவதியை மணந்தான் என்று முனிவரைக் கேட்டதாகவும், யக்ஷகானத்தின்

தொடக்கத்தில் முத்தண்ணா கூறுகிறார். இந்தக் கூற்றைப் பார்க்கும் போது, ப்ருகத்கதா புராணத்தின் அடிப்படையில்தான் முத்தண்ணா தமது கதையை எழுதியிருப்பார் என்று தோன்றுகிறது.

ஆனால் ப்ருகத் கதா, பல லக்ஷணங்களைக் கொண்ட (அணி இலக்கணம்) புராணவகை அன்று. அது பைஸாகி மொழியில் எழுதப்பட்ட, வீரமும் காதலும் செறிந்த பல கதைகளின் தொகுப்பாகும். அதை எழுதிய குணதயா கி.பி. முதலாம் நூற்றாண்டினராய் இருக்க வேண்டும். ஏனெனில் சமஸ்கிருத நாடக ஆசிரியரான பாஷா, தம்முடைய இரண்டு நாடகங்களை ப்ருகத் கதாவை அடிப்படையாகக் கொண்டு படைத்திருக்கிறார். ஆனால், க்ஷேமேந்திராவின் ப்ருகத்கதா மஞ்சரி (11ஆம் நூற்றாண்டு), சோமதேவரின் கதாசரித்சாகரம் (11ஆம் நூற்றாண்டு) போன்ற ப்ருகத்கதா படைப்புகளில் ரத்னாவதி கதை இடம் பெற்றிருக்கவில்லை. ஹர்க்ஷர் (606-647 கி. பி.) தம்முடைய பிரியதர்சிகா நாடகத்தை ப்ருகத்கதாவின் அடிப்படையில்தான் எழுதியிருக்கிறார் என்பது தெளிவான ஒன்று. பிரியதர்சிகாவை எழுதியவர் பற்றிய வரலாற்று உண்மையை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் முத்தண்ணா தவறுதலாக அக்கருத்தைச் சொல்லி இருப்பார் என்று தோன்றுகிறது. அவர் தம்முடைய யக்ஷகானத்தை, ஹர்ஷரின் பிரியதர்சிகாவைத் தழுவியே எழுதியிருக்கிறார்; ஆனால் கதைத் தலைவியின் பெயரை மட்டும், ஸ்ரீஹர்ஷரின் ரத்னாவளி நாடகத்திலிருந்து எடுத்து, 'ரத்னாவளி' என்பதை 'ரத்னாவதி' என்று மாற்றிவிட்டார். ஆனால் அங்கம், கலிங்கம், கௌசாம்பி ஆகிய நாடுகளின் பெயர்களும், துருதவர்மன், விந்தியகேது, வத்ஸராஜன் போன்ற பெயர்களும் மூலத்தில் உள்ளவாறு அப்படியே உள்ளன. முத்தண்ணாவின் யக்ஷகான கருவைப் பொருத்தவரையிலும்கூட, பிரியதர்சிகாவின் முதலாவது காட்சியை (விஷ்காம்பகா) மட்டுமே அவர் தழுவி எழுதியுள்ளார்.

மூலத்தில் உள்ள விரிவான காதல் காட்சிகள், யக்ஷகானத்திற்கு ஏற்றவையல்ல என்று அவற்றை அவர் ஒதுக்கிவிட்டார். யக்ஷகானம் நாடகமும் பாட்டும் கலந்த ஒரு கலவையாகும். வத்ஸராஜன் பெயரை மட்டும் மூலத்தில் உள்ளபடி அப்படியே

எடுத்துக்கொண்ட அவர் பிரியதர்சிகாவின் பெயரைமட்டும் ஹர்ஷரின் ரத்னாவளியில் வரும் ரத்னாவளியின் பெயரைப் போலவே ரத்னாவதி என்று மாற்றிவிட்டார். இந்த மாற்றம் முக்கியத்துவம் வாய்ந்தது. ரத்னாவதியும் ரத்னாவளியும் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; ஆனால் பிரியதர்சிகாவோ சாதாரணப் பெண். போர், கொலை, கலகம், நீண்ட பயணம், விருந்து போன்ற காட்சிகள் நாடகத்திற்கு உகந்தவை அல்ல. ஆனால் அத்தகைய காட்சிகள் யக்ஷகானத்திற்கு மெருகூட்டக் கூடியவை. எனவே மூலக்கருவில் ஏற்ற மாற்றங்களைச் செய்த முத்தண்ணா, நாரதர், சித்ரத்வஜன், வித்யு லோச்சனன், சௌரம்பா, அரசியின் தோழி, பிராமணர்கள், அமைச்சர்கள், வேடர்கள், தூதர்கள், சேவகர்கள் என்று பலவித்மான பாத்திரங்களைத் தாமே படைத்திருக்கிறார். இந்தப் பாத்திரங்கள் யாவும் கதைப் போக்கிற்குப் பெரிதும் உறுதுணையானதுடன், யக்ஷகானத்தை மெருகூட்டி, சுவராஸ்யமுடையதாக்கவும் உதவின. அவர் புனைந்துள்ள காட்சிகள் இயல்புக்கு மாறானவையாய் இருந்தாலும் எழுத்தறிவில்லாத சாதாரண மக்களின் பொழுது போக்கிற்கான யக்ஷகானத்திற்குப் பொருத்தமாய் அமைந்திருந்தன. செய்யுள்கள் மரபுரீதியான அணியிலக்கணங்களைக் கொண்டிருந்தாலும், இசையோடு பாடுவதற்கு ஏற்ப தாளக் கட்டுக்களும் ராக அமைப்பும் கொண்டவையாய் இயற்றப் பட்டிருந்தன. செய்யுள்கள் மற்றும் பாடல்களின் சொல்லாட்சியும் இசைக் குறிப்பும் சூழ்நிலைக்கு ஏற்ற பாவத்தையும், உணர்ச்சியையும் குறிப்பனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன. 'ப்ப' என்ற உயிர்மெய் இடையெழுத்து எவ்வாறு, வீரவுணர்ச்சியை எழுப்புகின்றவாறு செய்யுள்களில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதற்கு இங்கே ஒரு சான்று தரப்பட்டுள்ளது.

அப்பனேயித்தாரே | க்ஷிப்ரதிர்புபனே நப்பலி
சுதாதரேகே||

தப்படே ஹிடிடே லெடாப்பேனு நிமிஷாதி பொப்பனே
இது திகாவு ||

(ஆணையிடுவாய் எனக்கே

அவனை நான் அடித்து நொறுக்கியே புவிமிசை வீழ்த்துவேன்

தவறாது அவனையே கட்டியிழுத்து வந்து உன்னடி சேர்ப்பேன்

நம்புவாய் நீ என்னையே எந்தையே..)

இதுபோன்று, பல்வேறு சூழலுக்கு ஏற்பப் பல்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்ற பல செய்யுட்களை இந்த நூலில் நாம் காணலாம். இச்செய்யுட்கள் யாவும் பலதரப்பட்ட கன்னட யாப்பிலே இயற்றப்பட்டுள்ளன.

சிலகாலம் முத்தண்ணா வாழ்ந்திருந்த உடுப்பியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீகிருஷ்ணரின் மீதான வாழ்த்துப் பாவுடன் இந்நூல் தொடங்குகிறது. ரத்னாவதி கல்யாணத்தை, உடுப்பியில் தங்கியிருந்தபோது எழுதியதால், நூலின் தொடக்கத்திலும் முடிவிலும் உடுப்பி ஸ்ரீபாலகிருஷ்ணனரைப் பற்றிய துதிப் பாடலை இயற்றியுள்ளார். அந்த நூலை எழுதுவதற்கு ஆலோசனை கூறி வழிநடத்திய தம் இலக்கிய குருவான மலாலி சுப்பாராவுக்கும் அவர் மரியாதை செலுத்தியுள்ளார்.[1] ஆனால் அவர் தம்முடைய புனை பெயரையோ, இயற் பெயரையோ நூலின் எவ்விடத்திலும் குறிப்பிடாதது புதிராகவே உள்ளது.

ரத்னாவதி கல்யாணம் மூன்று அல்லது நான்கு முறை, நிகழ்த்தப் பட்டிருக்கிறது. மேடையில் நிகழ்த்துவதற்கு ஏற்புடைய யக்ஷகானம் என்று இன்றும் இது கருதப்படுகிறது.

குமார விஜயம் :

முத்தண்ணாவைப் பெரிதும் போற்றி மதிக்கின்ற பஞ்சேமங்கேஷராவ் இவ்வாறு பாராட்டுகிறார்: "குமார விஜயத்தைத் தவிர வேறு எதுவுமே யக்ஷகான பிரசங்கம் அல்ல; நாந்தலிகேவை விட்டால் கவிஞர் எவருமில்லர்" கண்மூடித் தனமான பற்றுதலின் காரணமாய்க் கூறப்பட்ட இக்கூற்று ஓரளவுக்கு மிகையானதாய் இருக்கலாம்.

எனினும், குமாரவிஜயம் உண்மையிலேயே மிகவும் இலக்கியத்தரம் வாய்ந்த பிரசங்கம் என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். அது புலமைமிக்க ஒரு சாதனை. கவர்ச்சிகரமான

1. ரத்னாவதி கல்யாணத்தை எழுதி முடித்த சில காலங் கழித்தே லக்ஷ்மி நாறாயணா குமார விஜயத்தை எழுதினார் என்று மலாலி சுப்பாராவ் கூறுகிறார். (முத்தண்ணா ப. 66) ஆனால் ஆர். நரசிம்மாச்சாரோ, லக்ஷ்மி நாறாயணா முதலில் குமார விஜயத்தைத் தம்முடைய 23ஆவது வயதில், 1891ஆம் ஆண்டு எழுதினார் என்கிறார். மலாலியின் கூற்று ஆதாரப்பூர்வமானது.

சொல்லணிகள் பல நிரம்பியது. பழமையான கன்னட மொழி பாணி அதனை யக்ஷகான இலக்கியங்களில் தனிச்சிறப்பு வாய்ந்ததாக ஆக்கியுள்ளது. எனினும் அதற்கேயுரிய குறைபாடுகளும் உண்டு.

குமார விஜயத்தின் சுருக்கமான கதை வருமாறு :

பெருங்கடல் ஒன்றின் மையத்திலிருந்த தீவு நகரமான மகேந்திரபுரியின் மன்னன் சூரபத்மாசுரன். அவன் ஒருமுறை கொலுவீற்றிருந்தபோது நாரத மகரிஷி அங்கே செல்கிறார். அவர் தம் இயல்புப்படி, சச்சிதேவியின் அழகைப் புகழ்ந்துரைத்து அவளை அடையுமாறு அவனைத் தூண்டுகிறார். நாரதர் கூறியபடி செயல்படத் தீர்மானித்த சூரபத்மாசுரன், தன்னுடைய இதயத்து வேட்கையை நிறைவேற்றுவதற்காகப் புறப்படத் தயாரான வேளையில், அவனுடைய மகன் பானுகோபன் முன்வந்து, தந்தையின் அனுமதியைப் பெற்று தேவேந்திரனுடைய தேவலோகத்தின் மீது படையெடுத்துச் செல்கிறான். தேவேந்திரன் எதிர்கொள்ளும் அபாயத்தைப் பற்றி ஏற்கனவே நாரதர் அவனை எச்சரித்திருந்தார். இந்திரன் இச்செய்தியைத் தன் மனைவியான சச்சிதேவியிடம் கூறியபோது அவளுக்கு அச்சம் மிகுந்து இருவரும் பேச்சு மூச்சற்றுப் போய்ப் பெருந் துயரத்தில் ஆழ்ந்தனர். அந்தச் சமயத்தில் அங்கு வந்த தேவகுரு, இந்திரனிடம் சந்திரசேகரக் கடவுளின் உதவியை நாடுமாறும், தாற்காலிகமாக மாற்றுரு கொண்டு ஸ்ரீகஷ்கவனத்தில் (ஸ்ரீகஷ்கபுரத்துத் தோட்டங்கள்) தஞ்சம் புகுமாறும் அறிவுரையும் ஆலோசனையும் கூறினார். தேவர்களும், ஜெயந்தனைத் தேவலோகத்தின் அரசனாக ஆக்கினர். பானுகோபன் தேவலோகத்தின் மீது படையெடுத்து, தேவர்களைத் தோற்கடித்து ஜெயந்தனைச் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டான். தேவேந்திரனும் தோல்விச் செய்தியைக் கேட்டவுடன் சச்சி தேவிக்கு ஆறுதல் கூறிவிட்டு, ஸ்ரீகஷ்கவனத்தை விட்டுச் சென்று விட்டான். அங்கிருந்து சத்திய லோகத்திற்குச் சென்று பிரம்ம தேவனின் ஆலோசனையைக் கேட்டான். பிரம்மதேவனும் மகாவிஷ்ணுவின் உதவியை நாடுமாறு இந்திரனுக்கு அறிவுரை சொன்னான். அவ்வாறே இந்திரனும், பிரம்மன் மற்றும் தேவர்கள் புடைசூழ நாராயணனைக் காணச் சென்றான். தக்ஷ யாகத்தின் போது

தேவர்கள் சிவபெருமானை அவமதித்ததால் தான் இந்த நிலை ஏற்பட்டதென்று நாராயணன் அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

எனவே மகேஸ்வரனின் உதவியை நாடுமாறு தேவர்களுக்கு நாராயணன் அறிவுரை சொன்னார். அவ்வாறே தேவர்களும் மகேஸ்வரனை வழிபட்டு அவரிடமிருந்து உதவி பெறுவதற்கான உத்தரவாதத்தைப் பெற்றனர்.

இந்திரன் மகன் ஜெயந்தனைத் தன் தந்தை சூரபத்மன் முன் கொண்டு வந்து நிறுத்திய பானுகோபன், இந்திரன் தன் மனைவியான சச்சிதேவியுடன் எங்கோ சென்று ஒளிந்து கொண்டிருப்பதாகக் கூறினான். அதுகேட்டுக் கவலையுற்ற சூரபத்மன், தன் லட்சியத்தை அடைய என்ன செய்வது என்று அறியாது குழம்பினான். அப்போது அவன் தங்கை அஜமுகி, தமையனுக்காகச் சச்சிதேவியைக் கொண்டுவருவதாக வாக்களித்து அவளைத் தேடிப் புறப்பட்டாள். செல்லும் வழியில் அவள் காமாக்கினியில் தகித்துக் கொண்டிருந்தபோது, துர்வாச முனி எதிர்ப்பட்டார். அவள் உடனே அழகான பெண்ணுருக் கொண்டு முனிவருடன் கூடிக் களித்தாள். அவரிடமிருந்தே சச்சிதேவி எங்கே மறைந்திருக்கிறாள் என்பதையும் அறிந்து கொண்டாள். பின்னர் அவள், சச்சிதேவி ஒளிந்திருந்த இடத்திற்குச் சென்று, அவளிடம் தன்னை மஞ்சுகோஷா என்ற தேவதை என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள். சச்சிதேவியின் மனநிலையைப் புரிந்துகொண்ட அஜமுகி, சூரபத்மன் அவளை அடைய ஒருபோதும் சம்மதிக்க மாட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டு, அவளைக் கடத்திச் செல்ல முற்பட்டாள். ஆனால் சச்சிதேவியைப் பாதுகாத்துக் கொண்டிருந்த காவலன் அஜமுகியின் மீது பாய்ந்து அவளுடைய நீண்டு விரிந்த கைகளைத் துண்டித்து விட்டான். அவளும் ஓலமிட்டுக் கொண்டே தன் தமையனிடம் மீண்டு வந்தாள். சச்சிதேவிக்கு நேர்ந்த கதியை நாரதரிடமிருந்து கேட்டு அறிந்து கொண்ட இந்திரன் அவளைப் பார்த்து ஆறுதல் கூறினான். பின்னர் அவன் பிரம்மன் மற்றும் தேவர்கள் புடைசூழ ராஜதாத்ரிக்குச் சென்று அங்கே பரமேஸ்வரனின் உதவியை நாடி வழிபாடு நடத்தினான். பரமேஸ்வரனும் தன் மகன் குமாரஸ்வாமியை அழைத்து, சூரபத்மனை அழிக்கும் பணியை அவனிடம் ஒப்படைத்தார். தன் தங்கைக்கு நேரிட்ட அவமானத்தால் ஆத்திரம் கொண்ட சூரபத்மன் தேவர்கள்மீது

படையெடுத்துச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தபோது, குமாரஸ்வாமி, தேவர்கள் படையும், சிவகணங்களும் சூழ மகேந்திரபுரத்தை முற்றுகையிட்டுள்ள செய்தி எட்டியது. பின்னர் நிகழ்ந்த போரில் சூரபத்மனின் மகன் பானுகோபன் கொல்லப் பட்டான். சூரபத்மனின் இன்னொரு மகனான ஹிரண்யகன், யாராலும் வெற்றி கொள்ள முடியாதவனும், தாருகாசுரனைக் கொன்றழித்தவனுமாகிய குமாரஸ்வாமியை எதிர்த்துப் போரிட வேண்டாம் என்று தன் தந்தைக்கு அறிவுரை பகர்ந்தான். ஆனால் அவன் அறிவுரை செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயிற்று. ஹிரண்யகன் தானொரு கோழை அல்லன் என்று நிரூபிப்பதற்காகத் தேவர்கள் படையுடன் தீரமுடன் போரிட்டுக் களத்திலேயே உயிர் துறக்கிறான். பின்னர், குமாரஸ்வாமியை எதிர்த்துப் போரிடுவது வீண் என்று சூரபத்மனுக்கு அறிவுறுத்த வேண்டியது அவன் மனைவி பத்மகோமளாவின் கடன். சச்சிதேவி மீது அவன் கொண்டுள்ள முறையற்ற மோகத்தை விட்டொழிக்குமாறு அவள் வேண்டுகிறாள். தன் மனைவியின் கோரிக்கைக்குச் செவி சாய்க்காத சூரபத்மன் விரைந்து களம் புகுந்து தேவர் படையுடன் கடுமையாக மோதுகிறான். ஒரு சமயத்தில், களத்தில் அவன் கை ஓங்குவதுபோல் தெரிகிறது. அப்போது குமாரஸ்வாமி தம்முடைய விஸ்வரூபத்தைக் காட்டுகிறார். அத்திருக்கோலத்தைக் கண்டு அஞ்சிய சூரபத்மன், தெய்வ ஆற்றலை எதிர்த்துப் போரிட்ட தன் மடமையை உணர்கிறான். ஹரியின் திருப்பாதங்களில் வீழ்ந்து முக்தியடைய எண்ணுகிறான். ஆனால் மீண்டும் அவன் மாயையால் சூழப்படுகிறான். அப்போது அவன் கண்ணுக்கு ஒரு சிறுவன் மட்டுமே நிற்பதுபோல் தெரிந்ததால், ஹரனால் அளவில்லாத ஆற்றல் அருளப் பெற்றது நினைவு வரப்பெற்றவனாய்த் தொடர்ந்து போரிடத் தீர்மானிக்கிறான். இறுதியில், விஷ்ணு அனுப்பிய 'சக்தி'யின் உதவியினால், சூரபத்மனையும் அசுரர் சேனையையும் குமாரஸ்வாமி அழித்து விடுகிறார். சண்முகனின் வெற்றியினால் இந்திரனும் மற்ற தேவர்களும் பெருமகிழ்ச்சி அடைகின்றனர். தனக்கும் தேவர்களுக்கும் அருள் புரிந்த குமாரஸ்வாமிக்குத் தன் மகள் சுரசேனையைத் தேவேந்திரன் மணமுடித்துத் தருகிறான். குமாரஸ்வாமியின் வெற்றி, தெய்வத் தம்பதியின் திருமண விழாவாக முடிவு பெறுகிறது.

முத்தண்ணா தம்முடைய குமாரவிஜய யக்ஷகானப் பிரசங்கத்தை, ஸ்காந்த புராணக் கதை அடிப்படையிலேயே அமைத்திருக்கிறார். இக்கதையின் வில்லனாகிய சூரபத்மனின் பெயர் ஒன்றிரண்டு புராணங்களிலும் காணப்படுகிறது. அஜமுகியின் மகன்களான வில்வலன், வாதாபி ஆகியோரின் பெயரும் ஸ்காந்தபுராணத்தில் வருகின்றது.

குமாரஸ்வாமியும் அவர் தந்தை மகேஸ்வரனும் பிரதான இடம்பெறுகின்ற இந்தப் பிரசங்கத்தின் கருவை முத்தண்ணா எங்ஙனம் பெற்றிருப்பார் என்பதை நாம் ஊகிக்க முடியும். மலாலி சுப்பாராவின் தூண்டுதலின் பேரில் ரத்னாவதி கல்யாணத்தை எழுதி முடித்த பிறகு செய்யுள்களை எளிதாக இயற்ற முடியும் என்ற நம்பிக்கை முத்தண்ணாவுக்கு வந்தது. அவருடைய சொந்த ஊரான நாந்தலிகேயில் உள்ள கோயிலில் நடந்த திருவிழாக்களும் குமாரவிஜயத்தை எழுதுவதற்குத் தேவையான ஊக்கத்தை வழங்கின. அவ்வூர்க்கோயிலின் மூல தெய்வமான மகாலிங் கேஸ்வரரைப் போற்றிப் பாடுவதே அவரது நோக்கமாகும். அந்தக் கோயிலில் இருந்த சக்திவாய்ந்த இன்னொரு தெய்வமான குமாரனும் துளுபத்தனாக்களில் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளார். புராணங்களில் வருகின்ற சண்முகன் அல்லது குமாரஸ்வாமியும் இந்தக் குமாரனும் ஒன்றே என்றும் நம்பப்பட்டு வந்தது. இந்த இரு தெய்வங்களின் புகழையும் பெருமையையும் மேலும் உயர்த்த வேண்டுமென்று முத்தண்ணா விரும்பினார். தம்முடைய படைப்பின் தொடக்கத்திலும் முடிவிலும் சிவன் மீதான போற்றிச் செய்யுள்களை இயற்றியுள்ளார். இறுதியில் உள்ள நூற்பயன் செய்யுள் நாந்தலிகேயின் மகாலிங்கக் கடவுளை வாழ்த்துகிறது. சந்திர மௌலி, சந்திரசேகரன் போன்ற பெயர்கள் பொதுவாகப் பிற பிரசங்கங்க்ளில் சொல்லப்படுவதில்லை. குமார விஜயத்தில் இப்பெயர்கள் காணப்படுவதால், அவர், உடுப்பியில் உள்ள சந்திரமௌலீஸ்வரரையே மனதில் கொண்டிருந்தார் என்பது புலனாகும். சமஸ்கிருதத்தில் அமைந்துள்ள முதலாவது செய்யுள் ஸ்ரீகிருஷ்ணரை வாழ்த்துகிறது. இந்தக் கிருஷ்ணர், உடுப்பியில் உள்ள பாலகிருஷ்ணர். இந்த இருதெய்வங்களையும் அவர் குறிப்பிட்டிருப்பதைக் காணும்போது அவர் உடுப்பியில் தங்கியிருந்த காலத்தில் இந்தப் படைப்பை உருவாக்கினார் என்பது தெளிவாகும்.

குமாரவிஜயம், கருணை, சிருங்காரம், வீரம், ரௌத்ரம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற பல பண்புகளைக் கொண்டது. எடுத்துக்காட்டாக ஒருசிலவற்றை இங்கே சுட்டிக் காட்டலாம்.

(1). தேவலோகத்தின் மீது சூரபத்மன் படையெடுத்து வரப் போகின்றான் என்ற செய்தியைக் கேட்ட மாத்திரத்திலேயே இந்திரன் அச்சத்தில் நடுங்கி, தன்னுடைய அவல நிலையை எண்ணிப் புலம்புகிறான். சச்சிதேவி தன் கணவனை நெருங்கி, அவனுடைய துக்கத்திற்கான காரணத்தைத் தன்னிடம் சொல்லுமாறு கெஞ்சிக் கேட்கிறாள்.

(2) யக்ஷகானம் புகழ்பெற வேண்டுமானால் அதில் வீரவுணர்வு மிக்க காட்சிகள் பிரதானமாக இடம் பெற வேண்டும் என்று கருதப்பட்டது. அதற்கு ஏற்ப முத்தண்ணாவும், சூரபத்மன் மற்றும் அவனுடைய சேனைக்கும், தேவர் படையின் தளபதியான (தேவசேனானி அல்லது தேவ சேனாபதி) குமாரஸ்வாமிக்கும் இடையே நடைபெற்ற போர்க்களத்தை மிகச் சிறப்பாகக் கையாண்டுச் சித்திரிக்கின்றார். பானுகோபன் தன்னுடைய பராக்கிரமத்தை விவரித்து, சச்சிதேவியைப் பிடித்துவரத் தன் தந்தை சூரபத்மனின் அனுமதியை வேண்டுகின்ற காட்சி :

அவன் வந்தபோது,
மாமலைகள் நடுங்கின;
மாநிலந்தாங்கிய மாமத யானைகள் பிளிறின;
எந்நிலை வந்தாலும் அதை எதிர்கொள்ளும்
ஆற்றல் கொண்ட ஒரே வீரனவன் சொன்னான்.
எந்தையே, யான் கூறுவதைக் கேட்பாயாக:
பேரழகி அவளைக் கொணர நீங்கள் ஏன் செல்லவேண்டும்?
ஒரு வார்த்தை சொல்லுங்கள்,
தேவாதி தேவனையே சிறைப்பிடித்து

அவளை உங்களிடம் கொணர்வேன்.
கிருஷ்ணனை த்வம்சம் செய்து
ஹுதவாகனனை ஆழ்கடலில் அமுக்கி
தேவர் யாவருடைய வாயையும் அடக்கி
நான் இது முடிப்பேன்; இது சத்தியம் எந்தையே!

இதுபோன்ற காட்சி வருணனைச் செய்யுள்களை யக்ஷகானத்தை இயக்குகின்ற பாகவதர்களே இசைப்பர்; உரையாடல்களையும் தனி வசனங்களையும் மட்டுமே அந்தந்தக் கதாக்பாத்திரங்கள் பேசுவர்.

சூரபத்மனின் மகன்களான பானுகோபனும் ஹிரண்யகனும் முறையே இராவணனின் மகன்களான இந்திரஜித்தையும் அதிகாயனையும் நினைவுபடுத்துவதாகத் திறனாய்வாளர்கள் கூறுகின்றனர். இது இவ்வாறாயின் சச்சியைக் கடத்திச் செல்லுவது,.சீதையைக் கடத்திச் செல்வது போன்றதாகும். இந்த முக்கிய நிகழ்வுகள் யாவும், ஸ்காந்த மகாபுராணத்தின் சங்கர சம்ஹிதாவின் மூலத்திலேயே காணப்படுவதால், இராமாயணப் பாத்திரங்கள் போலவும், நிகழ்வுகள் போலவும் ஒத்திருப்பதற்கு ஆசிரியர் பொறுப்பாகார்.

கதையைக் கையாண்டதிலும் சில குறைபாடுகளையும் நாம் சுட்டிக்காட்டலாம். இந்திரனை ஒரு கோழையாகக் காட்டியிருக்கக் கூடாது. ஆனால் அவன் தேவலோகத்தை விட்டு ஓடிவிடுகிறான் என்பதில் மாற்றமில்லை. துர்வாசருக்கும் அஜமுகிக்கும் இடையேயான மோகவயப்பட்ட காதல் மிகவும் ஆபாசமானது. எனினும் நாட்டுப்புற நாடகமான யக்ஷகானத்தில் அத்தகைய காட்சிகள் பொதுமக்களைக் கவர்ந்திழுக்கும் என்பதால் அதையும் நாம் அமைதிப்படுத்திக் கொள்ளலாம். ஆனாலும், இதுபோன்ற பிற குறைகள்கூட குமாரவிஜயத்தின் ஒட்டுமொத்தச் சிறப்பினைக் குறைக்குமளவுக்குப் பெரிதாகப் படவில்லை.

முத்தண்ணா தமது முதலாவது யக்ஷகானமான, ரத்னாவதி கல்யாணத்தை எழுதியதிலிருந்தே அவரது அறிவுத்திறனும், இசைஞானமும் முதிர்ச்சியுற்றன. குமார விஜயத்தின் பாமினி, வர்தக சத்பாடி யாப்புகள், செய்யுளியற்றுவதிலும், மோனை,

சிலேடை போன்ற சப்தலங்காரங்கள் உள்பட பலதிறப்பட்ட அணியிலக்கணங்களைக் கையாளுவதிலும் தேர்ந்த புலமையைக் காட்டுகின்றன. யக்ஷகானத்திற்கு ஏற்ற பாடல்களை இயற்றுவதிலும் முத்தண்ணா தம்முடைய இசைஞானத்தையும், சந்தக்குறிப்பு அறிவையும் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார். சில பாடல்கள், ஹரிதாசர்களின் பாடல்களைப்போல் அமைந்துள்ளன. ஆனால், செய்யுளானாலும் பாடலானாலும் அவற்றில் சிரமமான சமஸ்கிருதச் சொற்களையும் அரிய, பழமையான கன்னடச் சொற்களையும் பயன்படுத்தியிருக்கிறார். இதனால் அவருடைய படைப்பு, குறிப்பிட்டுச் சொல்லும் படியாக அறிவார்த்தமானதாகத் திகழ்கிறது. எனவே சாதாரணமக்களை அதனால் ஈர்க்க முடியவில்லை. நூற்றுக் கணக்கான யக்ஷகானங்களில், பார்தி சுப்பாவின் படைப்புகளைத் தவிர்த்து, மிக உயர்வானதாக இந்த யக்ஷகானம் கருதப்பட்ட போதும், எந்த ஒரு யக்ஷகானக் குழுவாலும் இது நிகழ்த்தப் பெறாமல் போனதற்கு அதுவே முக்கியக் காரணமாகும். ஆயினும், ஓர் இலக்கியப் படைப்பு என்ற முறையில் தனிச்சிறப்புடைய யக்ஷகானமாக எல்லாருமே அதை உயர்வாகப் போற்றுகின்றனர்.

4. அத்புத ராமாயணம்

புராணவகையைச் சேர்ந்த சமஸ்கிருத அத்புத ராமாயணத்தைத் தழுவியே லக்ஷ்மிநாராயணாவின் அத்புத ராமாயணமும் அமைந்துள்ளது. 27 சருக்கங்கள் அல்லது அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டுள்ள சமஸ்கிருதப் படைப்பில் சுமார் 1000 சுலோகங்கள் உள்ளன. இதன் கதை என்பது மிகச் சுருக்கமானதுதான். இதன் பெரும்பகுதி சில வேதாந்தக் கருத்துக்களை விளக்குகிறது. இந்தப் படைப்பின் முக்கிய நோக்கம், மூலப் பிரகிருதி அல்லது பரப்பிரகிருதியின் அம்சமாகிய சீதாதேவி, பரமாத்மாவான இராமனைக் காட்டிலும் ஆற்றல் மிகுந்தவள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதே ஆகும். தசகண்டராவணனை வென்றடக்கிய இராமனால் சகஸ்ரகண்ட ராவணனைப் போரில் வெற்றி கொள்ள முடியவில்லை. அந்தச் சிக்கலான வேளையில் சீதை, அச்சம் தருகின்ற மகாகாளி உருவெடுத்து சகஸ்ரகண்ட ராவணனைக் கொல்கிறாள். அவ்வாறு அவள் இந்த உலகம் முழுமைக்கும் சுபிட்சத்தைக் கொணர்கிறாள். இவ்வாறு, சீதையின் தெய்வ நிலையைக் காளிக்குச் சமமாக உயர்த்தி, லக்ஷ்மிதான் காளி என்று அந்நூலாசிரியர் கூறுகிறார். அதாவது சீதைதான் ஆதிமாயை என்ற முடிவினைக் காட்டுகிறார்.

கதை இப்படித் தொடங்குகிறது. ஆயிரக்கணக்கான விதமாகச் சொல்லப்பட்டு வந்த இராமனின் வரலாற்றுப் பெருமையைத் தம்முடைய சீடர்களுக்கு வால்மீகி விவரித்துக் கொண்டிருந்தபோது, அவருடைய சீடர்களில் ஒருவரான பரத்வாஜர், தேவலோகத்தில் வழங்கிவரும் சதகோடி ராமாயணத்தின் உள்ளடக்கத்தைத் தனக்கு விவரிக்குமாறு தன் குருவை வேண்டுகிறார். வால்மீகியும் அவ்வாறே, தனிச்சிறப்பு வாய்ந்த அத்புத ராமாயணத்தின் கதையை பரத்வாஜருக்கு விளக்குகிறார். அந்தக் கதையின் சுருக்கம் இதுதான்:-

புகழ்மிக்க சூரியகுலத் தோன்றலான அயோத்தி மன்னன் அம்பரீஷன் நாராயணக் கடவுளின் அருளைப் பெற விழைகிறான். விஷ்ணுவை மகிழ்விப்பதற்காக, அடர்ந்த கானகத்திற்குச் சென்று ஆயிரம் ஆண்டுகள் கடுந்தவம் புரிகிறான். அவனுடைய

தன்னலமற்ற பக்தியிலும் கடுந்தவத்திலும் பெரிதும் மகிழ்ந்த விஷ்ணு, அம்பரீஷனை அவன் வேண்டும் வரங்களைக் கேட்குமாறு அருளுகிறார். அம்பரீஷனும், தானும் தன் குடிமக்களும் விஷ்ணு பக்தியில் எப்போதும் உறுதியுடன் இருக்க வேண்டும் என்றும் தன்னுடைய எதிரிகள்கூட நண்பர்களாக வேண்டும் என்றும் வரங்கேட்டான். விஷ்ணுவும் அவ்வாறே அருளினார்.

காலப்போக்கில் அம்பரீஷனுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அதற்கு ஸ்ரீமதி எனப் பெயரிட்டனர். அக்குழந்தையும் எல்லாரையும் கவருகின்ற அழகியதோர் இளமங்கையாக வளர்ந்தது. தன் மகள் மீது பெரிதும் அன்பு கொண்டிருந்த அம்பரீஷன், தன்னுடைய பெரும்பாலான நேரத்தை அவளுடனேயே கழித்தான்.

அம்பரீஷன் தன் மகளுடன் அரியணையில் வீற்றிருந்தபோது, தேவலோகத்திலிருந்து நாரதமுனியும், பர்வதமுனியும் ஒரே சமயத்தில் அவனுடைய அரண்மனைக்கு வந்தனர். அரசன் அருகில் அமர்ந்திருந்த ஸ்ரீமதியின் அழகைக் கண்டு அவர்கள் இருவரும் அப்படியே சொக்கிப் போயினர். அவள் மணப்பருவம் எய்திவிட்டாள் என்றும், அவளுடைய திருமணத்திற்கு மன்னன் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றான் என்றும், அவர்கள் அறிந்து கொண்டனர். ஞானியராகிய தம்முடைய நிலைமையை மறந்துவிட்டு அவ்விருவருமே அம்பரீஷனிடம் அவன் மகளை மணக்க விரும்புவதாகத் தெரிவித்தனர். அதைக் கேட்டு அம்பரீஷன் குழப்பமடைகிறான். இறுதியாக, தன் மகள் யாரை மணக்க விரும்புகிறாளோ அவருக்கு அவளை மணமுடித்துத் தருவதாக விருந்தினராகிய அவ்விரு முனிகளிடமும் கூறுகிறான். அம்பரீஷன் கூறியதைக் கேட்ட அவ்விருவரும் அவள்பால் மோகம் மிகக் கொண்டதுடன், அடுத்தவருடைய மனநிலையையும் அறிந்து கொள்கின்றனர். அரசனிடம், சுயம்வரத்திற்காகச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் குறித்து அடுத்த நாள் சொல்வதாகக் கூறினர்.

முனிவர்கள் இருவருமே மற்றவரை ஏமாற்றத் தீர்மானிக்கின்றனர். நாரதர் உடனடியாக ஸ்ரீநாராயணரிடம் சென்று தம்முடைய வருகையின் நோக்கத்தைக் கூறுகிறார். பர்வத முனியின் முகத்தைக் குரங்கு முகமாக மாற்றிவிடுமாறும்,

அப்போதுதான், சுயம்வரத்தின்போது ஸ்ரீமதி அவரைத் தேர்ந்தெடுக்க மாட்டாள் என்றும் நாராயணரை அவர் வேண்டுகிறார். அதைக்கேட்டு எக்களிப்பால் சிரித்த நாராயணன் நாரதருக்கு அந்த வரத்தை அருளுகிறார். பர்வத முனியும் நாராயணனை அணுகித் தம்முடைய வருகையின் நோக்கத்தை அவ்வாறே விவரிக்கிறார். நாரதருடைய முகம் கரடி முகமாகி விட வேண்டும் என்று அவர் வேண்டினார். நாராயணன் நகைத்துக் கொண்டே அவருடைய கோரிக்கை நிறைவேற அருளிவிட்டு தன்னுள்ளே, "அவர்கள் விதைத்ததை அவர்களே அறுவடை செய்யட்டும்" என்று கூறிக் கொண்டார்.

நாரதரும், பர்வதரும் "எனக்கு அருளப்பட்டது என்னவென்று என்னுடைய எதிராளிக்குத் தெரியக்கூடாது'' என்று நாராயணனை வேண்டிக் கொண்டனர். மன்னன் மகள், குரங்கு முகத்தைக் கண்டு தன்னைத்தான் மாலைசூடுவாள் என்று இவரும், கரடி முகத்தைக் கண்டு தன்னைத்தான் மணமுடிப்பாள் என்று அவரும் எண்ணிக் கொண்டிருந்தனர்.

தன்னுடைய மகளின் சுயம்வரத்திற்காக நகரத்தையும், அரண்மனையையும், மணப் பந்தலையும் அலங்கரிக்குமாறு அம்பரீஷன் ஆணையிடுகிறான். சுயம்வர நாளும் வந்தது; ஸ்ரீமதியைக் கைப்பிடிக்க எண்ணிய இருவரையுமே மன்னன் மணப்பந்தலுக்கு அழைத்து வருகிறான். முனிவர்கள் இருவரும் தத்தமது இருக்கையில் அமர்ந்திருக்க, கையில் மாலையுடன் தன் மகளை அவர்களிடத்து அழைத்து வந்த அம்பரீஷன், அவர்கள் இருவரில் ஒருவரின் கழுத்தில் மாலையைச் சூடி, அவரைத் தன் வாழ்க்கைத் துணையாக ஏற்குமாறு தன் மகளிடம் கூறுகிறான். ஸ்ரீமதியும் சேடிப் பெண்டிர் இருவர் உடன்வர, அவ்விருவரும் அமர்ந்திருந்த இடத்திற்குச் செல்கிறாள். அவர்களைக் கண்டு அவள் தலை குனிகிறாள். வேடிக்கை என்னவென்றால் அந்த இரண்டு முனிவர்களும் குரங்கு முகமும், கரடி முகமும் கொண்டவர்களாக அவள் கண்ணுக்கு மட்டுமே தெரிந்தனர்; பிறர் எவருக்கும் அது தெரியவில்லை. தன் மகள் ஏன் வாய்மூடி மௌனியாகி விட்டாள் என்று அறியாது வியந்த அம்பரீஷன், தன்னுடைய கண்ணுக்கு, அவர்களுடைய உண்மை உருவில் தோன்றிய அந்த இரண்டு தேவலோகத்து முனிவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்குமாறு தன் மகளிடம் மீண்டும்

கூறுகிறான். அவளோ தன் தந்தையிடம், "தந்தையே! நீங்கள் சொல்வதுபோல் முனிவர்கள் எவரும் என் கண்ணுக்குத் தெரியவில்லையே! குரங்கு முகத்துடன் ஒருவரும், கரடி முகத்துடன் ஒருவரும்தான் எனக்குத் தெரிகின்றனர். அவர்களுடன், பதினாறு வயது நிரம்பிய அழகான, அறிவு நிரம்பிய மணமகன் என்னைத் தாவி அணைப்பது போலிருக்கக் காண்கிறேன்" என்கிறாள். அந்த இளைஞனின் தோற்றத்தை விரிவாக விளக்குமாறு நாரதர் அவளைக் கேட்கிறார். அவளும் அவ்வாறே செய்ய, முனிவர்கள் இருவரும் அந்த இளைஞன் நாராயணன்தான் என்ற முடிவுக்கு வருகின்றனர். அவர்கள் மிகவும் கோபங்கொண்டு, தங்களை ஏமாற்றிவிட்டதாக அம்பரீஷனைக் குற்றம் சாட்டுகின்றனர். தன் தந்தையை அந்த முனிவர்கள் சபித்து விடுவார்களோ என்று அஞ்சிய ஸ்ரீமதி, அவர்களில் ஒருவருக்கு மாலையிட்டு மணமுடிக்க எண்ணுகிறாள். ஆனால், தெய்வ வடிவு கொண்ட அந்த அழகிய இளைஞன்பால் மீண்டும் அவள் ஈர்க்கப்பட்டு, அவன் கழுத்தில் மாலையிடுகிறாள். உடனே அம்மங்கையும் தெய்வ வடிவு கொண்ட இளைஞனும் அங்கிருந்து மறைந்து விடுகின்றனர். முனிவர்கள் இருவரும் தாங்கள் விஷ்ணுவால் ஏமாற்றப்பட்டதாக முடிவில் உணர்கின்றனர். தங்களை ஏமாற்றியதற்குத் தண்டனையாக, பூலோகத்தில் தசரதனின் மகனாகப் பிறக்கக் கடவது என்று விஷ்ணுவுக்கு அவர்கள் சாபமிடுகின்றனர். அப்படியாக விஷ்ணு இராமனாகப் பிறந்தார்.

கௌசிகர் என்ற பிராமணர் தேவலோகத்து இசைவாணர். எப்போதும் அவர் இறைவன் புகழைப் பாடிக்கொண்டு, உஞ்சவிருத்தி செய்து பிழைத்து வந்தார். எல்லா இனத்தையும் சேர்ந்த பல சீடர்கள் அவருக்கு இருந்தனர். அவர்களுடைய பக்தி இசையினால் - இசைமூலம் விஷ்ணு உபாசனை செய்ததால் அவர்களுக்குச் 'சமீப மோட்சம்' அதாவது கடவுளின் நேரெதிரிலேயே வாழுகின்ற அரிய பாக்கியம் கிடைத்தது. கௌசிகரும் அவருடைய சீடர்களும் எப்போதும் கடவுள்மீது பாடல்களைப் பாடிக்கொண்டு இருந்தனர். விஷ்ணு மற்றும் அவருடைய தேவியான லக்ஷ்மி இருவருடைய பணியாளர்களும், கௌசிகரும் அவருடைய சீடர்களும் பாடுகின்ற இசையைக் கேட்கத் திரளுகின்ற அளவுக்கு அது மிகவும் பக்திப்பரவசம் சொட்டுகின்றவாறு இருந்தது.

தேவர்கள் பலரும், நாரதர் போன்ற முனிவர்களும் கூட அந்த இசையைக் கேட்க விரும்பினர். ஆனால் அவர்கள் உள்ளே நுழைய முடியாமல் வாயிலில் இருந்த காவலர்கள் அவர்களைத் தடுத்து விட்டனர். தம்பூராகூட அனுமதிக்காகக் காத்திருந்தது. தம்பூரா வெளியே காத்திருப்பது பற்றி விஷ்ணுவுக்கு அறிவிக்கப் பட்டவுடன், அவர் அதை மிகுந்த மரியாதையுடன் அழைத்துவந்து தன்னருகிலேயே அமருவதற்கு ஏற்பாடு செய்தார். வெளியே காத்திருந்தவர்களில், நாரதரைத் தவிர மற்றவர்கள் தத்தமது இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்று விட்டனர்.

நாரதர் சினங்கொண்டு குமுறினார். "கிழட்டுத் தம்பூராவுக்கு மிகுந்த மரியாதை செய்கின்றனர். ஆனால் என்னை லக்ஷ்மியின் சேவகர்கள் அவமரியாதை செய்து விட்டனர். நான் அவளுக்கு நல்ல பாடம் கற்பித்து, என்னை அவமதித்த குற்றத்திற்காக அவள் வருந்தும்படிச் செய்வேன்" என்று கூறி, அவள் ஓர் அரக்கியாகப் பிறக்க வேண்டும் என்றும், அவள் சொற்கேட்டு அவளுடைய சேவகர்கள் என்னை விரட்டியதுபோல், அவளைப் பெற்றவளும் அவளை விரட்டியடிக்க வேண்டும்" என்று சாபமிடுகிறார்.

இந்தச் சாபத்தைக் கேட்டவுடன் நாராயணனும் லக்ஷ்மியும் நாரதர் முன்வந்து பணிகின்றனர். அந்தச் சாபத்தை மாற்றியமைக்குமாறு லக்ஷ்மி அவரை வேண்டுகிறாள். "நான் ஓர் அரக்கியின் மகளாகப் பிறக்கிறேன். ஆனால் எனக்கு ஓர் உதவி செய்யுங்கள்; என்னைப் பெறும் தாய் அறிஞர்களின் குருதியைக் குடிக்கட்டும். அதனால் அவர்களுடைய உயர்ந்த நற்பண்புகளை நான் வரித்துக் கொள்ள முடியும்" என்று கேட்டாள்.

லக்ஷ்மி வேண்டியதை நாரதமுனி அருளியதால், அவள் இராவணனின் மனைவியான மண்டோதரிக்கு மகளாகப் பிறக்கிறாள்.

அறிஞர்களின் குருதியை மண்டோதரி ஏன் குடித்தாள்? எவ்வாறு குடித்தாள்?

பிரம்மன் அருளிய வரத்தினால் இராவணன் மிகுந்த ஆற்றல் நிறைந்தவனாக ஆகிவிட்டான். அவன் உலகம் முழுவதிலுமுள்ள மன்னர்களை எல்லாம் வெற்றிகொண்டு, தன் வெற்றியின் அடையாளமாக அறிஞர்களின் குருதியைச் சேகரித்து வருகிறான்.

இராவணனின் இரக்கமற்ற அக் கொடுஞ் செயலைக் கண்டு வெறுப்புற்ற மண்டோதரி நஞ்சருந்தி தன் வாழ்வை முடித்துக் கொள்ள எண்ணுகிறாள். இராவணன் சேகரித்து வைத்திருந்த அறிஞர்களின் குருதியை நஞ்சென்று எண்ணிக் குடிக்கிறாள் அவள். அதனால் இறப்பதற்குப் பதிலாக அவள் கருவுருகிறாள். தனக்கு நேர்ந்ததை எண்ணி வெட்கி அவள் அரண்மனையை விட்டுச் சென்று விடுகிறாள். பின்னர் அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்து, மற்றவர்கள் அவதூறாகப் பேசுவார்களே என்று எண்ணி, அக்குழந்தையைப் பெட்டியில் அடைத்து குருக்ஷேத்திரத்தில் புதைத்து விடுகிறாள். ஜனக மன்னன் அக்குழந்தையைக் கண்டெடுத்து வளர்த்து வருகிறான். அவளுக்குச் சீதை எனப் பெயரிடப்படுகிறது. அவள் வளர்ந்து பெரியவளான பின்னர் இராமனுக்கு மணமுடிக்கப்படுகிறாள். சீதையுடன் அவன் கானகத்தில் வசிக்கும் நிர்ப்பந்தம் ஏற்படும் போது, தசகண்ட ராவணன் அவளைக் கடத்திச் செல்கிறான். இராமன் வானர சேனையின் உதவியால் இராவணனைக் கொல்கிறான். பதினான்கு ஆண்டுக்கால வனவாசம் கழிந்த பின்னர் இராமன் அயோத்திக்குத் திரும்பி, தேவர்களும் குடிகளும் போற்ற அரசாட்சி புரிகிறான்.

இந்தக் கதையின் மையக் கருத்தான; சுவாரஸ்யமிக்க விஷயம் என்னவெனில் இராமனும் வெல்லமுடியாத ஆயிரம் தலைகொண்ட இராவணனைச் சீதை கொல்கிறாள் என்பதே. அது இப்படித்தான் நிகழ்ந்தது: இராமன் தன் அரண்மனையில் கொலுவீற்றிருந்தபோது, குடிமக்களும், துறவியரும், இராமனின் சாதனைகளையும் தீரத்தையும் புகழ்ந்து பேசினர். அப்போது சீதை குறுக்கிட்டு, தசகண்ட இராவணனை வென்ற இராமன், சகஸ்ரகண்ட ராவணனுக்கு இணையாக மாட்டான் என்று கூறுகிறாள். சீதையின் கூற்றைக் கேட்டுப் பொறுக்காத இராமன் இராவணனைக் கொல்வேன் என்று சூளுரைக்கிறான். யாராலும் வெல்ல முடியாத சகஸ்ரகண்டனை நோக்கி வானரப் படைகள் முன்னேறின. இராமனும் சீதையுடன் புஷ்பக விமானத்தில் வானரப் படையைத் தொடர்கிறான். அங்கு நடந்த கடுமையான போரில் இராமனும் அவனுடைய வானரப் படையும் தோற்றுப் போகின்றனர். சகஸ்ரகண்டன் எய்த அம்பு இராமனின் மார்பைத் துளைத்தபோது அவன் மூர்ச்சையாகி விட்டான். இப்படியான

சோகச் சூழலிலே, முனிவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப சக்தி தெய்வமாகிய மகாகாளி என்ற மகமாயியாகச் சீதை உருவெடுக்கிறாள் தன்னிடமிருந்த படைக்கலங்கள் அனைத்தையும் சகஸ்ரகண்டன் மீது சரமாரியாக எய்கிறாள். அவனுடைய ஆயிரம் தலைகளின் மீது அவள் வாளை வீசியபோது அவை "மாங்காய்கள் காற்றிலே வீழ்வதுபோலத்" தரையிலே வீழ்ந்தன. பிரமனும் ஏனைய தேவர்களும் சீதையை வழிபட்டு, அவள் தன் கோர உருவை விடுத்து, சாந்த சொரூபத்தை ஏற்குமாறு வேண்டுகின்றனர். இராமனும் மூர்ச்சை தெளிந்து எழ, அனைவரும் அயோத்திக்குத் திரும்புகின்றனர்.

அத்புதராமாயணத்தில் நம்மை வியப்படையச் செய்கின்ற அத்புத விஷயம் எது? வால்மீகி இராமாயணத்திலும் இராமன் மற்றும் அவனுடைய தம்பியரின் பிறப்பில் வழக்கத்திற்கு மாறான கூறு ஒன்று இருக்கிறது. ஆண் மக்களைப் பெற வேண்டும் என்ற தீவிர வேட்கையினால் தசரதன் மேற்கொண்ட புத்ர காமேஷ்டி யக்ஞத்தின் விளைவாய் அவர்கள் பிறந்தனர். ஆனால் இங்கே, நாரதரின் சாபத்தின் காரணமாக இராமன் பிறக்கிறான். சீதையின் பிறப்பும் அதுபோன்ற சாபத்தினால்தான். சீதை மண்டோதரியின் மகளாகவும், அதனால் இராவணனுக்கும் மகளாக இருப்பதுதான் இதில் உள்ள வழக்கத்திற்கு மாறானதும், நம்மை வியப்படையச் செய்கின்றதுமான அம்சமாகும். இராவணன் தன் மகளையே கடத்திச் சென்று, அவள் பொருட்டாலேயே கொல்லப் படுகிறான். அத்துடன், அவள் ஆதிசக்தி அல்லது பரபிரகிருதியின் வடிவமாக மகாகாளி உருவெடுத்து, சகஸ்ரகண்ட ராவணனைக் கொல்கிறாள். இப்படியாக, சீதை, இராமனைக் காட்டிலும் ஆற்றல் மிகுந்தவளாகக் காட்டப்படுகிறாள். சாங்க்யயோகத்தில் கூறப்படும் புருஷத்தை இராமனும், சக்தியைச் சீதையும் உணர்த்துகின்றனர். சக்தியின் உதவியின்றி புருஷம் எதையும் உருவாக்கவோ, அழிக்கவோ முடியாது. இந்தத் தத்துவக் கோட்பாடே மூல சமஸ்கிருதப் படைப்பின் சாரமாகும் ஆனால் முத்தண்ணா, மூலத்தில் உள்ள சாங்க்ய யோகத் தத்துவத்தை விளக்கும் இந்த அத்தியாயத்தைத் தவிர்த்து விட்டுத் தம்முடைய கற்பனை ஆற்றலாலும், கலைத் திறனாலும் கதையின் போக்கிலேயே அந்தக் கருத்தை விளக்கி விடுகிறார்

அத்புத ராமாயணத்தின் மூல சமஸ்கிருதப் படைப்பு ஒரு புராணமாகும். அதனுடைய முக்கிய நோக்கம், தார்மீக நெறிகளையும், சாங்க்ய யோகம், பக்தி யோகம் போன்ற தத்துவக் கோட்பாடுகளையும், உபநிடதத் தத்துவங்களையும் விளக்கி உரைப்பதுதான். எனினும் புராணத்தின் பிரதான நோக்கத்திற்குத் துணைபோகும் சுவாரஸ்யமிக்க கதைக் கூறும் அதில் உள்ளது. மூலப் படைப்பில் உள்ள 27 அத்தியாயங்களில், போதனைக் கருத்துகளும், தத்துவக் கருத்துகளும் நிறைந்த ஐந்து அத்தியாயங்களைச் சாதுரியமாக ஒதுக்கி விட்டார். இராமன், அனுமனுக்குத் தன் விசுவரூபத்தைக் காட்டி, தத்துவக் கோட்பாடுகளை அறிவுறுத்துகிறான் என்பதுதான் அந்த ஐந்து அத்தியாயங்களின் உள்ளடக்கமாகும். முத்தண்ணா, இதைத் தம்முடைய படைப்பில் ஒரே வாக்கியத்தில் அடக்கி விடுகிறார். "அனுமன் அண்டர் நாயகனைப் பலவாறாக வழிபட்டு அவன் அருளிய தத்துவக் கோட்பாடுகளைக் கேட்டு, மட்டில்லா மகிழ்ச்சியில் கூத்தாடினான்."

வருணனை இலக்கியக் கூறுக்கு இடையூறாக அமையும் ஏனைய அத்தியாயங்களை அவர் எப்படிக் கையாண்டார் என்றறிவதும் சுவாரஸ்யமானதாகும். சமஸ்கிருத மூலப் படைப்பின் 18ஆவது அத்தியாயத்தில் சகஸ்ரகண்ட ராவணனின் 125 படைத் தலைவர்களின் பெயர்ப் பட்டியல் வருகிறது. ஆனால் முத்தண்ணா தம்முடைய படைப்பில் நான்கு பெயர்களை மட்டும் சொல்லிவிட்டு மற்றவற்றை விட்டுவிடுகிறார். இதுபோலவே, மூலப் படைப்பின் 19ஆவது அத்தியாயத்தில் சொல்லப் பட்டுள்ள இராவணனின் 52 மகன்களின் பெயர்களில் ஐந்தினை மட்டுமே அவர் குறிப்பிடுகிறார். புராண ஆசிரியர் வேறு சில அத்தியாயங்களில் இராவணனின் படைவீரர்களின் அசாதாரண இயல்புகளைப் பற்றி 32 ஸ்லோகங்களில் விவரிக்கிறார். ஆனால் முத்தண்ணா அவற்றுக்குப் பத்தே வாக்கியங்களில் அழகான சொல்லோவியத்தைத் தீட்டியிருக்கிறார். மூலப் படைப்பின் 25ஆவது அத்தியாயத்தில் இராமன் சீதையின் சிறப்பினைப் புகழ்ந்துரைக்கும் ஓராயிரம் பெயர்களை உச்சரிக்கிறான்; அதற்காக 159 ஸ்லோகங்கள் உள்ளன: ஆனால் முத்தண்ணாவோ, "பரமேஸ்வரியின் வடிவத்தில் சீதையின் பெருமையை உணர்ந்த இராமன், பயபக்தியுடன் ஆயிரத்தெட்டு நாமங்களை உச்சரித்து

அவளை வழிபட்டான்" என்று எளிமையாகக் குறிப்பிடுகிறார்.

கதையைப் பொறுத்தவரையிலும் கூட, சில பகுதிகளை விடுத்தும், வேறு சிலவற்றைச் சுருக்கியும், இன்னும் சிலவற்றை தம் கற்பனை ஆற்றலுக்கு ஏற்றவாறு மொழியாக்கம் செய்தும் அவர் எழுதியிருக்கிறார்.

அத்புதராமாயணம், ஹாலகன்னட மொழியில் தோன்றிய முதலாவது நவீன உரைநடைப் படைப்பு என்ற வகையில், சுவாரஸ்யமிக்க கதையம்சத்திற்காக விருவிருப்புடன் படிக்கக் கூடிய ஒன்றாகும். அதைப் படிக்கும்போது, நவீன சிறுகதைப் படைப்பைப் படிப்பதுபோலவே நாம் உணர்கிறோம். முதல் எட்டு அத்தியாயங்களில், இராமன் சீதை இருவரின் பிறப்புப் பற்றிய கதைகள் உள்ளன. அம்பரீஷனின் மகள் ஸ்ரீமதியின் சுயம்வரத்தின்போது விஷ்ணுவால் நாரதருக்கு ஏற்பட்ட அவமானத்தின் காரணமாகவே விஷ்ணுவும் லக்ஷ்மியும் மானுடப் பிறவி எடுக்க நேர்ந்தது என்ற உண்மையான காரணம் அந்தக் கதைகளில் சொல்லப்பட்டுள்ளது. கேலிக்கூத்தான அந்தச் சூழ்நிலையை முத்தண்ணா மிக நன்றாகக் கையாண்டிருக்கிறார். நாரதமுனியும் பர்வத முனியும் ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதும், அவர்கள் இருவரையும் விஷ்ணு ஏமாற்றுவதுமான வேடிக்கை நிகழ்ச்சி நகைச்சுவை மிகுந்தது.[1] நாரதர் இசை நுணுக்கத்தையும் திறனையும் கற்கின்றபோது அவருடைய தன்முனைப்பு, ஊசியால் குத்திய நீர்க்குமிழி போன்று, புஸ்ஸென்று போய்விடுகின்ற சம்பவமும் வேடிக்கையும் நகைச்சுவையும் நிறைந்ததாகும். பிந்தைய எட்டு அத்தியாயங்களில்தான் அத்புத ராமாயணத்தின் பிரதானக் கதை விவரிக்கப்படுகிறது. அவற்றில்தான், முக்கியக் கதாபாத்திரங்களான இராமன், சீதை, அனுமன், தசகண்ட ராவணன், சகஸ்ரகண்ட ராவணன் போன்றோர் நாடகப் பங்கேற்கின்றனர்.

1. வால்மீகி ராமாயணத்தின் கன்னட வடிவத்தை எழுதியவரான, சென்னையைச் சேர்ந்த வித்வான் ஆலசிங்காரச்சாரும், தார்வாடைச் சேர்ந்த பண்டிட் சி.என்.கவாலியும் இந்த நிகழ்ச்சியைப் பற்றித் தனித்தனியாய் நகைச்சுவை நாடகம் ஒன்றை எழுதியுள்ளனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

முத்தண்ணாவின் அத்புதராமாயணம், சமஸ்கிருத புராணத்தின் சுருக்கமாக இல்லாமல், ஓர் இலக்கியப் படைப்பாகத் திகழத் துணை நிற்பன, அதில் உள்ள அழகிய வருணனைகளும் நவீன உரைநடை பாணியுமே ஆகும். வால்மீகி முனிவரின் தவக்குடிலைப் பற்றி நூலின் தொடக்கத்தில் வருகின்ற வருணனை, பழைய செய்யுள் இலக்கியங்களில் வருவது போன்ற வழக்கிழந்து போன பழமையான சொல்லணிகள் நிறைந்ததாய் இல்லாமல், யதார்த்தமாக உள்ளது மிகவும் சிறப்பானதாகும். தவக்குடில்களுக்கே உரிய அமைதியும் நிசப்தமுமான சூழலைக் கண்முன்னே அது கொணர்கிறது. பிற வருணனைகளும்கூட மிகவும் ஏற்புடையனவாகவும், இயல்பாகவும் அமைந்துள்ளன.

லக்ஷ்மிநாராயணா தம்முடைய படைப்புக்களை, பழைய ஏடுகளில் இருந்து படியெடுக்கப்பட்டவை என்ற குறிப்போடு, வெளியிடுவதற்காக ஒரு புனைபெயரில் ஸ்ரீராமானுஜ ஐயங்காருக்கு அனுப்பினார் என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ராமாஸ்வமேதம், சமகாலத்துப் படைப்பாளர் ஒருவரால்தான் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று ஐயுற்ற பெருமை இராமானுஜ ஐயங்காரையே சேரும். ராமாஸ்வமேதத்தின் உரைநடைப் பாணியே அதன் உண்மையான ஆசிரியர் யாரென்று காட்டிக் கொடுத்துவிட்டது. பக்கிம் சந்திரரின் வங்காளப் புதினங்களை மொழிபெயர்த்தவரான பி. வெங்கடாச்சார்யா போன்ற சம காலத்தவர்களின் படைப்புக்களினால் முத்தண்ணாவின் மீது தாக்குறவு ஏற்பட்டது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அத்தகைய தாக்குறவுகள் இருந்தபோதிலும், முத்தண்ணாவின் சமகாலத்தவர்களின் படைப்புகளின் பாணியைக் காட்டிலும் அத்புத ராமாயணத்தின் உரைநடைப் பாணி மிகவும் நவீனமாக இருந்தது. நாணயச் சாலையில் இருந்து வந்தவை போன்ற புத்தம் புதிய சொற்களைத் த்ாமே உருவாக்கி எளிய இனிய வாக்கியங்களை அவர் எவ்வாறு எழுதினார் என்பது உண்மையிலேயே ஆச்சரியமாக இருக்கிறது.

இந்தப்படைப்பின் உரைநடைப் பாணியில் சிறப்பாகக் காணப்படும் அம்சம் என்னவெனில், தத்பவச் சொற்களைப் (சமஸ்கிருதச் சொற்களில் இருந்து பெறப்படும் சொற்கள்) பெருமளவுக்குப் பயன்படுத்தியிருப்பதாகும். அவற்றில் பெரும்பாலானவை அவருடைய சொந்த ஆக்கங்களாகும்.

மெதுவான ஓட்டம், குதியோட்டம், சுழித்த ஓட்டம், பின்னல்கள், திருப்பங்கள் என்று நாம் கற்பனை செய்து பார்க்கக் கூடிய அனைத்து வகையான அழகியல் கூறுகளையும் அத்புத ராமாயணத்தின் உரைநடைப் பாணியில் நாம் காணலாம். அத்தனை புத்தாக்கக் கூறுகளையும் கொணர முத்தண்ணா முயற்சித்ததாகத் தோன்றினாலும், இவை அனைத்தும் கடும் உழைப்பின்றி, இயல்பாகவே அவருக்குக் கைவரப் பெற்றிருந்தன. அத்புத ராமாயணத்தின் உரைநடைப் பாணியில் முதன் முயற்சிகளாகத் தோன்றிய யாவுமே ராமாஸ்வமேதத்தில் முழுமை பெற்றன.

5. ராம பட்டாபிஷேகம்

சேஷராமாயணம் என்றழைக்கப்படும் சமஸ்கிருத ராமபட்டாபிஷேகத்தின் முதல் நான்கு அத்தியாயங்கள் இராமனுக்கு முடி சூட்டுகின்ற நிகழ்ச்சியை விவரிக்கின்றன. இந்த நான்கு அத்தியாயங்களைத் தழுவியே முத்தண்ணா தம்முடைய கண்டகாவியத்தை[1] இயற்றியுள்ளார். கதை முழுவதையும் ஆதிசேஷன், வாத்ஸாயன முனிவருக்கு எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. வால்மீகி ராமாயணத்திலிருந்தும் முத்தண்ணா சில பகுதிகளை எடுத்தாண்டுள்ளார். மூலப் படைப்புகளில் இருந்து கதைக் கருவினை மட்டுமே அவர் தழுவியுள்ளார். பாத்திரச் சித்திரிப்புகளும், வருணனைகளும் பாவணிகளும் அனைத்துமே அவரது சொந்தக் கற்பனையாகும். கன்னட ஜைமினி பாரதத்தை இயற்றிய லக்ஷ்மிஷா பிரபலப்படுத்திய வர்தக சத்பாதி யாப்பில் அவர் எழுதிய ஒரே செய்யுள் நூல் இது ஒன்றுதான். புகழ்பெற்ற அப்படைப்புக்குச் சமமாகவும், ராகவன்காவின் ஹரிச்சந்திர காவியம், சாமரசரின் பிரபுலிங்கலீலை போன்ற பெரும் படைப்புகளுக்கு இணையாகவும் ராமபட்டாபிஷேகம் இராது என்றாலும் பழைய படைப்பாளர்களின், வர்தக சத்பாதி காவியங்களிடையே அதற்குக் குறிப்பிடத்தக்கதோர் இடமுண்டு.

ராமபட்டாபிஷேகத்தின் கதை மிகவும் எளிமையானது; சுருக்கமானது. இராவணனையும் ஏனைய அசுரர்களையும் அழித்த பின்னர், இராமன், விபீஷணனை இலங்கையின் அரியணையில் அமர்த்துகிறான். பின்னர், சீதை, அனுமன், லக்ஷ்மணன், மற்ற வானரங்கள் புடைசூழ புஷ்பக விமானத்தில் ஏறுகிறான். பதினான்கு ஆண்டுக்கால வனவாசத்தை முடித்துவிட்ட தன்னுடைய தமையன் இராமனின் வருகைக்காக, அயோத்திக்கு அருகில் நந்திக்கிராமத்தில் காத்திருக்கும் பரதனுக்குச் செய்தி சொல்ல அனுமனை முன்கூட்டியே அனுப்புகிறான் இராமன்.

---

1. கண்ட காவியம் என்பது ஒரு சம்பவம் அல்லது நிகழ்வை மட்டும் கருவாகக் கொண்டு எழுதப்படும் குறுங்காவியமாகும். அந்தக் கரு சொந்தக் கற்பனையாகவோ, பெரும் இலக்கியங்களில் இருந்து பெறப்பட்டதாகவோ இருக்கலாம்.

ஆனால் இராமனின் வருகை சற்றே தாமதப்பட்டதால், பரதன் தீக்குளிக்கத் தயாராகிறான். எனினும், இராமன் சரியான நேரத்திற்கு அங்கு வந்து, பரதனைத் தீக்குளிக்காமல் தடுத்து, அவனுக்கு ஆறுதல் சொல்கிறான். பின்னர் இராமன் அயோத்திக்குத் திரும்பி, அன்னை கௌசல்யா, சிற்றன்னையர் கைகேயி, சுமித்ரா ஆகியோருக்கு மரியாதை செலுத்துகிறான். இராமனின் முடிசூட்டு விழாவுடன் கதை முடிகிறது.

இந்தச் சிறிய கதைக்கருவில் முத்தண்ணாவின் புலமை மிகச் சிறப்பாக வெளிப்பட்டு வண்ணமிகு வருணனைப் பாக்களாக மலர்ந்து இராம பக்தி என்னும் நறுமணத்தைப் பரப்பியுள்ளது.

ஐந்து காண்டங்களைக் கொண்ட ராமபட்டாபிஷேகத்தில் 242 வர்தக சத்பாதி செய்யுள்கள் உள்ளன. முதலாவது காண்டம் (சந்தி) நாந்தி சந்தி எனப்படுகிறது. இதில் ஸ்ரீராமன், ஆதிசேஷன், மகாவிஷ்ணு, சீதா மாதா, விநாயகர், சரஸ்வதி மற்றும் பிற தெய்வங்களைப் போற்றும் செய்யுள்கள் உள்ளன. இந்தச் செய்யுள்கள் யாவும் சிலேடை அணியில் அமைந்துள்ளதால், மகேஸ்வரன், பார்வதி, பிரமன், சண்முகன் போன்ற தெய்வங்களைப் போற்றுவதான பொருளையும் தருமாறு அவற்றை இயற்றியுள்ளார்.

அறிமுகக் காண்டமான பிதிக சந்தியில் உள்ள ஏழு செய்யுள்களிலும் மேலும் பல போற்றிக் கருத்துகள் உள்ளன. ஒரு செய்யுளில் பண்டைய சமஸ்கிருதக் கவிஞர்களான வியாசர், வால்மீகி, ஜைமினி, பிங்கலர், பவபூதி, சுத்ரகர், காளிதாசர், பாணர் போன்றவர்களையும், சந்திரபட்டர், கேசவர், ருத்ரபட்டர், சதாக்ஷ்ஹரி போன்ற புகழ்பெற்ற கன்னடக் கவிஞர்களையும் போற்றுகின்றார். பரவலாக அறியப்படாத, உள்ளூர்க் கவிஞர்கள் சிலரின் பெயரும் அச்செய்யுளில் காணப்படுகின்றது.

இந்தக் காண்டத்தில் உள்ள ஓரிரு செய்யுட்கள், இந்நூலாசிரியர் ஒரு பெண் என்று படிப்போர் நம்பும்படியாகச் செய்கின்றமையால் அவை இங்கே குறிப்பிடத்தக்கன. காவ்ய மஞ்சரியின் வெளியீட்டாளர்கள் தம்முடைய படைப்பை நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று லக்ஷ்மிநாராயணா நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பதை இங்கே நாம் மீண்டும் நினைவில் இருத்த வேண்டும். பெண் எழுத்தாளர்பால்

அவ்வெளியீட்டாளர் பரிவுடையோராய் இருப்பார் என்று அவர் நம்பினார் போலும். ஆதலின், தம்முடைய படைப்பை ஒரு பெண் பெயரில் அனுப்புவது என்று அவர் முன்கூட்டியே தீர்மானித்திருக்க வேண்டும். அவருடைய அன்னையின் பெயர் மகாலக்ஷ்மி. எனவே அந்தக் கையெழுத்துப்படியின் முதல் பக்கத்தில் 'மகாலக்ஷ்மியால் சொல்லப்பட்டது' (மகாலக்ஷ்மி ப்ரணீதா) என்றெழுதி காவ்ய மஞ்சரியின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான ராமானுஜ ஐயங்காருக்கு அனுப்பினார். அறிமுகக் காண்டத்தில் அந்நூலாசிரியர் ஒரு பெண்ணென்று நாம் அறிகிறோம். நூலின் இறுதிச் செய்யுளில், "செங்கலதேவியின் விருப்பத்திற்கு இணங்க சாவடி ரங்கபட்டரின் மகளாகிய மகாலக்ஷ்மி எழுதியது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனினும், உண்மையிலேயே அதை எழுதியவர் யாரென்பதை அறிய உதவும் சில குறிப்புகளும் நூலில் உள்ளன. இரண்டாவது காண்டத்தின் எட்டாவது செய்யுளில் இக்கூற்று வருகிறது:

"கன்னடத்தியோரேட நுடியேந்டிடம் பவிஷடே
கன்னடிகனோரேட நுடியேந்டு சம்பவிப்புது"

(ஒரு கன்னடத்தி, அதாவது கன்னடப் பெண் சொல்லியதாக இப்படைப்பைத் தயைகூர்ந்து எண்ணாதீர்கள்; ஒரு கன்னடிகா (கன்னட ஆண்) எழுதியதாக இதனை ஏற்று மதிப்பீர்)

மேலும் ஒவ்வொரு காண்டத்தின் இறுதிச் செய்யுளிலும் உடுப்பியின் லக்ஷ்மிணா மனோகரா போற்றப்படுகிறார். விஷ்ணுவின் அவதாரமான பாலகிருஷ்ணன் உடுப்பியில் எழுந்தருளியுள்ளார். லக்ஷ்மிணா மனோகரா என்பதும் லக்ஷ்மிநாராயணா என்பதும் ஒன்றே என்பதையும் இங்கே கவனிக்க வேண்டும். இந்த அகச் சான்றுகள் தவிர, முத்தண்ணாவின் நெருங்கிய சகாக்களான பவுலாடி ஹெப்பார் போன்றவர்கள், மற்றும் பஞ்சே மங்கேஷராவ் பெங்கால் ராமாராவ் போன்ற பெரியவர்களின் கூற்றுக்களும் இந்நூலாசிரியர் யாரென்று நிறுவுகின்றன.

மேலும் இராமனின் வரலாறு பக்தி, வைராக்யம் (பற்றற்ற நிலை) போன்ற ஆன்மீக மாண்புகளை வலியுறுத்திப் போற்றுவதால், நூலின் பெருமைக்குப் பங்கம் விளைவிப்பவர்கள்

இருந்தாலும், கற்றுணர்ந்த வாசகர்கள் அதனைப் போற்றி ஏற்றுக் கொள்ளுவர் என்ற முத்தண்ணாவின் நம்பிக்கையை இந்தக் காண்டத்தில் உள்ள பிற செய்யுள்கள் தெளிவாகக் காட்டுகின்றன. சொல்லப்போனால், இந்தக் கதை ஒரு 'ராம நாமாமிருத பிண்டிகை', அதாவது ராமநாமம் நிறைந்த அமுத கலசமாகும்.

மூன்றாவது காண்டத்தில் அறுபது செய்யுள்கள் உள்ளன. வாத்ஸாயன முனிவர் ஆதிசேஷனை அணுகி, 'ஸ்ரீராமனுக்கு முடி சூட்டுகின்ற நிகழ்வு அனைத்தையும்' தனக்கு எடுத்துரைக்குமாறு வேண்டுகிறார். அதற்கு இணங்க, இலங்கையிலிருந்து அயோத்திக்குப் புஷ்பக விமானத்தில் சீதை, லக்ஷ்மணன், சுக்ரீவன், மற்ற வானர சேனைகளுடன் இராமன் திரும்பி வருகின்ற நிகழ்ச்சியை ஆதிசேஷன் விளக்கத் தொடங்குகிறார். இலங்கையில் இருந்து அயோத்தியை நோக்கிப் புஷ்பக விமானம் பறந்து வருகையில், அலை முழங்கும் தென்மாவாரியை விமானத்தில் உள்ளவர்கள் காண்கின்றனர். இங்கே அப்பெருங்கடலை இருபது செய்யுள்களில் கவிஞர் வருணிக்கிறார். கடல் தோற்றத்தின் யதார்த்தமான வருணனையாக அது இல்லாவிட்டாலும், கடலின் பலதிறப்பட்ட பண்புகளை மிகுந்த கற்பனைச் செறிவுடன் பலவகையான சொல்லணிகள் மூலம் அவர் விளக்குகிறார். விரிந்துபட்ட கடல்பரப்பை இராமனின் மூதாதையர்களான காகுத்த மரபுடன் ஒப்பிடுவதும், உயர்ந்து தாழும் கடல் அலைகளைப் பவசாரதியாகக் (பிறவிப் பெருங்கடலாக) காட்டுவதும் நல்ல கற்பனை வளமாகும். பல அழகிய சொல்லோவியங்களையும் முத்தண்ணா நமக்குத் தந்துள்ளார்: புலித்தோலைக் கண்ட மாத்திரத்திலேயே அஞ்சி நடுங்கும் மான், புலியை நேரிலே பார்த்தால் என்னவாகும்? மான்விழிபோல் தன்விழி கொண்ட மாதும் பெரும்புலியைக் கண்டால் அஞ்சி நடுங்குவதில் வியப்பில்லையே. நெடுங்காலம் பிரிந்திருந்த இராமனை மீண்டும் காண்பதற்குக் கௌசல்யா ஏங்கித் தவித்ததை, கன்றைப் பிரிந்த பசுவின் தவிப்புடன் ஒப்பிடுகிறார். கதிரவனின் உதயத்தையும், அஸ்தமனத்தையும் அவர் வருணித்துள்ளதைக் காணும்போது, கதைப்போக்கின் இயல்புக்கு ஏற்பச் சூழ்நிலைகளை விவரிக்கின்ற பழைய கன்னடக் கவிஞர்களான பம்பா, ரன்னா, குமாரவியாசர் போன்றோரின் தாக்குறவைக் காண முடிகிறது. கதிரவன் உதயத்தின்போது சேவல் கூவுவதும் காக்கை

கரைவதும் இயல்பு. ஆனால் பறவைகளின் இந்த ஒலியை, இராமனின் முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடுகள் நடக்கும்போது இவ்வாறு வருணிக்கிறார்: சேவல் தன்னுடைய கழுத்தை உயர்த்திக் கூவும்போது அரச குடும்பத்தின் விழா துவங்குவதை அறிவிப்பது போலுள்ளது; விழா நெருங்குகிறது; மக்களே விழித்தெழுங்கள்; சோம்பியிராதீர்கள்; இராமனின் முடிசூட்டு விழாவை வந்து கண்டு களியுங்கள். இந்திரனின் முடிசூட்டு விழாவைக் காட்டிலும் ஏழுமடங்கு சிறப்பானது இவ்விழா" என்று சேவல் கூவ, காக்கையோ, "என்னைக் காத்து அருளியவன் இராமன்[2]; அப்பெருந்தகையின் முடிசூட்டு விழாவை நான் எங்ஙனம் காணாதிருப்பேன்" என்று சொல்லிக் கரைந்தது. சொற்களை மிகப் பொருத்தமாகவும் பொருட் செறிவுடையதாகவும் முத்தண்ணா பயன்படுத்தியுள்ளார். காகம் என்ற சொல்லையே எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். (கா - வானம்; கம் - இயங்குவது) காகம் என்ற சொல் வானில் பறக்கின்ற காக்கையை மட்டுமின்றி, வானில் வலம் வருகின்ற சூரியனையும் குறிக்கின்றது. காகக்குலத்து மன்னனான (காக குலம் - சூரிய வம்சம்) இராமனின் முடிசூட்டு விழாவைக் காண தன்னினத்துப் பறவைகளை எல்லாம் அழைத்து வருவதற்காகக் காகங்கள் கிறீச்சிட்டுக் கொண்டே எல்லாத் திசைகளிலும் பறந்து சென்றன.

இராமன், சீதை, லக்ஷ்மணன், வானர சேனை அனைவரும் புஷ்பக விமானத்தில் பறந்து வருகின்ற நிகழ்ச்சி, இயற்கைக் காட்சிகளை வருணிக்கவும், தண்டகாரண்யம், கிஷ்கிந்தை போன்றவற்றின் வழியாக முன்னர் இராமனும் சீதையும் அயோத்தியிலிருந்து தெற்கு நோக்கிப் பயணம் செய்த பழைய சம்பவத்தைத் தொடர்பு படுத்தவும் கவிஞருக்கு நல்ல வாய்ப்பாக அமைகின்றது. இப்போது பயணம் எதிர்த் திசையில், அதாவது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி - இலங்கையிலிருந்து அயோத்தி

---

2. இராமனும் சீதையும் வனத்தில் வாழ்ந்தபோது நிகழ்ந்த சம்பவம் தொடர்பானது இது. ஒருமுறை சீதை, இராமனின் மடியிலே தலை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தபோது காகாசுரன் என்ற அரக்கன் அவளை மோகித்து, காக்கை உருவெடுத்து அவள் சேலையைப் பற்றியிழுத்தான். இராமன் அக்காக்கை மீது அம்பெய்தான். காக்கை உருவிலிருந்த அசுரனை அந்த அம்பு விடாமல் துரத்திச் சென்றது. இறுதியில் காகாசுரன் இராமன் திருப்பாதங்களில் வீழ்ந்து, ஆட்கொள்ளப்படுகிறான்.

நோக்கி நடைபெறுகிறது. இதுபோல் பழைய சம்பவங்களை நினைவுகூறுகின்ற விளக்கமுறை இந்திய இலக்கியத் திறனாய்வில் சிம்ஹவாலோகன கிரமம் (தமிழில் அரிமா நோக்கு) அதாவது சிங்கம் ஒன்று மெல்லத் தலையை எழுப்பித்தான் கடந்துவந்த பாதையைச் சுற்றும் முற்றும் பார்ப்பது போன்றது என்று கூறுவர். சீதையிடம் இராமன் ஆறுகள், குன்றுகள், பள்ளத்தாக்குகள், மரச்சோலைகள் போன்றவற்றைச் சுட்டிக்காட்டுவதாகப் பத்துச் செய்யுள்களைக் கவிஞர் இயற்றியுள்ளார். அப்போது, இராமனுக்கும் சீதைக்கும் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்களையும் அவர் எடுத்துரைக்கிறார். சம்பாதியின் துறவுக்குடில், ஸ்வயம் பிரபா வாழ்ந்த குகை, சீதையைக் கவர்ந்து செல்லும்போது இராவணன் ஜடாயுவுடன் மோதிய இடம், இராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் சூர்ப்பநகை தொல்லை தந்த பஞ்சவடி, மான் உருவெடுத்த மாரீசன் இராமனை ஏமாற்றி நடுக்காட்டிற்குள் அழைத்துச் சென்ற இடம், சித்ரகூடம், யமுனையாற்றங்கரை, பரத்வாஜரின் துறவுக் குடில் - போன்ற அனைத்து இடங்களையும் மேலிருந்து பார்த்தவாறே புஷ்பகவிமானம் அயோத்தியை அடைகிறது.

தன் தமையன் இராமனின் வருகைக்காக நந்திக்கிராமத்தில் பரதன் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிற நிகழ்ச்சியை மிக அழகான செய்யுளாக முத்தண்ணா வடித்திருக்கிறார். பதினான்கு ஆண்டுகள் முடிவடைந்த மறுநாளே இராமன் திரும்பிவராவிட்டால் தீக்குளிப்பதாகப் பரதன் சபதமிட்டிருக்கிறான். இராமன் திரும்பிவராமல் போனதற்கு என்ன காரணமாயிருக்கும் என்று பரதன் தன்னுள்ளே விவாதிக்கின்றான் :

நம் தந்தையின் மறைவால் தாங்கொணாத் துயரம் கொண்டு அங்கேயே தங்கினானோ?

எந்தாய் கைகேயியின்பால் எண்ணிலாக் கோபம் கொண்டானோ?

துறவியர் தம் துன்பந்துடைத்து அவர் துணைவனானதால் அவர் விருந்தினனாய் அங்கேயே தங்கி எமை மறந்தானோ?

சீதைக்கு மீண்டுமொரு துன்பம் நேர்ந்ததோ?

ஊழ் எனக்கு என்ன விதித்திருக்கிறதோ? யான் அறியேனே?

இராமனின் திருப்பாதங்களை யான் என்றேனும் காண்பேனா?

இராமனும் பரதனும் மீண்டும் சேர்ந்த நிகழ்வாகட்டும் அல்லது இராமனும் அவன்தாய் கௌசல்யாவும் இணைந்ததாகட்டும் அல்லது இராமனின் வரவால் அயோத்தி மக்கள் பெருங்களி கொண்ட நிகழ்வாகட்டும் - அனைத்திலுமே மானுட உணர்வுகளை மிகவும் நயம்பட, கிளர்ச்சியுடன் அவர் வருணித்திருக்கிறார்.

நீண்ட அக்கவிதை வண்ணமயமாக, வழக்கமான இராமன் முடிசூட்டு நிகழ்ச்சி வருணனையுடன் முடிகிறது.

கவிஞர் சொல்லவிரும்பியதை அதாவது ராம பக்தியை எடுத்துரைக்கும் வாயிலாக ராமபட்டாபிஷேகக் கதை திகழ்கிறது.

வால்மீகி, காளிதாஸர், மகா போன்ற சமஸ்கிருதக் கவிஞர்கள், சாமரசர், குமாரவியாசர், லக்ஷ்மிஷா போன்ற கன்னடக் கவிஞர்கள் ஆகியோரின் தாக்குறவு பல இடங்களில் ஓரளவுக்குக் காணப்படுகின்றது. செய்யுள் இயற்றியதில், அதிலும் குறிப்பாக சப்தலாங்காரங்களை (சொல்லணிகள்) அமைக்க விரும்பி அவர் கடும் முயற்சி மேற்கொண்டுள்ளார் என்பது தெளிவாகப் புலப்படுகிறது. இயற்கைக் காட்சிகளை வருணிப்பதில் அவர் காட்டியுள்ள தனித்தன்மையும், சகோதர பாசத்தையும், பெற்றோர் பாசத்தையும் காட்டுவதில், அதிலும் குறிப்பாகப் பரதனின் பாத்திரத்தின் வாயிலாக அவற்றைக் காட்டுவதில் அவருடைய ஆழ்ந்த புலமை வெளிப்படுகிறது.

ராம பட்டாபிஷேகம், லக்ஷ்மிஷாவின் ஜைமினி பாரதத்தைப் போல் புகழ்பெறாவிட்டாலும், கன்னடக் கவிதை வரலாற்றில் நிச்சயம் அதற்குப் பெருமைக்குரியதோர் இடம் உண்டு.

6. ராமாஸ்வமேதம்

ராமாஸ்வமேதம்[1] முத்தண்ணாவின் இறுதிப் படைப்பாகும். நவீன கன்னட இலக்கிய சகாப்தத்தின் முன்னோடியான இப்பெரும் படைப்பு, சமஸ்கிருத பத்மபுராணத்தின் ஓர் அங்கமான ராமாஸ்வமேதம் என்ற மூலத்தைத் தழுவியது. ராமாஸ்வமேதம் முழுவதையும் வர்தக சத்பாதி யாப்பில் இயற்றுவது என்று முத்தண்ணா தீர்மானித்திருந்தார். ஆனால் அவர் தம் மனதை மாற்றிக் கொண்டு ராம பட்டாபிஷேகம் நிகழ்ச்சியை மட்டும் அந்த யாப்பிலே இயற்றினார். ராமாஸ்வமேதத்தின் எஞ்சிய பகுதியான குதிரை வேள்வியை (அசுவமேதம்) புவுலாடி வெங்கடரமண ஹெப்பாரின் அறிவுரைப்படி உரைநடையில் எழுதுவது என்று முடிவெடுத்தார். உரைநடை எழுதுவதே தம்முடைய இயல்பான திறமை என்று படிப்படியாக அவருடைய எண்ணம் திசைமாறிப் போனது. எனினும் அவருடைய செய்யுளியற்றும் ஆற்றல் ராமபட்டாபிஷேகத்தில் நிரூபணமானது. செய்யுள் நடையா, உரைநடையா என்ற கவிஞரின் மனநிலையை, ராமாஸ்வமேதக் கதையை உரைநடையில் சொல்லட்டுமா அல்லது செய்யுள்

1. ஏற்கனவே குறிப்பிட்டபடி ஸ்ரீராமானுஜ ஐயங்கார் தம்முடைய காவ்ய கலாநிதி இதழில் 1901ஆம் ஆண்டு, ஆறாவது வெளியீடாக ராமாஸ்வமேதத்தை வெளியிட்டார். லக்ஷ்மிநாரணயணா தம்முடைய படைப்பை, வேறொருவருடையது என்று கூறி அவருக்கு அனுப்பியிருந்தார். முத்தண்ணா தாம் அதனை மூலத்திலிருந்து படியெடுத்துத் தந்ததாக மட்டுமே கூறியிருந்தார். காவ்யகலாநிதி இதழாசிரியரும் வெளியீட்டாளருமான ஸ்ரீராமானுஜ ஐயங்காருக்குச் சில விநோதமான, வழக்கிழந்த சொற்களுக்குப் பொருள் புரியாமல் போகவே, அவை படியெடுக்கும்போது நேர்ந்த பிழைகள் என்றெண்ணி தம்முடைய விருப்பத்திற்கு ஏற்ப அவற்றைத் திருத்தி எழுதிக் கொண்டார். அதில் தவறேதும் இல்லை. இப்போது, அதிர்ஷ்டவசமாக, முத்தண்ணாவின் வழித் தோன்றல்களிடமிருந்து அவர் எழுதிய மூலப்படியை பெங்களூர்ப் பல்கலைக் கழகம் பெற்றுள்ளது. அந்த மூலப்படியை ஒப்பாய்வு செய்த கன்னடப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் எம். சித்தானந்த மூர்த்தி, பதிப்பாசிரியர் செய்த மாற்றங்கள் வெறும் சொல்லளவிலானவை என்றும், மூலபாடத்தின் பொருளை அவை மாற்றிவிடவில்லை என்றும், எனவே அப்படைப்பின் இலக்கியத்தரத்தை மதிப்பிடுவதற்குத் தடையாக அவையில்லை என்றும் முடிவுக்கு வந்துள்ளார்.

நடையில் சொல்லட்டுமா என்று வினவிய நூலாசிரியரான முத்தண்ணாவுக்கு அவருடைய மனைவி மனோரமா விடையிறுப்பதான பகுதியில் அவர் தெளிவுபடுத்துகிறார். அவள் சொல்கிறாள்: "செய்யுள் கிடக்கட்டும். உரைநடையே மனதை ஈர்ப்பதாக இருக்கிறது. மனங்கவரும் உரைநடையிலே எனக்கு உரையுங்கள்".

பின்னர் முத்தண்ணா, இராமன் நிகழ்த்திய அஸ்வமேதக் கதையை தமக்கேயுரிய கவர்ச்சிகரமான உரைநடையில், புதுமையான முறையில் எடுத்துரைக்கத் தொடங்குகிறார். அவருடைய நடை, இக்கால உரைநடை எழுத்தாளர்கள் கைவர அவாவுறும் உன்னத நடையாகும். பழைய கதைக் கருவைத் தமக்கேயுரிய பாணியில் அவர் விளக்கியுள்ளமையைத் திறனாய்வாளர்கள் பாராட்டியிருந்தபோதும், பழைய கதைக் கருவை எடுத்தாண்டது குறித்து அவர்களிடையே கருத்து வேறுபாடுகளும் உள்ளன. முத்தண்ணாவின் மறைவுக்குப் பின்னர் சுமார் 25 ஆண்டுகள் கழித்து, பெங்களூர் மத்தியக் கல்லூரியின் கர்நாடக சங்கம் தன்னுடைய 'பிரபுத்த கர்நாடகா'[2] என்ற காலாண்டு இதழில், அவரைப் பற்றிப் புகழ் பெற்ற அறிஞர்கள் பலர் எழுதிய கட்டுரைகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தது.

அந்தக் கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு முத்தண்ணா என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டன. அவற்றில் பெரும்பாலான கட்டுரைகள் பழைய சம்பவங்களை நினைவு கூர்வனவாகவும், வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை களாகவுமே இருக்கின்றன. பஞ்சேமங்கேஷராவின் கட்டுரையில் ராமாஸ்வமேதம் பற்றிய பாராட்டுரைகள் சில உள்ளன; மாஸ்தி வெங்கடேச ஐயங்காரின் கட்டுரை அதனை வெகுவாகச் சிறப்பித்துப் பாராட்டுகிறது. எம்.என்.எஸ் மற்றும் பி.எம்.எஸ்.[3] இருவரும் இணைந்து எழுதிய கட்டுரையில், பழைய கதைக்

2. தொகுதி 7–1, 2, 3 & தொகுதி 8–2, 1926, 1927. முத்தண்ணா நினைவுச் சிறப்பிதழ் 1927. (கர்நாடக சங்கம், முத்தண்ணாவின் நினைவாகச் சில ஆண்டுகளுக்கு வருடாந்திர சிறுகதைப் போட்டி ஒன்றையும் நடத்தியது. பரிசுபெறும் கதையாசிரியருக்கு முத்தண்ணா நினைவு தங்கப்பதக்கம் ஒன்றும் வழங்கப்பட்டது.)

3. எம். என். சீனிவாசராவ் மற்றும் பேராசிரியர் பி. எம். ஸ்ரீகண்டையா.

கருவைக் கையாண்டுள்ள முத்தண்ணாவின் புதிய அணுகு முறையைப் பாராட்டியுள்ள அதே சமயத்தில், புத்தாக்கத்திற்கு இடமில்லாத பழைய கருவை எடுத்தாண்டுள்ளதைக் குறை கூறியுள்ளனர். இந்தக் கூற்றை அடிப்படையாகக் கொண்டே பேராசிரியர் எஸ்.வி. ரங்கண்ணா, ராமாஸ்வமேதம் பற்றிய திறனாய்வு மதிப்பீடு ஒன்றை, "சாதாரண ஓவியத்திற்குத் தங்கச் சட்டகம்" (சாமான்ய சித்ரக்கே சுவர்ண செளகாட்டு) என்ற தலைப்பில் எழுதியிருப்பார் போலும். கதைக்கரு மிகச் சாதாரணமானது மட்டுமின்றி இராமாயணப் பழமையானதாய் இருந்ததுடன் அதைக் கையாண்ட விதமும் மிகச் சாதாரணமானது. ஆனால், அந்தச் சட்டகம் - இராமனின் குதிரை வேள்வி எனும் ஓவியத்தைத் தீட்டிய திரைச்சீலையாகிய, ஆசிரியர் முத்தண்ணாவிற்கும் அவருடைய அன்பு மனைவி மனோரமாவுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல், மிகவும் சுவாரஸ்யமானதாகவும் கலைநயம் வாய்ந்ததாகவும் இருந்தது என்ற பொருள்படவே அந்த உருவகக் கூற்று, கட்டுரைத் தலைப்பாகியது.

முதலில் நாம் அந்தக் கதைக் கருவின் ஆதாரத்தைப் பார்த்து, மேலே சொன்ன விமர்சனக் கருத்துக்கள் எந்த அளவிற்கு ஏற்புடையவை என்று காண்போம். ஓர் இலக்கியப் படைப்பின் மூலாதாரத்தை நாம் ஆராய்ந்தோமென்றால், மூலத்திலிருந்து எந்த அளவுக்கு அந்தப் படைப்பாளர் கருத்துக்களை எடுத்தாண்டு இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதுடன், அந்த இலக்கியப் படைப்பை ஒரு முழுமையான கண்ணோட்டத்தில் மதிப்பிடவும் முடியும்.

ராமாஸ்வமேதத்தின் கதைக்கரு முத்தண்ணாவுக்கு மிக எளிதாகவே கிடைத்திருக்கிறது. சமஸ்கிருத மூலப் படைப்பான ராமாஸ்வமேதத்தை மலாலி சுப்பாராவின் உதவியுடன் படித்தறிந்த அவர், இராமனின் முடிசூட்டு விழா பற்றிய முதல் நான்கு அத்தியாயங்களைக் கொண்டு ராமபட்டாபிஷேகத்தை எழுதினார்.

முத்தண்ணா அந்த நூலை எழுதி முடித்த பின்னரும், சமஸ்கிருத மூலப் படைப்பைப் படித்துப் புரிந்து கொள்வதற்காக சுப்பாராவின் உதவியைத் தொடர்ந்து பெற்றார். ராம பட்டாபிஷேகத்தைப் போலவே, சுப்பாராவ் மூலத்தைப் படித்துச்

சொன்ன மொழிபெயர்ப்பை மிக வேகமாக கிறுக்கிக் குறிப்பெடுத்துக் கொள்வார். ராமாஸ்வமேதக் கதையின் பெரும்பகுதி சுப்பாராவின் மேற்பார்வையிலேதான் எழுதப் பட்டது என்று நாமறிகிறோம். அவ்வாறாயின், முத்தண்ணாவுக்கும் மனோரமாவுக்கும் இடையேயான உரையாடல் கதையின் போக்கிலே அங்கங்கே ஏற்புடைய வகையில் சேர்க்கப்பட்டிருக்கும் என்று நாம் நம்புவதற்கு இடமுண்டு. அதைத் தவிர அந்த உரையாடல்களுக்கும் கதைச் சம்பவங்களுக்கும் இடையே அறுபடாத தொடர்பு இருப்பதையும் நாம் காணலாம்.

ராமாஸ்வமேதக் கதை, சமஸ்கிருத மூலத்தில் 68 அத்தியாயங்களில் 4235 சுலோகங்களைக் கொண்டது. கன்னட ராமாஸ்வமேதத்தைப் போல் சுமார் இரண்டரை மடங்கு பெரியது. முத்தண்ணாவின் படைப்பு 16 அத்தியாயங்களை மட்டுமே கொண்டது சோசலே ஐயா சாஸ்திரி தம்முடைய சேஷராமாயணத்தை வர்தக சத்பாதி யாப்பிலே எழுதினார் என்பதையும் அது 34 அத்தியாயங்களில் 1340 செய்யுள்களைக் கொண்டிருந்தது என்பதையும் நாம் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். சாஸ்திரியின் படைப்பும் சமஸ்கிருத ராமாஸ்வமேதத்தைத் தழுவியது என்றாலும் முத்தண்ணாவின் ராமாஸ்வமேதத்திற்கு வெகுகாலம் கழித்தே எழுதப்பட்டது. முத்தண்ணாவின் படைப்புக்கு ராமாஸ்வமேதம் என்று பெயரிருந்தாலும், சமஸ்கிருத மூலமான பத்மபுராணத்தின் ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதியிலிருக்கும் பின்னுரையான 'சேஷவாத்ஸாயன சம்வதே ராமாஸ்வமேதே' (சேஷனுக்கும் வாத்ஸாயனருக்கும் இடையேயான உரையாடல்) அப்படியே சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பாகவோ, சமஸ்கிருத மூலத்தின் கன்னட உரைநடை வடிவமாகவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. கதையின் மூலக்கூறுகள் மட்டுமே சமஸ்கிருதப் படைப்பிலிருந்து பெறப்பட்டுள்ளன. கன்னடப் படைப்பையும் சமஸ்கிருத புராணத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கன்னட ஆசிரியரின் படைப்புத் திறன் நன்கு புலப்படும். சமஸ்கிருத ராமாஸ்வமேதத்தின் உரைநடை வடிவமாக மட்டுமே அது இருக்குமானால் எஸ்.வி ரங்கண்ணாவின் விமர்சனம் நியாயமானது எனலாம். ஆனால் முத்தண்ணாவின் ராமாஸ்வமேதம் புராணத்தில் காணப்படும் அடிப்படைக்

கதையை மட்டும் எடுத்துக்கொண்டு கன்னடத்தில் உருவான புதிய மொழியாக்கப் படைப்பு எனலாம்.

ராமாஸ்வமேதத்தின் கதையை நூலாசிரியர் கூறியுள்ளவாறு, அதிகார வரிசைப்படி இங்கே சுருக்கமாகக் காணலாம்.

1. அறிமுகம் (கதாமுகம்)

மாரிக் காலத்தின் உருவக வருணனையுடன் கதை தொடங்குகிறது. காலபுருஷன் மாரிக்காலமாக உருவகிக்கப் பட்டுள்ளான். பரந்த வானமாகிய தன்னுடைய அரண்மனையில் அவன் அரசு வீற்றிருக்கிறான். அவன் ஜலோதரம் என்ற மகோதர நோயால் (அடிவயிற்றில் நீர் இறங்கிப் பருத்துப் போவது) பீடிக்கப் பட்டுள்ளான். வயிற்றிலிருந்து எழும் ஓசை, அதிர முழங்கும் இடியோசை போலுள்ளது. அரண்மனையின் வாயில் மேகமெனும் திரைச்சீலையால் மூடப்பட்டிருக்கிறது. உள்ளே நுழைய யாருக்கும் அனுமதியில்லை. வானமென்னும் இளநங்கை தன் புறத் தோற்றத்தைக் காட்டிக் காட்டி மறைப்பது மின்னலடிப்பதுபோல் உள்ளது. நோய் தீர்க்கும் மூலிகைச் செடிகளைக் கொணர அவள் போகிறாள் போலும். மழைக் காலத்தின் தொடக்கத்தில் மயில்கள் தோகை விரித்து ஆடிக் கொண்டே அகவி மகிழ்வது இயல்பு. மற்றவரின் துயரத்தைக் கண்டு மயில்கள் மகிழ்வதாகக் கவிஞர் அவற்றைச் சாடுகிறார். அதனால்தான் மற்ற பறவைகளைப் போல் வானில் சிறகை விரித்துப் பறக்க முடியாமல் தரையில் நடக்கின்றபடியாக அவற்றுக்குச் சாபமிடப்பட்டுள்ளது என்று கூறுகிறார். இயல்பாக நடக்கின்ற நிகழ்வுகளுக்குக் கவிஞர் தம் கற்பனை வளத்தால் காரணங் கற்பித்துக் கூறுகின்ற தற்குறிப்பேற்ற அணியை மிக அழகாகப் பயன்படுத்தியுள்ளார். வசந்த காலத்தில் கூவி மகிழ்கின்ற குயில்கள் மழைக் காலத்தில் வாய்மூடி மௌனியாகிவிடும். குயில்களின் மௌனத்திற்குக் கவிஞர் வேறொரு காரணத்தைக் கற்பிக்கிறார்: காலபுருஷன் மகோதர நோயால் வாடுவதால் குயில் விசனமுற்று மௌனியாகிவிட்டதாம்.

கிளிகள் மனிதர்களைப் போலப் பேசுவதால் அவற்றைக் கவிஞர்கள் பண்டித வாக்கி என்பர். கிளிகள் குயில்களைப் போன்று மழைக்காலத்தில் தமது பேச்சொலியை நிறுத்துவதில்லை. கிளியின் இந்த இயல்பைக் கவனித்த கவிஞர் கேட்கிறார்: "உனக்குப் பண்டிதவாக்கி எனப் பெயரிட்டது யார்?

வசந்தம் உன்னை அவ்வாறு அழைத்ததா? உண்மையிலேயே நீ ஒரு பண்டிதன் என்றால் மகோதர நோய்க்கு நீ ஒரு மருத்துவத்தைச் சொல்லலாமே? (ஆயுர்வேத மருத்துவரைப் பொதுவாகப் பண்டிதர் என்றழைப்பர்) மாங்கனியோ அன்றி செந்நாவற் கனியோ (ஜம்பூ பழம்) அதற்கு மருந்தாகுமோ? ஏன் பதிலுரைக்க மாட்டேன் என்கிறாய்? எனக்குத் தெரியும் நீ தலைக்கனம் பிடித்தலைகிறாய். நீ ஏதும் பேச மறுப்பதால், நீ மரப்பொந்துகளிலே வாழ வேண்டும் என்றும், மனிதர்கள் உன்னைப் பிடித்தால் உன்னைக் கூண்டிலே அடைத்து அங்கேயே நீ இறந்துபட வேண்டும் என்றும் நான் சாபமிடுகிறேன்."

(இதுபோன்ற இயற்கை நிகழ்வுகளுக்குக் காரணம் கற்பித்துக் கவி வடிப்பதை அணியிலக்கணத்தில் விபவனாலங்காரம் என்பர். தமிழில் தற்குறிப்பேற்ற அணி என்பர்.)

தொடர்ந்து, மலர்களாகிய மங்கையரின் மேலாடையைத் தென்றலாகிய குறும்புக்காரன் ஊதித் தள்ளுவதாக, அங்குமிங்குமாக மலர்களைச் சிதறியடிப்பதை உருவகித்து மழைக்காலத்தை வருணிக்கிறார்.

மழை கொண்ட மேகத்தையும், மழையையும் அவர் வருணித்திருப்பது மிகவும் பொருத்தமான உருவகமாக உள்ளது. தாக விடாய் கொண்ட காட்டு யானைகள் ஆழ்கடல் நீரை உறிஞ்சிக் குடித்துத் தம் துதிக்கையினால் நீரைப் பீறிட்டு அடிப்பதாக மேகத்தையும் மழையையும் அவர் உவமித்துள்ளார். மேலும் பல விளக்கங்களுடன் மழைக்காலத்தை மிக எதார்த்தமாக வருணிப்பது தொடர்கிறது. எடுத்துக்காட்டாக காட்டெருமையின் வருணனையைச் சொல்லலாம். தன் வயிறாரப் பசும்புல்லைத் தின்ற எருமை சிலிர்த்து எழுந்து, மரத்தில் மோதி, உக்காரமாய் உறுமி, தன் குளம்புகளால் மண்ணைத் தோண்டி, தன் கொம்புகளால் யாரையோ குத்திக் கிழிப்பதுபோல் முன்னுக்கு ஓடி, கடைசியில் தன் துணையுடன் போய்ப் படுத்துக் கொள்கிறது.

தனிச் சிறப்பியல்பான மழைக்கால வருணனையை விடவும், மழைக் காலத்தையும் கதை சொல்லுவதையும் இயைபு படுத்தியிருப்பது மிகப் பொருத்தமானதாய் உள்ளது. நூலாசிரியரான முத்தண்ணா (லக்ஷ்மி நாராயணா) தம்மையே அரசவைக் கவிஞர் முத்தண்ணாவாகவும், தம் மனைவி கமலாபாயை மனோரமாவாகவும் காட்டியுள்ளார்.

காடும் நிலமும் செழித்து மிக எழிலாகத் தோன்றுகின்ற மழைக் காலத்தில் ஒரு நாள், அரசவைக் கவிஞனான முத்தண்ணா, அரண்மனையை விட்டுத் தன் இனிய இல்லத்தின் வாயிலை அடைகிறான்: அவன் மனைவி மனோரமா அவனுக்குக் கை கால் கழுவ நீர் தந்து, பசியாறப் பழங்களும் பாலும் தருகிறாள். முத்தண்ணா இளைப்பாறிய பின்னர் அவனுக்கு மணங்கமழும் தாம்பூலம் தருகின்றாள். பின்னர் தம்பதியர் இருவரும் மிக்க மகிழ்ச்சியுடன் உரையாடுகின்றனர்:

மனோரமா : பிரபு! நாள் பொழுது மிகவும் நீண்டு கிளர்ச்சியில்லாமல் இருக்கின்றது. இரவும் பகலும் தொடர்ந்து பெருமழை பொழிகிறது. எனக்கு மிகவும் அலுத்து விட்டது. தயைகூர்ந்து எனக்கு சுவாரஸ்யமான கதை ஒன்று சொல்லுங்களேன்.

முத்தண்ணா: ஓ- சரி- என் அன்பே. நீ மிகவும் விருப்பப்பட்டுக் கேட்கிறாய். ஒன்றும் சிரமமில்லை. நான் உனக்கு எந்தக் கதையைச் சொல்லட்டும்? போஜ பிரபந்தத்தைச் சொல்லட்டுமா? விக்ரமவிஜயம் அல்லது மகாவீர சரிதம்- எதைச் சொல்லட்டும்?

மனோரமா : வேண்டாம்... வேண்டாம்... அவையெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. உணர்ச்சிகள் பொங்கி வழிவதும், இப்போது மட்டுமின்றி எப்போதும் இன்பத்திற்கு வழிகாட்டுவதுமான ஒரு கதையையே நான் விரும்புகிறேன்.

முத்தண்ணா: நீ எந்த உணர்ச்சியை விரும்புகிறாய்? காதலா? வீரமா? நகைச்சுவையா?

மனோரமா : ஏன் குறிப்பிட்டதொரு உணர்ச்சி என்று தனித்துப் பேசுகிறீர்கள்? எனக்கு நவரசங்களையும்[4] பிடிக்கும்.

முத்தண்ணா: அப்படியானால் நான் எந்தக் கதையைச் சொல்லட்டும்?

மனோரமா : இராமாயணத்திலிருந்து ஏதாவது ஒன்று.

---

4. நவரசங்களாவன : சிருங்காரம் (காதல்), ஹாஸ்யம் (நகைச்சுவை), கருணை (அன்பு), ரௌத்ரம் (அச்சம்), வீரம், பயங்கரம், பிபாஸ்தம், அத்புதம், சாந்தம்.

முத்தண்ணா: அப்ப சரி. சீதை சுயம்வரக் கதையை நான் சொல்கிறேன்.

மனோரமா : நீங்கள் ஏற்கனவே எனக்கு அதைச் சொல்லி இருக்கிறீர்கள் அல்லவா?

முத்தண்ணா: அப்படியானால், சீதை கவர்ந்து செல்லப்பட்ட கதையைக் கேட்க விரும்புகிறாயா?

மனோரமா : எனக்கு அது வேண்டாம்.

முத்தண்ணா: எந்தக் கதையைத்தான் நான் உனக்குத் சொல்லட்டும்?

மனோரமா : என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? நம் நாட்டிலே பலவகையான இராமாயணக் கதைகள் வழங்கி வருகின்றன. அவற்றில் உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஏதாவது ஒரு கதையைச் சொல்லுங்களேன்.

முத்தண்ணா: நீயே ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துச் சொல்லேன்.

மனோரமா : இராமன் அசுவமேதயாகம் செய்ததாகச் சொல்வார்களே! அந்தக் கதை போதும்.

முத்தண்ணா: இப்போது புரிகிறது. நீ சேஷராமாயணக் கதையைக் கேட்க விரும்புகிறாய். அதுதானே?

மனோரமா : ஆமாம். அதுதான். இதற்கு முன்னால் அந்தக் கதையை யார் யாருக்குச் சொன்னார்கள்?

முத்தண்ணா: சேஷன் அதை வாத்ஸாயனருக்குச் சொன்னான் அதே கதையை நான் இப்போது உனக்குச் சொல்லுகிறேன். அது மிகவும் பெரிய கதை. ஓரிரண்டு நாள்களில் அதைச் சொல்லி முடிக்க முடியாதே!

மனோரமா : பரவாயில்லை. நீங்கள் ஒவ்வொரு பகுதியாக அதை எனக்குச் சொல்லலாம்.

முத்தண்ணா: அதுவும் சரியே! கதையைச் செய்யுள் நடையில்

சொல்லட்டுமா? அல்லது உரைநடையில் சொல்லட்டுமா?

மனோரமா : பாட்யம் வாட்யம், கத்யம் ஹிர்தயம் (செய்யுள் கிடக்கட்டும்; உரைநடையே மனதுக்கு இதமானது). உரைநடையிலேயே கதையைச் சொல்லுங்கள்.

முத்தண்ணா: அப்படியே ஆகட்டும். இவ்வளவு நல்ல கதையை நான் அரசவையிலே எடுத்துச் சொன்னால், மாணிக்கங்கள் பதிக்கப்பெற்ற ஆபரணங்களும், பொன்னணிகளும் எனக்குப் பரிசுகளாகத் தரப்படுமே. நீ என்ன தருவாய்?

மனோரமா : வேறென்ன தருவேன்? என்னையே நான் தருவேன்!

முத்தண்ணா: இங்கேபார். உன்னைத் திருத்தவே முடியாது. ஏற்கனவே உன் பெற்றோர் உன்னை எனக்குத் தந்துவிட்டார்கள் என்பதை மறந்து விட்டாயா?

மனோரமா : என்ன சொல்கிறீர்கள்? நான் என்ன உங்களுக்கு அடிமையா? சரி... அதை விடுங்கள். புராணத்தைச் சொன்ன பிறகுதான் பரிசுகள் தரப்படும். அரசர்கள் கூட, நீங்கள் சொல்லுகின்றவற்றைக் கேட்டு அவற்றின் சிறப்பைப் பொறுத்தே ஆபரணங்களையும் மற்றவற்றையும் பரிசாக அளிப்பர். நானும் நீங்கள் சொல்வதைக் கேட்டு, அது என்னை மிகவும் ஈர்த்தால் முடிவில் ஏற்புடைய பரிசொன்றை அளிப்பேன்.

முத்தண்ணா: சரி. ஆனால் கதையைக் கேட்டுவிட்டு நீ பின் வாங்கினால், நீ உன் உறுதிமொழியை நிறைவேற்றும் வரை உன்னை விடமாட்டேன்.

மனோரமா : மிகவும் சரி: நீங்கள் சொல்லுகின்ற கதையில் ஏதேனும் விஷயம் இருக்கிறதா என்பதை நானும் பார்க்க வேண்டும்.

முத்தண்ணா: அதுவும் சரியே. இப்போது நான் சொல்வதைக் கேள்:

ஸ்வஸ்தி ஸ்ரீமத் சுர-அசுரேந்திர நரேந்திர முனீந்திர பான் இந்திர மணி - மகுட - தாள - கதித -

மனோரமா : ஓ... நிறுத்துங்கள்... தயை செய்து நிறுத்துங்கள். என்ன இது. அண்டர் நாயகனாகிய ஸ்ரீராமச் சந்திரனின் கதையைச் சொல்லுங்கள் என்று கேட்டால், சொர்க்கபுரியின் தலைவனான சுரேந்திரனின் கதையை என்மீது திணிக்கப் பார்க்கிறீர்களே? போதும்... போதும்... அலுப்புத் தட்டுகின்ற இந்த விஷயத்துக்குப் பரிசுகள் வேறு தரவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களா?

முத்தண்ணா: ஓ... என் அன்பே... உன் மலர்ந்த முகத்தின் மீது ஆணையாகச் சொல்கிறேன். இவை, ஒரு கதையைச் சொல்லுவதற்கு முன் கூறுகின்ற நல்ல வார்த்தைகள். நிச்சயமாக இது தேவர்களின் கதையன்று. கதை சொல்லும் முறையில் உள்ள சமஸ்கிருத மொழியின் அழகியல்தான் அது.

மனோரமா : நல்லது! நல்லது! தண்ணீரைக்கூட விழுங்க முடியாத தொண்டைக்குள் உணவுப் பண்டத்தை வைத்துத் திணிப்பதுபோல் உள்ளது அது. கன்னட மொழியின் அழகையே என்னால் உணர்ந்து. அனுபவிக்க முடியவில்லை; நீங்கள் என்ன வென்றால், சமஸ்கிருதத்தின் அழகை எனக்குச் சொல்ல விரும்புகிறீர்கள்.

முத்தண்ணா: அன்பே, அப்படியானால் நான் எப்படித்தான் கதையைச் சொல்லத் தொடங்குவது என்று எனக்குச் சொல்லேன்?

மனோரமா : கதை என்னவென்று நான் புரிந்து கொள்கின்றவாறு தூய கன்னடத்தில் எளிய சொற்களால் எனக்குச் சொல்லுங்கள். "கன்னடம் கட்டூரி[5] அல்லவா?"

முத்தண்ணா: ஆமாம் ஆமாம்... ஆனால் சமஸ்கிருதமோ, பொன்னிழைகளால் சேர்க்கப்பட்ட மாணிக்கங்கள் நிறைந்த அட்டிகை போன்றதல்லவா? எனவே,

5. கட்டூரி = கஸ்தூரி (கஸ்தூரி மானிலிருந்து பெறப்படுவது; தமிழை அமுது என்பதுபோல் கன்டைத்தைக் கஸ்தூரி என்பர் போலும்.)

> நான் தூய கன்னடத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் சமஸ்கிருதச் சொற்களை விரவி இக்கதையைச் சொல்கிறேன். அப்போதுதான், செம்பவழ மணிகளுடன்[6] கருமணிகள் கோக்கப் பட்ட அட்டிகைபோல் இலக்கியத் தரத்திற்கு ஏற்ப எல்லாவகையான உணர்ச்சிகளையும் அழகுற வெளிப்படுத்துவதாகக் கதை அமையும்.

நூலாசிரியர் தம்முடைய படைப்புக்கு எழுதிய முகவுரை போன்ற இந்த முதலாவது அத்தியாயத்தில் முத்தண்ணாவுக்கும் மனோரமாவுக்கும் இடையேயான உரையாடலில் இலக்கியம் தொடர்பான மூன்று கருத்துக்கள் வெளிப்படுகின்றன. அவை (1) கதைக்கரு. (கதாவஸ்து) அழகியல் நிரம்பியதாக இருப்பதுடன் மட்டுமின்றி அறிவுறுத்துவதாகவும் அமையவேண்டும். (2) சாதாரண வாசகனுக்கான எந்த இலக்கியப் படைப்பானாலும், செய்யுள் நடையைக் காட்டிலும் உரைநடையே விரும்பத்தக்கது. (3) மொழி நடை எளிமையாய் இருக்க வேண்டும். படைப்பிற்கு அழகூட்டுவதற்காக ஓரளவுக்கு சமஸ்கிருத மொழியைக் கலக்கலாமே ஒழிய, அக்கலவை, படைப்பினைப் புரிந்து கொள்ளப் படிப்போருக்குத் தடையாக இருத்தலாகாது.

முத்தண்ணா தம் மனைவிக்குக் கதை சொல்வதற்காக வழக்கிழந்துபோன இலக்கிய உத்தியைப் பின்பற்றுகிறார். உபநிடதங்கள், பாகவதம், சமஸ்கிருதம், கன்னடம் மற்றும் பிறமொழிகளின் காவியங்களைப் போல அந்த உத்தி மிகப் பழமையானது. இராமாயணத்தை வால்மீகி, லவகுசர்களுக்குச் சொல்ல, அவர்கள் அதனை இராமனுக்குச் சொன்னார்கள். சுகமுனிவர் மகாபாரதத்தை ஜனமேஜயருக்கும், பாகவத புராணத்தை பரிக்ஷித்துக்கும் சொன்னார்.

காதம்பரியின் கதையை, வைஷாம்பயணன் கிளியாகப் பிறவி

6. தென்கன்னட மாவட்டம் கேரள மாநிலத்துடன் தொடர்புடையது. அம் மாநிலத்து மொழியான மலையாளம், தென்கன்னட மாவட்டத்துப் பண்பாட்டிலும் அங்கு வழங்கிய மொழிகளான துளுவிலும் கன்னடத்திலும் குறிப்பிடத்தக்க தாக்குறவை ஏற்படுத்தியிருந்தது. மலையாள மொழியில், சமஸ்கிருதமும் மலையாளமும் கலந்த மணிப்பவழ நடை என்ற பழமையான மொழிநடை வழக்கில் இருந்தது. முத்தண்ணா கூறுகின்ற நடையும் மலையாளத்தின் மணிப்பவழ நடையை ஒத்திருக்கிறது.

எடுத்தபோது, தன்னுடைய முற்பிறவியில் தன் சந்திரபிதாவான சுத்ரக மகாராஜனுக்குச் சொன்னான். கன்னடத்து அணியிலக்கணப் புலவனாகிய நாகவர்மன் தன் மனைவிக்குச் சொல்வதுபோல் தன் படைப்பை அமைத்திருந்தான். எனவே முத்தண்ணா கையாண்ட இலக்கிய உத்தியில் புதுமை எதுவுமில்லை. ஆனால் அந்த உத்தியை அவர் மேம்படுத்தியுள்ள விதத்திலே அவருடைய தனித்தன்மை விளங்குகிறது.

முத்தண்ணா தன் மனைவி மனோரமாவிடம் ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்தில் மட்டுமின்றி, கதை சொல்கின்ற போது அங்கங்கே பல இடங்களிலும் உரையாடுகிறார். தம் மனைவியை விளிக்க அவர் பயன்படுத்துகின்ற அன்பு மீக்கூர்ந்த சொற்கள் பற்பல. பெண்மணி (மாதரில் மாணிக்கம்) பிராணேஸ்வரி (இதயம் நிறைந்தவள்) தேவி (தெய்வம்) கராத்தி (இல்லத்தரசி) போன்ற பல அழகிய இனிய சொற்கள். (ஓ என்ன நிச்சாணிடுகுண்குமட பின்கட மச்சுகார்தி! ஓ என்ன இச்சேகாரண பெச்சா பச்சேயா கை கன்னடி! போன்ற சில விளிகளை மொழி பெயர்க்க இயலாது)

ராமாஸ்வமேதத்தின் சிறப்புக் கூறு, முத்தண்ணாவுக்கும் மனோரமாவுக்கும் இடையேயான உரையாடலாகும். பேராசிரியர் எஸ்.வி. ரங்கண்ணா மிகச் சரியாகக் கூறியதுபோல, ராமாஸ்வமேதம் என்ற ஓவியத்திற்கு அந்த உரையாடல்கள் தங்கச் சட்டகமாகத் திகழ்கின்றன. கதைப் போக்கினைச் சுவை குன்றாமல் நெறிப்படுத்துகின்றவாறு உரையாடலை அமைத்திருக்கின்ற மதியூகம், புலமை மிகுந்த முத்தண்ணாவால் மட்டுமே முடிந்ததாகும். அந்த உரையாடல்கள், தேர்ந்த கதைகூறுநர் என்ற அவருடைய இலக்கியத் திறமையை மட்டுமின்றி அவருடைய நகைச்சுவை உணர்வு, தம் அன்பு மனைவியிடம் அவர் செய்த குறும்புகள், அவள்பால் அவர் காட்டிய அளவிலா அன்பு, அக்கறை போன்ற தனிச்சிறப்புகளையும் வெளிப்படுத்துகின்றன. அந்த உரையாடல்கள் ஓர் இலக்கிய உத்தியாக மட்டுமின்றி, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நேசித்த தம்பதியரான முத்தண்ணாவும், மனோரமாவும் அனுபவித்து மகிழ்ந்த தாம்பத்ய வாழ்க்கையையும், பொருள் வளமற்ற ஏழ்மை நிலையில் இருந்தாலும், மாசுமருவற்ற மண வாழ்க்கையின் மயக்குறும் மோகச் செழிப்பினையும், விரைவிலேயே குழந்தைப்பேறு எய்த

அவாவுடையவர்களாய் இருந்ததையும் காட்ட அவை பயன்பட்டுள்ளன. அந்நாளைய கன்னட இலக்கியத் திறனாய்வாளர்களில் முன்னோடியான பேராசிரியர் ரங்கண்ணா, இந்த உரையாடல்கள் நூலின் மொத்த அளவில் பத்தில் ஒரு பங்கு தானே உள்ளன என்று வருந்துகிறார். கலைநயம் மிகுந்த அந்த உரையாடல்களின் பால் அவருக்கு இருந்த விவரிக்க இயலாத ஈடுபாட்டைத்தான் இந்தக் கூற்றுக் குறிப்பிடுகின்றதே ஒழிய வேறு எதுவுமில்லை. கதை சொல்லுகின்ற போக்கிலே இந்த உரையாடல்களுக்கு உரிய பங்கினையும் அவர் திறனாய்வுக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்துள்ளார்.

"அடுத்து என்ன? அடுத்து என்ன?" என்றும் "ஓ! நீங்கள் எவ்வளவு புத்திசாலியாக இருக்கிறீர்கள்! அது எப்படி?" என்றும் மனோரமா ஊடே கேள்விகள் கேட்பதும் வியந்துரைப்பதும் கதையின்பால் அவளுக்கு உள்ள ஆர்வத்தைப் புலப்படுத்து கின்றன. ஊடே வருகின்ற இவை போன்ற கூற்றுகளைத் தவிர, தம்பதியர் இருவரும் மனந்திறந்து பேசுவதாகப் பதினாறு இடங்களில் உரையாடல்கள் அமைந்துள்ளன. அந்த உரையாடல்களின் அளவுகள் வேறுபட்டாலும் கேட்பவரின் மனநிலையையும், கதை கூறுநரின் மனநிலையையும் அவை பிரதிபலிக்கின்றன. சில உரையாடல்கள் கதைச் சம்பவங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் தொடர்புடையவையாக இருந்தாலும், சில, கதையோடு தொடர்பு இல்லாமல் முத்தண்ணா மற்றும் மனோரமா இருவருடைய குணச்சிறப்புகளைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளன. ஓர் உரையாடலில் மனோரமா வானுலகத்துத் தேவதையாகவும், அவள் பக்தனாகிய முத்தண்ணா அவளைச் சிறப்பிப்பதாகவும் வருகிறது. மற்றொன்றில், தன் கணவனின், கள்ளங்கபடமற்ற சிஷ்யையாகவும், அவனிடமிருந்து பாடங்கற்றுக் கொள்ள விரும்புபவளாகவும் அவள் சித்திரிக்கப்பட்டுள்ளாள். திடீரென்று முத்தண்ணா ஒரு பௌராணிகராக மாற, மனோரமா மிகவிருப்புடன் அவர் சொல்வதைக் கேட்பவளாகிறாள்; அவள் பொய்க்கோபம் கொள்வதும் அதனால் கண நேரத்தில் அனைத்தையும் உதறித் தள்ளுவதும், கதையை மேலும் தொடர்ந்து கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகின்றன இடையீடுகளாக வருகின்ற உரையாடல்களில் இருவருடைய மனநிலை எப்படி மாறினாலும்,

பொருள் வளம் இல்லாத நிலையிலும் குடும்ப வாழ்க்கையில் பெரிதும் மனநிறைவடைந்த மகிழ்ச்சிகரமான தம்பதியரே அங்கிருப்பதாக, உரையாடல்கள் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பான அம்சமாகும்.

மனோரமா, முறையான கல்வியறிவு ஏதுமற்ற சாதாரண இல்லத்தரசியாகக் காட்டப்படுகிறாள். ஆனால் முத்தண்ணாவோ மன்னனின் ஆதரவு பெற்ற அரசவைக் கவிஞன். இருவருடைய அந்தஸ்தும் வேறுபட்டாலும் பரஸ்பரம் அன்புமிகக் கொண்டவர்களாக, சமத்துவ நிலையிலேயே உரையாடுகின்றனர். முத்தண்ணா - மனோரமா உரையாடல் இக்காலத் தம்பதியருக்கு ஒரு படிப்பினையைத் தருகிறது: பொருளீட்டுகின்ற கணவன், பொருளீட்டாத தன் மனைவிமீது ஆதிக்கம் செலுத்தத் தேவையில்லை - இல்லை இல்லை - ஆதிக்கம் செலுத்தக் கூடாது. குடும்பத்திற்காக அவள் செய்கின்ற தன்னலமற்ற சேவை மதிப்பிட முடியாதது; பணத்தால் அளவிட முடியாதது.

'தங்கச் சட்டகம்' பற்றி இவ்வளவு சொல்லி விட்டோம். இனி, ஓவியம், அதாவது கதைக்கரு, சாதாரணமானதா இல்லையா என்று - கவர்ச்சிகரமான சட்டகத்தின் தரத்திற்கு ஏற்ப அது அமைந்துள்ளதா என்று ஆராய்வோம்.

இராமாயணக் கருவை முத்தண்ணா ஏன் தேர்ந்தெடுத்தார்? பக்கிம் சந்திரரின் உரைநடைப் புதினங்களை பி.வெங்கடாச்சார்யா கன்னடத்தில் மொழிபெயர்த்திருந்ததைப் படித்த முத்தண்ணா, சமுதாயக் கருவில் ஒரு புதினத்தை எழுத முயன்றதன் விளைவுதான் முற்றுப்பெறாத கோதாவரி. புதினம் எழுதுவது தமது இயல்பான திறமை அன்று என அவர் தெளிந்திருக்க வேண்டும். வால்மீகி ராமாயணத்தைத் தழுவி பர்தி சுப்பா எழுதிய யக்ஷகானங்களை அவர் படித்திருக்க அல்லது கேட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இராமாயணக் கருவை அடிப்படையாகக் கொண்டு எழுத வேண்டும் என்றும் ஆனால் மற்றவர்கள் தொடாத புதிய விஷயங்களை எழுத வேண்டும் என்றும் அவர் விரும்பினார். சமஸ்கிருத பத்ம புராணத்தின் அங்கமான அத்புத ராமாயணத்தையும் சேஷராமாயணத்தையும் அவர் படிக்க நேர்ந்த போது ஒரு தங்கச் சுரங்கமே கிட்டியது போலாயிற்று. சேஷராமாயணத்தில் வரும் முடிசூட்டு நிகழ்ச்சியை

அவர் எங்ஙனம் கையாண்டிருக்கிறார் என்பதை அவருடைய ராமபட்டாபிஷேகத்தில் ஏற்கனவே கண்டோம். கதைக்கரு சாதாரணமானது என்றால், அது அவருடையது அல்லாததால், அதற்காக முத்தண்ணாவை நாம் குறைகூற வேண்டாம். மூலக் கருவைக் கையாண்டதில் எந்த அளவுக்கு அவர் வெற்றி பெற்றிருக்கிறார் அல்லது தோல்வியடைந்திருக்கிறார் என்பதைக் கண்டறிவதன் மூலம்தான் முத்தண்ணாவின் படைப்புத்திறனை நாம் மதிப்பிட வேண்டும். முத்தண்ணாவின் நூல் குறுகிய எல்லையைக் கொண்டதால், மூலப்படைப்புடன் இதனை ஒப்பிட்டுப் பார்ப்பது இயலாததாகிறது. எனவே 'ஸ்தாலிபுலாக நியாயம்' அடிப்படையில், அதாவது, ஒருசில பகுதிகளை மட்டும் ஆராய்ந்து முழுநூலையும் மதிப்பீடு செய்ய வேண்டும். (ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல)

கதையம்சத்தில் எந்தவித மாற்றத்தையும் செய்யாமல் மூலத்தை அப்படியே முத்தண்ணா பின்பற்றியிருக்கிறார். மூல நூலான சேஷராமாயணம் ஒரு புராணமாகையால், அதில் சமய முக்கியத்துவம் வாய்ந்த தீர்த்த யாத்ர ப்ரஹம்ஸே, தீர்த்த நாம காதனம், புருஷோத்தம க்ஷேத்ரவிதி, கோஸேவா நிரூபணம், நரகா வர்ணம் போன்ற தலைப்புகளில் சொல்லப்பட்டிருந்த செய்திகளை முத்தண்ணா வெகுவாகச் சுருக்கிவிட்டார்; அதேபோல, வர்ணாஸ்ரம தர்ம நிரூபணம், கன்யா விக்ரயாடி தோஷப்ரதிக்ஷேத காதனம், கர்ம விசார வர்ணனம், ப்ராமண பஜன வர்ணனம் போன்ற பல தலைப்புகளைச் சாதுரியமாகத் தவிர்த்து விட்டார். மூலநூலானது, சமயச் சடங்குகள், நியமங்கள் நம்பிக்கைகள் போன்றவற்றை வலியுறுத்துகின்ற புராணம். ஆகையால் அதிலே கவித்துவ வருணனைகளுக்கு இடமில்லை. கதையின் மூலக் கருவை மட்டும் வைத்துக்கொண்டு, தம்முடைய படைப்புக் கற்பனையாற்றலால் அதனை ஓர் அழகிய இலக்கியப் படைப்பாக மாற்றிய பெருமை முத்தண்ணாவையே சேரும். இயற்கை வருணனைகளும் நாடகக் காட்சிகளும், நகைச்சுவை ததும்பும் துடிப்புமிக்க இயைபான உரையாடல்களும் அப்படைப்புக்கு உயிரூட்டியிருக்கின்றன.

ராமாஸ்வமேதத்தில் உள்ள மனதைக் கவர்ந்து ஈர்க்கின்ற மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், புராணப் பாத்திரங்களான சுமதன், காமாக்ஷி, சயவனன், ரத்னகிரீவன்,

கார்வேதன், தாமனன், சுபாகு, ருத்தாம்பரா, ஆரண்யகா, வித்யுன்மாலி, வீரமணி, சுரதா, லவகுசா போன்ற பலருடன் தொடர்புடைய பழைய சம்பவங்களைக் கதைகளாக விவரித்திருப்பதாகும்.

அஸ்வமேத யாகமும், அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த, சீதையை இராமன் காட்டுக்குத் துரத்துவதற்குக் காரணமான சலவைத் தொழிலாளி தொடர்புடைய சம்பவம், வால்மீகியின் துறவுக் குடிலில் சீதைக்கு லவகுசர்கள் பிறப்பது, ஒருபுறத்தில் இராமனும் அவனுடைய மூன்று தம்பியரும் இணைந்திருக்க மறுபுறத்தில், லவகுசர்கள் இருவரும் சேர்ந்து எதிர்ப்பது, இராமனும் சீதையும் மீண்டும் ஒன்றிணைவது - ஆகிய அனைத்துச் சம்பவங்களும், முடிசூட்டுதலுக்குப் பின்னர் நடந்தவற்றைக் கூறும் இராமாயணங்களான, வால்மீகி எழுதியதாகக் கூறப்படும் உத்தரகாண்ட ராமாயணம், ஜைமினி பாரதத்தில் வருகின்ற இராமனின் அஸ்வமேத யாகக் கதை, முத்தண்ணாவின் ராமாஸ்வமேதம் எழுதுவதற்கு அடிப்படையாக அமைந்த பத்மபுராணத்தில் வருகின்ற ராமாஸ்வமேத நிகழ்ச்சி ஆகிய அனைத்திலுமே காணப்படுகின்றன.

வால்மீகி ராமாயணத்தின் உத்தர காண்டத்தில் உள்ளது போன்று சிறு கதைகளோ சம்பவங்களோ இல்லை. ஜைமினி பாரதத்தில் உள்ள யாவுமே, யுதிஷ்ட்ரன் நிகழ்த்திய அஸ்வமேத யாகம் பற்றிய பிரதான கதையின் ஒருங்கிணைந்த அங்கமாக அமையுமாறு புனையப்பட்டவையாகும். அச்சிறுகதைகளின் முக்கியமான நோக்கம் ஹரிபக்தியின் மேன்மையை எடுத்துரைப்பதும், யுதிஷ்ட்ரனின் படைபல பராக்கிரமத்தை அடக்கி வாசிப்பதுமேயாகும். யாகக் குதிரையை அருச்சுனன் பின் தொடர்ந்து வருகிறான். அக்குதிரையை அருச்சுனனின் மகனான பாப்ருவாகனன் தடுத்து நிறுத்துகிறான். ஆனால் இருவருக்குமே அவர்களுக்குள்ள உறவு முறையைப் பற்றித் தெரியவில்லை. தந்தைக்கும், மகனுக்கும் இடையே யுத்தம் மூளுகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில், அதேபோன்று தந்தைக்கும், மகனுக்கும் இடையே நடந்த யுத்தம் பற்றி - அதாவது இராமனுக்கும் லவ-குசர்களுக்கும் யுத்தம் நடந்தது பற்றி ஜைமினி பாரதத்தில் ஜனமேஜயாவிற்குச் சொல்லுகின்ற ஜைமினி, அசுவமேதயாகத்தின்போது சீதையைக் காட்டுக்குத் துரத்திய கதையையும் சொல்லுகிறார். ஜைமினி

பாரதத்தில், நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று பிரதான கதையுடன் பலசிறு கதைகளும் சொல்லப்பட்டுள்ளன. அந்தச் சிறிய கதைகளின் முக்கிய நோக்கம் இராம பக்தியை ஊட்டுவதேயாகும். அந்தக் கதைகள் யாவுமே சூழ்நிலைகளுக்கு ஏற்ப பிரதான கதையுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. முத்தண்ணா கதை சொல்லுகின்றபோக்கில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியைப் பற்றியோ, காமாக்ஷி போன்ற தெய்வங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள கோயிலைப் பற்றியோ, சயவனர் போன்ற முனிவரைப் பற்றியோ குறிப்பிடும் போது, சுருக்கமாகச் சொல்லிவிட்டு பிரதான கதையை விளக்குவதற்காக விரைந்து முற்படுகிறார். ஆனால் மனோரமாவோ அவ்வப்போது குறுக்கிட்டு அக்கதைகளை எடுத்துரைக்குமாறு முத்தண்ணாவைக் கோருகிறாள். மேலும் மேலும் கதை கேட்க விரும்பும் ஒரு சாதாரண வாசகனைப் பிரதிபலிப்பதாக அவள் படைக்கப்பட்டுள்ளாள். அவ்வப்போது வருகின்ற சிறிய கதைகளை எடுத்துரைக்குமாறு மனோரமா இடையிடையே வேண்டுகின்ற அமைப்பு, மூலத்தில் இல்லாதது; முத்தண்ணா தம் படைப்பில் உருவாக்கியது.

முத்தண்ணாவின் ராமாஸ்வமேதத்தின் முதலாவது அத்தியாயம், கதைக்கு அறிமுகவுரை போல எங்ஙனம் திகழ்கின்றது என்பதை ஏற்கனவே நாம் கண்டிருக்கிறோம். மூலத்திலிருந்து பலவகையிலும் மாறுபட்ட முறையில் அயோத்தியை வருணிப்பதுடன் கதை தொடங்குகிறது. சரயுநதி, மற்றும் அயோத்தியைச் சுற்றியுள்ள சோலைகள் போன்றவை பற்றிய நீண்ட விரிவான வருணனைகளைக் கேட்டுவிட்டு, அவை மிகவும் அலுப்புத் தட்டுகின்றன என்று மனோரமா கூறும்போது, முத்தண்ணா, அவை தம்முடைய வருணனை அல்லவென்றும், அகத்திய முனிவர் தம்முடைய சீடர்களுடன் இராமனுடைய அரசவைக்குச் செல்லுகின்ற வழியில் அவர் தம்முடைய சீடர்களுக்கு எடுத்துரைத்தவையே என்றும் கூறினார். கதையில் வருணனைகளின் முக்கியத்துவம் பற்றிய தம்முடைய கருத்துக்களை வெளிப்படுத்த இந்த உரையாடலை மிகவும் சாதுரியமாக முத்தண்ணா பயன்படுத்தியிருக்கிறார். இதுபோன்ற பல வருணனைகளை, அதிலும் குறிப்பாகப் பல்வேறு பருவங்களைப் பற்றிய வருணனைகளை ராமாஸ்வமேதத்தில் நாம் காணலாம்.

கதையில் அகத்தியரின் வருகை முக்கிய இடத்தைப் பெறுகிறது. பிரமனின் நேரடி வழித் தோன்றல்களான இராவணனையும் அவனுடைய உறவினரையும் கொன்றமைக்காக மனம் வெதும்பிக் கவலைப்பட்டு, பிரமஹத்தி என்னும் பெரும் பாவத்தைச் செய்துவிட்டதாக அகத்தியரிடம் கூறி அதற்குக் கழுவாய் செய்ய விரும்புவதாக இராமன் கூறுகிறான். இராமனுடைய அந்த வேண்டுகோளுக்காக, அஸ்வமேதயாகம் செய்யலாம் என்று அகத்தியர் ஆலோசனை கூறுகிறார். அஸ்வமேதயாகம் செய்வதன்மூலம் இராமன் தன்னுடைய பாவத்தைக் கழுவுவதுடன் மட்டுமின்றி, அவன் நாட்டை வளங்கொழிக்கச் செய்ய முடியும் என்றும் அகத்தியர் கூறுகிறார். முனிவருடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்ட இராமன், யாகத்திற்காகப் பெறவேண்டிய குதிரையைப் பற்றியும், யாகம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய சடங்குகள் பற்றியும் தனக்கு எடுத்துரைக்குமாறு அவரை வேண்டுகிறான். அகத்தியரும் யாகம் தொடர்பான எல்லாத் தகவல்களையும் எடுத்துரைக்கிறார். யாகத்தின் முக்கியமான அம்சம், யாகக் குதிரையை அதன் விருப்பத்திற்கு இணங்கத் திரிய விடுவதாகும்; படைவீரர் அணி ஒன்று, குதிரை செல்லும் இடமெல்லாம் அதனைப் பின் தொடர்ந்து சென்று, எவரேனும் குதிரையைப் பிடித்துக் கட்டி வைத்து அதன் இயக்கத்தைத் தடுத்தார்கள் என்றால், அவர்கள் அனைவரையும் அந்தப் படைவீர்கள் எதிர்த்துப் போரிட வேண்டும். குதிரை நாடெல்லாம் திரிந்து கொண்டிருக்கும்போது அதன் யஜமானன் (யாகம் செய்தவன்) பிரம்மச்சரியம் அனுசரித்து, ஏழையருக்கும் ஊனமுற்றோருக்கும் உணவு அளிப்பதுபோன்ற அறப்பணிகளில் ஈடபட வேண்டும். யாகம் தொடர்பான சடங்குகளை விவரித்து, இராமனை வாழ்த்திவிட்டு அகத்தியர் அங்கிருந்து சென்று விடுகிறார்.

முனிவரின் அறிவுரைப்படி இராமனும், வசந்த காலத்தின் தொடக்கத்தில், யாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்கிறான். வசந்த காலத்தின் வருணனை வழக்கமான ஒன்றாக இருந்தாலும், அழகிய உரைநடையின் காரணமாக புத்தம் புதிய உணர்வை அது ஊட்டுகின்றது.

கதை சொல்லுவதில் தேர்ந்தவரான முத்தண்ணா திடீரென்று ஓர் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறார். அரச்குருவான வசிஷ்டர், யாகக் குதிரையை முதலில் தங்க சீதையுடன் சேர்ந்து வழிபட்டுப்

பின்னர் யாகத்தைத் தொடங்குமாறு இராமனுக்கு அறிவுறுத்தினார் என்று ம்னோரமாவுக்குச் சொல்கிறார்.

மனோரமா உடனே குறுக்கிட்டுக் கேட்கிறாள் :

"என் அன்பரே! என்ன சொன்னீர்கள்? தங்க (பொன்ன) சீதையா? உண்மையான ரண்ண[7] சீதைக்கு என்ன நேர்ந்தது? அவள் தந்தையான ஜனகன் அவளைத் திரும்ப அழைத்துச் சென்று விட்டானா? அப்படியானால் யாகச் சடங்குகள் தொடங்கும் போது அவளை இராமன் திரும்பவும் அழைத்து வந்திருக்கலாமே?"

அப்போது, சீதை கருவுற்ற செய்தியையும், அவளைக் காட்டுக்குத் துரத்த நேர்ந்த சம்பவத்தைப் பற்றியும் மனோரமாவுக்குச் சொல்ல வேண்டிய கட்டாயம் முத்தண்ணாவுக்கு ஏற்படுகிறது. மூலக் கதையில் எதிர்பாராத ஒரு திருப்பத்தை, முத்தண்ணா கொண்டு வருகின்ற முறை பாராட்டுதலுக்கு உரியது. தம்முடைய மறதியைப் பொறுத்து அருளுமாறு வேண்டுகின்ற முத்தண்ணா கதைத் தொடர்பு அறுபடாமல் மீண்டும் தொடர்ந்து சொல்லுகிறார்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் கழிந்த பின்னரும் அவர்களுக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. குழந்தைக்காகச் சீதை ஏங்குகிறாள். குழந்தைப்பேறு இல்லாத பெண்கள் எல்லாருக்குமே அந்த ஏக்கம் இயற்கையானது. அந்தச் சூழ்நிலையை மிகத் தத்ரூபமாகக் கலையழகுடன் முத்தண்ணா விவரிக்கிறார்:

சீதை ஓர் ஊஞ்சலில் ஆடிக்கொண்டு தன் தோழி சந்திரமதியுடன் உரையாடிக் கொண்டிருக்கிறாள். அப்போது ஒரு சிட்டுக்குருவி தன் குஞ்சுக்குத் தாய்மைப் பாசத்துடன் இரையூட்டிக் கொண்டிருப்பதைக் காண்கிறாள். உடனே சீதைக்குக் குழந்தையில்லாத தன்னுடைய நிலைமை நினைவுக்கு வர, தன் இதயத்தில் அடங்கிக் கிடந்ததை எல்லாம் தோழி சந்திரமதியிடம் கொட்டியழுகிறாள். குழந்தைப்பேறு இல்லாத பெண்களை அவர்களுடைய மாமியார்கள் இடித்துரைக்கின்ற அவலத்தைச் சந்திரமதியிடம் விவரிக்கின்ற சீதை, குழந்தையுடன் தாய் மகிழ்ந்திருக்கும் காட்சியை அப்படியே மனக்கண்ணில் கொண்டு வந்து நிறுத்துகிறாள். நம்மை அப்படியே ஈர்த்து,

7. 'மிகவும் அன்புடையவள்' என்பதற்கான உருவகக் குறியீடு.

மனத்தை நெகிழச் செய்துவிடுகின்ற இந்தக் கவிதை அழகினை மூலத்தில் மட்டுமே நாம் அனுபவித்து உணர முடியும். இதே போன்ற காட்சி வருணனை லக்ஷ்மிஷாவின் ஜைமினி பாரதத்திலும் (அத்தியாயம் 19, பக் 20-21) இடம் பெற்றுள்ளது என்றும், அதுவே முத்தண்ணாவின்பால் தாக்குறவை ஏற்படுத்தியது என்றும், திறனாய்வாளர் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால் முத்தண்ணா செய்த ஒரு முக்கியமான மாற்றம், அந்தச் சூழ்நிலை முழுவதையுமே மாற்றிவிடுகிறது. ஜைமினி பாரதத்தில், இராமன் தான் குழந்தைக்காக ஏங்குகிறான்; சீதை ஏங்கவில்லை. குழந்தைக்காக ஓர் ஆண் ஏங்கித் தவிப்பது இயற்கையானது அன்று; மாறாக அந்த ஏக்கம் பெண்களிடையே ஏற்படுவதுதான் மிகவும் இயற்கையானது. எனவே இங்கே முத்தண்ணா, லக்ஷ்மிஷாவை விஞ்சி விடுகிறார்.

குழந்தையில்லாமல் ஏங்கித் தவித்த சீதையின் மனக்கவலையை இராமன் அறிகிறான். அவன் அவளுக்கு ஆறுதல் சொல்லி, சில சமயச் சடங்குகளை மேற்கொண்டால், விரைவிலேயே அவள் தாய்மை அடைவாள் என்று உறுதி அளிக்கிறான். உடனே முத்தண்ணா, சீதை கருவுற்றாள் என்று சொல்லிவிட்டு, குழந்தையைப் பெறுவதற்காக இராமன் கூறிய நியமங்களைச் சீதை கடைப்பிடித்தாள் என்று வாசகர்களே புரிந்து கொள்ளுமாறு விட்டுவிடுகிறார்.

சீதை கருவுற்றிருக்கும்போது அவள் காட்டுக்குத் துரத்தப் படுகிறாள். சலவைத் தொழிலாளி ஒருவன் பொது இடத்தில் கூறிய கருத்தே இராமன் சீதையைக் காட்டுக்குத் துரத்துவதற்குக் காரணமாகிறது. குடும்பத் தகராறு காரணமாகச் சலவைத் தொழிலாளியின் மனைவி தன் கணவன் வீட்டை விட்டுப் பெற்றோர் வீட்டுக்குச் சென்றுவிடுகிறாள். கணவனிடம் பூசலிடாமல் சுமுகமாகப் போகுமாறு அவளுக்கு அறிவுரை கூறிய பெற்றோர் அவளை மீண்டும் கணவன் வீட்டுக்கு அழைத்து வருகின்றனர். பெற்றோருடன் திரும்பி வந்த அவளை வீட்டுக்குள் சேர்த்துக்கொள்ள கணவன் மறுக்கிறான். "வீட்டை விட்டு ஓடிப் போன மனைவியைத் திரும்பவும் சேர்த்துக் கொள்ள நான் ஒன்றும் இராமனல்லன்" என்று அவன் கூறினான்.

அவன், ஏன் அவ்வாறு சொன்னான்?

மூலப்படைப்பான சமஸ்கிருத புராணத்தில் அந்த நிகழ்ச்சி இப்படிச் சொல்லப்பட்டுள்ளது : ஒருமுறை, சீதை ஜோடிக்கிளிகள் இரண்டில் பெண்கிளியை மட்டும் கூண்டில் அடைத்து வைத்துக் கொண்டு, ஆண்கிளியை வெளியே துரத்தி விடுகிறாள். பெண் கிளியை வெளியே விட்டு விடுமாறு வெகுநேரம் அந்த ஆண்கிளி மன்றாடிய போதும், அதற்குச் சீதை செவிசாய்க்காததால், சீதை தன் கணவனைப் பிரிந்து துன்பப்பட வேண்டும் என்று அந்த ஆண்கிளி சாபமிடுகிறது. அந்த ஆண்கிளியே சீதை காட்டுக்குத் துரத்தப்படுவதற்குக் காரணமாகிய சலவைத் தொழிலாளி குரோதனனாகப் பிறக்கிறது.

தன்னுடைய அரசாட்சியில் குடிமக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்று கண்டறிவதற்காக இராமன் ஒற்றர்களை உலவ விடுகிறான். அவர்களும் அவ்வாறு நகரம் முழுவதும் சுற்றி குடிமக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்துவதைக் காண்கின்றனர். அப்போது தற்செயலாக, சலவைத் தொழிலாளி தன்னுடைய மனைவியை மீண்டும் வீட்டுக்குள் சேர்த்துக் கொள்ள மறுப்பதைக் காண்கின்றனர். அவர்கள் கண்ட காட்சியை இராமனிடம் சொல்லத் தயங்கும்போது, அவர்கள் எதையோ தன்னிடம் மறைக்கிறார்கள் என்று இராமன் தெரிந்து கொண்டு விடுகிறான். ஒற்றர்கள் தாம் கண்டதையும், கேட்டதையும் ஒளிக்காமல் சொல்லிவிட வேண்டும் என்றும், இல்லையெனில் கடுமையான தண்டனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் இராமன் எச்சரிக்கிறான். கடைசியில், ஒற்றர்களில் ஒருவன், சலவைத் தொழிலாளியும், அவன் மனைவியும் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியை எடுத்துரைக்கிறான்.[8]

இராவணன் இலங்கையில் சீதையைச் சிறை வைத்திருந்த போது, அவள் கற்புக்குப் பங்கம் விளைந்திருக்கும் என்றும், அதனால் இராமன் அவளைத் திரும்ப ஏற்றுக் கொண்டிருக்கக் கூடாது என்றும் பொருள்படுமாறு சலவைத் தொழிலாளி கூறிய வசைச் சொற்களைக் கேட்டு இராமன் அதிர்ந்துபோய் வாய்மூடி மௌனியாகிவிட்டான். சலவைத் தொழிலாளியின் கருத்துப்படி, இராமன் ஒழுக்கக் கேட்டை அனுமதித்து ஒப்புக் கொண்டிருக்கிறான்.

8. வால்மீகி ராமாயணத்தின் உத்தர காண்டம், ஜைமினி பாரதம், பத்ம புராணத்தின் சேஷராமாயணம் ஆகிய மூன்று படைப்புகளிலுமே சலவைத் தொழிலாளி சம்பவம் காணப்படுகிறது என்பதை இங்கே சுட்டிக் காட்டலாம்.

அந்தச் சம்பவம் முழுவதையும் முத்தண்ணா விவரித்திருக்கின்ற விதம் நம் நெஞ்சத்தைக் கசிய வைக்கிறது.

அயோத்தி அரசனான இராமன் தன் குடிமக்கள் அனைவரையும், அவர்கள் உயர்ந்த நிலையில் இருந்தாலும் தாழ்வுற்று இருந்தாலும் எல்லாரையும் மகிழ்ச்சியுடன் வைத்திருக்க வேண்டும் என்பதைத் தன் கடமையாகக் கொண்டிருக்கிறான். அவனுடைய ஆட்சியில் இதுவரை எவருமே மனவருத்தம் கொண்டதில்லை. ஆனால் இப்போது ஒரு சாதாரண மனிதன் அவனுடைய நடத்தையில் குறை கண்டதுடன் மட்டுமின்றி, அவதூறாகப் பேசுமளவுக்குத் தைரியத்தையும் பெற்றுவிட்டான். இராமனுக்குத் தர்மசங்கடமான நிலை. தன் இதய ராணியான சீதையை அவன் ஏற்றுக் கொண்டுவிட்டான். அது எதிர்மறையான கருத்துக்களைக் கிளப்பும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. வயலில் களையைப் பிடுங்கி எறிவதுபோல சீதையைத் துறந்து விடுவதென தீர்மானித்த இராமன், லக்ஷ்மணனிடம் சொல்கிறான்:

"கேட்டாயா! நம்முடைய வம்சத்தின் பெருமைக்கே களங்கம் பூசப்பட்டுவிட்டது! சீதை தூய்மையானவள் என்றும் அவளை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் நீ சொன்னாய் அல்லவா? விளைவைப் பார்!"

சீதையைத் துறந்துவிடுவதென்ற கொடுமையான முடிவை இராமன் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று பரதனும், சத்ருக்கனனும் முயலுகின்றனர். சீதை முற்றிலும் தூய்மையானவள் என்று நன்கு அறிந்திருந்தும் அவளைத் துறப்பது நியாயமில்லை என்று அவர்கள் வாதிடுகின்றனர். இராமனின் கட்டளைப்படி தன்னுடைய கற்பை நிரூபிப்பதற்காக, சீதை அக்னி குண்டத்தில் மூழ்கி எழுந்தபோது, அக்னி தேவனே அவளுடைய களங்கமற்ற நடத்தைக்குச் சான்றளிக்க, எவ்விதத் தீங்குமின்றி அவள் தீயிலிருந்து வெளிவந்தாள். ஆனாலும் இராமன் அசைந்து கொடுக்கவில்லை. அவன் தன் தம்பியரிடம் சொல்கிறான்: "நீங்கள் பேசாமலிருங்கள். உங்களுக்கு எதுவும் தெரியாது. தர்மத்தின் நியதி அப்படித்தான் இருக்கிறது."

தம்பியர் திருப்பித் திருப்பி எதிர்ப்புக் காட்டியபோதும் பயனேதும் இல்லை. நாகப்பாம்பு தன் தோலை உரிப்பது போன்று சீதையைத் துறந்து விடுவதென்ற தன் தீர்மானத்தில் இராமன் பிடிவாதமாக இருந்தான். சீதையை அழைத்துச் சென்று அவளைக்

காட்டிலே விட்டு வரும் பணியை அவன் லக்ஷ்மணனிடம் ஒப்படைக்கிறான்.

இங்கே, புதுமை படைக்கும் இலக்கியக் கலைஞரான முத்தண்ணா, சீதை, அவளுடைய வேண்டுகோளுக்கு இணங்கவே காட்டுக்கு அனுப்பப்படுகிறாள் என்று அவளே உணருமாறு செய்து, இராமனுடைய தீர்மானத்தின் கடுமையைக் குறைக்க முயலுகிறார். கருவுற்ற பெண்கள் சில தீவிரமான ஆசைகளை வளர்த்துக் கொள்வர்; அவர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு அந்த ஆசைகளை நிறைவேற்றி விடுவதும் இயற்கை. அப்படித்தான் சீதையும், காட்டில் உள்ள முனி பத்தினியரைத் தரிசித்து வரவேண்டும் என்று தன் ஆசையை வெளிப் படுத்துகிறாள். (சீதையின் இந்தக் கோரிக்கை, வால்மீகி ராமாயணத்திலோ வேறு எந்த ராமாயணத்திலோ காணப்பட வில்லை.) சீதைக்குத் தான் அளித்த வாக்குறுதி நினைவுக்கு வரப்பெற்ற இராமன் அதைச் சாக்கிட்டு அவளைக் காட்டுக்குத் துரத்த எண்ணுகிறான். எனவே லக்ஷ்மணனை அவளுடன் செல்லுமாறும், அவளைக் காட்டிலேயே விட்டுவிட்டு வருமாறும் கூறுகிறான். லக்ஷ்மணனும் விருப்பமில்லாமலேயே இராமனின் ஆணைக்கு அடிபணிகிறான்.

ஒரு சலவைத் தொழிலாளியின் பொறுப்பற்ற கூற்றின் அடிப்படையில், முகாந்திரமில்லாத குழப்பமான கடமை உணர்வை இராமன் தீவிரமாகப் பற்றிக் கொண்டு அதன்படி நடப்பது பாராட்டுதற்குரியதன்று என்று ஆசிரியருக்குத் தெரிகிறது. எனவே அடுத்து வருகின்ற இயற்கை நிகழ்வான விடியலை வருணிக்கும்போது, முத்தண்ணா அவற்றுக்கு மானுட உணர்வுகளைக் கற்பித்துக் கூறுகிறார். சீதையின் விருப்பத்திற்கு ஏற்ப நடப்பதாகக் கூறி, அவளைக் காட்டுக்குத் துரத்தியதன் மூலம் இராமன் தருமத்திற்கு எதிராக இழைத்த குற்றத்தினால் இயற்கை அம்சங்கள் அனைத்தும் குமுறி வெடித்தன என்கிறார் அவர்.

வனவாசத்தின்போது சீதை தான் சந்தித்த முனிவர்களையும் அவர்களுடைய பத்தினியரையும் சந்திப்பதற்காகக் காட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற தன்னுடைய வேண்டுகோளை இராமன் உண்மையிலேயே ஏற்றுக் கொண்டு தன்னைக் காட்டுக்கு அனுப்புகிறான் என்று கள்ளங்கபடமில்லாமல் சீதை நம்புகிறாள். சந்தோஷமான அந்தச் சந்தர்ப்பத்தை எண்ணிப் பெரிதும்

மகிழ்ந்து, அவர்களைச் சந்திப்பதற்காகத் தயாராகிறாள். ஆனால் லக்ஷ்மணனோ கொடிய விலங்குகளின் மத்தியில் அவளைத் தன்னந்தனியே விட்டுவருவதற்காகக் காட்டுக்கு அழைத்துச் செல்லும் கொடுமையான பணி தனக்கு இடப்பட்டுள்ளதை எண்ணி மனங்கலங்கி வாடுகிறான். தன்னுடைய அச்சத்தை வெளிப்படுத்திய லக்ஷ்மணன், காட்டில் உள்ள துறவுக் குடில்களுக்குச் செல்ல சீதை ஏன் விரும்பினாள் என்று அவளை வினவுகிறான். துறவுக்குடில்கள் உள்ள புனித எல்லைக்குள்ளே கொடிய விலங்குகள் எவருக்குமே தீங்கிழைக்காது என்று அவள் நம்பிக்கையுடன் இருக்கிறாள். முனிபத்தினியருக்கு அளிப்பதற்கான காணிக்கைப் பொருள்களை எடுத்துக் கொண்டு, அந்தப்புரத்தில் தன்னுடைய தோழியரிடமும், சேடிப் பெண்களிடமும் விடைபெற்றுக்கொண்டு, அவளைக் காட்டுக்கு அழைத்துச் செல்லத் தயாராக இருந்த தேரில் ஏறி அமர்கிறாள்.

தேர், கங்கையாற்றை நோக்கிச் செல்கிறது. அது நண்பகல் நேரம். சீதையும் லக்ஷ்மணனும் தேரிலிருந்து இறங்கி, அந்த ஆற்றிலே நீராடி, அப்புண்ணிய நதியை வழிபடுகின்றனர். இங்கே முத்தண்ணா ஒருசிறிய, ஆனால் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் காட்டுகிறார் : சீதை தன் விரலில் இருந்து ராம முத்ரிகாவை (இராமன் பெயர் பொறித்த கணையாழி) கழற்றி அதற்கு வழிபாடு நடத்துகிறாள். மாலையின் சூரியன் மெதுவாகத் தன் வெம்மையைக் குறைக்க, அவர்கள் வடக்கு நோக்கிப் பயணம் மேற்கொள்கின்றனர்.

மனோரமாவாக உருவகிக்கப்பட்டுள்ள வாசகருடைய ஆர்வத்தைத் தூண்டுவதற்காக, நீண்டநேரம் அவர்கள் பயணம் செய்த பின்னர் காட்டின் நடுப்பகுதிக்குள் அவர்கள் சென்றார்கள் என்றும் லக்ஷ்மணன் சீதையை அங்கேயே விட்டுவிட்டு அவ்விடத்திலிருந்து அகன்றுவிட்டான் என்று மட்டும் முத்தண்ணா கூறுகிறார்.

சீதைக்கு நேர்ந்த அவலத்தைக் கேட்டு மனோரமா துயரம் தாங்காமல் விம்மி அழுகிறாள். முத்தண்ணாவும் கண்ணீர் சிந்துகிறார். கதையைச் சொன்னவரும், கேட்டவரும் அப்படியே பாத்திரங்களின் உணர்வுகளில் ஒன்றிப் போய்விட்டனர். சீதையைத் தன்னந்தனியே காட்டிலே விட்டுவிடுமளவுக்கு லக்ஷ்மணன் எப்படிக் கல்நெஞ்சம் கொண்டவனானான் என்றும்,

அவற்றை எல்லாம் சீதை எங்ஙனம் தாங்கிக் கொண்டாள் என்றும் சொல்லுமாறு முத்தண்ணாவை மனோரமா கேட்கிறாள்.

முத்தண்ணா, கதையை விட்ட இடத்திலிருந்து மீண்டும் சொல்லத் தொடங்குகிறார்.

முனி பத்தினிகளைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தில் சீதை எட்டி நடை போடுகிறாள்; ஆனால் அதற்கு நேர்மாறாக லக்ஷ்மணனோ, தன்னுடைய கடமைக்கும் தன் அண்ணியின்பால் கொண்ட இரக்கத்திற்கும் இடையே சிக்குண்டு மெதுவாக நடை போடுகிறான். அவளைக் காட்டிலேயே துரத்தி விட வேண்டுமென்ற இராமனின் ஆணையை அவளிடம் எவ்வாறு தெரிவிப்பது என்று புரியாமல் தடுமாறுகிறான். சீக்கிரமே சீதை களைப்படைந்து விடுகிறாள்; காட்டிலுள்ள துறவுக்குடில்களுக்குச் செல்ல வேண்டுமென்று இராமனிடம் வேண்டியதற்காகத் தன்னையே நொந்து கொள்கிறாள்; இராமனின் அருகே இருப்பதைக் காட்டிலும் துறவுக் குடில்களுக்குச் செல்வது உயர்ந்தது என்றெண்ணிய தன்னுடைய முட்டாள்தனத்தை நினைத்து ஓலமிடுகிறாள்.

சீதை தன்னைத்தானே கடிந்து கொள்கின்ற அவலநிலையைக் கண்டுகொண்டு லக்ஷ்மணனால் நீண்ட நேரம் வாளாவிருக்க முடியவில்லை. அவள் பாதங்களில் வீழ்ந்து வணங்கிவிட்டு அவன் சொன்னான். "பொறுப்பில்லாத சலவைத் தொழிலாளி ஒருவன் உங்கள் மீது அவதூறு பேசிவிட்டான். அந்தக் குற்றச்சாட்டைப் பெரிதாக எடுத்துக்கொண்ட இராமன் உங்களைக் காட்டில் விட்டு விடுமாறு என்னைப் பணித்தான். இந்தத் துர்ப்பாக்கியச் செய்தியை உங்களுக்குச் சொல்லுவதற்காகவே உங்களுடன் வரவேண்டிய துரதிர்ஷ்டநிலை எனக்கு ஏற்பட்டுள்ளது."

அதைக் கேட்ட சீதையின் மனநிலையை, அவளுடைய உணர்ச்சிக் கொந்தளிப்பையும் உளப் போராட்டத்தையும் மிகச் சிறப்பாக வருணித்து வெளிப்படுத்துகிறார் முத்தண்ணா. சீதை முதலில், தன்னைத் துரத்தியடித்தமைக்காக இராமன் மீது கோபம் கொள்கிறாள்; ஆனால் தன்னுடைய விதியை நினைத்துச் சமாதானமடைகிறாள். பின்னர் லக்ஷ்மணனை அயோத்திக்குத் திருப்பி அனுப்பி விடுகிறாள். லக்ஷ்மணனும், சீதையைக் காப்பாற்றுமாறு இயற்கைத் தெய்வங்களை வேண்டிவிட்டு, அவளைவிட்டு நீங்குகிறான்.

கதையைச் சொல்லிக் கொண்டு வந்த முத்தண்ணா திடீரென்று அஸ்வமேத யாகத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கும் போது, மனோரமா இடைமறிக்கிறாள்: "அஸ்வமேதயாகக் கதையெல்லாம் கிடக்கட்டும். அந்தக் கதையைச் சொல்லுவதற்கு இதுதானா நேரம்? அதற்கப்புறம் சீதைக்கு என்ன நேர்ந்தது என்று முதலில் சொல்லுங்கள்!"

காட்டில் சீதைக்கு நேர்ந்ததை முத்தண்ணா மீண்டும் சொல்லத் தொடங்குகிறார்: தன் துன்பத்தை எண்ணிப் புலம்புவதை நிறுத்திய சீதை, இராமன்மீது கொண்ட அளவிடற்கரிய நம்பிக்கையினால், அவனுடைய புனித நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரித்துக் கொண்டே ஆழ்ந்த தியானத்தில் மூழ்கிவிடுகிறாள்.

அப்போது அவ்வழியே செல்ல நேர்ந்த வால்மீகி, நீரிலிருந்து தூக்கியெறியப்பட்ட மீனைப்போல் நொய்ந்துபோன சீதையைக் காண்கிறார். அவளை அணுகி அவளிடம் பேச்சுக் கொடுக்கிறார்.

"யார் நீ? வனதேவதையைப்போல் ஏன் இங்கே தனித்திருக்கிறாய்?"

சீதைக்குத் திடீரென்று உள்ளூரப் பயம் பிடித்துக் கொள்கிறது. இராவணன் அவளைக் கடத்திச் சென்ற பழைய சோக நிகழ்ச்சி நினைவுக்கு வரவே, எழுந்து நின்று கோபத்துடன் சொல்கிறாள்:

"கடவுள் மீது ஆணையாகச் சொல்கிறேன், என்னருகே வராதே" அப்படிச் சொல்லிக்கொண்டே ஒரு மரத்தின் பின்னால் அவள் ஒளிந்து கொள்கிறாள்.

"குழந்தாய். அஞ்சாதே! நான் வேறு யாரோ அல்ல. நான் ஒரு துறவி; அருகேயுள்ள குடிலிலே வசிப்பவன். என்பெயர் வால்மீகி. நீ அஞ்சாதே. நீ யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா? உன் பெயர் என்ன?"

வால்மீகியின் கேள்விக்கு விடையளித்த சீதை, காட்டிலே அவள் துரத்தப்பட்டதற்குக் காரணமான சம்பவங்களை எடுத்துரைத்து விட்டுச் சொன்னாள்: "எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கிணற்றில் விழுந்தோ, தூக்குப் போட்டோ சாவதைப் பற்றி என்னால் எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. அது தற்கொலை செய்து கொள்கின்ற பாவம்

மட்டுமின்றி என் கருவில் வளரும் குழந்தையைக் கொன்ற பாவமும் ஆகிவிடும்" என்று சொல்லிக் கொண்டே முனிவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள்.

வால்மீகி அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு அவளைத் தன் குடிலுக்கு அழைத்துச் செல்கிறார்.

இந்த நிகழ்ச்சியை விவரித்துவிட்டுத் தன் மனைவியின் பக்கம் திரும்பிய முத்தண்ணா சொல்கிறார் :

முத்தண்ணா : வால்மீகியின் துறவுக் குடிலில் சீதை மிகவும் அன்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்ற வேளையில், அயோத்தியில் சீதாராமனோ...

மனோரமா : அன்பரே! அதெப்படி? இராமன் சீதையைத் துரத்திய பின்னர் அவனை எப்படி சீதாராமன் என்றழைக்கலாம்? ஒருகாலும் கூடாது. அவன் அவளை இழந்து விட்டான். அந்தக் கல்நெஞ்சக்காரன் இராமன் அல்லன்; அவன் பீமன்...

முத்தண்ணா : என் அன்பே, நீ எங்ஙனம் அப்படிச் சொல்லலாம்? இராமன் கல்நெஞ்சக்காரன் என்று நீ எண்ணுகிறாயா? அதற்குப் பின்னர் இராமன் என்ன செய்தான் என்று இன்னும் உனக்குத் தெரியவில்லை.

மனோரமா : அவன் என்ன... சுவரில் போய்த் தலையை முட்டிக் கொண்டானா?

முத்தண்ணா : இங்கே பார்.. நீதி வழுவாத அரசன் என்ற முறையில் அவன் தன் கீர்த்தியைப் பெரிதாக எண்ணினான். தன் குடிமக்களிடம் எதிரான கருத்து எதுவும் வருவதை அவன் விரும்ப வில்லை. அதற்காக அவன் சீதையை வெறுத்தான் என்று நீ நினைக்கிறாயா?

மனோரமா : அவன் அவளை வெறுத்தானோ இல்லையோ... முடிவு ஒன்றுதானே. அநாதரவான ஒரு பெண் காட்டுக்குத் துரத்தப்பட்டாள் அல்லவா?

முத்தண்ணா : ஆமாம். ஆனால் நடந்தவற்றுக்காக மனம் வருந்திய அவன் பெருந்துயரத்தில் மூழ்கிப் போனான்.

மனோரமா : அவனுக்கு வேறு மனைவியர் இல்லை என்பதால் அவன் துயரப்பட்டானா?

முத்தண்ணா : போதும் வேடிக்கை. லக்ஷ்மணன் தன்னுடைய ஆணையை நிறைவேற்றிவிட்டான் என்பதை அறிந்தவுடனேயே இராமன் இராமனாகவே இருக்க வில்லை. மனப் போராட்டத்தால் அவன் சித்ரவதைப்பட்டான். மீதிக் கதையையும் கேள்.

இந்தச் சிறிய உரையாடல், இராமனுடைய செய்கையை மதிப்பீடு செய்வதற்காகவே அமைக்கப்பட்டுள்ளது. சீதையைக் காட்டுக்குத் துரத்தியதில் இராமன் நியாயமாக நடந்து கொள்ள வில்லை என்ற திறனாய்வாளர் சிலரின் கருத்தினையே மனோரமா பிரதிபலிக்கிறாள். ஒரு மன்னனுக்குரிய கடமையைச் செய்வதில் சற்றும் பின்வாங்காதிருப்பதற்கு, சீதை மீது கொண்ட அளப்பரிய காதல் எனும் தனிப்பட்ட விருப்புத் தடையாக அமைய இராமன் அனுமதிக்கவில்லை என்பதைச் சொல்லி, இங்கே இராமனுடைய செயலை நியாயப்படுத்த முத்தண்ணா முனைகிறார். சீதையை அவன் நேசிக்கவில்லை என்பதன்று; மாறாக அவன் தர்ம நெறியை மிகவும் மதித்தான். இராமனுடைய நீதி பரிபாலனத்தில் குறைகண்டு சாதாரண குடிமக்கள் கூட தனக்கு எதிராகச் சுட்டுவிரலை உயர்த்துவதை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அக்னி குண்டத்தில் மூழ்கி சீதை வெளிவந்த பின்னர் அவளுடைய கற்பின் தூய்மையை இராமன் ஏற்றுக் கொண்டான் என்ற செய்தியுடன் இராமனுக்கு எதிரான வாதங்கள் முற்றுப் பெற்றன. படிப்பறிவில்லா அறிவிலி ஒருவன் மட்டுமே பொதுக்கருத்தை உருவாக்கிவிட முடியாது

ஆனால் வால்மீகியின் துறவுக்குடிலில் சீதை பெற்றெடுத்த லவ-குசர்களுக்கும் இராமனுக்கும் இடையே போர் மூண்ட உண்மை மாற்ற முடியாதது. பல ஆண்டுகளாகச் சீதை அங்கே தங்கியிருந்ததற்குக் காரணம் காட்டியாக வேண்டும். அதற்குச் சீதை துரத்தப்பட வேண்டும். எனவே சலவைத் தொழிலாளி

சம்பவத்தைப் புராண ஆசிரியர் ஒரு காரணமாகப் பயன்படுத்தி இருக்கிறார். இந்த இடத்தில் மூலநூலில் உள்ளதில் முத்தண்ணா சில மாற்றங்களைச் செய்திருக்கிறார் என்பதில் ஐயமில்லை. இராமனுடைய மனநிலையை மிக அழகாக முத்தண்ணா விவரித்திருக்கிறார். இராமனும் சீதையும் சேர்ந்திருக்கும்போதும், பிரிந்திருக்கும்போதும் பரஸ்பரம் ஒருவர்மீது மற்றவர் காட்டிய தெய்வீக அன்பினைச் சுருக்கமாகவும் அதே சமயத்தில் மிகச் சிறப்பாகவும் முத்தண்ணா நமக்குத் தீட்டிக் காட்டியுள்ளார்.

இராமனுடைய படைகளுக்கும் வால்மீகியின் குடிலில் பிறந்த லவ-குசர்களுக்கும் இடையேயான போர் உருவாவதற்குக் காரணமான அஸ்வமேத யாகம் தவிர்க்க முடியாத சம்பவமாகும். எனவே முத்தண்ணா கதையை, அஸ்வமேத யாகத்திலிருந்து தொடர்ந்து சொல்லத் தொடங்குகிறார் :

அகத்தியர் அறிவுறுத்தியபடி, இராமன் பொன்னாலான சீதையின் உருவைத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டு, அஸ்வமேத யாகத்திற்கான உறுதிமொழியை எடுத்துக் கொள்கிறான். அழகுற அலங்கரிக்கப்பட்ட குதிரையை வழிபடுகிறான். இராமனின் அரசமுத்திரை பொறித்த உலோகத்தகடு குதிரையின் நெற்றியிலே கட்டப்படுகிறது. அதனை எல்லா நாடுகளிலும் சுற்றித் திரியுமாறு விட்டு, மற்ற அரசர்களிடமிருந்து திறை வசூலிக்க வேண்டுமென்று ஆணையிடுகிறான். தன்னுடைய தம்பியரிடமும், ஏனைய தலைவர்களிடமும் அவர்களுக்கு முன்னுள்ள சவாலை எடுத்துரைத்து, குதிரையைப் பின்தொடரும் படைக்குத் தலைமை ஏற்று வெற்றி ஈட்டி வருகின்ற பொறுப்பை ஏற்க எவர் முன் வருகிறார் என்று வினவுகிறான். இராமனுடைய அரசாட்சிக்கு உதவுவதற்காகப் பரதனும் லக்ஷ்மணனும் அவனுடனேயே இருக்க வேண்டியுள்ளது. இராமனின் தம்பியரில் இளையவனான சத்ருக்கனன் அப்பணியை ஏற்க முன்வருகிறான். அனுமன், சுக்ரீவன், ஜாம்பவான், மற்றும் பிற வானரத் தலைவர்களும் வானரப் படையுடன் சத்ருக்கனனுக்கு உதவிட முன் வருகின்றனர். பரதனின் மகனான புஷ்கலனும் சத்ருக்கனனுடன் செல்கிறான்.

சத்ருக்கனனும் மற்றவர்களும் புறப்படும்போது சுவாரஸ்யமான ஒரு நிகழ்ச்சி நடக்கிறது. படைநடத்திச் செல்லும்போது க்ஷத்ரியனுக்குப் பொருந்தாத சில செயல்களைச் செய்ய வேண்டாமென்று இராமன் தன் தம்பிக்கு அறிவுரை

கூறுகிறான். எடுத்துக்காட்டாக, பிராமணர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும்; நிராயுத பாணிகளுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கக் கூடாது; போரில் மயக்கமுற்றவர்களையும், புறமுதுகுகாட்டி ஓடுபவர்களையும் ஒன்றும் செய்யலாகாது; எந்தப் பெண்ணையும் ஒருபோதும் கொல்லலாகாது என்றெல்லாம் கூறுகிறான்.

இராமன் போதித்த 'க்ஷத்ரிய தர்மத்தை' அருகிருந்து கேட்ட சீதையின் சகோதரனான லக்ஷ்மிநிதி, மெல்ல நகைத்துக்கொண்டே கேட்கிறான்:

"ஓ! என்னருமை மைத்துனரே! க்ஷத்ரிய தர்மம்தான் உங்களுக்கு எப்படி அத்துப்படியாகியிருக்கிறது! ஆனால் தாடகையைக் கொன்றபோது அதை ஏன் மறந்தீர்கள்? பிராமணனாகிய பரசுராமனிடம் நீங்கள் மல்லுக்கு நிற்கவில்லையா? வாலியுடன் எந்த மாதிரியாகச் சண்டை போட்டீர்கள்? என்ன காரணத்திற்காக உங்கள் தந்தை தாண்டவ முனிவரைக் கொன்றார்? சூர்ப்பநகையின் மூக்கையும் காதுகளையும் உங்கள் தம்பி லக்ஷ்மணன் அறுத்தெறியவில்லையா? ஓ! இவையெல்லாம் இக்ஷ்வாகு வம்சத்தினருடைய உன்னதமான சாதனைகள் போலும்! இப்போது சத்ருகனனும் தன்னுடைய பரம்பரை தர்மத்தை நிலைநிறுத்தப் புறப்பட்டுச் செல்கிறான்!" இவற்றையெல்லாம் வேடிக்கையாகவே சொல்லி லக்ஷ்மிநிதி குத்திக் காட்டுகிறான். இவையாவுமே மூலநூலில் இருந்தாலும் மூல சுலோகங்களை முத்தண்ணா அப்படியே மொழிபெயர்த்துவிடவில்லை ஆனால் அதே சமயத்தில், தன்னுடைய கன்னட மொழி பெயர்ப்பில் எவ்விதமான முக்கிய விவரங்களையும் விட்டுவிடவும் இல்லை. மூலத்தைச் சுருக்கிவிட்டு, தன்னுடைய மொழிபெயர்ப்புத் தானே சுயமாக எழுதியதுபோல் அமைத்துள்ளார். அத்துடன் மிக முக்கியமான ஒன்றையும் அவர் சேர்த்திருக்கிறார். அதாவது :

லக்ஷ்மிநிதியின் வேடிக்கையான கேள்விகளுக்கு விடையிறுக்கும்போது இராமன் சொல்கிறான்: "என்னருமைக் குழந்தாய்! அந்தச் செய்கைகளுக்கான உண்மையான காரணத்தை நீ அறியமாட்டாய். உனக்கு வில்லேற்றம் கற்றுத் தந்த சதாத்ரியிடம் நீ அதற்கான காரணங்களைக் கேட்டுத் தெளிவடைவாயாக". அரசவையில் இருந்த அனைவருக்கும், இராமன் எப்போதும்

தர்மத்தின் நியதிப்படியே செயல்படுவான் என்று நன்கு தெரியுமாதலால், அவர்கள் இராமன் சொல்லிய பதிலால் மகிழ்ந்து தலையசைக்கின்றனர். இங்கே, முத்தண்ணா, இராமனுடைய எல்லாச் செய்கைகளும், சீதையைக் காட்டுக்குத் துரத்தியது உள்பட அனைத்துமே தர்மநெறியின் வரம்புக்கு உட்பட்டவை-தாமென்று மறைமுகமாகக் கூறுகிறார். இக்கருத்தை நாம் ஏற்கவோ, மறுக்கவோ 'செய்யலாம். அது வேறு விஷயம்.

இன்னொரு சுவாரஸ்யமான சம்பவம், புஷ்கலன் யாகக் குதிரையைப் பின்தொடரும் படையுடன் சேர்வதற்கு முன்னர் தன்னுடைய இளம் மனைவி காந்திமதியிடம் விடைபெற்று வருகின்ற, நெஞ்சைத் தொடுகின்ற காட்சியாகும். அவள் தன் கணவனைச் சந்திப்பதற்குச் சற்று முன்பாக எப்படித் தோற்றமளித்தாள் என்பதை மூல நூலாசிரியர் இரண்டு சுலோகங்களில் விவரிக்கிறார். ஆனால் முத்தண்ணாவோ அக்காட்சியை அழகியதோர் காதற் காட்சியாகப் புனைந்திருக்கிறார். முத்தண்ணா தம்முடைய படைப்பில் சின்னஞ்சிறிய பாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்ற பல சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்றாகும். போர்க்களத்துக்குச் செல்லத் தயாராக இருக்கின்ற தன்னுடைய இளம் மணாளனைக் காண்பதற்காக அழகிய இளமங்கையரான காந்திமதி நடந்து வருவது நம் மனக்கண்முன்னே தோன்றுகிறது விடைபெறுவதற்கு முன்பாக, காந்திமதியிடம் விசுவாசமுள்ள மனைவியாகவும், கடமையுணர்வு நிறைந்த மருமகளாகவும் அவளுடைய மாமியார்களுக்குச் சேவை செய்வதில் வழுவாது இருக்குமாறு புஷ்கலன் அறிவுரை கூறுகிறான். பிரிவை நினைத்துக் காந்திமதி மனம் வருந்தியபோதும், களத்திற்குச் செல்லும் வீரனை அவனுடைய மனைவி தடுப்பது முறையாகாது என்கிறாள். இராமன் அவன்பால் காட்டுகின்ற அன்புக்கு ஏற்புடையவனாக இருக்குமாறு அவனைக் கெஞ்சுகின்ற காந்திமதி, அவனுக்கு வெற்றி கிட்டவேண்டுமென வாழ்த்துகிறாள். புஷ்கலனும், எதிர்க்கின்ற அரசர்கள் அனைவரையும் தோற்கடித்து அவர்களிடமிருந்து திறை வசூலித்து வருவேன் என்று அவளுக்கு உறுதியளிக்கிறான். உள்ளத்தை உருக்குகின்ற இந்தச் சம்பவத்தின் நடையழகைத் தமிழில் ஓரிரு வாக்கியங்களில் சொல்லிவிட முடியாது.

2. காமாக்ஷி கோயிலுக்குச் செல்லுதல் :

சத்ருக்கனன் தன்னுடைய படையுடன், அஸ்வமேத யாகக் குதிரையைப் பின் தொடர்ந்து, காடு மேடுகளை எல்லாம் கடந்து செல்கிறான். கடைசியில் ஒரு நாட்டுக்குச் சென்ற அவன், அங்கே ஒரு மரச்சோலையின் நடுவில் கோயில் ஒன்று இருப்பதைக் காண்கிறான். அங்கே சுற்றியுள்ள பகுதிகளில் எல்லாம் கடுமையான வெயில் தகிக்கும் கோடையாக இருந்தபோதும் அங்கிருந்த மரங்கள், மற்ற தாவரங்கள் மட்டும் மிகவும் பசுமையாக இருந்ததுடன், ஆறுகள் எல்லாம் நிரம்பிவழிந்தன. அந்த இடம் மட்டும் அப்படியிருப்பதற்கான காரணம் என்னவென்று அமைச்சர் சுமதியிடம் சத்ருக்கனன் வினவுகிறான். (கோடையின் கொடுமை பற்றியும் சோலையின் செழிப்புப் பற்றியும் வரும் விரிவான வருணனைகளின் பெரும்பகுதி பழமையானதாக இருந்தாலும், அதைச் சொல்லியிருக்கின்ற உரைநடை புதுமையானது) அமைச்சரும், சுமதாவின் கதையைச் சத்ருகனனுக்குச் சொல்கிறார்: அந்நாட்டு அரசனான சுமதா தன் நாட்டை எதிரிகளிடம் இழந்து விடுகிறான். எனவே காமாக்ஷி தேவியின் அருளைப் பெறுவதற்காக அவன் கடுந்தவம் மேற்கொள்கிறான். அவனுடைய தவத்தில் மகிழ்ந்த தேவி, அவன் எதிரியிடம் இழந்த அனைத்தையும் திரும்பப் பெற அருளுகிறாள். அத்துடன், இராமனுடைய அஸ்வமேத யாகக் குதிரை அவனுடைய நாட்டுக்கு வரும்போது நாட்டை இராமனுக்கு அர்ப்பணிக்குமாறும் அருளுகிறாள். தன் தலைநகரத்திற்குத் திரும்பிய சுமதா, எதிரிகள் ஆக்கிரமித்திருந்த பகுதிகளில் இருந்து அவர்களை விரட்டியடித்து விட்டு, தன்னுடைய பக்தியின் அடையாளமாக இந்தக் காமாக்ஷி கோயிலைக் கட்டினான்.

கதையைக் கேட்ட சத்ருக்கனன் கோயிலுக்குச் சென்று தேவியை வழிபட்டான். அந்நாட்டுத் தலைநகரான அஹிச்சத் புரத்திற்குள் அஸ்வமேத யாகக் குதிரை நுழைந்தபோது, சுமதா குதிரையின் நெற்றியிலிருந்த வாசகங்களைப் படிக்கிறான். சத்ருக்கனன் தலைமையில் வந்த படைகளை அவன் எதிர்க்கவில்லை காமாக்ஷிதேவி அருளியதுபோல, இராமனின் பெயரால் சத்ருக்கனனிடம் தன் நாட்டை வழங்கிவிட்டு, சத்ருக்கனனின் படையுடன் சேர்ந்து அவர்களைப் பின் தொடர்ந்தான். சத்ருக்கனனும் சுமதாவின் மகனை அரியணை ஏற்றிவிட்டு, குதிரையைப் பின்தொடர்ந்தான்.

3. சயவனாஸ்ரமம் :

சில நாள்கள் பயணத்திற்குப் பின்னர் சத்ருக்கனனும் அவனுடைய படைகளும் பழமரங்கள் சூழப் பெற்ற ஒரு துறவுக் குடிலை அடைந்தனர். காட்டு விலங்குகளும் வீட்டு விலங்குகளும், கறவைப் பசுக்களும் பரஸ்பரம் நல்லிணக்கத்துடன் அங்கே ஒன்றாக இருந்தன. சத்ருகனன் சுமதியிடம், அந்தக் குடிலில் வசிக்கும் முனிவரைப் பற்றித் தனக்குச் சொல்லுமாறு கேட்கிறான்.

சயவன முனிவர், அஸ்வினி இரட்டைத் தேவர்களை, ஏனைய தேவர்களுடன் அமரச் செய்து வேள்விப் பிண்டங்களின் (ஹவி) ஒரு பகுதியை அவர்களுக்கு வழங்கிய பெரும் முனிவர் என்ற அறிமுகத்துடன் சுமதி அவர் கதையைச் சொல்லத் தொடங்குகிறான்.

சயவனர் ப்ருகு முனிவருக்கு மகனாகப் பிறந்தவர் ஒரு விசித்திரமான சூழ்நிலையில் அவர் பிறந்தார். ப்ருகு முனிவர் இல்லாத சமயத்தில் அவருடைய குடிலுக்குள் ஓர் அரக்கன் நுழைகிறான். அங்கிருந்த ப்ருகு முனிவரின் கர்ப்பிணி மனைவியைக் கொன்று விடுவேனென்று அந்த அரக்கன் அச்சுறுத்துகிறான். அவள் பயந்து நடுங்கிய வேளையில், அவளுடைய கருப்பையிலிருந்து கரு வெளியே வந்து தரையில் விழுந்து விடுகிறது. தரையில் விழுந்த கருவிலிருந்து திடீரென்று ஒரு மனித உருவம் தோன்றி அந்த அரக்கனை எரிந்து சாம்பலாகுமாறு சபிக்கிறது. உடனே அரக்கனும் எரிந்து சாம்பலாகி விடுகிறான்.

அந்தக் குழந்தையைச் சயவனர் எனப் பெயரிட்டு, அவர்கள் வளர்த்து வருகின்றனர். சயவனர் வளர்ந்து பெரியவராகி, தம் தந்தையிடம் வேதங்களைக் கற்றுத் தேர்ச்சி அடைகிறார். தம் தந்தையைப் போல ஹரியின் அருளைப் பெற விழைந்த அவர் தவமேற்கொள்கிறார். ஆழ்ந்த தவத்தில் அவர் மூழ்கிவிடுவதால் அவரைச் சுற்றி ஓர் எறும்புப் புற்று உருவாகி விடுகிறது. அந்த எறும்புப் புற்றுக்குள்ளேயே பல ஆண்டுகள் அவர் சமாதி நிலையில் இருக்கிறார் அந்தப் புற்றைச் சுற்றி மரங்களும், செடி கொடிகளும் புதராக மண்டிவிடுகின்றன அவருடைய செம்மையான முடியும், மரக்கிளைகளிலிருந்து தொங்கிய விழுதுகளும், பின்னிப் பிணைந்து, சயவனர், பொன்னிறமான மேருமலை போலத் தோற்றமளித்தார்.

அந்தச் சமயத்தில், புண்ணிய யாத்திரை மேற்கொண்டிருந்த சர்யாதி என்ற மன்னன் தன் மனைவி, மகள், காவலர்கள் சூழ, செல்லும் வழியில் ரேவா நதிக்கரையில் முகாமிட்டுத் தங்குகிறான். அங்கே அவன் சமயச் சடங்குகளைச் செய்து கொண்டிருந்த போது, அவன் மகள் சுகன்யா தன் தோழிகளுடன் வெளியே விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது, சயவனர் மேல் வளர்ந்திருந்த எறும்புப் புற்றும், அதன் மேலே கண்ணைப் பறிக்கின்றவாறு இருந்த கருமணிகளும் அவள் கண்ணில் பட்டன. எறும்புப் புற்றிலே பதித்திருந்தது போன்ற ஒளிமிகுந்த அந்தப் பொருள்களைத் தோழியரிடம் காட்டிய அவள், அவற்றை எடுத்து வந்து விளையாட வேண்டும் என்று கூறுகிறாள். எறும்புப் புற்றிலே சமாதியாகிவிட்ட முனிவருடைய இரு கரு விழிகள் தாம் அப்படிப் புற்றுக்கு வெளியே பிரகாசமாகக் காணப்பட்டன. சுகன்யாவும் தான் விளையாடிக் கொண்டிருந்த வளைந்த குச்சியைக் கொண்டு அந்த விழிகளைத் தோண்டுகிறாள். அந்தோ... அங்கிருந்து குருதி பீறிட்டு வரவே, அச்சத்தால் நடுங்கிக் கொண்டே மீண்டும் முகாமிடத்திற்கு வந்த அவள், அந்தச் சம்பவத்தைப் பற்றி எவரிடமும் மூச்சு விடவில்லை. உடனே எல்லா இடத்திலும் தீச்சகுனங்கள் தோன்றின. அவை கண்டு மனங்குழம்பிய சர்யாதி மன்னன், தீய சகுனங்கள் தோன்றுவதற்கான காரணத்தைக் கண்டறிய முற்படுகிறான். அவ்வாறு அவன் அலைந்து கொண்டிருக்கும்போது, விந்திய மலையிலிருந்து ஷோனா ஆறு ஊற்றெடுப்பது போல, எறும்புப் புற்றிலிருந்து இரண்டு குருதி ஓடைகள் வருவதைக் காண்கிறான். எறும்புப் புற்றிலிருந்து குருதி ஊற்றெடுத்து வருவதைக் கண்டு வியப்புற்றுக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தபோது, தவமேற் கொண்டிருந்த முனிவர் அவன் கண்ணில் படுகிறார். "முனி புங்கவரே! எங்களைச் சபிக்கவோ அருளவோ ஆற்றல் மிகுந்தவர் நீங்கள். எறும்புப் புற்றிலிருந்து குருதிப் பெருக்கெடுத்து ஓடுகின்ற மர்மத்தை நான் எவ்வாறு அறிவேன்? நான் சாதாரணமானவன். புண்ணிய யாத்திரை மேற்கொண்டு வந்த நான், இந்த இடம் ஒரு தவச்சாலை என்றறியாமல், இங்கே முகாமிட்டு விட்டேன். இந்தப் புனிதமான இடம், என் செய்கையால் பரிசுத்தத்தை இழந்ததுடன், என் படைகள் பஞ்சத்தில் சிக்குண்டு, பல நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளன. இதற்கு நானே காரணம் என்று எண்ணுகிறேன். புண்ணியசீலரே! உங்களை வேண்டிக் கேட்கிறேன். என்னையும்

என் படையையும் காப்பாற்றுங்கள் ஐயா!" என்று கெஞ்சுகிறான். அதற்குச் சயவன முனிவரோ, "நீ என்னுடைய சக்தியைப் பற்றிப் பேசுகிறாய். அவை போய் விட்டன. நான் என்னுடைய தவத்தை இனிமேலும் தொடர முடியாது! நான் என் கண்களை இழந்து விட்டேன். உன் மகள் விளையாடிக் கொண்டிருக்கும்போது என் கண்களைக் குத்திவிட்டாள். இந்தத் தீய சகுனங்கள் யாவும் என்னுடைய நோவாலும் சீற்றத்தாலும் விளைந்தவையே!" என்று மன்னனிடம் சொல்கிறார். முனிவருக்கு நேர்ந்த கதியைக் கேட்டு மன்னனும் வருந்துகிறான். "இந்தப் பெரும் சீற்றத்திலிருந்து இப்போது எங்ஙனம் விடுபடுவது" என்று கேட்ட சர்யாதிக்கு முனிவர் சொன்னார் : "கன்னிப் பெண்ணான உன் மகளை இங்கே எனக்குச் சேவை செய்யுமாறு விட்டுச் செல்வது ஒன்றே பரிகாரம்."

இது விஷயமாகத் தன் மனைவியான அரசியிடம் கலந்து ஆலோசிப்பதற்காக முகாமிற்குத் திரும்பி வந்த சர்யாதி மன்னன், முனிவர் கூறிய பரிகாரத்தையும் அவளிடம் சொல்கிறான். தன் மகளுக்கு நேர்ந்த கதியை அறிந்து, தாங்கொணாத் துயரம் கொண்ட அரசி அப்படியே மூர்ச்சையாகி விடுகிறாள். இங்கே முத்தண்ணா, ஒரு தாய் தன் மகள், இருப்பதற்கு வீடோ, சமைப்பதற்கு அடுப்போ இல்லாத கபோதி ஒருவனை மணக்க வேண்டியிருக்கிறதே என்று புலம்பித் தவிக்கின்ற காட்சியை மிகத் தத்ரூபமாக வருணித்திருக்கிறார். அத்துடன் முத்தண்ணா இங்கே, கண்ட யாப்பிலே இரண்டு செய்யுள்களையும் இயற்றியுள்ளார். தீவிரமான உள்ளுணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குக் கவிதையே சிறந்த ஊடகம் என்று அவர் எண்ணினார் போலும்.

என்ன வினோதமான முரண்பாடு! நூலின் தொடக்கத்தில், 'பாட்யம் வாத்யம் காட்யம் ஹிர்தயம்' என்று செய்யுள் இயற்றுவதை இகழ்ச்சியாகப் பேசியதை நாம் இங்கே நினைவு கூர்தல் வேண்டும். அரச தம்பதியரின் குழந்தையான அந்தச் சிறுமி குறுக்கிட்டுத் தன் தாய்க்கு ஆறுதல் கூறி, "அன்பான அம்மா! என் விதியை எண்ணி ஏன் நீங்கள் அழுகிறீர்கள்? மகள் என்பவள் பெற்றோரிடமிருந்து எந்தச் சமயத்திலும் பிரிந்துபோக வேண்டியவள்தான். அவளை மணப்பவன் துறவியாக இருந்தாலென்ன? அன்றிச் சாதாரண மனிதனாக இருந்தாலென்ன? முற்பிறவியில் செய்த நற்செயல்களைப் பொறுத்தே ஒரு பெண்ணின் தலைவிதி அமையும் அதிர்ஷ்டசாலியான

பிச்சைக்காரி, இளவரசியைப் போல் மகிழ்ச்சிகரமாக இருக்கலாம். துரதிர்ஷ்டசாலியானவள் மன்னனுக்கு மனைவியானாலும் பிச்சை எடுக்கக் கூட நேரிடலாம். அதையெல்லாம் யார் அறிவார்?" என்று வயதில் பெரிய பெண்ணைப்போல் அறிவு முதிர்ச்சியுடன் பேசுகிறாள். இவ்வாறு தன் அன்னையைத் தேற்றிய பின்னர், முனிவரைச் சென்று பார்க்கத் தன் தந்தையையும் இணக்குவிக்கிறாள். சர்யாதியும் ஒப்புக் கொள்ளவே, அரசனும், அரசியும் தம் மகள் சுகன்யாவுடன், முனிவர் முன்பு தியானத்தில் மூழ்கியிருந்த இடத்துக்குச் செல்கின்றனர். முனிவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிய சுகன்யா, "என்னை உங்களுக்கு மணமுடித்துத் தருவதற்காக என் பெற்றோர் இங்கு வந்திருக்கின்றனர். நான் விளையாடிக் கொண்டிருக்கும்போது உங்களுக்குத் தீங்கிழைத்துப் பெரும் தவறு செய்துவிட்டேன். எனவே தயை மீக்கூர்ந்து என் பெற்றோர் அளிக்கின்ற என்னை ஏற்றுக்கொண்டு, எங்கள் பரிவாரங்களையும், படைகளையும் பாதித்துள்ள கொடிய நோயிலிருந்து அவர்களைக் காக்க வேண்டுகிறேன்'' எனக் கோருகிறாள்.

சுகன்யாவின் பணிவான இன்மொழியைக் கேட்டுமகிழ்ந்த சயவன முனிவர் தம்முடைய தியானத்திலிருந்து மீண்டு வந்தார். சர்யாதி மன்னன் மணமகளாக வழங்கிய சுகன்யாவை ஏற்றுக் கொண்டு, அவனுக்கும் அவனுடன் பயணம் செய்கின்ற அனைவருக்கும் எல்லா வளமும், நலனும் பெருகுமாறு அருளினார். முனிவருடைய ஆசிகளைப் பெற்ற சர்யாதி தன் பரிவாரங்களுடன் தன்னுடைய தலைநகரத்திற்குத் திரும்புகிறான்.

சுகன்யா தன் கணவராகிய சயவனரைத் தான் தேர்ந்தெடுத்த தெய்வமாகக் கருதி முழுமனதோடு அவருக்குப் பணிவிடை செய்து வருகிறாள். சயவனரும், மகிழ்ச்சியுடன் சுகன்யா செய்து வந்த பணிவிடைகளினால், தம் பார்வையிழந்து போனதால் ஏற்பட்ட துயரத்தை மறந்துவிட்டார்.

சில நாள்களுக்குப் பின்னர், தேவர்களுடைய இரட்டை மருத்துவர்கள் அவ்வழியே செல்ல நேர்ந்தது. சயவனரின் குடிலைக் கண்ட அவர்கள் அங்கே செல்கிறார்கள். எதிர்பாராமல் வந்த அந்த தெய்வீக விருந்தினரை மிக பக்திசிரத்தையுடன் சுகன்யா உபசரித்தாள். கடமையுணர்வுடைய மனைவியாக அவள் செய்த

உபசரிப்புகளினால் பெரிதும் மகிழ்ந்த அவர்கள், அவள் விரும்பிய வரத்தைக் கேட்குமாறு அருளுகின்றனர். அவளும் தன் கணவன் மீண்டும் பார்வையைப் பெற வேண்டும் என்று வரம் கேட்கிறாள். அவர்களும், யாக பிண்டங்களைப் பங்கிடும்போது இந்திரனுக்குச் சமமாகத் தாங்கள் மதித்துப்போற்றப் படுவோம் எனச் சயவனர் உறுதி அளித்தால் அந்த வரத்தை அருளுவதற்கு ஒப்புகின்றனர். அவ்வாறு செய்வேன் என மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்ட சயவனர், "எந்த யாகத்திலேனும் நான் புரோகிதனாக இருப்பேனானால், யாக பிண்டத்தை உங்களுக்குத்தான் முதலில் அளிப்பேன்; அதற்குப் பின்னரே அதனை இந்திரனுக்குத் தருவேன்; இது சத்தியம்" என்று உறுதியளிக்கிறார். அது கேட்டு மகிழ்ந்த இருவரும் சயவனரை அருகிலிருந்த குளத்திற்கு அழைத்துச் செல்கின்றனர். மூவரும் அக்குளத்தில் மூழ்கி எழுகின்றனர். என்ன விந்தை! அவர்கள் நீரிலிருந்து வெளியே வந்தபோது, ஒரே அச்சில் வார்க்கப்பட்ட தங்கப் பதுமைகளாக மூவரும் ஒன்றுபோலக் காணப்பட்டனர். பின்னர் மூவரும் குடிலுக்குத் திரும்பியபோது, அவர்களில் சயவனரை அடையாளம் காணமுடியாமல் சுகன்யா குழம்பிப் போனாள். தன் கணவனை அடையாளம் காண உதவுமாறு தேவலோகத்து மருத்துவர்களை அவள் வேண்ட, அவர்களும் சயவனரை மட்டும் அங்கே விடுத்து, அக்குடிலை விட்டு நீங்கினர்.

சயவனர் இழந்த பார்வையைப் பெற்றதுடன் மட்டுமின்றி, தன்னுடைய ஆன்மீக நியமங்களால், யாரும் நம்பமுடியாத அளவுக்கு இளமையாகவும் மாறிவிட்டார். சில காலத்திற்குப் பின்னர், சர்யாதி மன்னன் ஒரு யாகம் செய்யத் தீர்மானிக்கிறான். அதற்குப் புரோகிதராகத் தன் மருமகனான சயவனரை அழைக்க, அவரும் ஒப்புக்கொண்டு, அந்த யாகம் வெற்றிகரமாக நடந்தேற சர்யாதிக்கு உதவுகிறார். யாக பிண்டங்களைப் பெற்ற பிராமணர்களும் தேவர்களும் பெரிதும் மகிழ்ந்தனர். யாகப் பிண்டங்களைப் பெறுவதற்குத் தேவர்களை அழைக்கும்போது சயவனர் முதலில் அஸ்வினி தேவர்களையும், அதற்குப் பின்னரே இந்திரனையும் அழைத்தார். அதனால் கொதித்தெழுந்த இந்திரன் சயவனரின் தலையைத் தன் வஜ்ஜிராயுதத்தால் துண்டித்துவிட முனைகிறான்.. ஆனால் சயவன முனிவரின் சக்திக்கு முன்னர் அவனுடைய சக்தி ஒன்றுமில்லாததாகி விடுகிறது சயவனர்,

இந்திரனையும், அவனது வஜ்ஜிராயுதத்தையும் தம் சக்தியால் கட்டிப்போட்டு விடுகிறார். யாகத்திற்கு வந்திருந்த மனிதர்களும், தேவர்களும், முனிவர்களும் இந்திரனை விடுவிக்குமாறு சயவனரிடம் வேண்டுகின்றனர். அவ்வாறாக, சயவனர், யாக பிண்டங்களை வழங்குவதில் தேவலோகத்து மருத்துவர்களுக்கு முன்னுரிமை வழங்கியவராகவும், இந்திரனையே தம் சக்தியால் கட்டிப்போட்டவராகவும் புகழ்பெற்ற முனிவராக ஆனார்.

சயவனரைப் பற்றிய இந்தக் கதையை சுமதி சொல்லக்கேட்ட சத்ருக்னன், அம்முனிவரைத் தரிசிக்க விரும்புவதாகக் கூறினான். அவ்வாறே சயவனரின் குடிலுக்குச் சென்று அவரைத் தரிசித்து, அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, அஸ்வமேத யாகக் குதிரையைத் தான் பின் தொடர்ந்து வருவதாக அவரிடம் கூறுகிறான். இராமன் மேற்கொள்ளவிருக்கின்ற யாகத்தைப் பற்றி அறிந்த சயவனர் இராமனைக் காணவும், அவன் யாகத்தில் பங்கெடுக்கவும் விரும்புகிறார். அதுகேட்ட சத்ருக்கனனும், அனுமனிடம் சயவனரையும், சுகன்யாவையும் தோள்மீது ஏற்றிக்கொண்டு அயோத்தியில் விட்டுவருமாறு கூறுகிறான். அனுமனும் சத்ருக்கனனின் ஆணையை நிறைவேற்றுகிறான். அயோத்திக்குச் சென்ற அனுமன் குதிரையின் பயணம் முன்னேறிச் செல்வதை இராமனிடம் எடுத்துரைத்துவிட்டு முகாமுக்குத் திரும்புகிறான்.

4. நீலாச்சல மலை :

அஸ்வமேத யாகக் குதிரை பயோஷிணி ஆற்றைக் கடந்து வெகு தொலைவு செல்கிறது. வழியில் உள்ள மன்னர்கள் செலுத்திய திறைகளையும் பரிசுகளையும் சத்ருக்கனன் பெற்றுக் கொள்கிறான். இவ்வாறு அவன் முன்னேறிக் கொண்டிருக்கும் போது, மரஞ்செடி கொடிகள் உயிர்கள் அனைத்தும் கருமையாக உள்ள கருமணிகள் நிறைந்த கரியமலை ஒன்றை எதிர் கொள்கிறான். அந்த மலையின் புனிதத்துவம் என்னவென்று விளக்குமாறு சத்ருக்கனன் தன் அமைச்சன் சுமதியிடம் வினவுகிறான்.

அசுவமேத யாகக் குதிரை செல்கின்ற வழியில் உள்ள நாடு நகரங்களை விடுத்து மலைகளைப் பற்றி மட்டும் விரிவான வருணனைகளைச் சொல்லுகின்ற முத்தண்ணாவின் ஆற்றலை

வேடிக்கையாக மனோரமா புகழ்ந்துரைப்பதான, சிறிய சுவாரஸ்யமான உரையாடல் இங்கே இடம்பெறுகிறது. அந்தக் குதிரை விஜிபுரத்தின் வழியாகச் சென்றது என்று முத்தண்ணா விடையிறுக்கிறார். வலிமை மிக்க அந்நாட்டு மன்னன் சத்ருக்கனனை எதிர்த்துப் போரிட்டானா என்று முத்தண்ணாவிடம் மனோரமா வினவுகிறாள். ஆற்றல் மிக்க சத்ருக்கனனை எதிர்த்துப் போரிடும் அளவுக்கு அம்மன்னனுக்கு வலிமை இல்லாததால் அவன் தன் நாட்டை சத்ருக்கனனிடம் அளித்து விட்டான் என்று முத்தண்ணா பதிலளிக்கிறார்.

இவ்வாறாக, மேலே சொன்ன சம்பவத்தைப் பற்றி விரிவாக விளக்குவதைத் தவிர்த்துவிட்ட முத்தண்ணா, நீலாச்சல மலையின் எழிலார்ந்த தோற்றத்தையும், அம்மலையின் சமயப் புனிதத் துவத்தை எடுத்துக்காட்டுகின்ற சம்பவங்களையும் விளக்க முற்படுகிறார். அனைத்தையும் மிகச் சுவாரஸ்யமாக முத்தண்ணா விவரிக்கிறார். ஏரிகள், ஆறுகள், குன்றுகள் போன்றவற்றின் அழகான வருணனைகள் அதில் இடம் பெற்றுள்ளன. ஆனால் திறனாய்வாளர்கள் சிலர், நீலாச்சல மலை மற்றும் அதன் சமய முக்கியத்துவம் வாய்ந்த பழைய சம்பவங்கள் பற்றிய வருணனைகளைத் தவிர்த்திருந்தால் சிறப்பாய் இருந்திருக்கும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால் அவர்களுக்காக, நூலாசிரியரின் சார்பாக நாம் ஒன்றைச் சொல்லலாம் : அசுவமேத யாகம் செய்வதன் பிரதான நோக்கமே சமய முக்கியத்துவம் வாய்ந்தது; சீதையைக் காட்டுக்குத் துரத்துகின்ற சம்பவம் அதனைச் சார்ந்துதான் அமைந்திருக்கிறது. நூலாசிரியரே சமயக் கோட்பாடுகளின் தத்துவார்த்தங்களிலும் ஈடுபாடு உடையவர் ஆதலால், நீலாச்சல மலை சம்பந்தபட்ட இதிகாசக் கதைகளைச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்திற்கு அணைபோட முடியாமல் இருந்திருப்பார். அத்துடன் நீலாச்சல மலையைப் பற்றிய வண்ண மயமான இயற்கை அம்சங்களின் வருணனை அவருடைய இலக்கியப் புலமையை வெளிக்காட்டுவதற்கு நல்வாய்ப்பாகவும் அமைந்தது.

இங்கே, அழகியல் வெளிப்பாடுகளின் அரிய விமர்சகரான மாஸ்தி வெங்கடேச ஐயங்கார், நீலாச்சல மலையின் வருணனை பற்றி மனந்திறந்து கூறியுள்ள பாராட்டுரைகளைச் சொல்லுவதும் பொருத்தமானதாய் இருக்கும் :

"இந்த வருணனையில், ஓர் ஓவியன் பயன்படுத்தக்கூடிய எல்லாவிதமான தொழில்நுட்ப உத்திகளையும் கவிஞர் முத்தண்ணா பயன்படுத்தியிருக்கிறார். வருணனை முழுவதும் நீல வண்ணத்தை உருவகமாகப் பல இடங்களில் பயன்படுத்துகிறார். கும்மிருட்டு, நீலமயமான நீரலைகள், மகாகாளிதேவியின் இடப்பக்கக் கொங்கை, கருமணிகளின் சிதறல், நீல மேனியனாகிய சந்திகே, கரிய மேனியனாகிய மகிஷாசுரன், யானையின் அகன்ற மத்தகம், பயணியருக்கு உணவு சமைப்பதற்கான பெரிய அடுப்பு, நீலமலைத் தெய்வமான நீலமேனியனான புருஷோத்தமனின் நெற்றி, கரும்பச்சை மயமான வாழைத் தோட்டங்கள் போன்ற பல வருணனைகள் காணப்படுகின்றன. இவை தவிர அந்தக் கருநீலப் பின்னணியில் வேறுசில வண்ணங்களும் காணப் படுகின்றன: மகிஷாசுரனின் இரத்தம் கசிகின்ற குடல்கள், படிகம்போல் ஒளி விடுகின்ற மலையின் புறத் தோற்றம், பவழம் போன்ற செம்மணிகள், நீலமேனியனான புருஷோத்தமனின் அகன்ற நெற்றியிலிருக்கும் திரு நாமத்தைப்போல் காட்சியளிக்கின்ற மலையிலிருந்து வீழ்கின்ற பலவண்ண அருவிகள்."

நீலாச்சல மலையின் எழிலார்ந்த தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பின்னர், மகாகாளிபோல் தோன்றிய சந்திகே மகிஷாசுரனின் தலையைத் துண்டிக்கச் செல்வது, பக்தர்கள் நாள்தோறும் அம்மலைமீது ஏறிவருவது, புருஷோத்தமனின் அகன்ற நெற்றி போன்றவை அம்மலைக்கு உயிரோட்டத்தை ஏற்படுத்தி புனிதமிக்க வழிபாட்டிடமாகத் திகழ்கிறது என்கிறார். எழிலார்ந்த இந்த வருணனைகள் அஜந்தாக் குகையோவியங்களின் எழிலுடன் ஒப்பிடுமளவுக்கும், அந்தச் சொல்லழகு, மிருதங்கத்தின் இனிய நாதத்தைப் போலும் இருப்பதாக அவர் கூறுகிறார். ஆனால், "இந்த வருணனை, கருத்து, கற்பனை, நடை ஆகிய அனைத்திலும் முழு நிறைவான இலக்கியத் தரத்தை எட்டி விட்டதாக" மாஸ்தி கருத்துத் தெரிவிப்பதை, நுணுகி ஆராய்கின்ற திறனாய்வாளர்கள் ஒப்புக் கொள்ளாமல் போகலாம். எனினும், தனிச்சிறப்பு வாய்ந்த இந்த வருணனை மூலத்தில் உள்ளதைப் பார்த்து எழுதப்பட்டதாயினும், அதனுடைய கற்பனை நயம் மிகுந்த வெளிப்பாட்டின் சிறப்பினை எவரும் மறுத்துப் பேச முடியாது.

இதுவரை நாம் பார்த்தவற்றில், ராமாஸ்வமேதத்தின் மொத்தமுள்ள பதினாறு அத்தியாயங்களின் முதல் பத்து

அத்தியாயங்களில், சீதையைக் காட்டுக்குத் துரத்தியது, அஸ்வமேத யாகக் குதிரையின் பின்னால் வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்தது, சயவனரின் கதை, காமாக்ஷி ஆலயம், நீலாச்சலமலை ஆகியவற்றின் வருணனை போன்றவை இடம் பெற்றுள்ளன. குதிரையின் பின்னால் சென்ற சத்ருக்கனனின் படைக்கும், குதிரை முன்னேறிச் செல்வதைத் தடுத்த அரசர்களுக்கும் இடையே நடந்த மோதல்கள் பதினோராம் அத்தியாயத்தில் இருந்து தொடங்குகின்றன.

5. சுபாகுவுடன் மோதல்

சத்ருக்கனன், புஷ்கலன், லக்ஷ்மிநிதி ஆகியோர் ஒருபுறத்திலும் அவர்களை எதிர்த்து மறுபுறத்தில் சக்ரங்கபுரத்து மன்னன் சுபாகும் அவன் மகன் தாமனனும் தம்படையுடன் போரிட்டது பற்றிப் பதினோராவது அத்தியாயத்தில் விரிவாக விளக்கப் பட்டுள்ளது. அந்தப் போரைப் பற்றியும், போரில் பயன்படுத்தப் பட்ட ஆயுதங்களைப் பற்றியும் சொல்லும்போது மூல புராணத்தில் உள்ள விவரங்களுடன், பழைய கன்னட செவ்விலக்கியங்களில் காணப்பட்ட செய்திகளையும் சேர்த்து முத்தண்ணா அழகுபட விளக்கியுள்ளார். இப்படிப் பெருமளவுக்குச் செய்திகளை இலக்கிய நயம்பட குழைத்துக் கோவையாக வழங்கியுள்ளமை முத்தண்ணாவின் ஆழ்ந்த புலமையைப் பறைசாற்றுவதாகும்.

போரிலே தாமனையும் சுபாகுவையும் முறையே புஷ்கலனும் அனுமனும் அடக்கிவிடுகின்றனர். முடிவிலே சுபாகு, தான், விஷ்ணுவின் அவதாரமாக எண்ணிப் போற்றுகின்ற இராமனுடைய படைகளுடன் போரிடுவதை உணர்கிறான். அவன் உடனே இராமனின் பக்தனாக மாறி, சத்ருக்கனனை வணங்கி, போரை நிறுத்துமாறு ஆணையிடுகிறான்.

சுபாகு தொடர்பான இந்தச் சம்பவத்தில் மிகச் சொற்பமாகவே கதையிருப்பதையும், போர்க்களக் காட்சிகளின் விரிவான வருணனையையும் காண்கின்ற மனோரமா, தன்னுடைய ஏமாற்றத்தை வெளிப்படுத்துகிறாள். அந்த இடத்தில் போர்க்களக் காட்சிகள் பற்றிய வருணனைகள் வாசகர்களுக்கு ஆர்வமூட்டா என்று எண்ணிய முத்தண்ணா அவ்வாறு குறிப்பிட்டிருப்பார் போலும். தனிக்கதைகளைக் கேட்கவே மனோரமா பெரிதும் விருப்பமுடையவளாய் இருந்தாள். முத்தண்ணாவும் தொடர்ந்து கதைகள் சொல்லுவதாக உறுதியளிக்கிறார்.

6. தேஜபுரம் :

பன்னிரண்டாவது அத்தியாயம் முழுவதும் தேஜபுரத்தின் விரிவான வருணனை காணப்படுகிறது. அக்கோட்டை நகரத்தின் புறத்தே காணப்பட்ட இயற்கைக் காட்சிகள், பழமரங்களும் மலர்த் தாவரங்களும் சூழ்ந்த நீர் நிலைகளில் இருந்து புறப்பட்ட இனிய தென்றல், கோட்டையைச் சுற்றியுள்ள அகழி போன்றவை, சமஸ்கிருத சம்புகாவியங்களை நினைவுபடுத்துகின்ற வகையில் முயன்று அமைக்கப்பட்ட ஒருபக்க நீளமுள்ள ஒரே வாக்கியத்தில் மூச்சுவாங்க வருணிக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, கோட்டையின் உள்ளே உள்ள மாளிகைகள், கோயில்கள், பிராமணர்கள், க்ஷத்ரியர்கள், வைசியர்கள், சூத்ரர்கள் என ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியான குடியிருப்புகள் ஆகியவை பற்றிய வருணனை ஒரு பெரிய பத்தியாக உள்ளது. அதனையடுத்து, மலர்விற்போர், நறுமணத் திரவியங்கள் விற்போர், விலையுயர்ந்த மணிக்கற்கள் விற்போர், உலோகத் தொழில் செய்வோர், நெசவாளர், மருந்தியலாளர், பொற்கொல்லர், தச்சர், கருமார் போன்ற பல்வேறு தொழில் பிரிவினர் வசிக்கின்ற கடைவீதியைப் பற்றிய வருணனை ஒருபக்கம் முழுவதும் காணப்படுகிறது.

தலை நகரத்தைப் பற்றிய விரிவான வருணனையை சுமதி சத்ருக்கனனுக்குச் சொல்கிறார். "இந்த நாட்டு அரசன் யார்?" என்று வினவிய சத்ருக்கனனுக்கு, அந்நாட்டு அரசன் ருதாம்பரன் என்றும் அவனுக்குக் குழந்தைப்பேறு இல்லை என்றும், அவன் பசுவை வழிபட்டதால் குழந்தைப்பேறு கிடைத்தது என்றும் அமைச்சர் விடையிறுக்கிறார்.

பின்னர், ஜபாலி முனிவரின் அறிவுரைப்படி பசுக்களை வழிபட்டு அவற்றுக்குச் சேவைபுரிந்து அதன் பலனாக ருதாம்பரன் எங்ஙனம் ஒரு மகனைப் பெற்றான் என்று சுமதி விளக்குகிறார்.

ருதாம்பரன் கேட்டதற்கு, பசுவின் புனிதத்துவத்தையும் பெருமையையும் ஜபாலி அவனுக்கு விளக்குகிறார்: பசுவின் உடலில் தேவர்கள் அனைவரும் கோயில் கொண்டுள்ளனர் பசுவின் ஒவ்வோர் அங்கமும் இந்த அண்டத்தின் அங்கமாகும். எனவேதான் பசுவை அன்புடனும் பக்தியுடனும் போற்றிப் பேண வேண்டும். அத்துடன் அதனை வழிபடவும் வேண்டும். பசு

தெய்வீக உருவாகும். பசுவைப் போற்றிக் காப்பவன் சொர்க்கத்தை அடைவான். புல்மேயும் பசுவைத் தடுப்பவனோ, விரட்டுபவனோ நிச்சயம் நரகத்திற்குப் போவான்.

கோசேவையின் முக்கியத்துவத்தை ருதாம்பரனுக்கு வலியுறுத்துவதற்காக பழைய சம்பவம் ஒன்றை ஜபாலி எடுத்துரைக்கிறார். இராஜரிஷி என்றழைக்கப்பட்ட ஜனக மாமன்னன் தேவலோகத்திற்குச் சென்று வரவேண்டும் என்று ஒருமுறை விரும்பினான். அவனுடைய யோக சக்திகளின் ஆற்றலினால் ஒரு விமானத்தில் சொர்க்கத்தை நோக்கிப் பறந்து செல்கிறான். அப்போது அந்த விமானம், பூமியில் மனிதர்கள் தாம் செய்த பாவங்களுக்காக எமதர்மன் விதித்த கொடுமையான தண்டனைகளை, அனுபவித்துக் கொண்டிருந்த நரகத்தின் வழியாகச் சென்றது. பறந்து சென்ற விமானத்திலிருந்து வந்த குளிர்ந்த காற்று நரகத்தில் துன்பங்களை அனுபவித்திருந்தவர்கள் மீது பட்டதால், அத்துன்பங்களின் கொடுமை ஓரளவுக்குக் குறைந்ததாக அவர்கள் உணர்ந்தனர். உடனே அவர்கள் ஜனகனை நோக்கி, அவன் அங்கேயே தங்கி, தம்முடைய துன்பத்தைப் போக்குமாறு ஒருமித்த குரலில் வேண்டினர். அவர்களுடைய கெஞ்சலைக் கேட்டுத் துணுக்குற்ற ஜனகன், தன்னுடைய விமானத்தை நிறுத்தி, எமதர்மனின் இருப்பிடமான ஷைமினிபூரின் வாயிலில் போய் நின்றான். நரகத்தின் எல்லைக்குள் ஜனகனைக் கண்டு எமன் துணுக்குற்றான். அவனை வரவேற்ற எமன், ஜனகன் வழிதவறி வந்து விட்டானா என்று வினவுகிறான். புனிதத்துவம் வாய்ந்த ஜனகனைப் போன்றவர்கள் வரக்கூடிய இடம் இது அன்று என்கிறான். பின்னர் எமன், பூமியில் மனிதர்கள் செய்கின்ற பலவகையான பாவங்களுக்கும் அங்கே அளிப்படும் பலதிறப்பட்ட கொடுமையான தண்டனைகளைப் பற்றி ஜனகனுக்கு விவரிக்கிறான். நரகத்தில் உள்ளவர்கள் அனுபவிக்கின்ற கொடுமையான தண்டனைகளைக் கேட்ட ஜனகன் நெஞ்சம் நெகிழ்ந்து, இரக்கம் மேலிட்டு அவர்களை மீட்க விருப்புற்றவனாக, அவர்களை நரகத்தின் பிடியிலிருந்து விடுவிக்குமாறு எமதர்மனை வேண்டுகிறான். அவர்கள் செய்த பாவங்கள் மிகக் கொடுமையானதால் அவர்கள் விடுதலை பெறும் நாள் வெகு தொலைவில் உள்ளது என்று எமதர்மன் விடையிறுக்கிறான். "அதற்கு ஏதேனும் பரிகாரம்

உள்ளதா" என்று ஜனகன் வினவுகிறான். எமதர்மனும், "அதற்குப் பரிகாரம் இருக்கிறது; இராமன்பால் நீ செலுத்திய பக்தியினால் பெற்ற புண்ணியத்தில் பாதியை நீ அவர்கள் அனைவருக்கும் பகிர்ந்து அளித்தால், அவர்கள் நிச்சயம் விடுதலை பெறுவர்" என்கிறான். ஜனக மன்னனும் அவ்வாறே செய்ய, நரகத்தில் இருந்த அனைவரும் மீட்சி பெற்றனர்.

பின்னர் ஜனகன், தான் நரகத்திற்குச் செல்லுமளவுக்குக் கொடிய பாவம் ஏதும் செய்யாதபோதும் அங்குச் செல்லுமாறு நேர்ந்தது ஏன் என்று எமதர்மனிடம் வினவுகிறான். ஒருமுறை ஜனகன் மேய்ந்து கொண்டிருந்த பசுவை விரட்டியடித்ததால் அவ்வாறு நேர்ந்தது என்று எமதர்மன் அவனிடம் கூறுகிறான். பசுவின் புனிதத்துவத்தைப் பற்றி ஜனகன் முழுமையாக அறிந்திருந்தபோதும், அவனையறியாமலேயே புனிதப்பசுவை விரட்டிய குற்றம் புரிந்ததற்காக, தன் கடமையிலிருந்து சிறிதளவு வழுவியதற்காக,. நரகத்திற்குச் செல்லுமாறு நேர்ந்தது.

ஜனகனின் கதையைச் சொல்லிய ஜபாலி, ருதாம்பரன் ஒரு பசுவுக்குப் பணிவிடை செய்து வழிபாடு செய்தால் ஒரு மகனைப் பெறுவான் என்று உறுதியளிக்கிறார். அவ்வாறே ருதாம்பரனும் ஒரு பசுவைத் தேர்ந்து எடுத்து வழிபாடு செய்து பணிவிடைகள் செய்து வருகிறான். கடைசியில், அவனுடைய பக்தி சிரத்தையான பணிவிடையில் மகிழ்ந்த பசு, விரைவிலேயே அவனுக்கு ஒரு மகன் கிடைப்பான் என்று அருளிவிட்டு, பசுக்களின் உலகமான தேனுலோகத்திற்குச் சென்று விடுகிறது. விரைவிலேயே ருதாம்பரனின் மனைவி ஆண் மகவு ஒன்றைப் பெற்றாள். அதற்குச் சத்யவந்தன் எனப் பெயரிடுகின்றனர். அவன் வளர்ந்து பெரியவனாகிய பின்னர், அவனுக்கு முடிசூட்டிவிட்டு ருதாம்பரன் தவம் செய்யப் போய்விடுகிறான். சத்திய, தர்ம நெறிப்படி சத்யவந்தன் அந்நாட்டை ஆண்டு வருகிறான்: ருதாம்பரனும் ஸ்ரீராமனை தேவர் தலைவனாக எண்ணி அவனை நேரில் தரிசிக்க வேண்டி எப்போதும் தியானத்திலேயே இருக்கிறான்.

இப்படியாக, தேஜபுரத்தைப் பற்றியும் அதன் அரசனைப் பற்றியும் கமதி விவரித்து வரும்போது, அஸ்வமேத யாகக் குதிரை அந்நகருக்குள் நுழைகிறது. நகரக் காவலர்கள் குதிரையைத் தடுத்து நிறுத்தி அதனைச் சத்யவந்தன் முன் இட்டுச் செல்கின்றனர்.

குதிரையின் நெற்றியிலே இராமனின் பெயரைக் கண்ட சத்யவந்தன், பெருமகிழ்வுற்று, முழு அரசமரியாதைகளுடன் சத்ருக்கனனை வரவேற்கச் செல்கிறான். சத்ருக்கனனுக்கு ராஜபோக வரவேற்பை நல்கிய சத்யவந்தன் ஸ்ரீராமனுடைய மேலாதிக்க ஆட்சிக்குத் தன் நாட்டைத் தாரைவார்த்துத் தந்துவிட்டு, குதிரையைப் பின்தொடர்ந்த சத்ருக்கனனுடனே சென்றுவிட்டான்.

சத்ருக்கனனும், இராமன்பால் சத்யவந்தன் காட்டிய பக்தியில் மகிழ்ந்து, அவன் அளித்த நாட்டுக்கு அவன் மகன் ருக்மாவை அரசனாக்கிவிட்டுத் தன் வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்தான்.

7. சப்தாக்ஷர மந்திரம் :

இராவணனின் நெருங்கிய சகாவான விட்யுன்மாலி அசுரனைக் கொன்ற பின்னர், சத்ருக்கனன் தன்னுடைய யாகப் பயணத்தைத் தொடர்கிறான். கடுமையான குளிர்காலத்தில் (இங்கே அப்பருவத்தைப் பற்றிச் சுருக்கமாக வருணிக்க முத்தண்ணா மறக்கவில்லை) அஸ்வமேத யாகக் குதிரை, ஆரண்யகா என்ற முனிவரின் குடில் எல்லைக்குள் அடியெடுத்து வைக்கிறது. சத்ருக்கனனும் அவனைத் தொடர்ந்து வந்தவர்களும் குடிலுக்குள் சென்று முனிவரை வீழ்ந்து வணங்குகின்றனர். எதிர்பாராமல் வந்த அரச விருந்தினரை ஆரண்யகா மிகவும் பரிவுடன் உபசரிக்கிறார்.

இந்த இடத்தில் மனோரமா இடைமறித்து ஏதோ கேட்க, சத்ருக்கனனுக்கு முனிவர் அளித்த உபசரிப்பைப் பற்றி மேலும் சிலவற்றை முத்தண்ணா சொல்ல விரும்புகிறார்.

மனோரமா : என் அன்பரே! என்ன மாதிரியான உபசரிப்பு? இன்மொழி முகமனா? வெறும் வாய்ப் பேச்சுதானா?

முத்தண்ணா: இல்லை... இல்லை... வெறும் வாய் வார்த்தையில்லை. விருந்தினரின் கை - கால் கழுவ நீர் தருதல், அவர்களுக்கு வசதியான இருக்கை அளித்தல், நாவிற்கினிய உணவு படைத்தல், முகமலர்ந்து அவர்களுடன் உரையாடுதல் அனைத்துமேதான்.

மனோரமா : சத்ருக்கனனுடன் வந்த ஆயிரக்கணக்கான படைவீரர்கள் அனைவருக்கும் முனிவர் உணவும் பானமும் அளித்தார் என்கிறீர்களா?

முத்தண்ணா : ஆமாம். எல்லாருக்குமே சுவையான உணவுகளை வயிறாரப் படைத்தார்.

மனோரமா : ஆச்சரியமாக இருக்கிறதே! அவரால் அவற்றை எல்லாம் எப்படிச் செய்ய முடிந்தது?

முத்தண்ணா : என்ன இது? முனிவர்களுடைய தவ வலிமையையும், புனித மந்திரங்களின் வலிமையையும் குறைத்து மதிப்பிட முடியுமா? ஒரு கண நேரத்தில் அவர்கள் விரும்பியது எதுவானாலும் பெற்றுவிடுவார்கள்.

மனோரமா : மிகவும் சக்திவாய்ந்தவர்கள்தாம்! ஆமாம் அது என்ன மந்திரம்?

முத்தண்ணா : அது என்னவென்று கேட்கிறாயா! ஏகாக்ஷரி (ஒரெழுத்தாலானது) த்வ்யாக்ஷரி (ஈரெழுத்தால் ஆனது) த்ரியாக்ஷரி (மூன்றெழுத்தாலனது) சதுராக்ஷரி (நான்கெழுத்தாலானது) பஞ்சாக்ஷரி (ஐந்தெழுத்தாலானது) சதாக்ஷரி (ஆறெழுத்தால் ஆனது) போன்ற பல மந்திரங்களில் அது ஒன்று.

மனோரமா : அதனை உச்சரித்தால் என்ன பலன் கிடைக்கும்?

முத்தண்ணா : மந்திரங்களைத் தொடர்ந்து உச்சரித்து, மந்திர சித்தியை ஒருவர் அடைந்துவிட்டால், கடவுள் அவர் முன்தோன்றி, அவர் வேண்டும் வரத்தை அளிப்பார்.

மனோரமா : ஓ! அப்படியானால், முனிவர்கள் எந்தவிதத் துன்பமும் இன்றி, தாம் விரும்புவதை எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் பெறலாம் அல்லவா?

முத்தண்ணா : ஆமாம்... அப்படித்தான்.

மனோரமா : சரி. அது அப்படி இருக்கட்டும். ஆனால், உங்களைப் போன்ற கவிஞர்கள் வீட்டுத்

தேவைகளைப் பற்றிச் சற்றேனும் கவலைப் படாமல், எப்போதும் அர்த்தமில்லாத வருணனைகளாகிய போலியான கனவுலகில் வாழ்ந்து வருகிறார்களே அவர்களுடைய வாழ்க்கை எப்படி? அவர்கள் அன்றாட உணவுக்கு என்ன செய்வார்கள்? அவர்கள் எதை உண்பார்கள்? பெரும் முனிவர்களிடம் அவர்களுக்கும் ஏதேனும் ஒரு ஜெபத் தீக்கை இருந்தால் நல்லது அல்லவா?

முத்தண்ணா : (புன்முறுவலுடன்) என்ன? என்னைப் போன்றவர்களின் நிலையைப் பார்த்து நகைக்கிறாயா? என்னைப் போன்ற கவிஞர்களுக்கு என்ன குறை? நாங்கள் விரும்புகின்ற எதுவானாலும் அதைப் பெறக்கூடிய ஜெப ஆற்றல் எங்களிடம் இல்லை என்றால் காட்டில் வசிக்கும் யோகியிடம் சென்று தீக்கை பெற்று வரவேண்டியதுதான். ஆனால் காட்டை நாடாக்கவும், நாட்டைக் காடாக்கவும் கூடிய ஆற்றல் காட்டில் குடில்களில் வாழும் துறவியரைக் காட்டிலும் கவிஞர்களிடம் இல்லையா? அவர்கள் உச்சரிப்பது மந்திரம், அவர்கள் பிடித்திருப்பது அரிய பொக்கிஷம்! உலகங்களை அழிக்கவும், பின்னர் அவற்றை உருவாக்கவும் கூடிய கவிஞர்களின் மகத்தான ஆற்றலை நீ இன்னும் உணரவில்லை. ஆக்கவோ அழிக்கவோ, உன்னைப் பாடச் செய்யவோ ஆடச் செய்யவோ, உன்னைப் போற்றிப் புகழவோ, வசைபாடவோ, இன்னும் என்னென்ன உள்ளனவோ அத்தனையும் செய்யும் ஆற்றல் படைத்தவர்கள் அவர்கள்.

மனோரமா : (வியப்புடன்) உங்களுடைய மந்திரங்கள் அதுபோன்ற ஆச்சரியங்களை உண்டாக்குமா?

முத்தண்ணா: பயப்படாதே! நிச்சயம் அவற்றால் முடியும்.

மனோரமா : உங்களிடமும் அதுபோன்ற மந்திரங்கள் உள்ளனவா?

முத்தண்ணா : அவை என் உடலில் அப்படியே ஊறிப்போய் உள்ளன!

மனோரமா : ஓ! அப்படியானால், நிஜமாலுமே நீங்கள் பெரிய ஆள்தான்! உங்களுக்கு யார் தீக்கை அளித்தது?

முத்தண்ணா : என்னுடைய குரு. நான் சிறுவனாக இருந்தபோது தீக்கை பெற்றேன்.

மனோரமா : ஓ! என் நாதா! அது என்ன மந்திரம், தயை கூர்ந்து எனக்குச் சொல்லுங்களேன்?

முத்தண்ணா : ஹ்ஹஹாஹா... நல்லா இருக்கே. அந்த மந்திரங்களையா! அவற்றை நான் உனக்குச் சொல்ல வேண்டும் என்கிறாயா? மந்திரங்களைப் பற்றி பெண்களுக்குத் . தீக்கை அளிப்பது முறையாகுமா?

மனோரமா : நான் ஒன்றும் உங்களை அந்த மந்திரங்களைச் சொல்லி தீக்கை அளிக்குமாறு கேட்கவில்லை. அவற்றின் பெயர்களை மட்டுமே தெரிந்து கொள்ள விரும்பினேன்.

முத்தண்ணா : என்னுடைய மந்திரங்கள் முனிவர்களுடைய மந்திரங்களைப் போன்றவை அல்ல. என்னுடையவை வித்தியாசமானவை. எங்களுடையவை மிக நீளமானவை. அவை ஓரெழுத்தாலோ, ஈரெழுத்தாலோ ஆனவை அல்ல. ஆறெழுத்தால் ஆனவை கூட அல்ல. அது ஏழெழுத்துக்களால் ஆன பீஜமந்திரம்! எல்லா மந்திரங்களிலும் மணிமகுடம் போன்றது அது. அது ஏழெழுத்துக்களாலான மேம்பட்ட சப்தாக்ஷரி மந்திரம்.

மனோரமா : அந்த மந்திரத்திற்குரிய கடவுள் யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா?

முத்தண்ணா : அதன் கடவுள் ஜ்யேஷ்டை. முன்பு ஈஸ்வரன் இந்த மந்திரத்தைச் சொல்லி சித்தி பெற்றான். இந்த மந்திரத்தைத் தோற்றுவித்த முனிவன் அவன்தான்.

மனோரமா : ஓ- இந்த மந்திரத்திற்குத்தான் எத்துணை பெரிய சக்தி! அன்பரே- நான் உங்கள் கால்களில் வீழ்ந்து கும்பிடுகிறேன். என்னுடைய வேண்டுகோள் இதுதான். தயைசெய்து அந்தப்பெரும் மந்திரத்தை எனக்குச் சொல்லித் தாருங்கள்.

முத்தண்ணா: நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அது ஒரு சப்தாக்ஷரி மந்திரம் என்று.

மனோரமா : அதன் பெயர் மட்டும் போதாது. அந்த மூல மந்திரத்தையே எனக்குச் சொல்லித் தாருங்கள்-

முத்தண்ணா: அட கடவுளே! என்ன பிடிவாதக்காரியாக இருக்கிறாள்! முதலில் பெயரைக் கேட்டாள்! இப்போது என்னடாவென்றால் மந்திரத்தையே சொல்லித்தா என்கிறாள். என்னுடைய ஜனிவாரத்தின் (பூணூல்) மீது சத்தியம்; என்னுடைய உத்தரியத்தின் (மேலாடை) மீது சத்தியம் முடியாது. முடியாது. அதைச் சொல்லித்தர முடியாது. மந்திரத்தைக் கேட்கவோ உச்சரிக்கவோ உனக்கு எவ்வித உரிமையும் இல்லை. அதைச் சொன்னால் உன் கண் குருடாகி விடும்; நீ முடமாகி விடுவாய்!

மனோரமா : நான் அதைக் காதால் கேட்டால் என்ன பாவம்? வேதங்கள் ஜெபிக்கப்படும்போது அதை ஒரு பெண் கேட்கக்கூடாதா? உங்களுக்கு எவ்வளவு திமிர்?

முத்தண்ணா: வேத மந்திரத்தையும், இதையும் ஒப்பிட்டுப் பேசாதே. இது 'மிகவும் ரகசியமான மந்திரம்'. ஆமாம் ரகசியமானது. எனவே, அதை நான் உனக்குச் சொல்ல மாட்டேன். நீயும் அதைச் சொல்ல வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது. சரிசரி நான் கதையைத் தொடர்கிறேன். ஆரண்யகா முனிவர்-

மனோரமா : நிறுத்துங்கள். உங்கள் கதை எனக்கு வேண்டாம். உங்களுடைய மந்திரம் எனக்குத் தெரிந்தாக

வேண்டும். என் தாலி சத்தியமாகச் சொல்கிறேன்– அந்த மந்திரத்தை நீங்கள் சொல்லாதவரை, நீங்கள் மேற்கொண்டு கதையைச் சொல்ல விடமாட்டேன். (அவர் காலில் நெடுஞ்சாண் கிடையாக வீழ்கிறாள்.)

முத்தண்ணா : என்ன பிடிவாதக்காரியாக இருக்கிறாளே! அந்த மந்திரத்தை மற்றவர்களுக்குச் சொல்லி அதன் மகிமையைக் கெடுக்க முடியுமா? இளம் மனைவியரிடம் கவிஞர்கள் என்ன பாடுபட வேண்டியுள்ளது. (யோசிக்கிறார்) இள நங்காய்! கவனமாகக் கேள்– இதை வேறு எவரிடமும் நீ சொல்லிவிடக் கூடாது.

மனோரமா : யாரிடமும் மூச்சு விட மாட்டேன்.

முத்தண்ணா : அப்படியானால் சரி... கவனி... பா... வ... வேறுயாருக்கும் சொல்ல மாட்டேன் என்று சத்தியம் செய்.

மனோரமா : என் குலதெய்வத்தின் மீது சத்தியம்... உங்கள் கையிலடித்துச் சத்தியம் செய்கிறேன்– என்னை நம்புங்கள்.

முத்தண்ணா : இல்லை, இல்லை! பாவதி– பி– பெண் இனத்தையே நம்பக்கூடாது என்று அனுபவசாலிகள் சொல்வார்கள். மறதியாக உன் வாயைத் திறந்து யாரிடமாவது இந்த ரகசியத்தைச் சொல்லி விட்டால், எங்களைப் போன்றவர்கள் தொலைந்தோம்.

மனோரமா : அதுபோல் நடக்க நான் என்ன முட்டாளா? என் கண்ணால் சத்தியம் செய்கிறேன். என் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடப்பேன்.

முத்தண்ணா : (ரகசியமான குரலில்) பவதி பிக்ஷாந்தேகி (அம்மா பிச்சை போடுங்க தாயே) கவிஞர்கள் வைத்துள்ள விசேஷமான சப்தாக்ஷரி மந்திரம் இதுதான். யாரிடமும் சொல்லிவிடாதே.

மனோரமா : (கோபப்படுவதுபோல்) என்ன அன்பரே! நீங்கள் மெய்யாலும் ஏதோ சொல்லப்போகிறீர்கள் என்று எண்ணினேன். சும்மாவானாலும் நீங்கள் என்னிடம் விளையாடுகிறீர்கள் என்று நான் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை. என்னைப் போல் ஒன்றுமறியாத பெண்களைத் தவிர கற்றறிந்த எவருமே உங்கள் கவிதையைப் பாராட்ட மாட்டார்கள்.

முத்தண்ணா: போதுமா வேடிக்கை! சரி... மீதிக் கதையையும் கேள்.

சுவாரஸ்யமான இந்த உரையாடல் முத்தண்ணா - மனோரமா தம்பதியரின் மகிழ்ச்சிகரமான இல்லறத்தின் நகைச்சுவையை வெளிப்படுத்துகிறது. இந்த உரையாடல், பொதுவாக எழுத்தாளர்களைப் பற்றியும், சிறப்பாகக் கவிஞர்களைப் பற்றியும் அவர்களின் வாழ்க்கை நிலையை விளக்கும் அங்கதமாகத் திகழ்கிறது.

8. தேவபுரத்து வருணனை :

அஸ்வமேத யாகக் குதிரையின் அடுத்தகட்டப் பயணத்தைப் பற்றி முத்தண்ணா தொடர்ந்து சொல்கிறார். சத்ருக்கனன் தன் பின் வந்தவர்களுடன், வீரமணி என்பவன் ஆட்சிபுரிந்த தேவபுரம் என்ற நகரத்திற்கு வருகிறான் அப்போது, அவனுடைய மகன் ருக்மாங்காதன், முற்காலத்து ருக்மாங்காதன் போலவே தீவிர ஹரிபக்தனாக, அந்தப்புரத்துப் பெண்களுடன் அரண்மனைத் தோட்டத்தில் கூடிக் களித்திருக்கிறான். நகரத்திற்குள் நுழைந்த குதிரை, அரண்மனைத் தோட்டத்தின் புல்வெளியைக் கண்டு அங்கே தாவியது. தோட்டத்தில் குதிரை மேய்வதை உடனிருந்த பெண்ணொருத்தி மூலம் கேள்விப்பட்ட ருக்மாங்காதன், வெளியே சென்று குதிரையின் நெற்றியிலிருந்த தகட்டில் பொறிக்கப்பட்டிருந்த பெயரைப் பார்க்கிறான். அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு, சத்ருக்கனனுடன் போரிடத் தீர்மானித்த ருக்மாங்காதன், அந்தக் குதிரையைப் பிடித்து லாயத்தில் மற்ற நோஞ்சான் குதிரைகளுடன் சேர்த்துக் கட்டிப்போட்டு விடுகிறான். அத்துடன் அக்குதிரையைப் பற்றித் தன்னுடைய தந்தையிடம் தெரிவிக்கிறான்.

தன் மகனுடைய தீர்மானத்தைப் பற்றி அறிந்த வீரமணி, அதுபற்றித் தன் மருமகனான மகாதேவனிடம் ஆலோசனை செய்கிறான். தெய்வமாகியவனும், வலிமைமிக்க இராவணன், கும்பகர்ணன் மற்றுமுள்ள பலரையும் கொன்றழித்தவனுமாகிய ஸ்ரீராமனை எதிர்க்க வேண்டாமென்று வீரமணிக்கு மகாதேவன் அறிவுறுத்துகிறார். ஆனால் வீரமணியோ, மகாதேவனின் அறிவுரையை ஏற்காமல், உண்மையான க்ஷத்ரியனாக இராமனின் படைகளைக் களத்தில் எதிர்கொள்ளத் தீர்மானிக்கிறான். அந்த இக்கட்டான நேரத்தில் தன் பக்கம் இருக்குமாறு மகாதேவனை அவன் வேண்டிக்கொள்கிறான்.

இதனிடையில், குதிரை காணாமல் போனதைக் கண்ட சத்ருக்கனன் அதனைத் தேடுமாறு காவலர்களுக்கு ஆணையிடுகிறான். குதிரை நகரத்திற்குள் நுழைந்ததாக அவர்கள் கூறுகின்றனர். அந்நகரத்தைப் பற்றியும் அதன் அரசனைப் பற்றியும் தனக்குச் சொல்லுமாறு சுமதியிடம் சத்ருக்கனன் கேட்கிறான். சுமதியும், வீரமணியைப் பற்றியும், மகாதேவனிடம் இருந்து அவன் பெறுகின்ற உதவியைப் பற்றியும் சத்ருக்கனனுக்கு எடுத்துரைத்து, அந்த நகரத்தின் மீது போர் தொடுக்குமாறு அறிவுறுத்துகிறான். பின்னர் மூண்ட கடுமையான போரில் புஷ்கலன் எய்த அம்புகளால் ருக்மாங்காதன் கடுமையாகக் காயமுற்று மூர்ச்சையாகி விடுகிறான். தன் மகன் இறந்து விட்டான் என்று எண்ணிய வீரமணி புஷ்கலன் மீது சரமாரியாக அம்புகளைத் தொடுக்கிறான். வீரமணி எய்த அம்பினால் மூர்ச்சையான புஷ்கலன் தரையில் வீழ்கிறான். புஷ்கலனுக்கு நேர்ந்ததைக் கண்ட சத்ருகனனும் மற்றவர்களும் வீரமணியைத் தாக்குகின்றனர். மகாதேவன் வீரமணிக்கு உதவ விரைகிறான் வீரமணியும் சத்ருக்கனனும் மோதிக் கொண்டிருக்கும் போது, அனுமன் மகாதேவனை எதிர்க்கிறான். சத்ருகனனை வீரமணி வெற்றிகொண்டு விடக்கூடிய நிலை ஏற்பட்டது. போரிலே தான் தோற்றுப் போவதாக எண்ணிய சத்ருக்கனன் என்ன செய்வதென்று அறியாமல் இராமனை எண்ணி வழிபடுகிறான். யாகத்தைச் செய்வதற்காக, புனிதமாகிக் கொண்டிருந்த இராமன், சத்ருக்கனனின் நிலையை அறிந்து, உடனடியாகப் போர்க்களத்தை அடைகிறான் எல்லாம் நல்லவிதமாக நடக்கும் என்று தன் தம்பிக்கு இராமன் ஆறுதல் அளிக்கிறான் இராமனைப்

போர்க்களத்தில் கண்ட மகாதேவன், அவன் தன் தம்பியையும் மற்றவர்களையும் காப்பாற்றவே அங்கு வந்துள்ளான் என்பதை உணர்கிறான். அனுமனுடன் போரிடுவதை ஒருகணம் நிறுத்திவிட்டு ஸ்ரீராமனைத் தரிசிக்கச் செல்கிறான். அனுமன், சுக்ரீவன் உள்ளிட்ட வானரசேனை அனைத்தும் இராமனைச் சூழ்ந்து கொள்கின்றன. மகாதேவன், இராமனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, தன் தெய்வமாகிய ஸ்ரீராமனையே எதிர்த்துப் போரிட்டதற்காகத் தன்னை மன்னிக்குமாறு வேண்டுகிறான். ருக்மாங்காதனும் ஸ்ரீராமனின் கருணையை வேண்டுகிறான். பின்னர், மகாதேவன், குதிரையை அழைத்துவரச் செய்து ஸ்ரீராமனுக்கு வழிபாடு நடத்தச் செய்கிறான். இராமனும், தனக்கும் மகாதேவனுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை என்பதை வெளிப்படுத்துகின்றவாறு மிகவும் தோழமையான முறையில் நடந்து கொள்கிறான். இறுதியில் இராமன் அனைவரிடமும் அன்புடன் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து மறைந்து விடுகிறான்.

இந்த நிகழ்ச்சியிலும்கூட, அரனுக்கும் அரிக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை என்று ஸ்ரீராமனே தன் வாயால் சொல்லியுள்ள போதிலும், ராமபக்தியே மிகவும் உயர்த்திப் பேசப்படுகிறது. இராமன் திருப்பாதங்களில் சிவனை வீழ்ந்து வணங்கச் செய்து, இராமனே உலகின் முழுமுதற் கடவுள் என்று கூறச் செய்திருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இது புராணகாரருடைய கருத்தாயினும், முத்தண்ணா அதை ஏற்றிருக்கிறார்.

9. அனுமனின் தோல்வி :

ராமாஸ்வமேதத்தின் இந்தப் பதினைந்தாவது அத்தியாயத்தில் அனுமன் முக்கிய இடம் பெறுகிறான். எனவே இதற்கு அனுமன் என்றே தலைப்பிடப் பட்டுள்ளது. முன்பு கண்ட சம்பவங்களில் இருந்தது போன்றே ராமபக்தியே மேலோங்கி நின்று பிரதான சம்பவங்களைத் தொடர்புபடுத்துகிறது.

சத்ருக்கனனும் அவனுடைய சகாக்களும் எதிர்கொண்ட இன்னல்களை அனுமன் தீர்த்து வைப்பதான இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் இதில் இடம் பெற்றுள்ளன.

தேவபுரத்திலிருந்து புறப்பட்ட அஸ்வமேத யாகக் குதிரை ஹேமகூடத்திற்கு அருகில் ஒரு காட்டிற்குள் செல்கிறது. பல வகையான மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ள காடு மிகவும் இருளாக இருக்கிறது. (இங்கே முத்தண்ணா தமக்குத் தெரிந்த பலவகையான மரங்களின் தூய கன்னடப் பெயர்களைத் தந்திருக்கிறார்.) கும்மிருட்டின் காரணமாக, பரிச்சயமில்லாத அந்தக் காட்டுக்குள்ளே குதிரையால் நிதானமாக நடந்து செல்ல முடியவில்லை. அதனால், இருட்டுக்குள்ளே ஒரு தட்டையான பாறைக்குள் தவறிச் சென்ற குதிரையின் கால்கள் அங்கே சிக்கிக் கொண்டு விட்டன. குதிரையைப் பின்தொடர்ந்து சென்ற வீரர்கள், குதிரையை அங்கிருந்து நகர்த்தப் பலவகையிலும் முயன்றபோதும், அதனால் இம்மிகூட நகரமுடியவில்லை. சுக்ரீவன், ஜாம்பவான் போன்ற தளபதிகள் பலரும் கூட குதிரையை நகர்த்த முயன்று தோற்றுப் போயினர். குதிரையின் நிலை கண்ட சத்ருக்கனன் பெரிதும் கவலையுற்று என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தான். அவன் உடனிருந்த அமைச்சன், அக்காட்டுக்குள் எங்கேயோ ஒரு துறவுக்குடில் இருக்க வேண்டும் என்றும், இனம்புரியாத அந்த இக்கட்டுக்கு அந்தக் குடில்தான் காரணமாக இருக்க வேண்டும் என்றும் எண்ணுகிறான். அங்கே ஏதேனும் குடில் உள்ளதா என்று கண்டறிய நாலாபுறமும் சேவகர்கள் அனுப்பப்பட்டனர். இறுதியாகத் தொலைவில் ஒரு குடில் இருப்பதைக் கண்டறிந்த சேவகர்கள் அச்செய்தியைத் தம் தலைவனிடம் அறிவித்தனர்.

அதுகேட்டு மிகவும் மகிழ்ந்த சத்ருக்கனன், அனுமன், ஜாம்பவான், புஷ்கலன், ஏனைய வீரர்கள் புடைசூழ அக்குடிலுக்குச் செல்கிறான். குடிலுக்குள் சென்றவர்கள், அங்கே ஆச்சார்ய சௌனகர் தம்முடைய சீடர்களுக்கு வேதத்தைப் போதித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். சத்ருக்கனனும் மற்றவர்களும் அவர்முன் நின்று கைகூப்பி வணங்கினர். முனிவர் அவர்களை அமரச் செய்து, குடிலுக்கு வந்த காரணத்தை வினவினார். குதிரை திடீரென்று நின்று, கல்லிலே சிக்கிக் கொண்டதைச் சத்ருக்கனன் அவரிடம் சொன்னான். குதிரையின் இயக்கம் தடைப்பட்டதற்குக் காரணமான, பின்னணியில் உள்ள கதையை சௌனக முனிவர், சத்ருகனனுக்குச் சொன்னார்: சத்வனன் என்ற பெயருள்ள பிராமணன் நீண்டகாலம்

கடுமையாகத் தவம் செய்து மகேஸ்வரனை நேரிலே தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றான். பின்னர் இயற்கை எய்திய சத்வனன், அவன் செய்த புண்ணியத்தின் காரணமாகச் சொர்க்கத்திற்குப் போனான். அங்கே அவன் தேவகன்னியருடன் இன்பமாக வாழ்ந்திருந்தான். ஒருமுறை அவன் ஐம்பாவதி ஆற்றிலே தேவ கன்னியருடன் புனலாட்டு நடத்திக் கொண்டிருந்தபோது, அங்கே தேவர்கள் சிலர் புனித நீராடிக் கொண்டிருந்தனர். சத்வனன் புனலாட்டின்போது அந்தத் தேவர்களைக் கவனியாது நீரைக் கொப்பளித்துத் தெளித்து விளையாடிக் கொண்டிருந்தான். அதனால் கோபமுற்ற அவர்கள், சத்வனன் பூமியிலே ஓர் அரக்கனாகப் பிறக்க வேண்டும் எனச் சபிக்கின்றனர். சிறுபிள்ளைத் தனமான தனது செயலுக்காகப் பெரிதும் வருந்திய சத்வனன், அவர்களிடம் சாபத்தைப் போக்குமாறு இறைஞ்சுகிறான். கோபம் தணிந்த முனிவர்கள், சாப விமோசனத்திற்கு, "இராமனுடைய அஸ்வமேதயாகக் குதிரை இவ்வழியே வரும். அப்போது அதனை நீ தடுத்து நிறுத்த வேண்டும். அப்போது நீ இராம சரிதத்தை உன் நெஞ்சாரக் கேட்டால் இந்தச் சாபத்திலிருந்து விமோசனம் பெறுவாய். அதுவரை அந்தக் காட்டிலே நீ ஓர் அரக்கனாகவே இருக்கக் கடவது" என்று வழி சொன்னார்கள்.

இதை விவரித்த சௌனகர், இராமசரிதத்தை உரைக்க ஏற்பாடு செய்யுமாறு சத்ருக்கனனிடம் கூறுகிறார். அப்பணியை மேற்கொள்ளுமாறு அனுமனிடம் சத்ருக்கனன் கூறுகிறான். அவ்வாறே அனுமனும் குதிரை அசையாது நின்றிருந்த இடத்திற்குச் சென்று தான் மீண்டும் மீண்டும் பலமுறை கேட்டிருந்த இராமசரிதத்தை உரைக்கிறான். உடனே குதிரை தன்போக்கில் செல்லத் தொடங்கியது. சத்வனனும் சாபம் நீங்கி, புஷ்பக விமானத்தில் சொர்க்கத்திற்குச் சென்றான்.

இப்போது குதிரை புதிய உத்வேகத்துடன், தொடர்ந்து செல்லத் தொடங்கியது. சுரதன் என்பவன் ஆட்சிபுரிந்த குண்டலபுரத்திற்குள் அது நுழையப் போனது. சுரதன், ஸ்ரீராமச்சந்திரனின் தீவிர பக்தன். இராமனை நேரில் தரிசிக்க வேண்டுமெனப் பேரவாக் கொண்டிருந்தான். அவனுடைய தீவிர பக்தியைப் பரிசோதிக்க எமன் எண்ணினான். அதற்காக, எமன் ஓர் இளந்துறவி வடிவம் கொண்டு சுரதனின் அரண்மனைக்குச்

சென்றான். துறவி வடிவில் வந்த எமனை மிகுந்த மரியாதையுடன் வரவேற்ற சுரதன், அவனுடைய திடீர் வருகையின் நோக்கத்தை வினவினான். போலித் துறவியும், தான் தர்மத்தின் ரகசியங்களைப் போதிக்க வந்திருப்பதாகக் கூறினான். சுரதனும், பிறப்பு - இறப்பு என்னும் தளையில் இருந்து எங்ஙனம் இறுதி விடுதலையைப் பெறுவதென்று போதிக்குமாறு அத்துறவியை வேண்டுகிறான். இறுதியான விடுதலையைப் பற்றி விளக்கிய அத் துறவி, அந்த விடுதலை நிலையை எட்டுவதற்காக மக்கள் முயலும்போது, கர்ம வழியைப் பின்பற்றி, அதனால் சொர்க்கத்தில் மகிழ்ச்சியாக இருக்கும் வாய்ப்பை இழந்து விடுகின்றனர் என்கிறான். ஆனால் சுரதனோ அக்கருத்தை ஏற்காமல் கர்ம பலன்கள் வெகுகாலம் நீடித்திருப்பதில்லை என்கிறான். துறவியோ கர்ம வழியின் பெருமையை வலியுறுத்திப் பேசுகிறான். அதற்கு மசியாத சுரதனோ, ராமபக்தியின் ஆற்றலில் தான் கொண்டுள்ள நெறிபிறழாத நம்பிக்கையை எடுத்துரைக்கிறான். போலித் துறவியோ மீண்டும் மீண்டும், சுரதன் தன் முன்னோர்களைப் போல, கர்ம நெறியைத் தர்ம நெறியாகக் கொள்ளுமாறு இணக்குவிக்க முயற்சிக்கிறான். கர்ம நெறியை உயர்த்திப் பேசிய அத்துறவி, ஹரி, ஹரன், இராமன் அனைவரையும் பழித்துப் பேசுகிறான். இராமனுடைய திருநாமத்தை இழித்துரைப்பதைக் கேட்ட சுரதன் வெகுண்டு, இராமனைப் பழித்த துறவியின் நாவைத் துண்டிக்கத் தன் சேவகர்களுக்கு ஆணையிட எத்தனிக்கிறான். அச்சமயத்தில் எமதர்மன் தன் சுயஉருவை வெளிப்படுத்தி, "இராமன்பால் நீ காட்டுகின்ற பக்தியை மெச்சுகிறேன். நீ வேண்டிய வரங்களைக் கேட்பாயாக" என்று சுரதனுக்கு அருளுகிறான். எமதர்மனின் கால்களில் வீழ்ந்து வணங்கிய சுரதன் கூப்பிய கைகளுடன், "ஸ்ரீராமன் என் முன் எழுந்தருளுவதைத் தவிர வேறு வரம் ஏதும் எனக்கு வேண்டாம்" என்கிறான். எமதர்மனும் ராகவன் நிச்சயம் அவன் முன் எழுந்தருளி தன் மெய்யான பக்தர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவான் என்று அருளிச் சென்று விடுகிறான்.

சுமதி கூறிய இந்தக் கதையைக் கேட்ட சத்ருக்கனன், மேற்கொண்டு என்ன செய்வதென்று அமைச்சருடன் ஆலோசனை செய்கிறான் குண்டலபுரத்து நகர்க்காவலன் குதிரையின் வருகையைப் பற்றி அறிவித்துவிட்டு, அதன்

நெற்றியில் கட்டப்பட்டிருந்த வாசகங்கள் பொறிக்கப்பட்ட தகட்டினையும் சுரதனிடம் அளிக்கிறான். அத்தகட்டில் பொறிக்கப்பட்டிருந்த வாசகங்களைப் படித்த சுரதன், எமதர்மனின் வாக்குப் பலிக்கப் போவதை அறிந்து பெருமகிழ்ச்சியுடன், குதிரையைப் பிடித்து வைத்துக்கொண்டு, ஸ்ரீராமன் தன்முன்னே எழுந்தருளும் வரை போரிடுவது என்று தீர்மானிக்கிறான். அவ்வாறே தன் படைத் தளபதிகளுக்கு ஆணையிட்டுவிட்டு, தன்னுடைய பத்து மகன்களுடன் போருக்கு ஆயத்தமாகிறான்.

கீர்த்திக்கும் தீரத்திற்கும் பெயர்பெற்ற வாலியின் மகனான அங்கதன், சத்ருக்கனன் சார்பாகச் சுரதனிடம் சென்று, இராமனுக்குத் திறையும் பரிசும் அளிக்குமாறும், குதிரையை விடுவிக்குமாறும் கூறுகிறான். தன் தீர்மானத்தில் உறுதியாக இருந்த சுரதன், "என் தெய்வமாகிய ஸ்ரீராமனுக்கு நான் எதிரியல்லேன். ஏன் இராமனே என்னிடம் வந்து அவனுடைய குதிரையைக் கேட்க வேண்டியது தானே? இராமனுக்காக என்னிடமுள்ள அனைத்தையும் தருவேன்; என் உயிரையும் தருவேன். ஸ்ரீராமனே இங்கு எழுந்தருளாதவரை நான் குதிரையை விடுவிக்க மாட்டேன்." என்று கூறுகிறான். சத்ருக்கனன் சொற்படி நடக்குமாறும் இல்லையென்றால் அனுமன், புஷ்கலன் போன்ற தளபதிகளைக் கொண்ட சத்ருக்கனனின் படையிடம் அகப்பட்டுப் பயங்கரமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் சுரதனுக்கு அங்கதன் அறிவுரை கூறுகிறான். சுரதனோ தன் நிலையை மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறான் : "முக்கண்ணனே என்னைப் போர்க்களத்தில் எதிர்த்தாலும் நான் பணிந்து போகமாட்டேன். தெய்வத்தையும், தர்மத்தையுமே நான் போற்றுகிறேன். உன்னுடைய அச்சுறுத்தல்களுக்கு எல்லாம் நான் பயப்பட மாட்டேன்."

சத்ருக்கனின் படைகளுக்கும், சுரதனுக்கும் இடையே மோதல் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. சுரதன் தன் தேரேறி களத்தில் புகுகிறான். அவனுடைய மகன்களும் அமைச்சர்களும் பெரும் படையுடன் அவனுக்குத் துணையாகக் களத்தில் குதித்தனர். இருதரப்பிலும் வீரர்கள் கடுமையாக மோதி, முடிவேயில்லாத போர் மூண்டதுபோல் சண்டையிட்டனர். புஷ்கலனுக்கும் (பரதனின் மகன்) சம்பகனுக்கும் (சுரதனின் மகன்)

இடையேயான போர் நீண்ட நேரம் தொடர்ந்தது. இருவரும் பரஸ்பரம் வீராவேசமாக வார்த்தைகளை வீசிக்கொண்டே சரமாரியாக அம்புகளை எய்து கொண்டிருந்தனர். (இருவருக்கும் இடையேயான அப்போரை, மிக நேர்த்தியாக வீரம் கொப்பளிக்குமாறு ஏற்புடைய சொற்களால் முத்தண்ணா வருணித்திருக்கிறார்) புஷ்கலன் எய்த அம்புகளால் கடுமையாகக் காயமுற்ற சம்பகன், நினைவிழந்து தரையில் வீழ்ந்துவிடவே, அவனிடத்தில் போரிடுவதற்காகச் சுரதன் தன் தேரில் விரைகிறான். புஷ்கலனைச் சிறைப் பிடிக்கும் நோக்கில் அவன்மீது சரமாரியாக அம்புகளைச் சுரதன் எய்து கொண்டிருந்தபோது, யானையின் மீது சிங்கம் பாய்ந்தது போன்று, அனுமன் சுரதன் மீது பாய்ந்து தாக்கினான். சுரதனின் தேரை ஒரே குத்தில் தூள் தூளாக்கினான். பின்னர் இருவரும் மற்போரில் குதித்தனர். அதன்பின்னர், சுரதன் கதாயுதம், வாள் மற்றும் மந்திர சக்தி வாய்ந்த பல அஸ்திரங்களுடன் போரிட்டான். அவை அனைத்தையும் அனுமன் அழித்து விடுகிறான். சுரதன் தன்னுடைய இறுதி அஸ்திரமாக ராமபாணத்தை எய்தத் தலைப்படும்போது, அனுமன் அதை எதிர்க்காமல் ஒதுங்கி விடுகிறான். பொன்னிற இறகுடன் இருந்த அந்த அம்பினை அவன் வீழ்ந்து வணங்குகிறான். அந்த அளவுக்கு அவனுடைய இராமபக்தி இருந்தது. அனுமன் சுரதனிடம், அவன் போரில் வெற்றிபெற்றது மட்டுமின்றி ஸ்ரீராமன் அருளையும் வென்று விட்டதாகக் கூறுகிறான். அத்துடன் அவன் இராமனை வழிபட்டு அவனிடம் இப்படி இறைஞ்சுகிறான் : "நீ என்றன் தலைவன் அல்லையோ? நான் உன்றன் கீழ்ப்படிதல் மிக்க சேவகன் அல்லேனோ? மிகச் சாதாரண அரசன் ஒருவனை எதிர்த்துப் போரிடுமாறு எங்ஙனம் நான் ஆக்கப்பட்டேன்? இதுபோல் புறக்கணிக்கப்படுவதற்கு நான் என்ன பாவம் செய்தேன்? கோழையான ஓர் அரசனுக்காக என்னிடம் நீ பாரபட்சம் காட்டியுள்ளாய். உனக்காக இந்த எதிரியிடம் நான் பயந்து போனதாகக் காட்டிக்கொள்ள வேண்டியாகிவிட்டதே! இன்னும் நான் என்னைப் பணிவுடைய சேவகன் என்று சொல்லிக் கொள்ளலாமா? இன்னும் நான் அந்தக் குதிரையின் பின்னால் காவலாகச் செல்ல வேண்டுமா?" என்றெல்லாம் புலம்புகிறான். இராமன் தன்னிடம் பாரபட்சமாக நடந்து கொண்டதாக அனுமன் எதிர்ப்புக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கும்போதே ஸ்ரீராமன் யாகஞ்செய்வோருக்கு உரிய உடையில்

பிறங்கொளியுடன், சொர்க்கத்திலிருந்து நேரே அங்கு எழுந்து அருளுகிறான். அனுமன் தன் தலைவனாகிய இராமனின் திருப்பாதங்களில் வீழ்ந்து அவற்றைத் தன் ஆனந்தக் கண்ணீரால் கழுவுகிறான். சுரதனும் ஸ்ரீராமனின் பாதங்களில் வீழ்ந்து, "என் தெய்வமே! பெரும் பிழை செய்தேனே! உங்களுடைய குதிரை என்று நன்றாகத் தெரிந்திருந்தும் அதனைத் தடுத்து நிறுத்தினேனே! உங்கள் வீரர்களை இழித்துரைத்ததுடன் அவர்களிடம் போரிடவும் செய்தேனே! என்னுடைய ஒரே நோக்கம் உங்களைத் தரிசிக்க வேண்டும் என்பதே. போரில் வெற்றி பெற வேண்டும் என்பதன்று. இப்போது உங்கள் தரிசனம் எனக்குக் கிடைத்துவிட்டது. இதோ உங்கள் குதிரை. என்னுடைய திறைப்பொருள் இதோ. என்னுடைய நாடு, என் மனைவி, மகன் உள்பட என்னிடம் உள்ள அனைத்தும் உங்களுக்கே காணிக்கை. அவற்றைத் தயை கூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று மன்னிப்புக்கோரி மன்றாடுகிறான்.

ஸ்ரீராமன் அனுமனையும் சுரதனையும் எழுப்பி அவர்களை அப்படியே அரவணைத்துக் கொண்டு, அவர்களிருவரும் கோபத்தை விட்டொழிக்கச் செய்கிறான். மூர்ச்சையாகிப்போன சத்ருக்கனனின் படைவீரர்களையும் எழுப்புகிறான். இருதரப்பிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு ஸ்ரீராமன் மறைந்து விடுகிறான்.

பின்னர் சத்ருக்கனனையும் அவன் தோழர்களையும் சுரதன் நன்கு உபசரிக்கிறான். அதற்குப் பின்னர், சுரதன் உடன்வர சத்ருகனன் குதிரையின்பின் தன் பயணத்தைத் தொடர்கிறான்.

10. முடிவு :

குண்டலபுரத்திலிருந்து புறப்பட்ட குதிரை, பல இடங்களைக் கடந்து இறுதியாக, பூஞ்செடிகளும், கொடிகளும் நிறைந்து அழகுற விளங்கிய துறவுக் குடிலின் புறத்தை அடைந்தது. அங்கே இரண்டு சிறுவர்கள் அந்தக் குதிரையைப் பிடித்து மரத்திலே கட்டி வைத்துவிட்டனர்.

மனோரமா : (மிகுந்த ஆவலுடன்) என்ன துணிச்சல் அவர்களுக்கு! அமைதியான துறவுச்சாலை சூழலில் வளர்ந்த சிறுவர்களால், அஸ்வமேதயாகக்

குதிரையை எங்ஙனம் பிடித்துக் கட்டிவைக்க முடிந்தது? முறையாகப் பயிற்சிபெற்ற படைகளை எதிர்த்துப் போரிடக் கூடிய துணிவும் தீரமும் அவர்களுக்கு எப்படி வந்தது?

முத்தண்ணா : நாம் அதோடு விட்டு விடுவோம். வாழ்க்கை பாழாக்கப்பட்ட சிறுவர்களைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? கதை போதும்! கதையைச் சொல்லி எனக்கு அலுத்து விட்டது! அந்த யாகம் செய்யப்பட்டது என்று சொன்னாலே போதும்.

மனோரமா : இல்லையில்லை! அந்தச் சிறுவர்கள் போரில் வெற்றி பெற்றார்களா, தோற்றுப் போனார்களா என்று எனக்குச் சொல்லுங்களேன். இந்தக் கதையைச் சொன்னதால் உங்களுக்கு ஏன் அலுப்புத் தட்டியது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

முத்தண்ணா : நீ உன்னுடைய அன்பளிப்புகளை எனக்குத் தருவதான அறிகுறியே தெரியவில்லை. சும்மா கேட்கிறார்களே என்பதற்காக யாரேனும் கதை சொல்லிக் கொண்டிருப்பார்களா, என்ன?

மனோரமா : (புன்முறுவலுடன்) ஆமாம்... அன்பரே... நீங்கள் என்ன பிச்சை கேட்கிறீர்களா? அன்பளிப்புகளைக் கேட்டுப் பெறக்கூடாது; அவை மனம் விரும்பித் தரப்படவேண்டும்.

முத்தண்ணா : உன்னிடமிருந்து அன்பளிப்புகளை எதிர்பார்த்து, நான் நகைப்புக்கு இடமாகி விட்டேன். சரி_ நான் பொறுத்திருந்து பார்க்கிறேன். அந்தச் சிறுவர் களைப் பற்றிய கதையைச் சொல்லுகிறேன். அதற்கு முன்னால், வால்மீகி முனிவருடன் அவருடைய ஆசிரமத்திற்குச் சென்ற சீதை என்னவானாள் என்று தெரியுமா உனக்கு?

மனோரமா : என்ன மறதி எனக்கு! சீதையைப் பற்றி நான் மறந்தே போனேன். ஆசிரமத்தில் அவள் எப்படி இருந்தாள்? அங்கே அவள் என்ன செய்தாள்?

அவளுடைய பெற்றோர்களாவது வந்து அவளை திரும்ப அழைத்துச் சென்றனரா? இப்போது அதைப் பற்றியெல்லாம் சொல்லுங்கள். அந்தச் சிறுவர்களைப் பற்றி எனக்கு இப்போது கவலை இல்லை.

முத்தண்ணாவும், வால்மீகியைச் சந்தித்த பின்னர் சீதைக்கு நேர்ந்தவற்றைச் சொல்லத் தொடங்கினார் :

சீதையைத் தன் துறவுக்குடிலுக்கு அழைத்துச் சென்ற வால்மீகி அவளுக்குத் தனியாக ஒரு பர்ணசாலையைக் (சுள்ளிகளாலும், இலைதழைகளாலும் கட்டப்பட்ட குடிசை) கொடுத்தார். அங்கே சீதை, குடிலைச் சேர்ந்த பெண்களுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தாள்.

சீதையின் அன்றாடப் பணிகள் ஆடம்பரமில்லாமல் மிக எளிமையாக இருந்தன. அதிகாலையில் எழுந்து, தன் குலகுருவான வசிஷ்டரை மானசீகமாக வணங்கிவிட்டு, நீராடித் தூய்மையாகித் தன் தந்தை ஜனகனுக்கு ஒப்பான வால்மீகி முனிவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குவாள். பின்னர் தான் கொய்த பூக்களைக் கொண்டு குடிலில் உள்ள வணக்கத்திற்குரிய மாதர்களை வழிபட்டு அவர்களது ஆசியைப் பெறுவாள். அவர்களிடம் சிறிது நேரம் உரையாடியிருந்த பின்னர், தன்னுடைய கணையாழியில் உள்ள ஸ்ரீராமனுடைய உருவத்திற்கு உணவாகும் கிழங்குகளைப் படைப்பாள். குடிலில் உள்ள துறவியர் இசைக்கும் இராமசரிதத்தைக் கேட்பாள். அவ்வாறாக ஸ்ரீராமனின் நினைவிலேயே நாட்பொழுதைக் கழிப்பாள். மாலையில் சந்தியா தேவிக்கு வழிபாடு செய்துவிட்டு, தன்னுடைய அன்றாட நடவடிக்கைகளில் தன்னையே மறந்தவளாகி, ஸ்ரீராமனைப் பற்றிய எண்ணங்களுடன் தூங்கிப்போய், தூக்கத்திலும் இராமனின் திருஉருவையே காண்பாள். அவ்வாறாகத் தன்னுடைய தனிமை பற்றிய கழிவிரக்கம், தன் அன்புக்குரியவனைப் பற்றிய எண்ணங்களை அழுத்திவிடாமல் வாழ்ந்து வந்தாள் முனிவருடைய அன்பான அரவணைப்பும், குடில்களில் இருந்த பெண்களின் தோழமையும், அவளுடைய கற்பும் அவளுக்கு மும்முனைப் பாதுகாப்பாக இருந்தன.

இப்படியாக, மாறிவிட்ட சூழ்நிலையில் சீதை மகிழ்ச்சியாக இருந்தபோது, அவள் கருவுற்றாள். அவளுடைய தாய்மை அறிகுறிகளைக் கண்ட வால்மீகி, முதலாவது கர்ப்பத்தின்போது

நடத்தப்படும் சீமந்த விழாவுக்கு ஏற்பாடு செய்தார். அப்போது மங்கல மலர்கள் அணிந்திருந்த சீதை இளவேனிற் காலத்து கானகத் தெய்வமான வனதேவியைப் போல் காட்சி தந்தாள்.

உரிய காலத்தில் சீதை இரட்டை ஆண் குழந்தைகளைப் பெற்றாள். வால்மீகி அக்குழந்தைகளுக்கு லவன் என்றும் குசன் என்றும் பெயரிட்டார். அவர்கள் இருவரும் லவ-குசர் என்றே பின்னர் அழைக்கப்பட்டனர். அக்குழந்தைகளிரண்டும் வளர்ந்து சிறுவர்களாகியபோது, துறவுக்குடிலிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இருந்த அனைவரும் அவர்கள்பால் ஈர்க்கப் பட்டனர். இவரும் மிக அழகாகவும், எல்லாரும் மனம் மகிழுமாறும் விளையாட்டுப் பிள்ளைகளாய் இருந்தனர். அந்த இரட்டையரின் குறும்புகளும், வேடிக்கைகளும், தாய் சீதைக்குப் பெரிதும் மகிழ்ச்சியூட்டின.

வால்மீகி, அவர்களுக்கு உரிய காலத்தில் முடியிறக்கி (மயிர்வினை மங்கலம்) உபநயனம் செய்து வைத்து, வேதங்களையும், புராணங்களையும், சாத்திரங்களையும் பயிற்றுவித்தார். இசையிலும், வில்லேற்றத்திலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

நாள்கள் செல்லச் செல்ல, சீதை தன் மக்களின் வளர்ச்சியைக் கண்டு தனது பழைய சோக நாள்களை மறந்து போவதைக் கண்டு வால்மீகி பெரிதும் மனநிறைவடைந்தார். மேற்றிசைத் தெய்வத்தின் நாடான வருணலோகத்திற்கு அவர் செல்ல வேண்டிய சந்தர்ப்பம் வரவே, தான் இல்லாதபோது ஆசிரமத்தின் பொறுப்புகளை கவனிக்க லவ-குசர்களை நியமித்துவிட்டுச் செல்கிறார். அதே நேரத்தில் அஸ்வமேத யாகக் குதிரை ஆசிரமத்தின் எல்லைக்குள் நுழைகிறது. தோட்டத்தில் தன்னிச்சையாக அந்தக் குதிரை மேய்வதைக் கண்ட லவன் அதைப் பிடித்துக் கட்டிவிட்டு, அதைப்பற்றித் தன் தெய்வத் தந்தைக்குத் தெரிவிப்பது என்று தீர்மானிக்கிறான். தன்னுடைய சகாக்களுடன் குதிரையிடம் சென்ற லவன் தன்னுடைய மேல் துண்டினால் அதை ஒரு மரத்தில் கட்டிப் போட்டான். குதிரையின் நெற்றியில் கட்டப்பட்டிருந்த தகட்டிலிருந்த வாசகங்களைப் படித்தான். அந்த யாகக்குதிரை, ஸ்ரீராமனால் அனுப்பப்பட்டது என்றறிந்த அவன் சகாக்கள் லவனை மறித்து, ஒரு சிறுவன், குதிரையைப் பாதுகாக்கின்ற படையை எதிர்த்துப் போரிடக்கூடிய சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டாமென்று அறிவுறுத்தினர். ஆனால் லவனோ, "நான்

இளையவனாய் இருந்தால் என்ன? என் அண்ணன் ஒருவனே இந்தப் படை அனைத்தையும் எதிர்த்துப் போரிடுவான். மழைநீர் தேங்கிய குட்டையில் தவளைகள் கத்துவதுபோல் வேதங்களை முணுமுணுக்கத்தான் நீங்கள் லாயக்கானவர்கள். போரிட உங்களுக்குத் தெரியாது. நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? குடிலுக்குப் போய் உங்களுடைய எடுபிடி வேலைகளைப் பாருங்கள்" என்று சீறினான்.

இதற்கிடையில் குதிரையைப் பின் தொடர்ந்தவர்கள் அங்கு வந்து குதிரை மரத்திலே கட்டப்பட்டிருப்பதைக் காணுகின்றனர். குதிரைக்கு அருகில் லவனையும், அவனுடைய நண்பர்களையும் கண்டு, "துணிச்சலாய் இந்தக் குதிரையை இங்கே பிடித்துக் கட்டியது யார்?" என்று உரத்த குரலில் வினவுகின்றனர். அந்தச் சிறுவர்கள் லவனை நோக்கிக் கை காட்டிவிட்டு ஒரு மரத்திற்குப் பின் ஒளிந்து கொள்கின்றனர். காவலர்கள் லவனிடம் குதிரையை விடுவிக்குமாறு கூறி, மாறாக அந்நாட்டு அரசனின் படை வீரர்களான தங்கள் பேச்சைக் கேட்காமல் தன்னுடைய முட்டாள்தனமான செய்கையை அவன் தொடர்ந்தால் எதிர் கொள்ள வேண்டிய விளைவுகளையும் எடுத்துரைத்தனர். அது சாதர்ரணமான குதிரை அன்று என்றும், அரசன் மேற்கொள்ள விருக்கின்ற பெரிய யாகத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது என்றும் அவர்கள் கூறுகின்றனர். இப்படியாகக் குதிரையை விடுவிக்கும்படி லவனைத் தூண்டியதுடன் அவனை இழித்துரைத்து, குரங்குப் பயல் என்று ஏசினர். காவலர்களுடைய போக்கினால் வெகுண்ட லவன், அவர்கள்மீது சரமாரியாக அம்புகளை எய்து அங்கிருந்து விரட்டுகிறான். திரும்பி வந்த காவலர்கள் லவனுடன் தாங்கள் மோதியதைத் தம் தலைவனிடம் கூற, அத்தலைவனும் அச்சம்பவத்தைப்பற்றி சத்ருக்கனனிடம் கூறுகிறான்.

இதனிடையில் லவன் குதிரையை அழைத்துக் கொண்டு குசன் தனக்காகக் காத்துக் கொண்டிருந்த இடத்துக்குச் செல்கிறான். தன் படைகளுடன் அவனை மறித்த சத்ருக்கனன், குதிரையுடன் அவன் மேலும் செல்ல ஒட்டாமல் தடுத்துவிட்டு ஏசுகிறான்: "ஏ! ஒல்லிப் பயலே! யாரடா நீ? குதிரையைப் பிடித்துக் கட்டுவதற்கு என்ன துணிச்சல் உனக்கு? என்னைப் போன்ற வீரனுக்கு ஒரு சிறுவனிடம் மோதுவது உசிதமன்று" என்று சொல்லிக் கொண்டே சத்ருக்கனன் குதிரையை நெருங்குவதைக் கண்ட லவன், "நான் பொடியனாக இருக்கலாம்; ஆனால் என்னுடைய அம்பு சக்தி

வாய்ந்தது" (ப்ராயம் குஸடோடேனே சாயகம் குறுக்குமே) என்கிறான். மேலும், "நாங்கள் என்ன உங்களுக்குத் திறை செலுத்திவிட்டு உங்கள் ஆதரவில் வாழ வேண்டுமோ? யாகத்திற்காக உங்களுக்குப் பொருள் வேண்டியிருந்தால் அதற்குப் பிச்சையெடுக்கலாமே! இந்த நாட்டு அரசனுடைய நிலைமை இப்படியா போக வேண்டும்!" என்று இழித்துரைக்கிறான். ஒரு பொடிப்பயலிடம் இருந்து இப்படியான ஏளனப் பேச்சுகளைக் கேட்ட சத்ருக்கனன் வெகுண்டு, தன்னுடைய வில்லை எடுத்து ஓர் அம்பினை எய்ய, லவன் எதிரிருந்து எய்த ஐந்து அம்புகள் அதனைப் பாதியிலே முறித்ததுடன், வில்லின் நாணையும் அறுத்துவிட்டன. சத்ருக்கனனின் தேரும் பொடிப்பொடியாகிப் போக, புதிய தேரையும் வில்லையும் எடுத்துக்கொண்டு லவனை அம்புகளால் முற்றுகையிடுகிறான். அவனுடைய அம்புகளால் கடுமையாகத் தாக்குண்ட லவன் மூர்ச்சையாகி விடுகிறான். லவனுடைய வீரத்தைப் பெரிதும் மெச்சிய சத்ருக்கனன் அவனை மிகுந்த அக்கறையுடன் தன் தேர்மீது கிடத்திக் கொண்டு, குதிரையுடன் தன்னுடைய முகாமுக்குத் திரும்புகிறான்.

குடிலுக்குத் திரும்பி ஓடிவந்த லவனுடைய நண்பர்கள், குதிரையைப் பிடித்துக் கட்டியதற்காக லவனைப் பிடித்துச் சென்றுவிட்ட செய்தியை சீதையிடம் கூறுகின்றனர். குஷப் புற்கள், பழங்கள், பூக்கள் போன்றவற்றைக் கொணர்வதற்காக காட்டுக்குச் சென்ற குசன் ஆசிரமத்திற்குத் திரும்புகிறான். அங்கே அழுது கொண்டிருந்த தன் தாயிடம், அவளுடைய துயரத்திற்கான காரணத்தை வினவுகிறான். துக்க மேலீட்டால் அவளால் பேசக்கூட முடியவில்லை. ஆனால் நடந்தவற்றை அச்சிறுவர்கள் குசனிடம் எடுத்துரைத்தனர். அவன் சீதைக்கு ஆறுதல் கூறி, எமன், சிவன், விஷ்ணு எவரோடாயினும் போரிட நேர்ந்தாலும், லவனை மீட்டுக் கொண்டுவருவதாக உறுதியளிக்கிறான். தலைக்கவசத்தை அணிந்துகொண்டு, வில்லையும், அம்பையும், அத்துடன் வால்மீகி முனிவர் அவனுக்குத் தந்திருந்த அம்பறாத்தூணியையும் எடுத்துக் கொண்டு, தன் அன்னையின் ஆசிகளைப் பெற்றுக்கொண்டு, விரைந்து சென்று சத்ருகனனின் படைகளைத் தடுத்து நிறுத்துகிறான். ஒன்றுமறியாத சிறுவனைச் சிறைப்பிடித்துச் செல்வதற்காக அவர்களைக் கண்டித்துப் பேசிய குசன், தன்னை எதிர்க்கத் துணிவுள்ளதா என்று சவால் விடுகிறான். அவர்களுடைய மறுமொழிக்குக் காத்திராமலேயே, அப்போது தான் கூராக்கிப் பளபளவென்று மின்னிய ஓர் அம்பை எடுத்து,

முன்னிலைப் படைமீது எய்து அவர்களைச் செயலிழக்கச் செய்தான். வீரர்கள் செயலிழந்து போனதைக் கண்ட புஷ்கலன் முன்வந்து குசன்மீது அம்புகளை எய்கிறான். அவற்றைப் பாதியிலேயே பொடிப்பொடியாக்கிய குசன், மிகவும் சக்திவாய்ந்த ஓர் அம்பினாலேயே படை முழுவதையும் காயப்படுத்தினான். முடமாகிப்போன புஷ்கலன், தரையில் வீழ்ந்து நினைவிழந்து போனான். நிலைமை மோசமாகிப் போனதை அறிந்த சத்ருக்கனன் குசனுடன் போரிடுவதற்காகத் தன் தேரில் விரைகிறான். குசனை நெருங்கியதும், "தண்ணீர்ப்பாம்பு, கடுவிடம் கொண்ட நாகத்தை விழுங்கத் துடிக்கிறதா" என்று எகத்தாளமாகக் கூறிக்கொண்டே அடுத்தடுத்து ஐந்து அம்புகளை எய்கிறான். ஆனால் அனைத்தும் குசன் எய்த அம்புக்கு முன்னே செயலிழந்து போனதுடன், சத்ருக்கனனின் வில்லும் இருதுண்டாகிப் போனது. எனவே சத்ருக்கனன் தன் தேரிலிருந்து இறங்கி கதாயுதத்தால் தாக்குதலைத் தொடர்ந்தான். அவன் கதாயுதத்தை உயர்த்தியதுமே, குசன் அப்படியே குனிந்து, விருட்டென்று எழுந்து ஒரே அம்பிலே சத்ருக்கனனை முடமாக்கி விட்டான். வேரோடு பிடுங்கி எறியப்பட்ட மரம் மலையிலிருந்து வீழ்வதுபோல் சத்ருக்கனன் அப்படியே தரையில் சாய்ந்தான். ஒரு கணம் அப்படியே திகைத்துப்போன படைவீரர்கள் அனைவரும் நம்பிக்கையை இழந்தனர். பின்னர் லக்ஷ்மிநிதி ஒருபுறம், மற்றொரு புறத்தில் சுசேனன், சுக்ரீவன் போன்ற வானரத் தலைவர்கள் என்று அப்படியே குசனை சுற்றிச் வளைத்துக் கொண்டு போரிட்டனர். குசன், தனியொருவனாக யானைக் கூட்டத்தைச் சிங்கக்குட்டி அலைக்கழிப்பதுபோல் அத்தனைபேரையும் எதிர்த்துப் போரிட்டான்; பெரும்பாலானோரை வீழ்த்தினான். அந்த நேரத்தில் மூர்ச்சையாகி இருந்த லவனும் சுயநினைவு பெற்றவனாய், தன் சகோதரனுடன் சேர்ந்துகொண்டு, எஞ்சியிருந்த படையுடன் மோதினான். காற்றும் நெருப்பும் சேர்ந்து காட்டைச் சுற்றிக் கொண்டதுபோல் அக்காட்சி இருந்தது. இரட்டையர்களின் தாக்குதலிலிருந்து தப்பித்தவர்கள் பின்வாங்கிச் சென்று இராகவனிடம் ஓடிப்போய் அவனுடைய படைக்கு நேர்ந்த கதியைச் சொல்கின்றனர். தன் படைகள் தோற்றுப்போனதைக் கேட்டு துயருற்றவன், அவ்விரண்டு சிறுவர்களின் நம்பமுடியாத தீரத்தைக் கேட்டு வியந்து போனான். யாகத்தைச் செய்வதற்காகத் தூய்மையான நிலையில் இருந்தபோதும் ஸ்ரீராமன் உடனே தன் தம்பி லக்ஷ்மணன் மற்றும்

படைகளுடன், குதிரையை விடுவித்துச் சிறுவர்களைச் சிறைப் பிடிப்பதற்காக விரைகிறான்.

காட்டில் போர் நடந்த இடத்தை அடைந்ததும் இராமனுடைய படைகள் அந்த இடத்தைச் சுற்றி வளைத்துக் கொள்ள, அச்சிறுவர்களைச் சிறைப் பிடிப்பதற்காக இராமனும் லக்ஷ்மணனும் இருவேறு திசைகளில் இருந்து முன்னேறி வருகின்றனர். இரட்டையர்களின் சரமாரியான அம்புகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல், பெரும் புயலுக்கு முன்னர் மேகக் கூட்டங்கள் கலைந்து ஓடுவதுபோல் அந்தப் படைகள் சிதறி ஓடிப் போயின.

அச்சமில்லாமல் அச்சிறுவர்கள் மிகத் தீர்மானமாகப் போரிடுவதைக் கண்டு வியந்த இராமன் லக்ஷ்மணனிடம் கூறுகிறான் : "அன்புடை இளவலே! அரச பரம்பரையில் வந்த குழந்தைகளிடையே கூட இதுபோன்ற தீரத்தை நாம் எதிர்பார்க்க முடியாது. காட்டிலே வசிக்கின்ற இந்த ஆதரவற்ற சிறுவர்கள் எப்படி இத்தகைய வீரத்தைப் பெற்றார்கள்? என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. ஆனாலும் ஏனோ இவர்கள்பால் என்னால் கோபம் கொள்ள முடியவில்லை. அவர்கள்பால் எனக்கு ஒருவித பாசம் ஏற்பட்டுள்ளதுபோல் உணர்கிறேன். அவர்கள் யாரென்று விசாரித்து வா" என்று அனுப்புகிறான். அச்சிறுவர்களுடன் போரிடுவதற்காக நாணேற்றிக் கொண்டே லக்ஷ்மணன் தன் தேரை முன்னே செலுத்தி, அவர்கள் முன்னேறாமல் தடுத்து நிறுத்தி, அவர்களிடம், "சிறுவர்களே நீங்கள் யார்? ஏன் குதிரையைக் கட்டிப் போட்டு எமது வீரர்களிடம் போரிட்டீர்கள்?" என்று வினவுகிறான். போருக்கு என்று வந்துவிட்டு அதுபோன்ற தனிப்பட்ட கேள்விகளைக் கேட்கலாகாது என்று பதிலுரைத்த லவன், அவனால் சண்டையிட முடியாவிட்டால் திரும்பிப் போய்விடுமாறு கூறுகிறான். ஆனால் மறுகணமே லவன் சொன்னான் : "நீங்கள் கேட்டதால் சொல்கிறேன். இங்கே துறவுக்குடிலிலே பிறந்த நாங்கள், எங்கள் அன்னையோடு இங்கே வாழ்கிறோம். எங்களை வளர்த்த தாத்தாவும் இருக்கிறார். உங்கள் குதிரையை நாங்கள் கட்டிப்போட்டது உண்மைதான். ஆனால் உங்கள் வீரர்கள் எங்களைத் தாக்கியதால் நாங்கள் அவர்களுடன் போரிட்டோம். இப்போது உங்கள் வீரர்களைத் துரத்த விரும்புகிறோம். எங்களைத் தடுத்து நிறுத்த உங்களை அனுமதிக்க

மாட்டோம்". அதைக்கேட்ட லக்ஷ்மணன், சிறுவர்களுடன் போரிடுவது உசிதமானது இல்லை என்று சொல்லி, தன்னுடைய சுமுகமான பேச்சைக் கேட்டுப் போரிட வேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிடுமாறும், குதிரையை விடுவிக்குமாறும் கூறுகிறான். இறுதியாக லக்ஷ்மணன், "என்னுடைய சொற்கள் உங்களுக்கு இனிக்கவில்லை என்றால், உங்கள் வாழ்வு முடிந்து விடும்" என்று கூறிக்கொண்டே தன் அம்பறாத்தூணியில் இருந்து ஓர் அம்பை உருவி லவனுக்குக் குறி வைக்கிறான். அதைக் கண்டு அஞ்சாத லவன், லக்ஷ்மணன் எய்த அம்புகள் அனைத்தையும் தவிடு பொடியாக்கி விடுகிறான். அதே நேரத்தில் இன்னொரு புறத்தில் ஸ்ரீராமன் குசனிடம் அவனுடைய பெற்றோர், வளர்ப்பு, வில்லேற்றத்தில் திறன் பெற்றமை போன்றவை குறித்து விசாரிக்கிறான். குசன் அவையனைத்திற்கும் விடையிறுக்கிறான். குசனுடைய தன்னம்பிக்கையைப் போற்றிய ஸ்ரீராமன், சிறுவர்களுடன் போரிடுவது உசிதமல்ல என்று கூறி, குதிரையை விடுவிக்குமாறு கேட்கிறான். ஸ்ரீராமன் எவ்வளவோ சொல்லியும், போரிடுவது என்ற தீர்மானத்திலிருந்து குசன் சிறிதும் மசிந்து கொடுக்கவில்லை. தன் தாயும், தெய்வத் தந்தையான வால்மீகியும் தன்னை ஏளனம் செய்ய குசன் விரும்பவில்லை. அத்துடன், தன்னுடைய தம்பி பிடித்து வைத்த குதிரையை விட்டுக் கொடுப்பது அவனுடைய வீரத்திற்குக் களங்கமாகும். "ஒரு சிறுவனுடைய வீரத்தையும் அவனுடைய அம்பின் சக்தியையும் நீ சோதிக்க விரும்புகிறாயா?" என்று கேட்டுக் கொண்டே குசன் இராமன் மீது ஓர் அம்பை எய்து அவனைக் காயப்படுத்தி விடுகிறான். கடுஞ்சினமுற்ற இராமன் தன் வில்லை எடுத்து குறிதவறாத ஓர் அம்பை எய்கிறான். ஆனால், அந்தக் கணை, இலக்கினை எட்டாமல் திரும்பி வந்து விடுகிறது. என்ன ஆச்சர்யம்! எந்தப் போரிலும் எவராலும் வெற்றி கொள்ள முடியாத ஸ்ரீராமன் சாதாரண சிறுவர்களிடம் தோல்வியைச் சந்திக்கிறான்!

குசனும் லவனும், ஸ்ரீராமனையும் லக்ஷ்மணனையும் தோல்வியுறச் செய்கின்றவாறு போரிட்டுக் கொண்டிருக்கும் வேளையில், வால்மீகி தம்முடைய குடிலுக்குத் திரும்புகிறார். வால்மீகி இல்லாதபோது நிகழ்ந்தவற்றை எல்லாம் அவரிடம் சொன்ன சீதை, தன் பிள்ளைகளின் வருகைக்காக ஆவலுடன் காத்திருப்பதாகக் கூறுகிறாள். வால்மீகியும், அவளுடைய பிள்ளைகளைக் கண்டுபிடித்து, அவர்களுடன் திரும்புவதாக அவளுக்கு உறுதி அளித்துவிட்டுப் புறப்படுகிறார். அங்கே

சென்றதும் லவனும் குசனும் மிகவும் உக்கிரமாக ஸ்ரீராமனுடன் போரிடுவதைக் கண்டு வியக்கிறார். அவர்களுடைய வீரத்தையும், மனஉறுதியையும் கண்டு பாராட்டிக் கொண்டே, அவர்களை நெருங்கி ஆரத் தழுவிக் கொண்டு, சண்டையை நிறுத்துமாறு சொல்கிறார். அச்சிறுவர்களை அழைத்துக்கொண்டு அப்படியே ஸ்ரீராமனிடமும் லக்ஷ்மணனிடமும் சென்று அவர்கள் முன் நிற்கிறார். அவர்கள் இருவரும் முனிவரைச் சிரம்தாழ்த்தி வணங்கிவிட்டு, திடீரென்று முனிவர் அங்கே வந்தது கண்டு வியந்து நிற்கின்றனர்.

புன்முறுவல் செய்த வால்மீகி, ஸ்ரீராமனைப் பார்த்துச் சொல்கிறார் : "தந்தைக்கும் மகன்களுக்கும் இடையே இப்படி முடிவேயில்லாமல் போர் நடப்பதை இந்த உலகத்தில் எங்குமே கேட்டிருக்க முடியாது. உடன் பிறந்தவர்களும், பங்காளிகளும் பரஸ்பரம் சண்டையிட்டுக் கொள்வது இயற்கைதான். ஆனால் இதுபோல் விசித்திரமான சண்டையை நான் பார்த்ததுமில்லை; கேட்டதும் இல்லை. ஒருகால், இந்த உலகையே மூடித் திரையிட்டிருக்கின்ற மாயை உங்கள் பார்வையையும் மறைத்து விட்டதுபோலும். உங்கள் வீரத்தைக் காட்டுகின்றதன் பலனாய் ஏற்பட்ட நிலைமைக்குப் பின்னுள்ள உண்மையை உணர்ந்து கொள்கின்றவாறு உங்கள் ஆளுமை விழிப்படையத் தவறியது ஏன்? மணம் புரிந்த மனைவியையே சரிவரப் பேணாத இந்த நாட்டின் அரசனாகிய உன்னால் இந்தச் சிறுவர்களை எங்ஙனம் யாரென்று அறிந்து கொள்ள முடியும்".

ஸ்ரீராமனால் பதில்பேச முடியவில்லை. அவன் லக்ஷ்மணனைப் பார்க்கிறான். அவனோ, "போற்றுதலுக்குரிய முனிவர் சொல்லியது உண்மையில்லை என்றால், இச்சிறுவர்கள் எங்ஙனம் காட்டில் பிறந்து, வளர்ந்து இவ்வளவு பெரும் வலிமையைப் பெற்றிருக்க முடியும்? எல்லா வகையிலும் அவர்கள் உங்களைப் போலவே இருக்கின்றனர்" என்கிறான்.

பின்னர் ஸ்ரீராமன் சீதைக்கு என்ன நேர்ந்தது என்று அறிய விரும்பி, லக்ஷ்மணனால் அவள் காட்டிலே தனித்து விடப்பட்டதற்குப் பின் அவளுக்கு என்ன நிகழ்ந்தது என்று தனக்குத் தெரியாது என்கிறான். வால்மீகி, அதற்குப் பின் நிகழ்ந்தவற்றை - காட்டிலே தற்செயலாக அவளை அவர் எப்படிச் சந்தித்தார் என்றும், தன்னுடைய குடிலில் தந்தையைப் போல் பாதுகாப்பளித்தது பற்றியும், அவளுக்குப் பிறந்த இரட்டைக்

குழந்தைகளை எங்ஙனம் வளர்த்தார் என்றும் அனைத்தையும் ஸ்ரீராமனுக்கு விவரிக்கிறார். அப்போது வானிலிருந்து ஓர் அசரீரி, "இச்சிறுவர்களின் வீரத்திற்கு ஈடு இணையில்லை. அவர்கள் உன் குழந்தைகள்; சீதைக்குப் பிறந்தவர்கள். அவர்களை ஏற்றுக் கொள்வாயாக" என்று அறிவித்தது.

ஸ்ரீராமன் தன்னுடைய செய்கைக்காக வெட்கி, பேச்சற்றுப் போனான். வால்மீகி சொன்னபடி, சிறுவர் இருவரும் தம் தந்தையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். ஸ்ரீராமனுடைய வீரத்தைக்காட்டிலும் உயர்ந்த அவனுடைய பிள்ளைகளின் வீரத்தின் புகழ் உலகம் எங்கும் பரவியுள்ளது என்று வால்மீகி ஸ்ரீராமனிடம் கூறுகிறார். தன் பிள்ளைகளைச் சந்தித்த மகிழ்ச்சியில் இராமன் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறான். அவர்களைத் தன் மடி மீது அமர்த்திக் கொஞ்சிக் கொண்டே, "என் அன்புக் குழந்தைகளே, உங்களுடைய இந்த அறிவும் ஆற்றலும் எப்படி வந்தன? நீங்கள் எப்படிக் கற்றுக் கொள்ளத் தொடங்கினீர்கள்? சொல்லுங்கள்" என்று கேட்கிறான். "எங்களுடைய தாத்தா சொல்லிக் கொடுத்த இராமாயணத்தில் இருந்து நாங்கள் கற்றுக் கொள்ளத் தொடங்கினோம்", என்று அச்சிறுவர்கள் விடையிறுத்தனர். பின்னர் வால்மீகி முனிவர் ஏற்பாட்டின்படி லவனும் குசனும் இராமாயணத்தை இசையோடு பாடிக் காட்டினர். அதனிடையில் வால்மீகி தன்னுடைய கமண்டலத்திருந்து புனித நீரை எடுத்து, நினைவிழந்து கிடந்த அனைவர் மீதும் தெளித்து அவர்களை எழுப்பினார். அனைவரும் அயோத்திக்குத் திரும்பினர். மனோரமாவின் கேள்விக்குப் பதிலுரைக்கும்போது, இராமன் சீதைக்குச் செய்த அநீதிக்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டான் என்றும், பின்னர் அவளுடன் அயோத்திக்குத் திரும்பிச் சென்றான் என்றும் முத்தண்ணா கூறியுள்ளார் என்று மேலும் சொல்லத் தேவையில்லை.

இந்த அரிய, பெருமகிழ்ச்சியூட்டுகின்ற உரைநடைப் படைப்பின் இறுதிப் பகுதி மனோரமாவுக்கும் முத்தண்ணாவுக்கும் இடையே நடைபெறும் ஓர் உரையாடலாக அமைந்துள்ளது. அதிலே நூலாசிரியர் மிகவும் சாதுரியமாகத் தமது இலக்கியத் திறமையைத் தாமே மதிப்பீடு செய்திருக்கிறார்.

மனோரமா : இராமன் சீதையுடன் அயோத்திக்குத் திரும்புகிறான். அத்துடன் உங்கள் கதை முடிகிறது. அதுதானே?

முத்தண்ணா : ஆமாம்! ஆமாம்! வளவளவென்று வந்த மோசமான இந்தக் கதை ஒரு வழியாக முடிந்தது. கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

மனோரமா : அடப் பாவமே! ஸ்ரீராமனுடைய புனிதமான கதையைப் போய் நீங்கள் எப்படி மோசமான கதை என்று கூறலாம்?

முத்தண்ணா : இல்லை. இல்லை. ஸ்ரீராமனுடைய கதையை நான் மோசமானது என்று சொல்லவில்லை. சுவாரஸ்யம் இல்லாமல் மிகவும் சலிப்பூட்டுகின்றவாறு சுற்றி வளைத்து நான் சொல்லிய விதத்தைத்தான் மோசமானது என்று கூறுகிறேன்.

மனோரமா : (பணிவுடன்) அறிவாளிகள் விலைமதிப்பில்லா தமது உடைமைகளைத் தாமே புகழ்ந்து உரைப்பார்களா? வண்ணமயமான வருணனைகள் நிறைந்த நவரசமும் நிரம்பிய உங்கள் படைப்பை, ஒன்றுக்கும் உதவாது என்று நீங்கள் மிகவும் பணிவாகச் சொல்லிக் கொள்கிறீர்கள் போலிருக்கிறது.

முத்தண்ணா : என்னுடைய படைப்பு உனக்குப் பிடித்திருந்ததா?

மனோரமா : எனக்கு மட்டுமல்ல; இந்நாட்டில் உள்ள அனைவருக்குமே அது பிடிக்கும்.

முத்தண்ணா : (சிரிக்கிறார்) என்மேல் உள்ள அன்பால் இப்படிச் சொல்கிறாய். சத்தியமாகச் சொல்...

மனோரமா : அன்பரே! உங்களுடைய பெயரைப் போலவே உங்கள் படைப்பும் உலக மக்கள் அனைவருக்குமே விருப்பமுடையதாய் இருக்கும்.

முத்தண்ணா : நீ என்னைக் கேலி பேசுகிறாயா?

மனோரமா : சத்தியமாக இல்லை. என்னை நம்புங்கள் எங்கே திறமை இருக்கிறதோ அங்கே பொறாமைக்கு இடமில்லை உண்மை அற்புதமான உங்கள் கதையைக் கேட்கின்ற எவருமே மகிழ்வர். அது மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுகின்ற கதை

முத்தண்ணா : என் மீது சத்தியமாகச் சொல்வாயா?

மனோரமா : எது மீது வேண்டுமானாலும் சத்தியம் செய்வேன். நறுமணம் கமழ்கின்ற மலர் தன் வாசத்தை மறைத்து வைக்க முடியுமா?

முத்தண்ணா : உன் பாட்டி மீது சத்தியம் செய்வாயா?

மனோரமா : நிச்சயமாக. என் பாட்டி மீது சத்தியம். நான் ஒருபோதும் பொய் பேசியது இல்லை. இத்தகைய அற்புதமான உரைநடைக் கதை இதற்கு முன் எப்போதும் இருந்ததில்லை; இனி இருக்கப் போவதும் இல்லை.

முத்தண்ணா : எப்படியோ சரி... உனக்குப் பிடித்திருக்கிறது. அதுபோதும். அதுவே எனக்குப் பெரிய மகிழ்ச்சி.

மனோரமா : என்னுடைய புகழுரைகள் மெய்யானவை; நான் உங்களை முகப்புகழ்ச்சி செய்யவில்லை. நீங்கள் எனக்குச் சொன்ன கதை அருமையாக இருந்தது; மிக அருமையாக இருந்தது.

முத்தண்ணா : அப்படியானால், நீ எனக்குத் தருவதாகச் சொன்ன அன்பளிப்பு எங்கே. அதைக் கொண்டுவா.

மனோரமா : (திடுக்கிடுவதுபோல் பாசாங்குடன்) நீங்கள் மிகவும் புத்திசாலி. உங்களுக்கு என்னவோ விருப்பம் இல்லாததுபோல் நடித்து, நான் ஒரு பரிசைத் தரும்படியாகச் செய்து விட்டீர்கள் தேனினும் இனிய உங்கள் சொற்களில் நான் அப்படியே சொக்கிப் போய்விட்டேன். அது கிடக்கட்டும். முதலில் கதையை மங்களகரமாக முடித்து வையுங்கள். அதற்குப் பிறகு உங்களுக்குப் பரிசு தருவது பற்றி யோசிப்போம்.

முத்தண்ணா : அதுவும் சரி! ஹோலிகேயும் நெய்யும் வைத்து ஒரு மங்களகரமான முடிவைக் கொண்டு வரலாமா?

மனோரமா : அது என்ன உங்கள் திருமணத்தின் சாந்தி முகூர்த்தமா, இனிப்புப் பலகாரம் செய்து கொண்டாடுவதற்கு?

முத்தண்ணா : என்ன! என்னுடைய சாந்தி முகூர்த்தமா? அது நம் இருவருக்கும் அல்லவா?

மனோரமா : போதும் வேடிக்கை. ஸ்ரீராமன் மேற்கொண்ட அஸ்வமேத யாகம் எப்படி வெற்றிகரமாக முடிவடைந்தது என்று எனக்குச் சொல்லுங்கள்.

முத்தண்ணா : அன்பே! கேள்! ஸ்ரீராமன் தன் மனைவி மக்களுடன் அயோத்திக்குத் திரும்பிய சில நாள்கள் கழித்து, அஸ்வமேத யாகக் குதிரையும் தலைநகருக்குத் திரும்பிவந்து சேர்ந்தது. சத்ருக்கனனும் மற்ற வீரர்களும்கூட குதிரையுடன் திரும்பி விட்டனர். தொடர்ந்து திறைப் பொருள்கள் வந்தன. எவ்வளவு பெரும் செல்வம்! பொன், பொன்னாபரணங்கள், மாணிக்கக் குவியல்கள், முத்துக் குவியல்கள், குதிரைகள், யானைகள், கற்பனைக்கு எட்டாத விலையுயர்ந்த பொருள்கள் எல்லாம் சாரைசாரையாக வண்டிகளில் நிரப்பிக் கொண்டு வரப்பட்டன. புகழ்மிக்க அந்த யாகத்தைக் காண்பதற்காகக் குழுமிய அரசர்கள் அனைவரையும் உபசரிக்கும் பொறுப்பைப் பரதன் ஏற்று இருந்தான். பரப்பிரம்மத்தையே மனித உருவில் காண்கிறோம் என்று எண்ணிய புனிதத் துறவிகள் முன்னிலையில், வேத மந்திரங்கள் முழங்க, உரிய சடங்குகளின்படி யாகம் நிறைவேற்றப்பட்டது. எல்லாவிடத்தும் மகிழ்ச்சி நிரம்பியது.

இவ்வாறாக ஸ்ரீராமன் சீதையுடன் சேர்ந்து யாகத்தை நிறைவேற்றினான். அவனுடைய புகழ் எல்லாவிடத்திலும் பரவியது. தன் தம்பியர் துணையுடன் வெகுகாலம் அவன் இனிதே ஆட்சி புரிந்தான்.

பத்ரம் - சுபம் - மங்களம் -

மனோரமா புறப்படுவதற்காக எழுகிறாள் அவளை நிறுத்திய முத்தண்ணா சொல்கிறார் :

முத்தண்ணா : நீ ஆணவம் பிடித்தவளாக இருக்கிறாயே! முத்தண்ணாவையே ஏமாற்றுகின்ற பெண்களும் உண்டா? எனக்கு உன்னுடைய அன்பளிப்பைத் தராமல் உன்னை விடமாட்டேன்.

மனோரமா : உங்கள் கதையில் முறையான மங்களம் இல்லாமல் நான் எப்படி அன்பளிப்புத் தர முடியும்?

முத்தண்ணா : நான் ஏற்கனவே மங்களம் பாடிவிட்டேன். நிகழ்ச்சியில் எஞ்சியுள்ளது பரிசளிக்கும் வைபவம் ஒன்றுதான்.

மனோரமா : அன்பளிப்புக்காக இப்படி நச்சரிக்கிறீர்களே! உங்கள் தொல்லை விட்டால் போதும். சரி... உங்களுக்கு என்ன வேண்டும்?

முத்தண்ணா : (போலியான கோபத்துடன்) நான் என்ன பிச்சைக்காரனா? உன்னிடம் பிச்சை எடுப்பதற்கு? நான் ஒன்றும் பிச்சையெடுத்துக் கொண்டு உன்னிடம் வரவில்லை. நான் உன்னுடைய அன்பளிப்புகளை மட்டும்தான் ஏற்றுக் கொள்வேன். வேறு எதுவும் வேண்டாம்.

மனோரமா : எதுவும் கொடுக்கும்படியாக நான் இப்போது இல்லை. அத்துடன் என்னுடையது என்று நான் எதை வைத்திருக்கிறேன்? நான் எதைத் தர முடியும்? எப்படித் தர முடியும்?

முத்தண்ணா : எப்படியாகினும் எதையாவது தா! அதனால் நான் மகிழ வேண்டும். அதுபோதும். என்னுடைய கதைக்கு ஏற்புடையதாக அது இருக்க வேண்டும். அத்துடன் மூன்றாம் நபர் அதை ஏற்க வேண்டும். அதுமாதிரியான அன்பளிப்பை நான் நிச்சயம் ஏற்றுக் கொள்வேன்.

மனோரமா : அப்படியானால், இதோ அன்பளிப்பு..... திருப்தி தானே? உங்களுடைய நூலைப் படிக்கின்றவர்கள் எந்த அன்பளிப்பைப் பரிந்துரைத்தாலும் அதையும் நான் தருவேன்.

முத்தண்ணா : சரி... நான் ஒத்துக் கொள்கிறேன். வா போகலாம்.

7. ஜோ ஜோ

முத்தண்ணா படைப்பாற்றல் மிக்க ஓர் எழுத்தாளராக மட்டுமின்றி, கர்வமில்லாத ஓர் அறிஞராகத் திகழ்ந்தார். முத்தண்ணா தம்முடைய சொந்த முயற்சியினால் மலாலி சுப்பாராவ் போன்றவர்களின் வழிகாட்டுதலில் போற்றத்தக்க அறிவுத் திறனை எங்ஙனம் கைவரப் பெற்றார் என்பதை நாம் ஏற்கனவே கண்டோம். தொன்மைக் கன்னட மொழியில் அவருக்கு இருந்த ஆழ்ந்த புலமை, விநோதமாக ஆனால் மிகவும் சிறப்பாக, அவருடைய அத்புத ராமாயணம், ராமாஸ்வமேதம் ஆகிய இரண்டு நூல்களிலும் ஒரு நவீன உரைநடை வடிவமாக உருவெடுத்து இருப்பதை மட்டும் அவருடைய அறிவாற்றலுக்குச் சான்றாக எடுத்துக் கொள்ள முடியாது. சுவாசினி என்ற இதழில் (மங்களூர் தொகுதி1, பக் 93-94; டிசம்பர் 1900) ஜோ ஜோ என்ற தலைப்பில் வெளியான ஒரு கட்டுரையே அவருடைய அறிவுத் திறனுக்குப் பெரிதும் நற்சாட்சியமாகத் திகழ்கிறது.

ஜோ ஜோ ஒரு சொற்பிறப்பியல் ஆய்வாகும். அவர் தம்முடைய அந்த இரண்டு பக்கக் கட்டுரையில், ஜோ என்ற சொல், ஹரிஹரர், ருத்ரபட்டர், சதாக்ஷர தேவர் போன்ற தொன்மைக் கவிஞர்களின் படைப்புகளில் பயன்படுத்தப் பட்டுள்ள விதம் குறித்து எடுத்துக் காட்டுகளைத் தந்து, ஆரம்பிக்கிறார். அந்த எடுத்துக்காட்டுகளில் ஜோ, ஜோகுலா என்ற இரு சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஜோ என்பது ஒரு பல்லவி; ஜோகுலா எனில் தாலாட்டு. இவ்விரு சொற்களின் சொல்லாட்சியில் உள்ள வேறுபாட்டினை முத்தண்ணா மிகவும் சரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். குழந்தைகளைத் தூங்க வைப்பதற்காகத் தூளிகளை ஆட்டும்போது பெண்கள் பாடுகின்ற தாலாட்டுப் (ஜோகுலா) பாடல்களில் மீண்டும் மீண்டும் வருகின்ற பல்லவிதான் ஜோ என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஜோ என்ற பல்லவியுடன் அமைந்துள்ள ஜோகுலா குழந்தைகளைத் தூங்கச் செய்யும் ஆற்றல்மிகு உத்தியாகும். ஜோகுலா என்ற சொல் 'ஜோ' என்ற பெயர்ச்சொல்லும் 'குல்' அல்லது 'கல்' என்ற எண்ணுப் பெயர் பின்னொட்டும் சேர்ந்து உருவானது என அவர் மிகச் சரியாக ஊகித்துச் சொல்லியிருக்கிறார். 'ஜோ' என்ற ஓரெழுத்து

ஒரு மொழிக்குக் கன்னடத்தில் எவ்விதமான பொருளும் இல்லை என்று கூறிய அறிஞர் சிலரின் கருத்துக்களை அவர் ஏற்கவில்லை. மாறாக, திராவிட மொழிகள் ஐந்தனுள் ஒன்றான துளுமொழியின் 'ஜோக்குளு' என்ற சொல்லின்பால் நமது கவனத்தை ஈர்க்கிறார். துளு மொழியிலும் கூட 'ஜோ' என்ற சொல், அடிப்படைப் பெயர்ச்சொல் என்றும், குளு என்ற எண்ணுப் பெயர் பின்னொட்டு அத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் வாதிடுகிறார். துளு மொழியில் ஜோக்குளு என்றால் குழந்தைகள் (மக்களு) என்று பொருள் எனவும் அவர் விளக்குகிறார். மேலும் துளு மொழியின் 'ஆண் ஜோவு', 'பொண் ஜோவு' என்ற சொற்கள் முறையே ஆண் மகவையும் (ஆண் + ஜோவு), பெண் மகவையும் (பொண் + ஜோவு) குறிப்பிடுவதையும் அவர் ஆராய்ந்து 'ஜோ' என்ற சொல்லுக்குக் குழந்தை (மகு அல்லது குசு) எனப் பொருள் கூறுகிறார். 'ஜோகுல பாடு' என்பது குழந்தைகளுக்கான பாடல் எனப் பொருள்படும் சொற்றொடராக இருந்திருக்க வேண்டும் என்றும், பின்னர் காலப்போக்கில் 'பாடு' என்ற சொல்லைத் தவிர்த்து விட்டு 'ஜோகுல' என்றாலே அந்தப் பொருள் பெறப்பட்டது என்றும் அவர் கூறுகிறார். கவிஞர்களும் ஜோகுலா என்ற சொல்லுக்குத் தலாட்டுப்பாடல் என்ற பொருளிலே முக்கியத்துவம் தந்து வழங்கி வந்துள்ளனர். எனவே ஜோ என்பதும் ஜோகுலா என்பதும் துளுப் பெண்களின் பேச்சு வழக்கிலிருந்து பெறப்பட்டவை என்பது வெள்ளிடைமலையாகும்.

முடிவாக, முத்தண்ணாவின் தனிச்சிறப்பான ராமாஸ்வமேதத்திற்கு மனோரமான சூட்டிய புகழ்மாலையைப் போன்று வேறு எதுவும் அத்தனை அன்னியோன்னியமாக இராது. நூலாசிரியரின் தன்னம்பிக்கையும், தம்முடைய படைப்பைத் தாமே மதிப்பிட்டுக் கொள்ளும் திறனையும் அந்த உரையாடல் நமக்குத் தெரிவிக்கிறது. அத்துடன், அவர் தம்முடைய நூல் முழுவதையும் அப்படியே தம் மனைவிக்குப் படித்துக் காட்டி, அவள் கூறிய விமர்சனக் கருத்துக்களுக்குத் தமக்கேயுரிய அழகுணர்ச்சியுடன் உரையாடல்கள் மூலம் விளக்கமளித்து இருக்கலாம் என்று கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது. அந்த உரையாடல்களில் இறுதியாக அமைந்தது அனைத்திற்கும் மகுடமாகத் திகழ்கிறது.

நூற்பட்டியல்

I. முத்தண்ணாவின் படைப்புக்கள் :

1) *ரத்னாவதி கல்யாணம் (யக்ஷகானம்) உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணா முத்ரணாலயாவில் 1951ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.*

2) *குமார விஜயம் (யக்ஷகானம்) உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணா முத்ரணாலயாவில் 1954ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.*

3) *ஸ்ரீராம பட்டாபிஷேகம், பதிப்பாசிரியர் எஸ்.வி. பரமேஸ்வர பட்டர்; வெளியீட்டாளர் உஷா சாகித்ய மாலே, மைசூர் (1955)*

4) *ஸ்ரீராமாஸ்வமேதம். வெளியீட்டாளர் : காவ்யாலயா, மைசூர் (முதல் அச்சு 1953)*

5) *கோதாவரி (முற்றுப்பெறாத புதினம்) (கையெழுத்துப்படி கிடைக்கவில்லை)*

II. மேற்கோள் நூல்கள் :

1) *முத்தண்ணா (நாந்தலிகே லக்ஷ்மி நாராயணப்பாவின் வாழ்கையைப் பற்றியும் அவருடைய படைப்புகளைப் பற்றியும் பல்வேறு ஆசிரியர்கள் எழுதிய திறனாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு) வெளியீடு : கர்நாடக சங்கம், மத்தியக் கல்லூரி, பெங்களூர், 1927.*

2) *முத்தண்ணா ப்ரசஸ்தி கிரந்தம் (தொகுதி1) பதிப்பு ஆசிரியர்: டி. கேசவ பட்டர் & கே.ஆர். கணேசா, 1976. வெளியீடு : கன்னட சாகித்ய குடிரம்.*

3) *டாக்டர் எஸ்.வி. ரங்கண்ணா: 'சமான்ய சித்ரக்கே சுவர்ண சௌகாட்டு' - பதிப்பித்தோர் : டாக்டர் மொகாஷி புனேகர் மற்றும் சிபி. கிருஷ்ணகுமார். (கன்னட விமர்சே இதழில் பக்: 161-168 வெளியானது. கன்னடம் மற்றும் பண்பாட்டு இயக்ககம், பெங்களூர் - 2, 1983.)*

4) *கார்க்கல (ஓர் இட ஆய்வு; பலர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு) : வெளியீடு ஸ்ரீ புவனேந்திர கல்லூரி, கார்க்கல, தக்ஷிணகன்னட, கர்நாடகா மாநிலம் 1985.*

5) கிரந்த கர்த்தார சரித்ர கோஸா: பெங்களூர் வெங்கடேச சங்காலியால் தொகுக்கப்பட்டது. வெளியீடு : உஷா சாகித்ய மாலே; மைசூர்; 1960.

6) முத்தண்ணா காவ்ய ஸ்ரீராமாஸ்வமேத சங்கிரகம்: மைசூர் டாக்டர் என். அனந்தரங்காச்சார்- சுருக்கிய பதிப்பு; இரண்டாம் பதிப்பு 1959.

7) டாக்டர் ஸ்ரீனிவாச ஹவனூர்: ஹோஸ கன்னட அருணோதயா; வெளியீடு : கன்னட ஆய்வு மையம், மைசூர்ப் பல்கலைக் கழகம், 1974.

8) பிரபுத்த கர்நாடகா, ஜீவனா, கன்னட நுடி போன்ற பல இதழ்களில், பல்வேறு காலகட்டத்தில் வெளியான திறனாய்வுக் கட்டுரைகள்.

முத்தண்ணாவின் வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு : 24–1–1870

1889ஆம் ஆண்டு மேமாதம் முதல் உடுப்பி போர்டு உயர்நிலைப் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராகப் பணி.

1892 முதல் 1894 வரை குந்தப்பூர் உயர்நிலைப் பள்ளியில் பணி.

1895 முதல் 1899வரை கிறிஸ்துவ உயர்நிலைப் பள்ளியில் கன்னடப் பண்டிதர் பணி.

இறப்பு : 15–2–1901

முத்தண்ணா என்று பரவலாக அறியப்பட்ட நாந்தலிகே லக்ஷ்மிநாராயணா (1870-1901) பழைய கன்னட இலக்கியத்திலிருந்து நவீன கன்னட இலக்கியம் உருவாகிய கால மாற்றத்தின் உண்மையான அடையாளமாகத் திகழ்கிறார். "நவீன கன்னட இலக்கியத்தின் முன்னோடி" எனப் பொருத்தமுறப் போற்றப்படும் முத்தண்ணா வறுமையின் பிடியில் வாடியபோதும், தன்னுடைய உரைநடையாலும் கவிதையாலும் கன்னட இலக்கியத்தை வளப்படுத்தினார். ரத்னாவதி கல்யாணம், குமார விஜயம் (இரண்டும் யக்ஷகானங்கள்) ஸ்ரீராமபட்டாபிஷேகம், ஸ்ரீராமாஸ்வமேதம் ஆகியவற்றைப் படைத்தளித்த முத்தண்ணா ஆரவார மில்லாமல் வாழ்ந்த ஓர் அறிஞர். அவருடைய உரைநடைத் தொனியும், பாணியும், கன்னட இலக்கியங்கள் எதனிலுமே ஒப்பிட்டுக் காண முடியாத கவர்ச்சியும் கவிதைச் சந்தமும் கொண்டவை. "குமார விஜயத்தைத் தவிர வேறு எதுவுமே யக்ஷகானப் பிரசங்கம் அன்று; நாந்தலிகேயைத் தவிர கவிஞர் எவருமிலர்" என்று முத்தண்ணாவைப் பற்றி பஞ்சேமங்கேஷராவ் கூறியுள்ள புகழுரையை நாம் இங்கே சிறப்பாகக் குறிப்பிடலாம்.

பேராசிரியர் எம்.வி. சீதாராமையா, கன்னடமொழி அறியாத வாசகர்களுக்காக இந்தச் சிறிய நூலிலே முத்தண்ணாவின் வாழ்க்கையை விவரிப்பதுடன் அவருடைய படைப்புகளைத் திறம்பட நுணுகி ஆராய்ந்து மதிப்பிட்டு அவருடைய புலமையின் சாரத்தை நன்கு வெளிப்படுத்துகிறார்.

இந்நூல் மொழிபெயர்ப்பாளர் கண்ணையன் தட்சிணாமூர்த்தி, நேஷனல் புக் ட்ரஸ்ட் வெளியிட்டுள்ள நமது அரசியலமைப்பு, மக்களாட்சி, இந்தியாவின் தேசியப்பண்பாடு ஆகிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தவர். தற்போது திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றுகிறார்.

Muddana (Tamil) Rs. 25/-
ISBN - 81-260-0654-4